# பெரியார் பல்கலைக்கழகம்

**( NAAC A++ Grade With CGPA 3.61 (Cycle -3))**

**State University- NIRF Rank 56 –State**

சேலம் - 636 011

## தொலைநிலை மற்றும் இணையவழிக் கல்விமையம்

முதுகலைத்தமிழ்

(முதலாமாண்டு - இரண்டாம் பருவம்)

# பக்தி இலக்கியம்

**(Candidates Admitted From 2025 Onwards)**

# PERIYAR UNIVERSITY

## CENTRE FOR DISTANCE AND ONLINE EDUCATION (CDOE)

## M.A தமிழ் 2025 admission onwards

### CORE VI

பக்தி இலக்கியம்

Prepared by:

முனைவர்.இரா.வசந்தமாலை
பேராசிரியர்
தமிழ்த் துறை
பெரியார் பல்கலைக்கழகம்
சேலம்-11

Scrutinized & Verified by:

BOS Members,
Centre for Distance and Online Education (CDOE)
Periyar University
Salem - 636011

பொருளடக்கம்


| வ.எண் | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|
| 1. | பக்தி இலக்கிய வரலாறு | 6-17 |
| 2 | திருஞான சம்பந்தர் | 18-38 |
| 3. | திருமாளிகைத் தேவர் | 39-66 |
| 4. | திருப்புகழ் அருணகிரிநாதர் | 67-116 |
| 5. | நாலாயிரம் திவ்யப்பிரபந்தம் | 117-174 |

**முதுகலைத்தமிழ் – இரண்டாம் பருவம்**

**தாள்:09 பக்தி இலக்கியம் (C06)**

**அலகு-1**

'சமய இலக்கியங்கள்' என்பதற்கான விளக்கங்கள்- சமய இலக்கியங்கள்- எழுந்தகாலம்- அரசியல் பின்புலங்கள்- பக்தி இயக்கத்தின் செயல்பாடுகள்- சமய வரலாறு- தொல்சமய மரபுகள்- பிற்காலச் சமய மரபுகள்- சமய வகைப்பாடுகள்- சமய இலக்கிய வகைகள்- கோயில்களும் சமுதாயமும் – சித்தர் படைப்புகள்- சைவசாத்திரங்களின் இயல்புகள்- சித்தர் இலக்கியங்கள் மற்றும் சமய இலக்கியங்கள் வலியுறுத்தும் செய்திகள்- அறப்பண்புகளில் சமய இலக்கியங்கள்- சமய இலக்கியப் பயன்பாடுகள்.

**அலகு-2**

திருஞானசம்பந்தர் (தேவாரம்) – 'புனைந்தும் பொறிகலங்கி' என்று தொடங்கும் திருவையாறு பதிகம் (11 பாடல்கள்)

திருநாவுக்கரசர் (தேவாரம்) – 'நாமார்க்கும் குடியல்லோம்' என்று தொடங்கும் மறுமாற்றத் திருத்தாண்டகம் (10 பாடல்கள்)

சுந்தரர் (தேவாரம்) – 'பொன்னார் மேனியனே' என்று தொடங்கும் மழபாடி பதிகம் (10 பாடல்கள்)

மாணிக்கவாசகர் (திருவாசகம்) – 'நாடகத்தால் உன்னடியார்' என்று தொடங்கும் திருச்சதகம் அறிவுறுத்தல் பகுதி (10 பாடல்கள்)

**அலகு- 3**

திருமாளிகைத்தேவர் (திருவிசைப்பா) – 'ஒளிவளர் விளக்கே' என்று தொடங்கும் கோயில் பதிகம் (11 பாடல்கள்)

திருமூலர் (திருமந்திரம்) – 'கல்லா அரசனும்' என்று தொடங்கும் இராசதோடம் பகுதி (11 பாடல்கள்)

கபில தேவநாயனார் – 'திருவார்க்கும்' என்று தொடங்கும் (11ஆம் திருமுறை) மூத்தநாயனார் திருஇரட்டை மணிமாலை (8 பாடல்கள்)

சேக்கிழார் (பெரியபுராணம்) – 'ஆனாய நாயனார் புராணம்' முழுவதும்

**அலகு-4**

அருணகிரிநாதர் – திருப்புகழ் 1. கைத்தல நிறைக்கனி 2. பக்கரை விசித்ரமணி 3. உம்பர்தரு தேனுமணி, 4. முத்தைத்தரு 5. விடமடைசுவேலை 6. நினது திருவடி

சிவவாக்கியர் – ‘அரியதோர்’ (காப்பு) பாடல் முதல் ‘பண்டு நான்பறித்தெறிந்த’ வரை (26 பாடல்கள்)

தாயுமானவர் – பரிபூரணானந்தம் (10 பாடல்கள்)

இராமலிங்க அடிகளார் – திருவருட்பா ஆளுடைய அடிகள் அருள்மாலை (10 பாடல்கள்)

கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார்- நெஞ்சு விடுதூது (முழுவதும்)

**அலகு- 5**

ஆண்டாள் – திருப்பாவை (30 பாடல்கள்)

குலசேகர ஆழ்வார் – பெருமாள் திருமொழி தசரதன் புலம்பல் (முழுவதும்), ‘வன்தாள்’ முதல் ‘ஏர் ஆர்ந்த’ வரை (13 பாடல்கள்)

திருமங்கையாழ்வார் – பெரிய திருமொழி ‘வாடினேன்’ முதல் ‘மஞ்கலாம் சோலை’ வரை (10 பாடல்கள்)

குணங்குடி மஸ்தான் சாகிபு – ‘தியானநிலை’ பகுதி என்று தொடங்கும் 199 முதல் 208 வரை (10 பாடல்கள்)

கண்ணதாசன் – இயேசுகாவியம் ‘பாடுகளின் பாதை’ 131 முதல் 148 வரை (18 பாடல்கள்)

**பார்வை நூல்கள்**

சித்தர் தத்துவம், 1988, சு.நாராயணன், மாரி பதிப்பகம், புதுச்சேரி

தமிழ் இலக்கியத்தில் மதமும் மானுடமும், 2001, கார்த்திகேசு சிவத்தம்பி, மக்கள் வெளியீடு, சென்னை

தமிழர் சமய வரலாறு, 1985, ஆ. வேலுப்பிள்ளை, பாரி புத்தகப்பண்ணை, சென்னை

தமிழர் சமயம், 1969, மறுஅச்சு, கா. சுப்பிரமணியபிள்ளை, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை

பக்தி இலக்கிய வரலாறு, 2011,ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, பூம்புகார் பதிப்பகம், சென்னை.

## அலகு-1

## பக்தி இலக்கிய உருவாக்கம்

**முன்னுரை**

இலக்கிய உருவாக்கப்படுவது இதற்கு எத்தனையோ சமுதாயச் சூழல்கள் காரணங்கள் இருக்கின்றன. அதில் பொதுமைகளும் உண்டு. சிறப்புக் கூறுகளும் உண்டு. குறிப்பாக, இலக்கியம் உருவாவதற்கு காலச்சூழலும் சமுதாயப் பின்னணியும், சமுதாயக் கொண்டு – கொடுப்பும் தாக்கமும் அடிப்படையானவை. ஓர் இலக்கியப் படைப்பாளியோ ஆசிரியரோ தர்ம் உணர்ந்த - கேட்ட – அனுபவித்த – பார்த்த சமுதாயச் செய்திகளை – வரலாற்று உண்மைகளை, இவை தொடர்பான பிற கருத்துக்களைத்தான் இலக்கியத்தின் மையப் பொருளாகக் கையாள்வதைக் காண்கிறோம். இது மிகவும் இயல்பானதும்கூட. இவற்றோடு சமுதாயாத்திற்கு ஏற்புடைய மற்றும் சமுதாயத்திற்குப் பயன்படும் கருத்துசளும் மயப் பொருளாகவும் அமைகின்றன. ஆகவே, சங்கம் மருவிய காலத்தில் அறக்கருத்துக்கள் நீதிக்கருத்துகள் போன்றவையே பெருமளவில் இலக்கியத்தன் மையப் பொருண்மையாயின. அதிலும் குறிப்பாக, உயிர் வதை கூடாது. புலால் மற்றும் மது உண்ணுதல் பாவம்: மண் – பொன் – பெண் ஆகிய மூன்றினால் மனிதன் பெரும் இன்னலுக்குள்ளாகிறான் போன்றவை பொருண்மயாயின.

ஆகவே வாழ்வியலின் நெறிகளாகவும், சமய நெறிகளாகவும் வலியுறுத்தப்பட்ட நிலையில் அவையே மையப் பொருஅன்மையாயின.

இத்தகய சிற்றின்பங்களை வெறுத்துத் துறவறம் மேற்கொண்டால் வீசு பேறு ஒருவருக்குக்குக் கிடைக்கு என்றும் அவ்விலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

சங்கம் மருவிய காலத்திற்குப் காலத்திற்குப் பின்பு பக்தி இலக்க்யம் உருவாயிற்று. பக்தி இயக்கத்தின் பரவலாக்கம் காரணமாகப் பல ஊர்களில் புதிய புதிய ஆலயங்கள் தோன்றின. ஆலயங்கள் தோறும் சயச் சாண்றோர்கள் சென்று இறைப் பெருமையினை எடுத்துக் கூறலயினர்.

இறைவனைப் போற்றி நினைத்து உள்ளம் உருகிப் பாடும்போது இறைவனே நெரடியாக வந்து அடியார்க்கும் துன்புற்றவர்களுக்கும் தெவையான உதவ்களைப் புரிவான் – அருள் புரிபவன் என எடுத்துக் குறலயினர்.

இந்த நிலையில் கருத்துக்கள் எடுத்துச் செல்லப்பட முறைசார் இலக்கியம் தேவையாயிற்று, அதாவது பக்தியால், பக்தி இயக்கங்களால் சமுதாத்தில் ஏற்பட்ட மாற்றங்களையும் அவ்வியக்கங்களில் இயங்காற்றல் காரணமாக எழுந்த

இலக்கியங்களையும் அவற்றின் இலக்கியச் செல்வாக்கினையும், உருவாக்கத்தினையும் விளக்குவது இலக்கிய வரலாற்றிர்கும் தேவைப்படுகின்றன. எனவெ இவற்றை மையப் படுத்தியே இவ்விஉஅல் அமைசிறது.

**பக்தி**

தன்னலம் கருதாது இறைவனை முழுமுதற் கடவுளாக ஏற்றுத் தொழுவதெ பக்தியாகும். இறைவனின் மீது ஏற்பட்ட அளவற்ற அன்பின் பிரதிலிப்பே பக்தி.

தன்னுள் ஒருவனாகத் தனக்குரிய உறவுகளில் ஒருவனாக ஏற்று முழுமனதுடன் இறையை வழிபடுவதே பக்தியாகும்.

இப்பக்தியினைப் பல வழிகளில் வெளிப்படுத்துவர். அதனைப் பக்தி நெறிமுறைகள் என்றும் கூறலாம். ஆண்டான் – அடிமைநிலை, சாற்புத்திர நிலை, சகநிலை, குரு சிஷ்யன் நிலை, நாயக நாயகி நிலை போன்ற பல்வேறு நிலைகளில் தங்களது பக்தியினை வெளிப்படுத்தினர் சமயச் சான்றோர்கள். மக்களும் அவர்களைப் பின்பற்றத் தொடங்கினர்.

**சமயம்**

தனியொரு மனிதன் பக்தியோடு இறைவனை வணங்கும் நிலை பக்தி நெற்யாகும். அதே இறைவனை ஒரு குழுவினரோ/ சமுதாயமோ வழிபட்டால் ப்ன்பற்றி நடந்தால் அது சமயமாக மாறும். அச்சமயங்கள் பல வகைகளாக உள்ளன .

அவை, சைவம், வைணவம், பௌத்தம், கிறித்துவம், இஸ்லாம் என்பனவாகும். புறச் சமயங்களான சமணம், பௌத்தம் ஆகியவற்றைத் தென்னகத்திலிருந்து விரக்கியகிக்கத் தோன்றியதே பக்தி இயக்கம் எனறு சய பெரியோர்கள் தமது பாடல்களில் ஆங்காங்கே எடுத்துக் கூறியுள்ளர்ன். எ.கா

**“குணமறி வுகணிலை யுல்பொருள் ளுரைமரு**
**வியபொருள் களுமில**
**திணமெனு மவரோசு செதுமதி மிகுசம**
**ணருமலி தமதுகை**
**உண்னுடை யவருணர் வருபவர னுறைதரு பதி”**

**(சம்பந்தர், 1964, 16)**

என்ற பாடல் சமண பௌத்தச் சமயவாதிகளைச் சாடியிருப்பதைச் சுட்டி காட்டுகிறது.

பக்தி இயக்கம் என்பது இந்த்சமயத்தின் “ **மறுமலர்ச்சியே”** இந்து பெருமையினை வெளிக்காட்டவும் திருமால், சிவன், ஆகியோரின் புகழைப்

பரப்புவதற்காகவும் இந்து சமயம் மறுமலர்ச்சியடைந்தது என்பார் ஞானசம்பந்தர் (1991.35).

சிவனின் முழுமுதற் கடவுளகக் கொண்டு வழிபடுவது சைவ சமயமாகும். இவ்விரண்கு சமயங்களுமே அன்பு வழியால் தான் இறைவனின் பெருமை, இறைவனடி சேரும்சின்றவர்கள் பெறுன் பயம், துன்புறும் அடியவர்களுக்கு இறவன் காட்சி தந்த துன்பத்தைப் போக்குதல் இறைவன் காட்சி தந்து துன்பத்தைப் போக்குதல் போன்ற கருத்துக்களைப் புரணக்கதைகளின் மூலமாகவும் பாடல்டாளில் வழியாகவும் இவர்கள் வெளிப்படுத்தினர். அவை ஒவ்வொன்றையும் கீழ்க்காணும் பகுதிகளில் விரிவாக விள்க்கும்போது சமுதாம் – இறையுண்ர்வு – பக்தி இயக்கம் – சமுதாப் பணி போன்றவற்றிற்கிடையே அமைந்திருக்கும் தொடர்புகள் தெளிவாகும்.

**பக்தி இயக்கத்தின் நோக்கம்**

பக்தி இயக்கத்தின் முக்கிய நோக்கம் இறைவனைப் பலமுறைகளிலும் வழிபடுவது – இறைப்பணியை ஊக்குவிப்பது – மேற்கொண்வதி – இறைக்கோட்பாடுகளைப் பரப்புவதேயாகும்.

பக்தி என்பது இறை பொருளிட்த்துக் கொள்ளப்படும் மிக உயர்ண்ட்த அன்பாகும். அதாவது, எல்லாத் தொழில்களையும் ஒருமுகப்படுத்தி, இறைவனுடைய பணியில் செலுத்துவதாகும். இத்தகைய பக்தி என்பது ஏனைய தர்ம, ஞான, யோகிங்களைக் காட்டிலும் உயர்ந்த்தாகும். இந்த தலையாய பக்தியை ஒருவன் பெறவேண்குமாயின், பொறியுணர்வுக்கு தூண்டும் பற்றையும் ஒருசேர நீக்கவேண்டும்.

பற்றிலிருந்து விடுதலை பெறுவதென்பது அன்பு நிறைந்த தொன்டினை விடாமல் செய்வதன் மூலம் பெறமுடியும். பக்தன் என்பவன் தன்னலத்தின் அடிப்படயில் எப்பணியுலும் ஈடுபடாதவனாய் இரட்டைகள் எனப்படும் இன்பம் – துன்பம் என்ற இரண்டிலிருந்து விசிபட்டவனாய் இருக்கிறான்.

பக்தியை அடைவதற்க்கான வழியை மேற்கொள்ளும் போதோ, முழுபக்தியை அடைந்து விட்ட பிறகே ஒருவன் உலக வாழ்க்கையை விட்டொழிக்க வெண்டிய தேவை இல்லை.

அவன் செய்யும் பணிகள் செயல்கள் அனைத்தும் இறைவனுக்கே அர்ப்பணிக்கப்படுகின்றன் எனப்படுகிறது. **“சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும் அத்தன்”** எனத் திருவாசகம் கூறுகிறது. அதாவது,

1. இறைவனின் குணங்களைப் புகழ்தல்

2. அவனுடைய முருகியல் அழகில் ஈடுபடுதல்
3. அவனை வழிபடுவதில் இன்பங்காணல்
4. ஓயாது அவனை நினைத்தல்
5. தொண்டு செய்தில் ஈடுபடுதல்
6. இறைவனை நண்பனாக நினைத்தல்
7. இறைவனைத் தந்தையாக நினைத்தல்
8. இறைவனைக் கணவனாக நினைத்தல்
9. இறைவனிடம் தன்னையே முழுமையாகாத் தியாகம் செய்து விடுதல்.
10. இறைவனிடமே முழுமையாக அமிழ்ந்து விடுதல்
11. அவனைப் பிரிய நேரிடின் அதற்காக பெரிதும் வருந்துதல்.

போன்றவையே பக்தி நெறிக்கு முக்கியமானவையாகும்.

இத்தகைய பக்தியினை மக்கள் யாவரும் அறிந்து கொள்ள எளிமையான முறையில் இறைக் கருத்துக்களை எடுத்துச் சொல்ல வேண்டும். அதற்கு இசையிம், எலிய மொழியமைப்பும் அவர்களுக்குக் கை கொடுத்தன என்றே குறிப்பிட வேண்டும். இசையில் மயாங்காதவர்கள் யாருமில்லை.

இசையைக் கேட்டவுடன் நம்மையறியாமலே நாம் தாளம் போடுகிறோம். வாயசைக்கிறோம் - ஆடுகிறோம். ஆகவே இசையும் பாடுவதற்க்குரிய பாவாகா விருத்தப்பவினைக் கையாண்சு இறைவன் மீது பாக்களைப் பாடினர் பக்தி நெறியாளர்கள்.

பக்தி

எளிய மொழி | இசைப்பாடல் | இறைவன்

(அடைதல்)

(அருள் பெறுதல்)

அன்றாடம் நாம் வழக்கில் பயன்படுத்தும் பேச்சு வழ்க்குச் சொற்களையும், ஒலிக்குறிப்பு சொற்களையும் இலக்கியத்தில் இடம் பெறச் செய்து, ஆற்றல் மிக்க வகையில் கருத்தினை புலப்படுத்தியுள்ள இவர்களது திறம் போற்றுதற்குரியது.

எ. கா.

**“பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மேனி பொலிந்திலங்கும்**
**மின்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் வீழ்சடை வெள்ளிக்குன்றல்**
**தன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மால்விடை தன்னைக் கண்ட**
**என்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணமாகிய ஈசனுக்கே”**

(சேரமான் பெரு. நா. புரா. 1)

என இறைவனின் திருமேனியின் அழகின மிக அற்புதமான ஓடையினிமையுடன் கூடிய பாடலில் வெளிப்படுத்துகிறார் சேரமான் பெருமான் நாயனார்.

**“முன்ன மவனுடைய நாமம் கேட்டாள்**
**மூர்த்தி யவனிருக்கும் வண்ணம் கேட்டாள்**
**பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்**
**பேர்த்து மவனுக்கே பிச்சி யானாள்**
**அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தான்**
**அகன்றாள் அகலிட்த்தார் ஆசா ரத்தைத்**
**தன்னை மரந்தாள் மறந்தாள் தன் நாமம் கெட்டாள்**
**தலைப்பட்டாள் நங்கை தலைவன் தளே”**

(அப். தே. 6501)

இவ்வறு இறைவனின் மெய்யழகைலும் அவனுடைய திருவருளிலும் மயக்கம் கொண்டு உருகிப் பாடுகிறார் நாவுக்கரசர்.

நாம அன்றாடம், பயன் படுத்தும் பேச்சு வழக்குச் சொற்களுள் நிலைபேறு பெற்ற எளிய எழுத்து வழக்குச் சொற்களும் விரவி வந்து அவர்தம் பாடலின் உட்கருத்தினை நமக்கு புலப்படுத்துகின்றன.

**“வாரண மாயிரம் சூழ வலஞ் செய்து**
**நாரணன் நம்பி நடக்கின்றான் என்றெதிர்**
**பூரண பொற்குடம் வைத்துப் புறம் எங்கும்**
**தோரணம் நாட்டக் கனாக் கண்டேன் தோழி நான்”**

( ஆண்டா,பா ,557)

என்ற பாடலின் கண்ணனையே தன் காதலனாக எண்ணி, அவனை மண்ப்பதாகக் கனாக் காண்கிறார் ஆண்டாள். அவர் இறைவன் மீது பக்தி கொண்டு பரவசமாகிப் பாடும் பாடல்கள் உள்ளத்தை உருக்குதாகவும் எளிதில் கருத்தினைப் புரிந்து கொள்ளும் வொத்தில் அமைந்திருப்பதையும் நம்மால் காணமுடிகிறது.

**“பின்னை மணாளனைப் பேரிற் கிடந்தானை**
**முன்னை அமரர் முதல்தனி வித்தினை**

**என்னையும் எங்கள் குடிமுழு தாட்கொண்ட**
**மன்னனை வந்து குழல் வாராய் அக்காக்காய்**
**மாதவன்தன் குழல் வாராய் அக்காக்காய்"**

(பெ. ஆழ். பா. 162)

அதாவது, கண்ணனைக் குழந்தையாகப் பாவித்து, அவனின் திருவிளையாடல்களில் மெய்ம்மறந்து, தாயாக, மாறி விடுகிறார் பெரியாழ்வார்.

பிற்காலச் சிற்றிலக்கியங்களுக்கு இவர் பாடிய பாடல்களே அடிப்படையாக அமைந்த என்பதில் ஐயமில்லை. திருப்பள்ளியேழுச்சி, பிள்ளைத் தமிழ் போன்ற சிற்றிலக்கியங்கள் தோன்றுவதற்கு அடிப்படையாகவும் இருந்தன.

தாய்மையின் ஆசைகளியும் பெருமையினையும் மிக அழகாக மக்களுக்கு எளிய தமிழ்ல் எடுத்துக் காட்டுகிறார், இவர். ஆகவே, கருத்துப் பரவலாக்கத்திற்கு வெறும் சொற்களோடு நின்றுவிடாமல் இசையுடன் பாடுவதற்கேற்ப சந்த நயமும் அவர்களுடைய பாடல் களில் பின்னிப்பிணைந்துள்ளதை – மிளிர்கதைக் காண முடிகிறது.

அதனால் தான் மக்கள் எல்லொரும் இன்றும் கோவில்களில் தேவராம், திருப்பாவை, திருப்பள்ளியெழுச்சி போன்ற பாடல்களைத் தவறாமல் பாடித் தொழுகின்றனர்.

இப்பாடல்கள் ஆற்றல் வாய்ந்தனவாகவும் கருத்துப் புலப்பாட்டிற்கு எளிமையானவையாகவும் விளங்குவதால் எளிதில் கருத்துப் பரவலாக்கம் பெற்று, மக்களைச் சென்றடைந்தன.

**"வையகம் தகளியா வார்கடலே நெய்யாக**
**வெய்ய கதிரோன் விளக்காகச் - செய்ய**
**சுடராழி யானடிக்கே சூட்டினென் சொன்மாலை**
**இடராழி நீங்குகவெ என்று"**

(பொ. ஆழ். 20282)

உலகமே இறைவன் வடிவாக உள்ளதி என்பதைப் பொய்கையாழ்வார் இதன்முலம் விளக்குகிறார். காலைக் கதிரவனின் காட்சி திருமாலின் திருவடிவுணார்வைத் தூண்டுகிறது. புறவிருளைப் போக்கும் கதிரவன் ஆழ்வாருக்கு அக இருளைப் போக்கும் ஞான சூரியனாக இருந்து இறைவனைக் காட்டி நிற்கிறான்.

இவ்வுலகம் விளக்கு எனும்போது, நிலம் – அகல், கடல் – நெய், கதிரவன் – ஒளி என்றெல்லாம் உவமைப்படுத்தி, தன் இறை உண்ர்வை இப்பாடலில் வெளிப்பகுத்துகிறார் பொய்கையாழ்வார்.

**“பிறவாமை வேண்டும், மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்**
**மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி**
**அறவாநீ ஆடும் போதுன் அடியின் கீழிருக்க”.**

(காரைக்கால். புறா. 55)

இறைவனின் நடனத்தைக் கண்டு களிக்க, காரைக்கால் அம்மையார் விரும்புகிறார். அவரது அன்பிற்குக் கட்டுப்பட்டு இறைவன் திருவாலங்காட்டில் அமையோடு திருக்காட்சி தந்து ஆடுகிறார்.

உண்மையான பக்தி கொண்டு இறைவனைத் தொழும்போது, இரைவன், அடியவர்களுக்கு வேண்டிய உதவிகளையும் அவர்களது விருப்பத்தையும் நிறைவெற்றுவான் என்பது இப்பாடலின் வழி தெளிவுபடுத்தப்படுகிறது.

மேலும், மக்கள் அனைவரையும் அனைவரயும் ஒன்றுபடுத்தி ஒருமைப்பாட்டுணர்வுக்கும், பக்தி இயக்கம் வாழிகாட்டியுள்ள \தைக் காண்கிறோம். பல்வேறு சாதி – இனம் ஆகியவற்றிலிருந்து இறையடியார்கள் தோன்றியுள்ளனர். இறைவன் அனைவருக்கும் பொதுவானவன் என்ற உண்மை இதன்வழி வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**“நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்**
**நரகத் திலிடர்படோம் நடலை யில்லோம்**
**ஏமாப்போம் பிணிய்யோம் பணிவோ மல்லொம்**
**இன்வ்மே எந்நாளும் துன்பமில்லை”**

(அப். தே. 7205)

என்றும்,

**“வந்தவா றெங்ஙனே போமா றேதோ**
**மாயமா மிதற்கேதும் மகிழ வேண்டாம்**
**சிந்தையீர் உமக்கொன்றும் சொல்லக் கேண்மின்**
**திகழ்மதியும் வாளரவும் திளைக்கும் சென்னி**
**எந்தையார் திரு நாமம் நமசிவாய**
**என்றெழுவார்க் கிருவிசிம்பில் இருக்கலாமே”.**

(அப். தே. 7162)

என்று திருநாவுக்கரசர் பாடுகின்றார். அதாவது இறைவனின் நாமத்தை உச்சரித்துக் கொண்டேயிருந்தால் இறைவன் அடியவர்களுக்கு வரங்களைத் தந்து காப்பாற்றுவான் என்பதை இதன் மூலம் சுட்டுக்காட்டுகிறார்.

பக்தி நெறியாளர்கள் இறைவனின் கருணையை எடுத்துக்கூறி, மக்களை நல்வழிப் படுத்தினர் என்பது பொதுப்படையான கருத்து. மேலும் இவர்கள் ஊர்ஊராகச் சென்று ஆங்காங்கேயுள்ள மக்களைக் கவர அவ்வூர்களில் எழுந்தருளியிருக்கும் இறைவன் மீது பதிகங்கள் பாடிப் பரவச மூட்டினர்.

துன்பம் அடைந்தவர்களுக்கு வேண்டிய உதவிகளையும் இச்சான்றோர்கள் செய்துதவினர். ஆகவே பக்தி இயக்கமாக மாறியது எல்லோரையும் அதன் பால் பிணைத்து என்று குறிப்பிட முடியும்.

புரியாத ,மொழியில் இறைவனை ஒருகாலத்தில் வணங்கி வந்த மக்கள் தங்களுக்குத் தெரிந்த மொழிய்ல் கருத்துள்ள எளிய பாடல்களைப் பாடித் தொழத்தொடங்கினர்.

செல்வச் செருக்குற்று அகந்தையோடு திரிந்த வைதீகர்களுக்கு முன்னர் எளிமையாக, மக்களில் ஒருவராக நின்று அவர்களின் துன்பங்களைத்துடைக்கும் துணைவராகச் செயல்பட்டதினால் இறையடியார்கள் மீது மக்கள் நம்பிக்கை கொள்ளலாயினர். மேலும், இறைவனின் திருவிளையாடல்களைப் புராணக் கதைகளின் மூலம் எடுத்துக்கூறீ, அவர்களுக்கு உண்மையினை உணர வைத்தனர்.

இதனால் சாதி வேற்றுமை மறைந்த எல்லோரும் ஓர் இனம் ஒரு குலம் என்ற எண்ணம் நிலை நிறுத்தப்பட்டது. அரசன் முதல் ஆண்டி வரை பல்வேறு இனம், குடி, சாதி ஆகியவற்றிலிருந்து இறையடியார்கள் தோன்றியுள்ளனர் என்பதே இதற்குத் தகுந்த எடுத்துக்காட்டு. மேலும், இவர்கள் மக்களுக்கும் இறைவனுக்கும் தேவையான சேவை செய்தனர். இதனால் பக்தி இயக்கம் எங்கும் பரவி பெருமை கொண்ட பேர் இயக்கமாக மாறியது.

ஒவ்வொரு தலத்திருக்குமெனப் பதிகங்களும் புராணாகதைகளும் உருவாயின, இதானல் அத்தலங்களைச் சார்ந்த மக்கள் மகிழ்சியடைந்தனர். இதன் மூலம் பல தல புராணங்கள் உருவாயின: இதன்வழி இறைபணி பெருகியது.

**பக்தி இலக்கியத் தோற்றம்: பின்னணி**

பக்தி இலக்கியம் தோன்றுவதற்கு முன்னால் அற இலக்கியங்களையும் காப்பியங்களையுமே பெரும் புலவர்களும், கவிஞர்களும் படைத்து வந்தனர். அற இலக்கியங்களில் நீதிக்கருத்துக்கள் மிக அதிகமாக இடம்பெற்றன. சமுதாயத்தில்

மக்கள் இப்படித்தான் வாழவேண்டும் என்று வரன்முறைப்படுத்தப்பட்ட கருத்துக்கள் அவ்விலக்கியங்களில் இடம் பெற்றன.

**எ.கா:**

**“நெருப்பழல் சேர்ந்தக்கால் நெய்போல் வதூஉம்**
**எரிப்பச்சுட் டெவ்வநோய் ஆக்கும் – பரப்பக்**
**கொடுபிணைய ராகுவர் கோடாருங் கோடிக்**
**கடுவினைய ராகியார்ச் சார்ந்து”**

(நாலடி. பா. 124)

என்று நாலடியாரும்,

**“புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யாது**
**இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்”**

(குறள். 538)

எனத் திருக்குறளும் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய வழிமிறைகளை விதிகளாக்க் கூறியுள்ளது. ( கருணாகரன் & ஜெயா, 1993).

மேலும், இந்த அற இலக்கியகளும், காப்பியங்களும், சமண – பௌத்தக் கோட்பாடுகளை எடுத்துக்காட்டவே படைக்கப்பட்டுள்ளன, இச்சமயங்களை மிகவும் தாழ்வாகக் கருதி நையாண்டி செய்யும் வகையில் கருத்துக்களை வெளியிட்டன.

மனிதர்களின் உண்ர்வுள் அமுக்கப்பட்டு, ஓர் இயந்திரமயமான வாழ்க்கையில் வாழ்ந்து கொண்டிருக்கும்போது வாழ்க்கயில் ஒருவித சலிப்பு ஏற்படக்கூடும். மேலும் அறக்கருத்துக்கள் இலக்கியங்களில் பெருமளவில் இடம் பெற்று வந்தால் படிப்பதிலும் சுவை தோன்றும்.

ஆகவே, அத்தகைய இலக்கியப் பின்னணியில் ஒரு மாறுதல் தேவைப்பட்ட்து. அவ்வேளையில் தான் திருமூலர், கரைக்கால் அம்மையார் போன்றோர் தோன்றி, புதிய இலக்கியப் பாதையில் ஆடியெடுத்துவைக்க உதவினர்; வழிகாட்டினர்.

**“காண்பார்க்குங் காணலாம் தன்மைனே கைதொழுது**
**காண்பார்க்குங் காணகாம் காதலற் காண்பார்க்குச்**
**சோதியால் சிந்தையுளே தோன்றுமே தொல்லுலகுக்**
**காதியாய் நின்ற அரன்”**

(கரைக்கால். திருவிர. மாண்மலை - 17)

நம் சிந்தையில் இறைவனின் நாம்த்தை மட்டும் நினத்திருந்தான் இறைவனைக் காணலாம் எனக் காரைக்கால் அம்மையார் கூறுகிறார்.

**“உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்**
**வள்ளற் பிரானுக்கு வாய் கோபுரவாசல்**
**தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலனைந்தும் காளமணி விளாக்கே”**

(திருமந். 1823)

எனத் திருமுலரும் சைவ சமயத்தின் நாயகனாக விளங்கும் சிவனின் தோற்றத்தையும் அருட்குணத்தையும் புகழ்ந்து பாடுசிறார். ஆகவே, கோட்பாடுகளுக்காக எழுந்த இலக்கியமானது கவிதைநயம், பக்தி நெறிமுறை ஆகியவற்றிற்காக என மாறத்தொடங்கியது. மேலும், சமண – பௌத்தக் கவிஞர்கள் தமிழில் இலக்கியங்களை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே படைத்துள்ளனர் என்பதையும் அறியமுடிகிறது.

பாலி, பிராகிருத மொழிகளே பேச்சு வழக்கில் அன்றைய சூழலில் இடம்பெற்றிருந்தன. இதனால், தமிழ்மொழி அதன் செல்வாக்கை இழக்கநேரிட்ட்து. இழந்த தன் செல்வாக்கினை மீட்டுக்கொள்ளவும் இந்து சமயம் மறுமலர்ச்சியடையவும் தகுந்த சூழல் அன்றைய காலக் கட்ட்த்தீல் தேவையானதாக இருந்தது. அத்தருணத்தில் தான் திருமூலர், காரைக்கால் அம்மையார் ஆகியோர் தோன்றினர்.

அவர்களுக்குப் பின்னர் கி. பி 7. ஆம் நூற்றாண்டில் அப்ப்பர், சம்பந்தர் போன்ற சைவ சமயக்குரவர் தேன்றினர். கடுமையான விதிக்கப்பட்ட விதிக்கப்பட்ட விதிகளிலிருந்து மக்கள் சற்று நெடிழ்ச்சி பெற்று, மகிழ்ச்சியாக இருக்க்கவும் மனித ஒருமைப்பாடுட்டுடன் சுதந்திரமாகச் செயல்படவும் அன்றை சூழலில் ஒரு வடிகால் தேவைப்பட்டது.

வழ்வியல் அடிப்படைலும் சில மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. எந்தவொரு சமுதாமும் ஆரம்பத்தில் இருப்பதுபோலவே என்றூம் மற்றத்திற்கேற்பக் சில மாறுபாடுகாள் அதில் இயற்கையே. எசுத்துக்காட்ட்டாக, சங்க காலத்தில் அரசனே இறைவனாகக் கருதப்பட்டான். அவன் வசிக்கும் மாளிகை கோயில் எனப்பட்ட்து.

**“நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே**
**மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்”**

(புறம் – 75)

எனப் புறநானூறு மன்னன் மக்களுக்கு உயிராவான் என எடுத்துக்கூறுகிறது. அரஸ்னின் வெற்றி, கொடை, கருணை, பொருண்மையாக அமைந்தன. பிறன்மணை விழையாமை, சிறியாரோகு நட்பு கொள்ளாமை, அழுக்காறு, பொறாமை, பரத்தையர் பிரிவு தேவையில்லை எனற நீதிக் கருத்துக்கள் அவ்விலக்கியங்களில் இடம்பெற்றன.

காலம், சாமுதயப் பின்னணி ஆகியவற்றின் மாற்றத்தால் இலக்கியலும் பின்னர் மாறும்தல் சிறுகச் சிறுக ஏற்பட்டது. அவற்றில் சில பின்வருமாறு:

1. அரசனைப் பாட்டுடைத் தலைவனாக கொண்டிருந்த நிலைமாறி இறைவனைப் பாராட்டைத் தலைவனாக போற்றிப் பாராட்டும் நிலை ஏற்பட்ட்து.
2. காதல் நிகழ்ச்சியில் பின்னணியாக அமைந்த இயற்கை வருணனை பின்பு இறைவனின் திருத்தலத்தை விவரிக்கும் போது மேற்கொள்ளப்பட்டது.
3. அரசனின் அரண்மனை பற்றி வருணனை இறைவன் பள்ளிகொண்டு இருக்கும் கோயில்ன் தன்மையை விளக்குவதாக மாற்றப்பட்டது.
4. அரசனின் கொடை, விரம், ஆற்றல் ஆகியவற்றை விளக்கும் நிலை மாறி இறைவனின் கருணை, திருவுருவ அழகு, திருவிளையாடல், அருட்செயல் ஆகியவை எடுத்துக் கூறப்பட்டன.
5. மானுடக் காதலை விள்க்கிய அகமரபு பின்னாளில் இறைவன் – அடியவர் பக்தி உணர்வை எடுத்துக் கூறும் நாயக நாயகி பாவமாயிற்று.

இவ்வறு இலக்கியல் பெரும் மாறுதல் ஏற்பட்டது. இது காலத்தின் தேவையாகவும் அமைந்த்து.

**“ஆண்டவன் கழற்கு அன்பு**
**நெகுவ தாவதும் நித்தலும் அமுதொடு**
**தேனோ பால் காட்டி**
**மிகுவதாவதும்”**

(திருவா. 05, 36)

என்றும்,

**“பாட வேண்டும் நான் போற்றி நின்னையே**

**பாடி நைந்து உருகி நெக்கு நெக்கு**

**ஆட வேண்டும் நான்”**

(திருவா .5: 100)

என்றும் பாடுவதிலிருந்து மனதற்குள் எண்ணி உருகதல் உருகிப்பாடுதல், நெக்குருகி ஆடுதல் போன்ற மெய்ப்பாடுகளையும் பாடல்கள் தெளிவாக விளக்குகின்றன என்பதை அறிகிறோம்,

மேலும், சமண – பௌத்தர்களைச் சாடியும் சில பாடல்கள் புனையப்பட்டுள்ளன. சைவ சமயக்குரவர் நால்வரும் புறச் சமயங்களை வெறுத்து, ஆங்காங்கே இவற்றைச் சாடியுள்ளது தெரிகிறது . அவர்களின் ஒழுக்க நெறிகளையும் வாழ்வியல் வழிமுறைகளையும் வெறுத்துப் பாடியுள்ளதையும் காணமுடிகிறது.

## அலகு- 2

## திருஞானசம்பந்தர்

## திருவையாறு

1. புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி

அறிவழிந்திட் டைம்மேலுந்தி

அலமந்த போதாக அஞ்சசேலென்

றருள்செய்வான் அமருங்கோவில்

வலம்வந்த மடவார்கள் நடமாட

முழவதிர மழையென்றஞ்சிச்

சிலமந்தி யலமந்து மரமேறி

முகில்பார்க்குந் திருவையாறே

**விளக்கம்**

ஐம்பொறிகளால் அறியப்படும் ஐம்புலன்களும் இயல்பு திரிந்து அறிவழிந்து 'கபம்' பெருகி வருந்தும் போது "அஞ்சற்க" என்று அருள் புரிபவன் இருக்கின்ற பதியானது எதுவென்றால்,

சிவனை வலம் வந்து பணிந்த மகளிர் நடம்புரிய முழவு ஒலிக்க அம்முழவொலியை 'இடியொலி எனக் கருதி அஞ்சிய மந்திகள் (குரங்குகள்) மரத்தின் உச்சிக்குச் சென்று வானில் ஓடும் முகில்களைப் பார்க்கும் திருவையாறாகும்.

2. விடலேறு படநாகம் அரைக்கசைத்து

வெற்பரையன் பாவையோடும்

அடலேறொன் றதுவேறி அஞ்சொலீர்

பலியென்னு மடிகள்கோவில்

கடலேறித் திரைமோதிக் காவிரியி

னுடன்வந்து கங்குல்வைகித்

திடலேறிச் சுரிசங்கஞ் செழுமுத்தங்

கீன்றலைக்குந் திருவையாறே

**விளக்கம்**

பாம்பினை இடையிலணிந்து உமையோடு காளை வாகனத்தில் சென்று வீடுகள்தோறும் நின்று "அழகுமொழி பேசும் அரிவையரே ஐயமிடுவீர்" எனக்கேட்கும் அடிகளார் வாழ்கின்ற கோவில் உள்ள பதி எதுவென்றால்,

இரவில் ஆழியலைகள் கரையைத் தாக்கக்கலக்கும் காவிரியில் ஏறி, உள்நோக்கி வந்து சேரும் 'சங்குபூச்சிகள்' ஈன்ற முத்துக்கள் திகழும் திருவையாறாகும்.

3. கங்காளர் கயிலாய மலையாளர்

கானப்பே ராளர்மங்கை

பங்காளர் திரிசூலப் படையாளர்

விடையாளர் பயிலுங்கோவில்

கொங்காளப் பொழில்நுழைந்து கூர்வாயால்

இறகுலர்த்திக் கூதல்நீங்கி

செங்கால்நன் வெண்குருகு பைங்கானல்

இரைதேடுந் திருவையாறே.

**விளக்கம்**

தலையோமு ஏந்தியவர், கயிலையில் அமர்ந்தவர், கானப்பேர் உறைபவர், மங்கை பங்கர், திரிசூலத்தர், காளை வாகனம் உடையவராம் அச்சிவனார் வாழ்கின்ற பதியானது,

வெண்குருகு பசுஞ்சோலையில் நுழைகையில் சிந்திடும் தேனால் நனைந்த சிறகுகளை உலர்த்தி, ஈரம் போக்கிக் கானலில் இரைதேடும் திருவையாறாகும்.

4. ஊன்பாயு முடைதலைக்கொண் டூரூரின்

பலிக்குழல்வார் உமையாள்பங்கர்

தான்பாயும் விடையேறுஞ் சங்கரனார்

தழலுருவர் தங்குங்கோவில்

மான்பாய வயலருகே மரமேறி

மந்திபாய் மடுக்கள்தோறுந்

தேன்பாய மீன்பாய செழுங்கமல

மொட்டலருந் திருவையாறே

**விளக்கம்**

ஊர்தோறும் தலையோடு ஏந்திச் சென்று பிச்சையேற்கும் உமையொரு பாகத்தைஉடைய சிவனார், செந்தீ போன்ற செம்மேனியர், காளைஊர்தியர், அவர் வாழ்கின்ற பதியானது,

வயலருகே மான்பாயக் கண்டு அஞ்சிய மந்தி, மரம் ஏறிப்பாய, அதிலிருந்த அடை உடைந்து தேன் பாய்ந்து மடுவில் விழ, அத்தேன் பருக மீன்கள் பாய, அங்குள்ள தாமரை மொட்டு விரியும் திருவையாறாகும்.

5. நீரோடு கூவிளமும் நிலாமதியும்

வெள்ளெருக்கும் நிறைந்தகொன்றைத்

தாரோடு தண்கரந்தைச் சடைக்கணிந்த

தத்துவனார் தங்குங்கோவில்

காரோடி விசும்பளந்து கடிநாறும்

பொழிலணைந்த கமழ்தார்வீதித்

தேரோடும் அரங்கேறிச் சேயிழையார்

நடம்பயிலுந் திருவையாறே

**விளக்கம்**

கங்கையும் பிறையையும் வெள்ளெருக்கினையும் கொன்றை மலரையும் திருநீற்றுப் பச்சிலையையும் தலையில் அணிந்துள்ள சிவன்,

முகிலையும் தொடும் சோலைகள் கொண்டதும், தேரோடும் வீதிகளில் அமைந்த மேடைகளில் மகளிர் ஆடல் பயில்வதுமாக உள்ள திருவையாற்றில் வாழ்கின்றான்.

6. வேந்தாகி விண்ணவர்க்கும் மண்ணவர்க்கும்

நெறிகாட்டும் விகிர்தனாகிப்

பூந்தம நறுங்கொன்றை சடைக்கணிந்த

புண்ணியனார் நண்ணுங்கோவில்

காந்தார மிசையமைத்துக் காரிகையார்

பண்பாடக் கவினார்வீதித்

தேந்தாமென் றரங்கேறிச் சேயிழையார்

நடமாடுந் திருவையாறே

**விளக்கம்**

உலகையாளும் அரசனாகி, விண்ணவர்- மண்ணவர்க்கு வழிகாட்டும் விசித்திரனாய்க் கொன்றை மலரைச் சடையிற் கொண்ட புண்ணியர், வாழ்கின்ற கோவில் உள்ள பதியானது,

அழகிய பெண்கள் இனிமையாகக் காந்தாரப்பண் பாட வீதி மேடைகளில் தேந்தாம் என ஆடி அரங்கேற்றம் செய்யும் திருவையாறாகும்.

7. நின்றுலா நெடுவிசும்பில் நெருக்கிவரு
புரமூன்றும் நீள்வாயம்பு
சென்றுலாம் படிதொட்ட சிலையாளி
மலையாளி சேருங்கோவில்
குன்றெலாங் குயில்கூவக் கொழும்பிரச
மலர்பாய்ந்து வாசமல்கு
தென்றலா ரடிவருடச் செழுங்கரும்பு
கண்வளருந் திருவையாறே

**விளக்கம்**

பறக்கும் முப்புரத்துக் கோட்டைகளிலிருந்து அசுரர் துன்பமே தர, கயிலை மலையாளி யாம் சிவன் மேரு என்னும் வில்லில் அனலம்பு வைத்து எய்து கோட்டைகட்கு துன்பம் தந்த வில்லாளி அவன்.

அச்சிவன் குன்றுகளிலிருந்து குயில் கூவ, தென்றல் பூங்காவில் புகுந்து தேன்மணத்தை வாரி வந்து அடிவருடக் கரும்பு கண் வளரும் திருவையாற்றில் வாழ்கிறான்.

8. அஞ்சாதே கயிலாய மலையெடுத்த
அரக்கர்கோன் தலைகள்பத்தும்
மஞ்சாடு தோள்நெரிய அடர்த்தவனுக்
கருள்புரிந்த மைந்தர்கோவில்
இஞ்சாயல் இளந்தெங்கின் பழம்வீழ
இளமேதி இரிந்தங்கோடிச்
செஞ்சாலிக் கதிருழக்கிச் செழுங்கமல
வயல்படியுந் திருவையாறே

**விளக்கம்**

சிவன் வாழ்கின்ற மலை என்று தெரிந்தும் அஞ்சாமல் கயிலை மலையை எடுத்த இராவணனின் பத்து தலையும் இருபது தோள்களும் நெரிபடச் செய்தான் சிவன்,

பணிந்த பின் அவனுக்கு அருளும் வழங்கினான்.

அவன் தெங்கிலிருந்து பழம் விழுந்திடக் கீழ் நின்ற எருமைக் கன்றுகள் அஞ்சிப் பதறி ஓடிச் செந்நெற்கதிரை உழக்கி, செந்தாமரைச் செய்யில் படியும் திருவையாற்றில் வாழ்கின்றான்.

9. மேலோடி விசும்பணவி வியன்நிலத்தை
மிகவகழ்ந்து மிக்குநாடும்
மாலோடு நான்முகனு மறியாத
வகைநின்றான் மன்னுங்கோவில்
கோலோடக் கோல்வளையார் கூத்தாடக்
குவிமலையார் முகத்தினின்று
சேலோடச் சிலையாடச் சேயிழையார்
நடமாடுந் திருவையாறே

**விளக்கம்**

திருமாலும் பிரம்மனும் சிவனின் அடி முடியைச் செருக்கினால் காணமுயன்றபோது காணற்கரியனாய் உயர்ந்த சிவன்,

கூத்தாடும் கோல்வளை மாதர் முகத்தில் மீன்போலும் கண்கள் இருபுறமும் சென்றும் மீண்டும் ஆடச் சிலைபோலும் புருவங்களும் வளைந்து நெளிந்தாட அரிவையர் ஆடல்கொள்ளும் ஐயாற்றில் வாழ்கிறான்.

10. குண்டாடு குற்றுடுக்கைச் சமணரொடு
சாக்கியருங் குணமொன்றில்லா
மிண்டாடு மிண்டருரை கேளாதே
யாளாமின் மேவித் தொண்டீர்
எண்டோ ளர் முக்கண்ணர் எம்மீசர்
இறைவரினி தமருங்கோவில்
செண்டாடு புனல்பொன்னிச் செழுமணிகள்
வந்தலைக்குந் திருவையாறே

**விளக்கம்**

சமணரும் சாக்கியரும் பண்பென்பது அறியாத அறிவில்லாதவர். அவர்கள் கூறுவன கேட்காதே.

பொன்னி அலை, மணிகளைக் கொண்டு வந்து குவிக்கும் ஐயாற்றில் வாழ்கின்ற எட்டுதோள்களையும் முக்கண்ணையும் உடைய இறைவனான அவரே எம் ஈசர். அவர்க்கே ஆளாகிப் பணி செய்து வாழ்வீர்.

11. அன்னமலி பொழில்புடைசூழ் ஐயாற்றெம்

பெருமானை அந்தண்காழி

மன்னியசீர் மறைநாவன் வளர்ஞாண

சம்பந்தன் மருவுபாடல்

இன்னிசையா லிவைபத்தும்

இசையுங்கால் ஈசனடி யேத்துவார்கள்

தன்னிசையோ டமருலகில் தவநெறிசென்

றெய்துவார் தாழாதன்றே

**விளக்கம்**

அன்னம் பயில் பொழில் ஐயாற்று எம்மானைச் காழிமறை நாவன் என்னும் திருஞானசம்பந்தர் போற்றிப் பாடிய பாடல்கள் பத்தினையும் பண்ணோடு பாடிப் பணியும் அடியவர்கள் வானுலகில் தவநெறியிற் சென்று பேரின்பம் அடைவர்.

**திருநாவுக்கரசர்**

**மறுமாற்றுத் திருத்தாண்டகம்**

சமணர் தருமசேனர் (திருநாவுக்கரசர்) சைவத்திற்கு மாறினார். அதனால் நம் சமயம் வீழும் என எண்ணி, ‘மன்னனிடம் இனி நின் சமயம் அழியும்’ எனக் கூற, மன்னனும் சிலரை தருமசேனரிடம் அனுப்பி அவரை அழைத்து வருமாறு கூறினான். அவ்வாறு வந்தவர்க்குத் தருமசேனர் மறுமொழி கூறுவதே மறுமாற்றுத் திருத்தாண்டகம் எனும் பதிகமாகும்.

**பதிக வரலாறு**

திலகவதியாரின் வேண்டுகோளுக்கிணங்கி சிவபெருமான் மருள்நீக்கியாருக்குக் கொடிய சூலைநோய் கொடுத்து மீண்டும் சைவ சமயத்திற்கு வரவழைத்தார்.

இதனை அறிந்த சமணர் தம் ‘சமயம் இனித் தேறாது’ என மருண்டு இந்நிலையை நாடாளும் பல்லவமன்னன் அறிந்தால் அவனும் சைவத்திற்கு மாறுவான்

நம்மைத் தவிர்ப்பான். இனி நம் பிழைப்பு நடக்காது என்றெண்ணி மன்னனிடம் சென்றனர்.

தருமசேனர் சைவம் புகுந்ததோடு அதற்குக் காரணமாகப் பொய்யாய் சூலை நோய் என்று கூறி, அதனைத் தடுப்பவன் சடைமுடி கொண்ட திரிசடைக்கடவுளே எனக் கூறுகின்றார்.

அவர் நீ சார்ந்த சமயத்தையும், நாம் சேர்ந்துள்ள சமணத்தையும் அழிப்பது உறுதி எனக் கூற , கோபம் கொண்ட மன்னன் அமைச்சர்களை நோக்கி, தருமசேனரை அழைத்து வருக என ஆணையிட்டான் .

மன்னன் ஆணையை ஏற்ற அமைச்சரும் அலுவலரும் பிறரும் திருவதிகை நோக்கிச் சென்று, அடியாரைக்கண்டு மன்னரின் ஆணையைக் ஜறினர்.

அதற்கு மறுமொழியாக நாவுக்கரசர் கூறியதே இத்திருப்பதிகம்.

1. நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம் மலர்ச்சே வடிஇணையே குறுகி னோமே

**விளக்கம்**

யார்க்கும் ஆட்படாதவராகிய தன்மை கொண்டு சங்கரன் எனப் பெற்று சங்கு வெண்குழையை ஒரு செவியில் அணிந்தவனும், அத்தலைவனானவனுக்கே நாம் மீளா அடிமை கொண்டு விளங்கி, அப்பொழுதுதான் கொய்த மலருக்கு ஒப்பான சிவந்த இணையடிகளை உடையாரை அடைந்த காரணத்தினால்,

நாம் எவர்க்கும் அடிமைக் குடிமகனாக அமைந்திலோம்.

எமனுக்கும் அஞ்சமாட்டோம். நரகத்திற்குச் செல்லமாட்டோம். அங்கும் துன்பம் படமாட்டோம். பொய் கூறமாட்டோம். எக்காலத்தும் மகிழ்ச்சியோடு இருப்போம். நோய் இது தான் என்று அறியமாட்டோம்.

யாரிடத்தும் சென்று ஏதேனும் ஒன்று வேண்டி கூனிக்குறுகிப் பணிந்து நிற்கமாட்டோம். எந்நாளும் இன்பமே அல்லாமல் துன்பமில்லை.

2. அகலிடமே இடமாக ஊர்கள் தோறும்

அட்டுண்பார் இட்டுண்பார் விலக்கார் ஐயம்

புகலிடமாம் அம்பலங்கள் பூமிதேவி

யுடன் கிடந்தாற் புரட்டாள் பொய் யன்று மெய்யே

இகலுடைய விடையுடையான் ஏன்று கொண்டேன்

இனியேதுங் குறைவிலோம் இடர்கள் தீர்ந்தோம்

துகிலுடுத்துப் பொன்பூண்டு திரிவார் சொல்லும்

சொற்கேட்கக் கடவோமோ துரிசற் றோமே

**விளக்கம்**

அகன்ற உலகிலுள்ள ஊர்கள் தோறும் இல்லறத்தில் சமைத்து உண்பவர், சிவனடியார்களுக்கு அவ்வுணவினைத் தந்து உண்ணச் செய்வர்.

அதனால் அவ்வடியார்கள் இல்லங்கள்தோறும் சென்று இரக்க வேண்டியதில்லை.

அப்பெருமக்கள் தங்குவதற்கு அம்பலங்கள் உள்ளன. பூமாதேவியான இம்மண்ணுலக மாது எம்முடன் இருத்தலால் இடையூறும் இல்லை.

இது பொய்யன்று. போரிடத்தக்க வலிமை கொண்ட காளையைத் தன் வாகனமாகக் கொண்டவன் எம்மை ஏற்றுக் கொண்டான்.

இனிக் குறையே இல்லை. துன்பமும் இல்லை. சிறந்த ஆடையோடு பொன் அணிகலன்களை அணிந்து திரிபவர்கள் சொல்லை யாம் கேட்க மாட்டோம். அதனால் குற்றமற்றவர் ஆனோம்.

3. வாராண்ட கொங்கையர்சேர் மனையிற் சேரோம்

மாதேவா மாதேவா என்று வாழ்த்தி

நீராண்ட புரோதாயம் ஆடப் பெற்றோம்

நீறணியுங் கோலமே நிகழப் பெற்றோம்

காராண்ட மழைபோலக் கண்ணீர் சோரக்

கன்மனமே நன்மனாய்க் கரையப் பெற்றோம்

பாராண்டு பகடேறித்திரிவார் சொல்லும்

பணிகேட்கக் கடவோமே பற்றற்றோமே

விளக்கம்

நாம் பற்றற்றவர் ஆதலால் யானை மேல் அமர்ந்து உலகினை ஆளும வல்லமை படைத்த மன்னர்களிள் ஆணைகளைக் காதுகொடுத்து கேட்க மாட்டோம்.

வாரால் இழுத்துக் கட்டப்பட்டுள்ள கொங்கைகளைக் கொண்ட மகளிருடன் சேர்ந்து வாழும் இல்லறத்தார் நிலையினின்றும் பிரிந்து யாம் தனித்தே வாழ்கின்றோம்.

சமணரிடம் பழகிய நிலையில் பெற்ற தீய பழக்கவழக்கங்கள் நீங்கப் பெற்று, அதிகாலையில் எழுந்து நறுநீராடி, நீறணியும் நற்பழக்கமும் சைவம் சார்ந்த பின் பெற்றேன்.

மன்னரின் ஆணைக்கு இல்லுறைவோரே கட்டுப்படுவர். யாம் பற்றற்ற துறவி ஆதலால் அவரின் ஆணை என்னை ஒன்றும் செய்யாது.

4. உறவாவார் உருத்திரபல் கணத்தி னோர்கள்

உடுப்பனகோ வணத்தோடுதீ ளுளவா மன்றே

செறுவாருஞ் செறமாட்டார் தீமைதானும்

நன்மையாய்ச் சிறப்பதே பிறப்பிற் செல்லோம்

நறவார்பொன் னிதழிநறுந் தாரோன் சீரார்

நமச்சிவா யச்சொல்ல வல்லோம் நாவால்

சுறவாருங் கொடியானைப் பொடியாக் கண்ட

சுடர்நயனச் சோதியையே தொடர்வுற் றோமே

**விளக்கம்**

சிவவேடங்கொண்ட சிவனடியார்கள் அவனுக்கு உறவாகி கோவண ஆடையை உடுத்துபவர்கள்.

பகைவரின் சீற்றத்தினால் தாக்கப்பட மாட்டார்கள்.

அவர்க்குத் தீமையும், நன்மையாகவே விளங்கும். பிறப்பற்றவர்கள்.

தேன்நிறைந்து பொன்போல் திகழும் கொன்றைமாலையை அணிந்த சிவபிரானின் திருப்பெயரான திருவைந்தெழுத்தினைச் சொல்ல அவர்கள் வல்லவர்கள்.

மீனைக் கொடியாக உடைய மன்மதனை எரித்துச் சாம்பலாக்கிய நெற்றிக்கண் கொண்ட இறைவனையே அவர்கள் தொடர்பவர்கள் ஆதலால் யாம் எதற்கும் அஞ்சமாட்டோம்.

5. என்றும்நாம் யாவர்க்கும் இடைவோ மல்லோம்

இருநிலத்தில் எமக்கெதிரா வாருமில்லை

சென்றுநாம் சிறு தெய்வம் சேர்வோ மல்லோம்

சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்

ஒன்றினாற் குறையுடையோ மல்லோ மன்றே

உறுபிணியார் செறலொழிந்திட் டோடிப் போனார்

பொன்றினார் தலைமாலை யணிந்த சென்னிப்

புண்ணியனை நண்ணியபுண் ணியத்து ளோமே

**விளக்கம்**

இறந்தாரின் தலைமாலையை அணிந்தவனை யாம் அடைந்து புண்ணியப் பயனைப் பெற்றவரானோம்.

சிவபிரான் திருவடியைச் சேரப்பெற்றதால் யாம் எத்தன்மையிலும் குறையுடையோமல்லோம்.

சமணரை விட்டு யாம் நீங்கிய பின்னர் மிக்க நோய் கொண்ட அன்னார் எம்மை விட்டு ஓடிப்போனார்.

யாம் என்றும் எவர்க்கும் எந்நிலையிலும் கொண்ட கொள்கையினின்று பின் வாங்கமாட்டோம். இப்பெரிய நிலவுலகில் எமக்கு எதிரானவர் எவரும் இல்லை.

சிறுதெய்வங்களையும் சேரமாட்டோம்.

6. மூவுருவின் முதலுருவாய் இருநான் கான

மூர்த்தியே யென்றுமுப் பத்து மூவர்

தேவர்களும் மிக்கோருஞ் சிறந்து வாழ்த்தும்

செம்பவளத் திருமேனிச் சிவனே யென்னும

நாவுடையார் நமையாள வுடையா ரன்றே

நாவலந்தீ வகத்தினுக்கு நாத ரான

காவலரே யேவி விடுத்தா ரேனுங்

கடவமல்லோம் கடுமையொடு களவற் றோமே

**விளக்கம்**

மும்மூர்த்திகளாகிய நான்முகன், திருமால், உருத்திரன் ஆகியோரின் முதல் உருவானவர். அட்டமூர்த்தியாய் விளங்குபவர்.

முப்பத்து மூன்று வகையான தேவர்களுக்கும் அவர்களின் மேலானவர்க்கும் தலைவராக விளங்கும் இத்தகு பெருமானைத் திருவடியார்கள் சிவன் எனப் பெயரிட்டு அழைத்து, எம்மை ஆளும் தன்மையுடையர் என்றழைப்பர்.

நீங்களோ இச்சிறு பகுதியை ஆளும் பல்லவனின் ஏவலர். இஃதன்றி நாவலந் தீவினுக்கே உரிமை பெற்றத் தலைவர் எம்மை அழைத்துவருமாறு ஆணையிட்டிருந்தாலும் யாம் அதை ஏற்கமாட்டோம்.

என்னை? பிறர்க்குக் அடிமையாகிய செயல் செய்து நலிதலை யாம் என்றும் பெற்றிலம். கடுமையும் களவும் உடையாரே மன்னன் ஆணைக்கு அஞ்சுவர். யாம் இதில் எதனையும் பெறாததால் இவ்வாணையை ஏற்கமாட்டோம்.

7. நிற்பனவும் நடப்பனவும் நிலனும் நீரும்
நெருப்பினொடு காற்றாகி நெடுவா னாகி
அற்பமொடு பெருமை யுமாய் அருமை யாகி
அன்புடையார்க்(கு) எளிமையதாய் அளக்கலாகாத்
தற்பரமாய்ச் சதாசிவமாய்த் தானும் யானும்
ஆகின்ற தன்மையனை நன்மை யோடும்
பொற்புடைய பேசக் கடவோம் பேயர்
பேசுவன பேசுதுமே பிழையற் றோமே

**விளக்கம்**

சிவபிரான் என்றும் நிலைத்து நிற்பவராய் நிற்பனவாய் நடப்பனவாய் நிலம், நீர், தீ, காற்று வானமுமாய் மிக நுண்ணிய அணுப்போன்ற சிறு பொருளிலும், அளவிடற்கரிய பெரிய பொருளிலும் அருமையுடன் அன்போடு போற்றப்படுவார்க்கு எளியவனாயும்

அளவிட்டுக் கூற இயலாமலுள்ள உயிர்க்கு மேற்பட்ட சதாசிவமாயும், தானும் யானுமாய் ஆகின்ற தன்மை கொண்டவனை நன்மையால் மிகப் பேசுவோம்.

மனம் வேறுபட்ட பேய்க் குணம் கொண்டார் எது பேசினும் பேசுக. அது பற்றி யாம் கவலைப்படுவதில்லை. யாம் பிழையற்றோம்.

8. ஈசனையெவ் உலகினுக்கும் இறைவன் தன்னை
இமையவர்தம் பெருமானை எரியாய் மிக்க
தேசனைச் செம்மேனி வெண்ணீற் றானைக்

சிலம்பரையன் பொற்பாவை நலஞ்செய் கின்ற

நேசனை நித்தலும் நினையப் பெற்றோம்

நின்றுண்பார் எம்மை நினையச் சொன்ன

வாசக மெல்லாம் மறந்தோ மன்றே

வந்தீரார் மன்னவனா வான்றா னாரே

**விளக்கம்**

சிவபெருமானே எவ்வுலகினுக்கும் இறைவன். விண்ணவர்கட்கும் தலைவன், தீப்பிழம்பு போன்று ஒளிறும் சிவந்த திருமேனியில் திருவெண்ணீற்றினைக் குழைத்துப் பூசியுள்ள பெருமானை, மலையரசனின் அழகிய பாவை போன்ற மகளான உமையை அதிகம் விரும்புகின்ற நேசனை,

யாம் நாடோறும் போற்றி வணங்கிப் பெரும் பேறுகள் பெற்றோம். நின்று உண்பவர்களான சமணர் எம்மை நினைத்துக் கூறிய உறுதியான சொற்கள் அனைத்தும் அப்பொழுதே யாம் மறந்தோம்.

உன் அரசன் பணியைச் சமணர் கேட்பர் சிவனடியார் அதனைச் செவிமடுப்பரோ? ஆதலின் நீவிர் வாளாய் இங்கு வந்தது ஏன்? நும் மன்னர் தாம் யாவர்? மன்னரால் குறிப்பிடப்பட்டவர் தாம் யாவர்? வந்தநுமக்கும் எமக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. யாம் யார்க்கும் ஆட்படமாட்டோம் . செல்லுங்கள்.

9. சடையுடையான் சங்கக் குழையார் காதன்

சாம்பலும் பாம்பும் அணிந்த மேனி

விடையுடையான் வேங்கை அதன் மேலாடை

வெள்ளிபோற் புள்ளியுழை மான்தோல் சார்ந்த

உடையுடையான் நம்மை யுடையான் கண்டீர்

உம்மோடு மற்று முளராய் நின்ற

படையுடையான் பணிகேட்கும் பணியோ மல்லோம்

பாசமற வீசும் படியோம் நாமே

**விளக்கம்**

ஈசன் சடை முடியை உடையவர், திருச்செவியில் சங்குக் குழையை அணிந்தவர். சாம்பலைத் திருமேனியில் பூசியுள்ளார். பாம்பை அணிந்த மேனியர்.

இடபத்தை வாகனமாகக் கொண்டவர். புலித்தோலினை உடுத்தியவர். வெள்ளிபோல் புள்ளிகளையுடைய மான்தோலை மேலாடையாக உடையவர். நம்மையுங் அடிமையாகக் கொண்டு ஆண்டவர் என்பதனை அறிவீர்.

வந்த நும்மோடும் மற்றும் பிறர் உம்முடன் உளர். படைவீரர் அலுவலர் மற்று ஏனையோரையும் சேர்த்து அனுப்பிய மன்னன் பணியினை யாம் கேட்டுப் பணிய மாட்டேன். யாம் பற்றற்ற அடியவர்.

10. நாவார நம்பனையே பாடப் பெற்றோம்

நாணற்றார் நள்ளாமே விள்ளப் பெற்றோம்

ஆவாஎன் றெமையாள்வான் அமரர் நாதன்

அயனொடு மாற் கறிவரிய அனலாய் நீண்ட

தேவாதி தேவன் சிவனென் சிந்தை

சேர்ந்திருந்தான் தென்திசைக்கோன் தானே வந்து

கோவாடிக் குற்றேவல் செய்கென் றாலும்

குணமாகக் கொள்ளோம் எண் குணத்துளோமே

**விளக்கம்**

நாவின் ஆசை தீர யாம் சிவபிரானையே போற்றிப் பாடினோம். நாணம் அற்றவர் எம்மை விரும்பாதவாறு விலகப் பெற்றோம்.

வா என எம்மை அழைத்து ஆள்பவன் தேவரின் தலைவனான சிவபிரானே ஆவர்.

அப்பிரான் நான்முகனும் திருமாலும் அறிவதற்கு அரியராகி தீப்பிழம்பாக ஓங்கி நின்ற தேவாதி தேவர்.

எம் சிந்தையில் சேர்ந்திருப்பவர். தென்திசைத் தலைவனான கூற்றுவனே வந்து தன் தலைமைச் சொல்லி எம்மைக் குற்றேவல் செய்யப் பணித்தாலும் அதனையும் ஒரு பொருட்டாக யாம் கொள்ளமாட்டோம்.

ஏனெனில் எம்பெருமானுக்குரிய எண்குணங்கள் எமக்கும் உண்டு. ஆகையால் நீவிர் இங்கு நிற்க வேண்டாம் சென்றுவிடுக.

**சுந்தரர்**

**திருமழபாடி**

1. பொன்னர் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து

மின்னார் செஞ்சடைமேல் மிளிர்சடைமேல் மிளிர்கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே

**விளக்கம்**

செம்பொன்போலும் செம்மேனிச் சிவனாரே. புலித்தோலை அரைக்கசைத்து மின்னல்போல் மிளிரும் செஞ்சடையில் கொன்றை மலர் அணிந்தவரே, என் மன்னவரே, அரிய பெரிய மாணிக்கமாகத் திகழும் பெருமானாரே.

அன்னையென என்னைக் காப்பவரே, மழபாடி மாணிக்கமே உம்மை நினைக்காது நான் வேறு யாரை நினைப்பேன்?.

2. கீளார் கோவணமுந் திருநீறுமெய் பூசியுன்றன்
தாளே வந்தடைந்தேன் தலைவாயெனை ஏன்றுகொள்நீ
வாளார் கண்ணிபங்கா மழபாடியுள் மாணிக்கமே
கேளா நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே

**விளக்கம்**

அரையில் கீளும் கோவணமும் அணிந்து, மேனியெங்கும் வெண்ணீறு பூசியுள்ள தலைவராம் சிவனாரே, இந்நாளில் உம் தாளில் அடைக்கலம் புகுந்தேன். என்னை ஏற்றிடுவீர்.

வாளெனத்திகழ் கண்களையுடைய உமைபங்கரே, மழபாடி, வாழ் மாணிக்கமே, உனக்கே ஆளாக உள்ள நான், உம்மையன்றி இனிவேறு யாரை நினைப்பேன்?

3. எம்மான் எம்மனையென் றெனக்கெட்டனைச் சார்வாகார்
இம்மா யப்பிறவி பிறந்தேயிறந் தெய்த் தொழிந்தேன்
மைம்மாம் பூம்பொழில்சூழ் மழபாடியுள் மாணிக்கமே
அம்மான் நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே

**விளக்கம்**

கார்முகில் தவழும் மாமரங்கள் மிகு பூம்பொழிலார்ந்த மழபாடியில் வாழ் மாணிக்கமே. என் அண்ணலே, எனக்குத் தந்தையாகவும் தாயாகவும் உள்ளவர்கள், எனக்கு நிலைத்த துணையாகார்.

இப்பொய்ம் மாயப்பிறவி பெற்ற நான், மீண்டும், மீண்டும் ஈண்டுப் பிறந்து, மிகவும் இளைத்தேன். எனக்கு நிலையான துணை நீவிரே, உம்மையன்றி நான் பிறர் எவரையும் நினைக்கவே மாட்டேன்.

4. பண்டே நின்னடியேன் அடியாரடி யார்கட்கெல்லாந்
தொண்டே பூண்டொழிந்தேன் தொடாராமைத் துரிசறுத்தேன்
வண்டார் பூம்பொழில்சூழ் மழபாடியுள் மாணிக்கமே
அண்டா நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே.

**விளக்கம்**

வண்டுகள் பண் கொண்டு பாடும் காக்கள் சூழ் மழபாடி வாழ் மாணிக்கமே அன்று நீர் மணப்பந்தலில் காட்டிய ஆவணத்தின்படி நான் உம் அடியவனே,

உலகமெங்கும் வாழ்வு கொண்டவரே, உம் அடிபடியும் அடியவர்கட்கு நான் தொண்டு செய்தவன் அல்லவா, அத்தொண்டினை இன்றும் நான் தொடர்ந்து செய்து, என்மேல் குற்றங்கள் பற்றாவண்ணம் பார்த்துக் கொண்டடேன். நான் இனிமேலும் உம்மையன்றி எவரையும் நினையேன்.

5. கண்ணாய் ஏழுலகுங் கருத்தாய அருத்தமுமாய்ப்
பண்ணார் இன்றமிழாய்ப் பரமாய பரஞ்சுடரே
மண்ணார் பூம்பொழில்சூழ் மழபாடியுள் மாணிக்கமே
அண்ணா நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே

**விளக்கம்**

ஏழுலகிற்கும் கண்ணாகி ஆங்காங்குள்ள உயிர்களைக் கருத்தோடு காத்திடும் மெய்ப் பொருளுமாகிப் பண்ணிறை இன்றமிழுமாகிய மேலான பேரொளிச் சுடரே.

மண்வளர் பொழில்கள் சூழ்ந்த மழபாடி வாழ் மாணிக்கமே மேலோரே , நான் இனி உம்மையன்றி யாரை நினைப்பேன்?.

6. நாளார் வந்தணுகி நலியாமுனம் நின்றனக்கே
ஆளா வந்தடைந்தேன் அடியேனையும் ஏன்று கொள்நீ
மாளா நாளருளும் மழபாடியுள் மாணிக்கமே
ஆளா நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே.

**விளக்கம்**

படைக்கும்போதே ஒவ்வொருயிர்க்கும் சிவனார் விதித்துள்ள வாழுநாள் அளவினை அறிந்து வைத்து உரிய காலத்தில் முறை தவறாது உயிர்கவர வரும் கூற்றுவனார் என்வாழ்நாள் அளவினை அறிந்து என்னை நலிந்து உயிர்கவர வருவதன் முன்,

நும் பணி செய்யும் ஆளாக, நும்மை வந்தடைந்தேன், சிவனாரே.வந்த என்னையும் சொந்தமாக்கி ஏற்றுக்கொள்வீர். என்றும் மாளாதிருக்கும் நாளினை எனக்கருளும் மழபாடி மாணிக்கமே, நான் நினைப்பதெல்லாம் உம்மையே வேறெவரையுமில்லை.

7. சந்தா ருங்கு ழையாய் சடைமேற்பிறை தங்கிநல்ல
வெந்தார் வெண்பொடியாய் விடையேறிய வித்தகனே
மைந்தார் சோலைகள் சூழ் மழபாடியுள் மாணிக்கமே
எந்தாய் நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே

**விளக்கம்**

சந்தனமணம் கமழும் காதணிந்தவரே, மேனியில் வெண்ணீறணிந்து வெண்பிறையைச் செஞ்சடையில் வைத்தவரே,

காளைமீது ஏறி வரும் மேலோரே, எழில் பொழில் திகழும் மழபாடி வாழ் மாணிக்கமே, உம்மையன்றி, நான் வேறு யாரை நினைப்பேன்.

8. வெய்ய விரிசுடரோன் மிகுதேவர் கணங்களெல்லாஞ்
செய்ய மலர்களிட மிகுசெம்மையுள் நின்றவனே
மையார் பூம்பொழில்சூழ் மழபாடியுள் மாணிக்கமே
ஐயா நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே

**விளக்கம்**

விரிகதிர் ஞாயிறும், தேவ கணங்களும் வந்து நாண்மலர் தூவிப் போற்றி வழிபட நல்லருள் புரிபவரே,

முகில் தவழும் பொழில் சூழ் மழபாடி வாழ் மாணிக்கமே, ஐயரே நான் உம்மையன்றி வேறு யாரை நினைப்பேன்.

9. நெறியே நின்மலனே நெடுமாலயன் போற்றிசெய்யுங்
குறியே நீர்மையனே கொடியேரிடை யாள்தலைவா
மறிசேர் அங்கையனே மழபாடியுள் மாணிக்கமே

அறிவே நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே

**விளக்கம்**

நன்னெறி காட்டும் மாசிலாமணியே, மாலும் மலரவனும், எண்ணிப் போற்றும் மெய்யரே, கொடிபோல் இடையுடைய உமையம்மை கணவரே,

மானேந்து கையரே, மழபாடி மாணிக்கமே, மெய்யறிவு வடிவு கொண்டவரே, நான் உம்மையன்றி எவரையும் நினையேன்.

10. ஏரார் முப்புரமும் எரியச்சிலை தொட்டவனை
வாரார் கொங்கையுடன் மழபாடியுள் மேயவனைச்
சீரார் நாவலர்கோன் ஆரூரன் உரைத்தமிழ்
பாரோர் ஏத்தவல்லார் பரலோகத் திருப்பாரே

**விளக்கம்**

கொடிய முப்புரத்தசுரரின் கனிமங்களாலான, கவினுடைய பறக்கும் மூவரண்களும் மடிய எரியம்பு செலுத்தி எரித்தழித்த சிவனாரே.

வாரணி கொங்கைகள் திகழ் மங்கையாம் உமையைப் பாகங் கொண்டவரே, மழபாடி மாணிக்கத்தைத் திருநாவலூரான் நம்பியாரூரன் போற்றிப்பாடிய பாக்களைப் பாடி போற்ற வல்லவர், மேலான சிவனாருலகு சென்று வாழும் பேறு பெறுவர்.

**மாணிக்கவாசகர்**

**அறிவுறுத்தல் (தரவுக் கொச்சகக் கலிப்பா)**

1. நாடகத்தால் உன் அடியார்போல் நடித்து, நான்நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப் பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்பு உனக்குஎன்
ஊடகத்தே நின்று உருகத் தந்து அருள் எம்முடையானே

**விளக்கம்**

எம்மை அடிமையாகக் கொண்டவனே உள்ளத்தில் மெய்யன்பு கொள்ளாத நான், பொய்யன்பு கொண்டு உன் அடியாருள் ஒருவனாக நாடகமாடி வருகின்றேன்.

வீடுபேறு சென்று அடைவதற்கு மிகவும் விரைவாகவும் ஓடுகின்றேன். பசும்பொன்னும் சீர் மாணிக்கக் கல்லும் ஒன்று கலந்த மலை போன்றவனே, இடையில் தொய்வு ஏற்படா மெய்யன்பினை உனக்கு தந்திட நான்,

அவ்வன்பினை என் உள்ளத்தில் தேக்கி, உள்ளை நினைஎந்துருகத் தக்க அருளை வழங்குவாயாக.

அன்பின்மையைப் பிறர் அறியவொண்ணாது நடப்பதே நாடகத்தால் நடிப்பது. பிறர் அறிய நடப்பது, நடிப்பது மாத்திரையாகும் என்க.

அடிகளார்உடல்நீத்து இறைவனோடு இரண்டறக் கலத்தலையே பெரிதும் விழைந்தவர் என்பதற்கு இஃது தெளிவான அகச்சான்றாக அமையும்.

2. யான் ஏதும் பிறப்பு அஞ்சேன், இறப்பு அதனுக்கு என் கடவேன்?
வாளேயும் பெறில் வேண்டேன், மண்ணாள்வான் மதித்தும் இரேன்
தேன் ஏயும் மலர்க்கொன்றைச் சிவனே எம் பெருமான் எம்
மானே உன் அருள்பெறு நாள் என்று? என்றே வருந்துவனே

**விளக்கம்**

தேன் பொருந்திய கொன்றை மலர் மாலை அணிந்த சிவனே நான், எப்படிப்பட்ட பிறப்பாயினும் அதுகண்டு ஒரு சிறிதும் அஞ்சமாட்டேன்.

இறப்பைக்கண்டு யாதொன்றும் செய்வதற்கு இல்லை. மண்ணுலக இன்பமானது, மிகக்கீழானவை, அதனால் அவ்வின்பத்தை மதிக்க மாட்டேன்.

விண்ணுலக வாழ்வானது சற்று உயர்ந்தவை தான் ஆயினும் அதனை விரும்ப மாட்டேன். ஆனால் எம்பெருமானே, எம் தலைவனே, உனது திருவருளைப் பெறும் நாள் எந்நாளோ, என்றவாறு வருந்துவனே.

3. வருந்துவன் நின் மலர்ப்பாதம் அவை காண்பான், நாய் அடியேன்
இருந்து நல மலர் புனையேன், ஏத்தேன் நாத் தழும்பு ஏறப்
பொருந்திய பொற்சிலை குனித்தாய் அருள் அமுதம் புரியாயேல்
வருந்துவன் நத் தமியேன், மற்று என்னே நான் ஆமாறே?

**விளக்கம்**

நன்றியுள்ள நாய் போன்ற அடியேனாகிய நான் உன் மலர்ப்பாதம் காண வேண்டி வருந்தி நிற்கின்றேன். நின் திருவடி காண கருவியாகிய மணம் பொருந்திய நன்மலர்கள் பல இருந்தும் சூட்டினேன் அல்லன்,

சான்றோர் பாடிய அருட்பாடல்கள் பல இருந்தும் அவை கொண்டு மீண்டும் மீண்டும் உள்ளம் உறைப்புப் பெறும் வரை பாடினேன் அல்லேன்.

மேரு மலையை வில்லென வளைத்தவனே, உனது அருளோடு கூடிய அமுதம் கிடைக்காது எனில், நான் தனியனாய்த் துன்புறுவேன் என்பதல்லாமல், என்னால் மற்றபடி என்னதான் செய்ய இயலும்.

4. ஆம் ஆறு உன் திருவடிக்கே அகம் குழையேன், அன்பு உருகேன்
பூமாலை புனைந்து ஏத்தேன் புகழ்ந்து உரையேன் புத்தேளிர்
கோமான், நின் திருக்கோயில் தூகேன், மெழுகேன், கூத்தாடேன்
சாமாறே விரை கின்றேன் சதுராலே சார்வானே

**விளக்கம்**

தேவாதிதேவனே, நின்திருவடிக்கு அடிமைசெய்யுமாறு உள்ளம் நெகிழ்ந்தேன் அல்லேன். அன்பால் உருகினேன் அல்லேன்.

மலர்மாலை தொடுத்துச் சூட்டி வழிபட்டேன் அல்லேன். நின்னைப் பலவாறாகப் போற்றிப் பாடினேன் அல்லேன்.

நின் திருக்கோயிலைத் தூயதாகச் செய்தேன் அல்லேன். திருக்கோயிலில் நீ மகிழுமாறு கூத்தாடினேன் அல்லேன். யோக வலிமையால் மெய்யறிவு சார்ந்தவன்.

5. வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான்எனது என்று அவர் அவரைக் கூத்து ஆட்டு
வானாகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே

**விளக்கம்**

விண்ணாகவும் மண்ணாகவும், காற்றாகவும் ஒளியாகவும் உடலாகவும் உயிராகவும் உண்டு என்பதுமாயும், இல்லை என்பது மாயும்

எல்லோருக்கும் தலைவனாகி யான் எனவும், எனது எனவும் இறுமாந்திருப்பவரைக் கூத்தாடச் செய்பவனாகவும் நிலைபெற்று விளங்குகின்ற பெருமானே

உன்னையான் என்ன வெல்லாம் சொல்லி எவ்வாறு புகழ்ந்துரைப்பேனா?

6. வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான், மனம் நின்பால்
தாழ்த்துவதும் தாம் உயர்ந்து தம்மை எல்லாம் தொழ வேண்டிச்
சூழ்ந்து மதுகரம் முரலும் தாரோயை, நாய் அடியேன்
பாழ்த்த பிறப்பு அறுத்திடுவான், யானும் உன்னைப் பரவுவனே

**விளக்கம்**

வண்டுகள் சூழ்ந்து ஒலி எழுப்பும் மலர்மாலையை அணிந்தவனே, தாம் நல்ல நிலையில் வாழ்வதற்காக விண்ணவர் அனைவரும் உன்னைப் பரவுகின்றனர்.

தாம் உயர்வு பெற்று அனைவரும் தன்மை அடிபணிந்து வணங்க வேண்டியே, அவர் எல்லாம் உன்னை எண்ணுபவராகவும் உள்ளனர்.

அடியேனும் பாழாய்ப்போன என் பிறப்பினை நீக்கவேண்டி உன்னை வணங்கிப் போற்றுவேன்.

7. பரவுவார் இமையோர்கள், பாடுவன நால்வேதம்
குரவுவார் குழல் மடவாள் கூறு உடையாள் ஒருபாகம்
விரவுவார் மெய்யன்பின் அடியார்கள் மேன்மேல் உன்
அரவுவார் கழல் இணைகள் காண்பாரோ, அரியானே?

**விளக்கம்**

இமையோர்கள் உன்னை வணங்கியவாறே உள்ளனர். நான்கு மறைகளும் உன் புகழைப் பாடியவாறே உள்ளன. குராமலரை அணிந்த நீண்ட கூந்தலையுடைய உமாதேவியோ, உன் உடம்பின் ஒரு கூறாக இடப்பக்கம் அமையப் பெற்றாள்.

மெய்யன்புடைய அடியார்கள் வந்து உன்னை மேன்மேலும் தொழுதவாறே உள்ளனர் என்றாலும், நீண்ட வீரக்கழல் அணிந்துள்ள உன் திருவடிகள் இரண்டினையும் காணமுடியுமா? காண்பதற்கு அரியவனே.

8. அரியானே யாவர்க்கும் அம்பரவா அம்பலத்துளம்
பெரியானே சிறியேனை ஆட்கொண்ட பெய்கழல்கீழ்
விரை ஆர்த்த மலர்தூவேன் வியந்து அலறேன் நயந்து உருகேன்
தரியேன் நான் ஆமாறு என்? சாவேன், நான் சாவேனே

**விளக்கம்**

அரியவனே, யாவருக்கும் மேலானவனே,தில்லைச் சிற்றம்பலத்தில் விளங்குகின்றவனே.

பொன்னம்பலத்தை ஆளும் பெரியோனே, சிறியேனை ஆட்கொண்டவனே, கழல்அணிந்த உன் திருவடிகளுக்கு மணமலர்களைத் தூவி அறியேன்.

உள்ளம் இரங்கி உருகி அறியேன், எனவே நான் உயிரோடு இருக்கப் பொறுக்க மாட்டேன், அடியேன் உய்யும் வழியாது? நான் சாகத்தான் வேண்டும். நான் சாகவே வேண்டும்.

9. வேனில்வேள் மலர்க்கணைக்கும் வெண் ணகைச் செவ்வாய்க் கரிய
பானல் ஆர் கண்ணி யர்க்கும் பதைத்து உருகும் பாழ்நெஞ்சே
ஊன் எலாம் நின்று உருகப் புகுந்து ஆண்டான், இன்று போய்
வான் உளான், காணாய் நீ மாளா வாழ்கின்றாயே.

**விளக்கம்**

வேனிற்காலத்து மன்மதனின் மலர் அம்புகளுக்கும், வெண்பற்களையும் செவ்வாயினையும், கருங்குவளை மலர்ஒத்த கண்களையும் உடைய மகளிர்க்கும் விரைந்து உருகும் பாழ்நெஞ்சமே.

என் ஊன் எல்லாம் உருகுமாறு ஊடுறுவி, ஆட்கொண்டவன் அல்லனோ நம் சிவன். அவன் இன்று வானில் உள்ளான் என்பதைக் காண மனமில்லாதநீ.

இன்னும் சாகாமல் உயிர் வாழ்கின்றாயே.

10. வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே, வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய் ஆழாமல் காப்பானை ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடு உனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீ அவலக் கடல் ஆய வெள்ளத்தே

**விளக்கம்**

சிவனின் திருவருளை எண்ணி வாழாமல் வீணாய் வாழ்கின்ற நெஞ்சமே, துன்பத்துள் மூழ்காமல் காக்கின்றவனைப் போற்றாமல், தீவினையில் ஆழ்கின்றாய்.

உனக்கு நீயே தீமைகள் உண்டாகுமாறு செய்து கொள்கின்றாய். நான் மீண்டும் மீண்டும் பலமுறைகள் உனக்கு எடுத்துச் சொல்லியும் நீ துன்பக் கடலாகிய பெரு வெள்ளத்தில் மூழ்கின்றாய் . உன் செயல்தான் என்னே?

# அலகு-3

## திருமாளிகைத்தேவர் (திருவிசைப்பா)

## கோயில்- ஒளிவளர்விளக்கே

**தலம்**

தில்லை . சைவத்தில் கோயில் என்பது தில்லைச் சிதம்பரம் ஆகும்.

**தலச்சிறப்பு**

சமயக்குரவர் நால்வரும் போற்றிப் புகழ்ந்த தலம். இத்திருக்கோயிலுள்ள நான்கு கோபுர வாசல்களும் நால்வர் பெருமக்களின் திருவடி பதித்த பெருமை உடையன.

கிழக்கில் மணிவாசகர், மேற்கில் அப்பர், தெற்கில் திருஞானசம்பந்தர் வடக்கில் சுந்தரர் எழுந்தருளிச் சிறப்பித்தத் தலம்.

பஞ்சபூதத் தலங்களில் ஆகாயத்திற்குரியது. சிதம்பரத்தில் வாழ முத்தியாம்.

தில்லைபாதி திருவாசகம்பாதி என்ற பழமொழி இந்நகர் பெருமையைக் கூறும்.

1. ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

**விளக்கம்**

ஒளிமிகுந்துள்ள விளக்கே, நிரந்தரமாய் விளங்கும் ஒப்பற்ற ஒருவனே, சென்று பற்றும் சுட்டறிவும் ஆய்வும் கடந்து நின்று சிவஞானத்தால் அறியப்படும் மேலான மெய்யறிவே.

தெளிவான ஒளிகொண்ட பளிங்குக்கல்லின் தோற்றத்தையுடைய மாணிக்கமலையே, ஒளிபொருந்திய மெய்யன்பரது அகத்தினுள் இனிக்கும் தேனே.

கொடுப்பார் உள்ளங்களில் மகிழ்வுடன் விளங்கும் கனியே, பொன்னம்பலத்தை ஆடும் அரங்கமாகக் கொண்டுத் தெய்வக் கூத்திடும் நின்னைத் தொண்டனாகிய அடியவன் புகழ்ந்து அழைத்திடும் நிலையைக் கூறுவாயாக.

2. இடர்கெடுத்து என்னை ஆண்டுகொண்டு என்னுள்

இருட்பிழம்பு அறனறிந்து எழுந்த

சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்கும்

தூயநற் சோதியுள் சோதீ

அடல்விடைப் பாகா அம்பலக் கூத்தா

அயனொடு மாலறி யாமைப்

படரொளிப் பரப்பிப் பரந்துநின் றாயைத்

தொண்டனேன் பணியுமா பணியே

**விளக்கம்**

அஞ்ஞான இடரைப் புறந்தள்ளி என்னை ஆண்டு கொண்ட தோடன்றி அறியாமையைச் செய்யும் ஆணவ மலத்தை நீக்கியும், ஆன்ம அறிவினை வளரச் செய்ய சோதிமயமாய் விளங்கும் சுடர்மணி விளக்கே.

என்னுள் எவ்வித மாசும் பற்ற விடாமல் தூய்மையையே தோற்றுவித்து அது நாடோறும் பெருகுமாறு செய்யும் சோதியே.

வலிமை கொண்ட காளையை வாகனமாகக் கொண்டவனே, அம்பலத்தில் திருக்கூத்துக் கொள்பவனே,

நான்முகனும் திருமாலும் காணமாட்டாது பேரொளிப் பிழம்பாய் நின்றவனே, இத்தகு பெருமை பெற்ற உன்னைத் தொண்டனாகிய அடியவன் பணிந்து புகழுமாறு பணியாய்.

3. தற்பரம் பொருளே சகிகண்ட சிகண்டா

சாமகண்டா அண்ட வாணா

நற்பெரும் பொருளாய் உரைகலந்து உன்னை

என்னுடை நாவினால் நவில்வான்

அற்பன்என் உள்ளத்து அளவிலா உன்னைத்

தந்தபொன் அம்பலத்து அரசே

கற்பமாய் உலகாய் அல்லைஆ னாயைத் தொண்டனேன் கருதுமா கருதே

**விளக்கம்**

செம்மையான சிறந்த பொருளே, ஐக்கியத்தைத் தருபவனே, தலையகத்து சிகை உடையவனே, சாமகீதப் பிரியனே

அகில உலகங்கட்கும் தலைவனே, மிகச் சிறந்த பொருளானவனே, அடியவன் நாவினால் உன்னைப் பலகாலும் நவில அதனால் அற்பனான என் உள்ளத்திலும் அளவிடற்கரிய நின்பேரொளியைத் தந்து பொன்னம்பலத்தில் ஆடும் அழகனே.

அற்பமாயும் உலகாயும் இவ்விரண்டிற்கும் அப்பாற்பட்டிருக்கின்ற நின்னைத் தொண்டனாகிய நான் கருதுமாறி கருதி வணங்கப்பணித்தருளாயோ.

4. பெருமையிற் சிறுமை பெண்ணொடுஆ ணாய்என்

பிறப்புஇறப்பு அறுத்தபே ரொளியே

கருமையின் வெளியே கயற்கணாள் இமவான்

மகன்உமை யவள்களை கண்ணே

அருமையின் மறைநான் கோலமிட் டாற்றும்

அப்பனே அம்பலத்து அமுதே

ஒருமையிற் பலபுக்கு உருவிநின் றாயைத்

தொண்டனேன் உரைக்குமாறு உரையே

**விளக்கம்**

பெருமையுடன் சிறுமையையும், பெண்ணுடன் ஆணுமாய்க் கலந்து மங்கை பங்கனாய் நின்று என்வினை பற்றித் தொடரும் பிறப்பு, இறப்பு எனும் இரு வினைகளை நீக்கியருளும் பேரொளியே கருமை வண்ணத்தோடு,

வெண்ணிற ஒளியும் பொருந்தி, அழகிய மீனின் கண்களையுடையவளும், மலையரசன் மகளுமாகிய உமைக்குப் பற்றுக்கோடாய் நிற்பவனே.

உன்னைக் காண்பதற்கு அருமையான நான்கு மறைகளும் ஓலமிட்டு அழைக்கின்ற தலைவனே, பொன்னம்பலத்து அமிழ்தே,

ஒருவனாக நின்று பல்வேறு பொருள்களிலும் ஊடுருவி இரண்டறக் கலந்து உயிர்களை ஆட்டுவிக்கும் நின் நிலையைத் தொண்டனாகிய யான் புகழ்ந்து கூறி உரைக்குமாறு உரைக்க அருள்புரியாயோ.

5. கோலமே மேலை வானவர் கோவே

குணங்குறி இறந்ததோர் குணமே

காலமே கங்கை நாயகா எங்கள்

காலகா லகாம நாசா

ஆலமே அமுதுண்டு அம்பலம் செம்பொன்

கோயில்கொண்டு ஆடவல் லானே

ஞாலமே தமியேன் நற்றவத் தாயைத்

தொண்டனேன் நணுகுமா நணுகே

**விளக்கம்**

அழகிய வடிவினனே, விண்ணோர் தலைவனே, குணம் குறிகளைக் கடந்த நீத்தாரின் நற்குணமே, நற்காலமே, கங்கைத் தலைவனே, எமனை வென்றவனே, அழிகாமத்தை அழிக்கும் குணக்குன்றே

யாவரும் வெறுத்தொதுக்கிய ஆலகால நஞ்சினை அமிழ்தம் போல் இனிதாக உண்டு. செம்பொன்னாலான அம்பலத்தில் ஆடுதலைக் கொண்டவனே,

உலக முதல்வனே, தன்னந்தனியாகவுள்ள இவ்வேழையாளன், நல்ல தவவடிவினனான நின்னை நெருங்கும் வண்ணம் நெருங்கி வாராயோ.

6. நீறணி பவளக் குன்றமே நின்ற

நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே

வேறணி புவன போகமே யோக

வெள்ளமே மேருவில் வீரா

ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா

அம்பொன்செய் அம்பலத் தரசே

ஏறணி கொடயெம் ஈசனே உன்னைத்

தொண்டனேன் இசையுமாறு இசையே

**விளக்கம்**

திருவெண்ணீறு அணிந்த பவள மலைபோல்வனே, நிலைபெற்ற நெற்றியில் தீக்கண்ணை உடையவனே ,

வெவ்வேறாகிய அழகிய உலகங்களும் போகப் பொருளுமாய் இருப்பவனே, யோகமுதிர்ச்சியில் விளையும் இன்பப் பெருக்கே.

மேருமலையை வில்லாக ஏந்தியவனே, கங்கையாற்றைச் சடைமுடியில் கொண்ட அற்புதக் கூத்தனே , அழகிய பொன்னால் செய்யப்பட்ட பொன்னம்பலத்தில் திருநடனமிடும் அரசே,

அழகிய இடபக்கொடியையுடைய எம் இறைவனே, உன்னைத் தொண்டனாகிய அடியேன் புகழ்ந்து கூறுமாறு அருள்வாயே.

7. தனதன்நல் தோழா சங்கரா சூல

பாணியே தாணுவே சிவனே

கனகநல் தூணே கற்பகக் கொழுந்தே

கண்கள் மூன்று உடையதோர் கரும்பே

அனகனே குமர விநாயக சனக

அம்பலத்து அமரசே கரனே

உனகழல் இணையென் நெஞ்சினுள் இனிதாத்

தொண்டனேன் நுகருமா நுகரே

**விளக்கம்**

குபேரனின் நல்ல தோழனே, சங்கரனே, சூலப்படையினைக் கையகத்துக் கொண்டவனே, என்றும் நிலைபெற்றவனே, சிவனே , அழகிய பொற்றூண் போன்றவனே, கற்பகக் கொழுந்தே.

மூன்று கண்களை உடைய கரும்பினையொத்த இனியவனே, மாசுமறு அற்றவனே, முருகனுக்கும் கணபதிக்கும் தந்தையே,

இந்திரன் உள்ளிட்ட இமையோர் வந்து வணங்குதற்குரிய அம்பலத்தில் ஆடும் அரசே,

அடியவனாகிய நான் உள் திருவடிகள் இரண்டினையும் என் மனத்தில் இனிமையுடன் கலந்து அனுபவிக்கும்படித் திருவருள் கூட்டாயோ.

8. திறம்பிய பிறவிச் சிலதெய்வ நெறிக்கே

திகைக்கின்றேன் தனைத்திகை யாமே

நிறம்பொன்னும மின்னும் நிறைந்தசே வடிக்கீழ்

நிகழ்வித்த நிகரிலா மணியே

அறம்பல திறங்கண்டு அருந்தவர்க்கு அரசாய்

ஆலின்கீழ் இருந்தஅம் பலவா

புறஞ்சமண் புத்தர் பொய்கள்கண் டாயைத்

தொண்டனேன் புணருமா புணரே

**விளக்கம்**

மாறி மாறி வருகின்ற பிறவிகளில் உழன்று சிறுதெய்வங்களை அடையும் வழிகளில் திகைத்து நின்ற என்னைத் திகைப்படையச் செய்யாமல் பொன்நிறமும்

மின்னிறமும் கலந்து நிரம்பிய திருவடியின் கீழ்ச் செல்லும் படி செய்த ஒப்பற்ற ஒளியையுடைய மாணிக்கமே,

அறத்தில் பல தன்மைகளை அருளிச் செய்த சனகாதி உள்ளிட்ட முனிவர்களுக்குக் குருமூர்த்தியாகக் கல்லாமரத்தின்கீழ் எழுந்தருளிய அம்பலவா,

புறசமயத்தினராகிய சமண புத்தர்களின் பொய்ச் சமயங்களை உண்டாக்கின உன்னைத் தொண்டனாகிய நான் சேரும்படி சேர்ந்து அருளாயோ?

9. தக்கன்நல் தலையும் எச்சன்வன் தலையும்

தாமரை நான்முகன் தலையும்

ஒக்கவிண்டு உருள ஒண்திருப் புருவம்

நெறித்தரு ளியஉருத் திரனே

அக்கணி புலித்தோல் ஆடைமேல் ஆட

ஆடப்பொன் னம்பலத்து ஆடும்

சொக்கனே எவர்க்கும் தொடர்வரி யாயைத்

தொண்டனேன் தொடருமா தொடரே

**விளக்கம்**

சிவநிந்தனையுடன் தக்கனால் தொடங்கப்பட்ட வேள்வியில் அவன் தலையையும், எச்சன் என்பானின் வலிய தலையையும் தாமரையில் எழுந்தருளியுள்ள நான்முகனின் தலையையும் ஒரு சேர அறுபட்டு தரையில் உருளும்படி ஒளிமிகுந்த தம் திருப்புயத்தை நெரித்துச் சினந்தருளிய உருத்திரமூர்த்தியே.

புலித்தோலின் ஆடைமேல் உருத்திராக்கமாலை ஆட ஆட பொற்சபையில் ஆனந்த நடனம் ஆடும் அழகனே.

திருமால் நான்முகன் ஆகிய தேவர்கள் யாவரும் தொடர்ந்து அறிதற்கு அரிதாய் அமைந்தவனே , தொண்டனாகிய யான் தொடரும்படி நீ தொடர்ந்து அருளாயோ.

10. மடங்கலாய்க் கனகன் மார்புகீண் டானுக்கு

அருள்புரி வள்ளலே, மருளார்

இடங்கொள்முப் புரம்வெந்து அவியவை திகத்தேர்

ஏறிய ஏறுசே வகனே

அடங்கவல் அரக்கன் அரட்டிரு வரைக்கீழ்

அடர்த்தபொன் னம்பலத் தரசே

விடங்கொள்கண் டத்துளம் விடங்கனே உன்னைத்

தொண்டனேன் விரும்புமா விரும்பே

**விளக்கம்**

நரசிங்க வடிவமாய்த் தூணிலிருந்து வெளிப்பட்டு இரணியனின் மார்பைக் கிழித்த திருமாலுக்கு அருள்செய்த சரப வள்ளலே.

சிவபூசையை மறந்து, பௌத்த சமயத்தில் மயங்கி நின்ற தாரகாட்சன், கமலாட்சன், வித்தியுன்மாலி போன்ற அரக்கர்கள் வாழுமிடமான திரிபுரத்தை எரித்து அழியும்படி,

நான்கு மறைகளையும் குதிரைகளாய்ப் பூட்டிய தேரின் மேல் ஏறி நின்ற ஆண் சிங்கம் போன்றவனே,

வலிமை கொண்ட இராவணனை அவன் செருக்கு அடங்கும்படி, கயிலைமலையின் கீழ் திருவருள் கொண்டு நசுக்கிய பெருமானே,

கனக சபையில் நடனமிடும் அரசே, நஞ்சைக் கண்டத்தில் கொண்ட அழகனே, தொண்டனாகிய யான் விரும்பும் வண்ணம் நீ விரும்பி அருள்வாயாக.

11. மறைகளும் அமரர் கூட்டமும் மாட்டாது

அயன்திரு மாலொடு மயங்கி

முறைமுறை முறையிட்டு ஓர்வரி யாயை

மூர்க்கனேன் மொழிந்தபுன் மொழிகள்

அறைகழல் அரன்சீர் அறிவிலா வெறுமைச்

சிறுமையில் பொறுக்கும்அம் பலத்துள்

நிறைதரு கருணா நிலையமே உன்னைத்

தொண்டனேன் நினையுமா நினையே

**விளக்கம்**

ஒலிக்கின்ற வீரக்கழலை அணிந்த திருவடிகளையுடை சிவபிரானே, மறைகளும், விண்ணோர் குழுவும் அறியமாட்டாது நான்முகன், திருமால் ஆகியோரும் மயங்கி நின்று பல தடவை முறையிட்டும் அறிய முடியாத உன்னை

அறிவிலனாகிய யான் உன்னை போற்றிக் கூறிய அற்பான சொற்களை, அறிவற்ற சிறியோரின் செயலை பொறுக்குமாறு,

பொன்னம்பலத்துள் கருணைக்கு இருப்பிடமாக எழுந்தருளிய பெரியவனே, உன்னைத் தொண்டனாகிய நான் நினைக்கும் வண்ணம் நீ நினைத்தருள்வாயாக.

## திருமூலர் - திருமந்திரம்

## ஆட்சிமுறை (மன்னர் கடமை)

1. கல்லா அரசனும் காலனும் நேரொப்பர்

கல்லா அரசனின் காலன் மிகநல்லன்

கல்லா அரசன் அறம்ஓரான் கொல்என்பான்

நல்லாரைக் காலன் நணுகநில் லானே

**விளக்கம்**

கல்வி அறிவில்லாத அரசன், உயிர்களைக் கவரும் எமன் இருவரும் ஒன்றே. இருவர்க்கிடையே வேறுபாடில்லை என்பது மட்டுமல்ல, முட்டாள் அரசனை விட எமன் மிக நல்லவன். அறிவில்லாத அரசன் அறநெறியைக் கடைப்பிடிக்க மாட்டான். நியாயம் அநியாயம் உணரமாட்டான். தனக்குப் பிடிக்காதவர்களைக் ‘கொல்’ என்று கட்டளை இட்டாலும் இடுவன்.

ஆனால் எமன் அப்படியல்ல. நல்லவர்களை அவன் நெருங்க மாட்டான். அதாவது, அவர்களுக்குத் துன்பம் தரமாட்டான்.

2. அரசர்க்கழகு அறநெறி காத்தல்

நாள்தொறும் மன்னவன் நாட்டில் தவநெறி

நாள்தொறும் நாடி அவன்நெறி நாடானேல்

நாள்தொறும் நாடு கெடும்மூடம் நண்ணுமால்

நாள்தொறும் செல்வம் நரபதி குன்றுமே

**விளக்கம்**

அன்றாடம் அரசன் அவனுடைய நாட்டில் நன்னெறி- அறஒழுக்கம் கெடாதிருக்கப் பார்த்துக் கொள்ளவேண்டும். அப்படி அவன் அன்றாடம் அவனுடைய நாட்டில் நீதிமுறை சரியாக உள்ளதா என்பதை ஆராய்ந்தறியத் தவறுவானே யானால், அவனுடைய நாடு ஒவ்வொரு நாளும் கொஞ்சம் கொஞ்சமாகக் கெட்டழியும்.

அறியாமை எங்கும் மிகும். செல்வமும் செல்வாக்கும் நாளும் குறைய, அரசனும் அழிவான்.

3. மெய்த்தவ வேடமே மேன்மை தரும்

வேட நெறிநில்லார் வேடம்பூண்டு என்பயன்

வேட நெறிநிற்போர் வேடம் மெய்வேடமே

வேடநெறிநில்லார் தம்மை விறல்வேந்தன்

வேட நெறிசெய்தால் வீடது வாகுமே

**விளக்கம்**

போட்டுக் கொண்டிருக்கும் வேடத்திற்கு ஏற்ற நெறி முறைகளை மேற்கொண்டு, அதன்படி நடக்க இயலாதவர்கள், அந்த வேடம் போட்டுக் கொண்டிருப்பதால் என்ன பயன்? போட்டிருக்கும் வேடத்திற்கேற்ற விதிமுறைகளை மேற்கொண்டொழுபவர்களே உண்மையான வேடம் தரித்தவர் ஆவார்கள்.

தாங்கிய வேடத்துக்கு ஏற்ற வழியில் செல்லாத கபட வேடதாரிகளை, வலிமை மிக்க அரசன் தண்டித்து, வேடத்துக்கேற்றபடி நடக்கச் செய்வது, அவனுக்கு வீடு பேற்றை வழங்கும்.

4. மூடம் போடும் பொய் வேடம்

மூடம் கெடாதோர் சிகைநூல் முதற்கொள்ளில்

வாடும் புவியும் பெருவாழ்வு மன்னனும்

பீடொன்று இலனாகும் ஆதலால் பேர்த்துணர்ந்து

ஆடம்பர நூல் சிகைஅறுத்தால் நன்றே

**விளக்கம்**

அறியாமையைப்போக்கிக் கொள்ளாமல், தலையில் குடுமியும் மார்பில் பூணூலும் அணிந்து கொண்டு, பொய் வேடம் போட்டிருக்கும் மனிதர் உண்மைத் தவவேடர்களைப் போல நடிக்க முற்பட்டால் உலகம் துயரத்தால் வாடும்.

பெரு வாழ்வுடைய அரசனுடைய புகழ் பெருமை எல்லாம் இல்லாது அழியும். எனவே மீண்டும் இவற்றை எல்லாம் எண்ணிப் பார்த்துப் பொய்வேடதாரிகள், வீண் பகட்டுக்காகக் கொண்டிருக்கும் பூணூலையும் , குடுமியையும் அறுத்தெறிவது கூட நல்லதேயாகும்.

5. போலிகளைச் சோதித்துப் புத்தி புகட்டுக

ஞானமி லாதார் சடைசிகை நூல்நண்ணி

ஞானிகள் போல நடிக்கின் றவர்தம்மை

ஞானிக ளாலே நரபதி சோதித்து

ஞானம்உண் டாக்குதல் நலமாகும் நாட்டிற்கே

**விளக்கம்**

மெய்ஞ்ஞான அறிவில்லாதவர்கள், சடைமுடியும், முப்புரி நூலும் கொண்டு, ஞானிகள் போல நடிப்பார்கள்.

அவர்களை நாடாளும் அரசன் உண்மையான ஞானிகளைக் கொண்டே சோதனை செய்து, அவர்களுக்கு ஞானம் உண்டாகச் செய்தல் நாட்டுக்கு நல்லதாகும்.

6. காவலன் காக்கக் கடமைப்பட்டவை

ஆவையும் பாவையும் மற்று அறவோரையும்

தேவர்கள் போற்றும் திருவேடத் தாரையுங்

காவலன் காப்பவன் காவா தொழிவனேல்

மேவும் மறுமைக்கு மீளா நரகமே

**விளக்கம்**

நாடாளும் மன்னன் நாட்டில் உள்ள பசுக்களையும் பெண்களையும், அறநெறி உணர்ந்த சான்றோர்களையும் தேவர்களும் வணங்கித் தொழத்தக்க தவவேடம் பூண்ட ஞானிகளையும் காக்கக் கடமைப்பட்டவன்.

இவர்களைக் காக்காது அரசன் கைவிட்டு விடுவானானால், மறுபிறப்பிலும் மீண்டெழ முடியாத நரகத்தை அடைவான்.

7. ஆறில் ஒரு பங்கே அரசனுக்கு உரியது

திறந்தரு முத்தியுஞ் செல்வமும் வேண்டின்

மறந்தும் அறநெறியே ஆற்றல் வேண்டும்

சிறந்தநீர் ஞாலஞ் செய்தொழில் யாவையும்

அறைந்திடில் வேந்தனுக்கு ஆறிலொன்று ஆமே

**விளக்கம்**

மறுமைக்கு மேன்மை தரும் பேரின்ப வீட்டையும், இம்மைக்குப் பெருமை சேர்க்கும் பொருட்செல்வத்தையும் அடைய வேண்டும் என்றால் தன்னை மறந்த நிலையிலேயும் அறச் செயல்களையே செய்ய வேண்டும்.

உயிர்வாழச் சிறந்ததான நீர் சூழ்ந்த இந்த உலகில் செய்யும் தொழில்கள் அனைத்தையும் பற்றிச் சொல்வதானால், அவற்றில் ஆறில் ஒரு பங்கே பெறத்தக்க உரிமைப் பொருள் வரியாகும்.

8. அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி

வேந்தன் உலகை மிகநன்று காப்பது

வாய்ந்த மனிதர்கள் அவ்வழியா நிற்பர்

பேர்ந்திவ் வுலகைப் பிறர்கொள்ளத் தாம்கொள்ளப்

பாய்ந்த புலியன்ன பாவகத் தானே

**விளக்கம்**

நாடாளும் மன்னன் உலகத்தை நன்றாக ஆட்சி செய்து காத்து வருவாவானால், அவன் நாட்டில் இருக்கிற மக்களும் அவ்வழியிலே நல்லவர்களாக இருப்பார்கள்.

அப்படியில்லாமல் இவனுடைய நாட்டை இன்னொருவர் வென்று கொள்ள, மற்றவர் நாட்டை இவன் போரிட்டு வெல்வது என்று, மாறிமாறிப் பாய்ந்து போரிட்டு மடிவது, புலிக்குணம் கொண்டவனாக வேந்தன் இருக்கிறான் என்பதற்கு அடையாளம்.

9. அமுதம் இருக்க நஞ்சை உண்ணும் அறிவீனம்

கால்கொண்டு கட்டிக் கனல்கொண்டு மேலேற்றிப்

பால்கொண்டு சோமன் முகம்பற்றி உண்ணாதோர்

மால்கொண்டு தேறலை உண்ணும் மருளரை

மேல்கொண்டு தண்டஞ்செய் வேந்தன் கடனே

**விளக்கம்**

மூச்சுக் காற்றைப் பிராணவாயுவை முறைப்படுத்தி, நிறுத்தி , பிராணாயாமம் மூச்சுப் பயிற்சி செய்து, மூலாக்கினியை மேலேற்றிச் சந்திர கலையாகிய மூலாதாரத்தில் வடியும் அமுத பானத்தை உண்ணாமல்,

அறிவு மயங்கிக் கள்ளைக் குடிக்கும் மந்த மதியினரைத் தண்டிக்க வேண்டியது நாடாளும் மன்னன் கடமையாகும்.

10. தருமநெறி தவறுவோர் தண்டிக்கப்படுவர்

தத்தம் சமயத் தகுதி நில்லாதாரை

அத்தன் சிவன்சொன்ன ஆகம நூல்நெறி

எத்தண் டமும்செயும் அம்மையில் இம்மைக்கே

மெய்த்தண்டம் செய்வதவ் வேந்தன் கடனே

**விளக்கம்**

அவரவர் சமயத் தகுதிகளுக்கும் கோட்பாடு குறிக்கோள்களுக்கும் ஏற்ப, அவற்றை மேற்கொண்டு அதன்படி நடக்காதவர்களைச் சிவப்பரம்பொருள் எத்தகைய தண்டனைகள் வேண்டுமானாலும் தந்து, அவர்களை அதன் பயனான துன்பத்தை அடையச் செய்வான். இது அடுத்து வரும் பிறவியில் நடக்கப் போவது.

எனவே இந்தப் பிறவியில் சமய நெறிப்படி நின்றொழுகா நீசர்கள் உடல் வருந்தச் செய்யும் தண்டனையைத் தருவது அரசனுடைய கடமை ஆகும்.

**கபிலதேவ நாயனார்**

**மூத்தநாயனார் திருஇரட்டை மணிமாலை**

1. திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்- உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை

**விளக்கம்**

செல்வம் பெருகும், செய்யும் தொழிலில் வெற்றி கிட்டும். செம்மையான சொல் பெருகும், பெருமை மீதூரும், சாரூப பரம்கொடுக்கும். ஆதலால் விண்ணோரும் யானை முகத்தானை அன்போது கை குவித்து வணங்குவர்.

**2. கட்டளைக்கலித்துறை**

கைக்கும் பிணியொடு காலன்
தலைப்படும் எல்லையினில்
எய்க்கும் கவலைக் கிடைந்தடைந்
தேன்வெம்மை நாவளைக்கும்
பைக்கும் அரவரை யான்தந்த
பாய்மத யானை பத்துத்
திக்கும் பணிநுதற் கண்திரு
வாளன் திருவடியே

**விளக்கம்**

வெறுத்தொதுக்கும் வாழ்க்கையைப் பிணியொடு கூற்றுவன் முயன்றிடும் வேளையைக் குறைக்கும், கவலைக்குத் தளர்கூறும் நிலையில் வெம்மையான நாவளையும்.

படம் எடுத்து ஆடும் பாம்பை அரையில் அணிந்துள்ள பெருமான் பெற்ற பாயும் மதயானையான விநாயகக் கடவுளை, அந்நெற்றிக் கண்ணையுடைய திருவாளன் திருவடிகளைப் பணிந்திடுக.

**3. வெண்பா**

அடியமர்ந்து கொள்வாயே நெஞ்சமே அப்பம்
அடியலோடு எள்ளுருண்டை கன்னல்- வடிசுவையில்
தாழ்வானை வாழ்வானைத் தன்னடியார் உள்ளத்தே
வாழ்வானை வாழ்த்தியே வாழ்

**விளக்கம்**

நெஞ்சமே, விநாயகனின் அடிமைத் தொழிலில் பொருந்தி இருப்பாயாக. அப்பம், இடித்துச் செய்யப்படும் அவல், கொழுக்கட்டை, எள்ளுருண்டை, கரும்பு இவற்றின் சுவையில் விருப்போடு ஆழ்ந்திருப்பானும், தன் அடியார் பெருமக்களின் உள்ளத்தில் வாழ்கின்றவனுமான விநாயகனை வாழ்த்தி வணங்கி வாழ்வாயாக.

**4. கட்டளைக் கலித்துறை**

வாழைக் கனிபல வின்கனி
மாங்கனி தாஞ்சிறந்த
கூழைச் சுருள்குழை அப்பம் எள்
உண்டைஎல் லாம்துறுத்தும்
பேழைப் பெருவயிற் றோடும்
புகுந்தென் உளம்பிரியான்
வேழத் திருமுகத் துச்செக்கர்
மேனி விநாயகனே

**விளக்கம்**

வாழை, பலா, மா போன்ற சிறந்த முக்கனிகளுடன் கூழைச் சுருள், அப்பம், எள்ளுருண்டை யாவும் வெளியே நீட்டும்படியாகச் சேர்த்து வைக்கின்ற பெட்டகமாகிய பெருவயிற்றோடும் புகுந்து என் மனத்தை வீட்டு அகலான் யானை முகத்துடன் செவ்வானம் போன்ற திருமேனியையுடைய விநாயகன்.

**5. வெண்பா**

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்

விநாயகனே வேட்கைதணி விப்பான்- விநாயகனே

விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்

கண்ணிற் பணிமின் கனிந்து

**விளக்கம்**

விநாயகனே கொடிய வினைகளை வேரறுக்க வல்லான், விநாயகனே பொருளின் கண் ஏற்படும் பற்றைத் தணிவிப்பான். விநாயகனே விண்ணிற்கும் மண்ணிற்கும் தலைவனாவன், இத்தன்மைகளினால் நன்மை பெற எண்ணினால் அவனின் திருவடிகளை மனம் விரும்பிப் பணியுங்கள்.

**6. கட்டளைக் கலித்துறை**

கனிய நினைவொடு நாடொறும்

காதற் படும்அடியார்க்கு

இனியன் இனியொர் இன்னாங்கு

இலவம்எவ ரும்வணங்கும்

பனிவெண் பிறை நறுங் கொன்றைச்

சடைப்பலி தேர்இயற்கை

முனிவன் சிறுவன் பெருவெங்கொல்

யானை முகத்தவனே

**விளக்கம்**

மனம் குழைந்திடும் நினைவுடன் நித்தமும் வணங்கிடும் அடியார்கட்கு இனியவனாம். இனி நமக்கு எத்துயரமும் இல்லை. அனைவரும் வணங்குகின்ற குளிர்ந்த வெண்மையான பிறையும் நறுங்கொன்றையும் கொண்ட சடைமுடியனும் பிச்சையேற்கும் இயற்கைத் தன்மையைக் கொண்டவனுமாகிய சிவனாரின் சிறுவன் பெருவெங்கொல் யானை முகத்தவன். அவனைப் பணிந்திடுக.

**7. வெண்பா**

யானை முகத்தான் பொருவிடையான் சேய் அழகார்

மன மணிவண்ணன் மாமருகன்- மேல்நிகழும்

வெள்ளக் குமிழி மதத்து விநாயகன் என்

உள்ளக் கருத்தின் உளன்

**விளக்கம்**

யானை முகத்தோன், போர் செய்கின்ற இடபத்தை வானமாக உடைய சிவனின் மூத்தமகன், அழகிய நீலமணி போலும் நிறம் கொண்ட திருமாலின் மாமருகன், மேல் நிகழும் வெள்ளக் குமிழி மதந்து விநாயகன் என் உள்ளக் கருத்தில் உள்ளான்.

**8. கட்டளைக் கலித்துறை**

உளதன வில்லதொல் காதல்என்

நெஞ்சில்வன் நஞ்சமுண்ட

வளரிள மாமணி கண்டன் வண்

டாடுவண் கோதைபங்கத்து

இனவளர் மாமதிக் கண்ணி யெம்

மான்மகன் கைம்முகத்துக்

களகள மாமதம் சேர்களி

யானைக் கணபதியே

**விளக்கம்**

உனது அளவற்றதோர் நெஞ்சில் என் காதல், விடமுண்ட வளர் நெஞ்சில் குடிகொண்ட நீலமேனி, வண்டுகள் சுற்றித் திரிகின்ற வன்கோதை பங்கத்து இளவளர் திங்கள் மாலை எம்மான் மகன். கைம்முகத்துக் களகள மாமதம் சேர்களி யானை கணபதியாம்.

## பெரிய புராணம்

## சேக்கிழார்

**20. ஆனாய நாயனார் புராணம்**

1. மாடு விரைப்பொலி சோலையின் வான்மதி வந்தேறச்
சூடு பரப்பிய பண்ணை வரம்பு சுரும்பேற
ஈடு பெருக்கிய போர்களின் மேகம் இளைத்தேற
நீடு வளத்தது மேன்மழ நாடெனும் நீர் நாடு

**விளக்கம்**

பக்கங்களில் பரவும் மணமுடைய அழகிய சோலைகளில் வான்மதி வந்து பொருந்தவும், சூடு அடிக்கும் நெல்லரிகள் பரப்பப் பட்ட பண்ணையின் வரம்புகளில் வண்டுகள் வந்து ஏறவும், மேலும் மேலும் அடுக்கப்பட்ட உயர்ந்த வைக்கோற் போர்களில் மேகங்கள் வந்து மெல்லப் பொருந்தவும், நீர்வளம் நிறைந்த நிலைத்த வளத்தை உடையது “மேல்மழ நாடு” எனக் கூறப்படுகிறது.

2. நீவி நிதம்ப உழத்தியர் நெய்க்குழல் மைச்சூழல்
மேவி உறங்குவ மென்சிறை வண்டு விரைக்கஞ்சப்
பூவில் உறங்குவ நீள்கயல் பூமலி தேமாவின்
காவின் நறுங்குளிர் நீழல் உறங்குவ கார்மேதி

**விளக்கம்**

கொய்சகம் வைத்த ஆடையை மேலே உடுத்திய அல்குலையுடைய உழத்தியரின் நெய்பூசப்பட்ட கரிய கூந்தலைப் பொருந்தி மென்மையான சிறகையுடைய வண்டுகள் உறங்கும். மணமுடைய தாமரைப் பூவின் நீண்ட மீன்கள் உறங்கும். பூக்கள் நிறைந்த மேமாஞ் சோலையினது நறுமணமும், குளிர்ச்சியுமுடைய நிழலில் கரிய எருமைகள் உறங்கும்.

3. வன்னிலை மள்ளர் உகைப்ப எழுந்த மரக்கோவை
பன்முறை வந்தெழும் ஓசை பயின்ற முழக்கத்தால்
அன்னம் மருங்குறை தண்டுறை வாவி அதன் பாலைக்
கன்னல் அடும்புகை யால்முகில் செய்வ கருப்பாலை

**விளக்கம்**

வன்மையுடைய உழவர்கள் செலுத்த எழுந்த இணைமரங்கள் பலமுறையும் சுற்றி வருவதால் எழும் ஓசை முழக்கத்தாலும், பக்கங்களில் அன்னங்கள் தங்கும் குளிர்ந்த துறையையுடைய நீர்நிலைகளின் பக்கத்தில் கருப்பஞ்சாறு காய்ச்சும் புகையினாலும் அங்குள்ள கரும்பு ஆலைகள் மேகம் போன்ற தோற்றமுடையனவாய் விளங்கும்.

4. பொங்கிய மாநதி நீடலை உந்து புனற்சங்கம்
துங்க இலைக்கத லிப்புதல் மீது தொடங்கிப் போய்
தங்கிய பாசடை சூழ்கொடி யூடு தவழ்ந்தேறிப் பைங்கமு
கின்தலை முத்தம் உதிர்க்குவ பாளை யென

**விளக்கம்**

பொங்கிப் பெருகிய பெரிய ஆற்றில் நீண்ட அலைகள் செலுத்திய சங்குகள், பெரிய இலைகளையுடைய வாழைப் புதரின் மேலே தொடர்ந்து போய், அந்த வாழையின் பசுமையான இலைகளைச் சுற்றியிருக்கும் கொடிகளின் வழியே தவழ்ந்து பசிய பாக்கு மரத்தின் உச்சியில் ஏறிச் சேர்ந்து அவ்விடத்தில் அவற்றின் பாளைகள் பூவை உதிர்ப்பதைப் போன்று முத்துக்களை உதிர்க்கும்.

5. அல்லி மலர்ப்பழ னத்தயல் நாகிள ஆன்டினும்
ஒல்லை முழுப்பை உகைப்பின் உழக்கு குழக்கன்று
கொல்லை மடக்குல மான்மறி யோடு குதித் தோடும்
மல்கு வளத்தது முல்லை உடுத்த மருங்கோர்பால்

**விளக்கம்**

தாமரை மலர்கள் நிறைந்த வயல்களின் ஒருபக்கத்தில் முல்லை நிலப்பகுதி சூழ்ந்து விளங்கும். மிகுந்த இளமையுடைய பசு ஈன்ற, முல்லை நிலத்தில் உள்ள மரம் செடி கொடிகளின் தலையினை விரைவில் உழக்கும் இளங்கன்று. கொல்லையில் கூட்டமான மான் கன்றுகளுடன் கூடிக் குதித்து ஓடும் நில வளத்தையுடையது.

6. கண்மலர் காவிகள் பாய இருப்பன கார்முல்லைத்
தண்ணகை வெண்முகை மேவு சுரும்பு தடஞ் சாலிப்
பண்ணை எழுங்கயல் பாய இருப்பன காயாவின்
வண்ண நறுஞ்சினை மேவிய வன்சிறை வண்டானம்

**விளக்கம்**

கார் நிலத்தில் மலரும் முல்லைக் கொடியின் குளிர்ந்த பல்போன்ற வெண்மையான மலர்களில் உள்ள வண்டுகள், கண்களைப்போல் மலரும் மலர்களில் பாய்வன போல் இருந்தன. காயா மரத்தின் அழகிய செழித்த கிளைகளில் உள்ள நாரைகள், பெரிய நெற்பயிரையுடைய வயல்களிலிருந்து மேல் எழுந்து துள்ளும் மீன்களின் மீது பாய்வன போல் இருந்தன.

7. பொங்கரில் வண்டு புறம்பலை சோலைகள் மேலோடும்
வெங்கதிர் தங்க விளங்கிய மேன்மழ நன்னாடாம்
அங்கது மண்ணின் அருங்கல மாக அதற்கேயோர்
மங்கல மானது மங்கல மாகிய வாழ்மூதூர்

**விளக்கம்**

மரக் கொம்புகளில் வண்டுகள் அலைவதற்கு இடமான சோலைகளின் மேலே வான வீதியில் செல்லுங் கதிரவனின் வெம்மை வாய்ந்த கிரணங்கள் தங்குமாறு விளங்கிய நன்மையுடைய "மேல் மழநாடு" என்னும் அந்த நாடு இம்மண்ணுலகத்திற்கு அணியாய் விளங்கியது. நல்வாழ்வு அளிக்கின்ற திருமங்கலம் என்ற பெரிய பழைய ஊரானது அந்த நாட்டுக்கு ஒப்பில்லாத மங்கலமாக விளங்கியது.

8. ஒப்பில் பெருங்குடி நீடிய தன்மையில் ஓவாமே
தப்பில் வளங்கள் பெருக்கி அறம்புரி சால்போடும்
செப்ப உயர்ந்த சிறப்பின் மலிந்தது சீர்மேவும்
அப்பதி மன்னிய ஆயர் குலத்தவர் ஆனாயர்

**விளக்கம்**

அந்தப் பழமையான ஊர் ஒப்பில்லாத பெருங்குடிகள் நீண்ட காலமாய் வாழ்ந்து வருகின்ற தன்மையினால் ஒரு காலத்திலும் நீங்காமல், தவறாத வளங்கள் எல்லாம் பெருகச் செய்து, அறங்களைச் செய்கின்ற இயல்புடனே எடுத்துக்காட்டாகச்

சொல்லும்படி உயர்ந்த சிறப்பால் மிக்கதாகும். அவ்வாறு சிறப்புப் பொருந்திய அந்தப் பகுதியில் நிலைத்த ஆயர் குலத்தைச் சார்ந்தவர் ஆனாயர்.

9. ஆயர் குலத்தை விளக்கிட வந்துத யஞ்செய்தார்
தூய சுடர்திரு நீறு விரும்பு தொழும்புள்ளார்.
வாயினின் மெய்யின் வழுத்து மனத்தின் வினைப்பாலிற்
பேயுட னாடு பிரானடி அல்லது பேணாதார்

**விளக்கம்**

அவர் ஆயர் குலத்தை விளங்கச் செய்ய இந்த உலகத்தில் தோன்றியவர். தூய்மையான ஒளி வீசும் திருநீற்றை விரும்பும் திருத்தொண்டில் நின்றவர். வாக்காலும் உண்மையாகத் துதிக்கும் மனத்தாலும் செயல்வகையாலும் பேயுடன் ஆடுகின்ற சிவபெரு மானின் திருவடிகளையன்றி வேறொன்றையும் போற்றாதவர்.

**10.** ஆனிரை கூட அகன்புற விற்கொடு சென்றேறிக்
கானுறை தீய விலங்குறு நோய்கள் கடிந்தெங்கும்
தூநறு மென்புல் அருந்தி விரும்பிய தூநீருண்டு
ஊனமில் ஆயம் உலப்பல பல்க அளித்துள்ளார்

**விளக்கம்**

ஆனாயர், பசுக்கூட்டங்களை அகன்ற முல்லை நிலக் காட்டிற்குக் கூட்டிக்கொண்டு போய்க் காட்டிலுள்ள கொடிய விலங்குகளாலும், பொருந்தும் நோய்களாலும் வரும் துன்பங்களை நீக்கிக்காத்து, எவ்விடத்தும் தூய்மையான நல்ல மென்மையான புல்லை மேய்ந்து, விரும்பும் தூய நீரைக் குடித்துக் குற்றம் இல்லாதவாறு பசுக்கூட்டங்கள் அளவில்லாமல் பெருகும்படி காத்து வந்தார்.

11. கன்றொடு பால்மறை நாகு கறப்பன பாலாவும்
புன்றலை மென்சிலை ஆனொடு நீடு புனிற்றாவும்
வென்றி விடைக்குல மோடும் இனந்தொறும் வெவ்வேறே
துன்றி நிறைந்துள சூழ லுடன்பல தோழங்கள்

**விளக்கம்**

கன்றுகளுடனே பால் கறக்க இயலாத இளம்பசு, பால்' சுறக்கும் பசு, சிறிய முடி உள்ள தலையையும் மென்மையையும் உடைய சினைப்பசு, ஈன்றணிமையுடைய பசு என்ற இவையும், வெற்றியுடைய காளைகளின் கூட்டத்துடன் இவ்வாறு இனங்கள் தனித்தனியாக நெருங்கி நிறைந்துள்ள இடங்களுடன் கூடிய பல தொழுவங்கள் விளங்கின

12. ஆவின் நிரைக்குலம் அப்படிப் பல்க அளித்தென்றும்
கோவலர் ஏவல் புரிந்திட ஆயர் குலம்பேணும்

காவலர் தம்பெரு மானடி அன்புறு கானத்தின்
மேவு துளைக்கரு விக்குழல் வாசனை மேற்கொண்டார்

**விளக்கம்**

பசுக்கூட்டங்கள் அவ்வாறு பெருகுமாறு காப்பாற்றி, கோவலர்களாகிய இடையர்கள் என்றும் தம் சொல்லின் படியே நடந்து ஏவல் புரிய, ஆயர் குலத்தைக் காக்கும் சான்றோரான ஆனாயர், சிவபெருமானின் திருவடிகளில் அன்பு பொருந்திய இசையுடனே துளைக்கருவிகள் குழல் இசைப்பதை மேற்கொண்டார்.

13. முந்தைமறை நூன்மரபின் மொழிந்தமுறை எழுந்தவேய்
அந்தமுதல் நாலிரண்டில் அரிந்துநரம் புறுதானம்
வந்ததுளை நிரையாக்கி வாயுமுதல் வழங்குதுளை
அந்தமில்சீர் இடையீட்டின் அங்குலிஎண் களின் அமைத்து

**விளக்கம்**

முந்தைய மறைநூல்களில் கூறிய மரபின்படி எழுந்து வளர்ந்துள்ள மூங்கிலின் நுனியில், நான்கு பங்கிலும், அடியில் இரண்டு பங்கிலும் அரிந்து இடைப்பட்ட பகுதியை எடுத்து சுரங்கள் எழும் தானங்களின் வந்த துளைகளின் வரிசையை ஏற்படுத்தி, முதலில் காற்று உண்டாக்கும் துளையையும் கேடில்லாத சிறப்பையுடைய இடைவெளி ஒவ்வோர் அங்குல அளவிலே துளைகள் செய்து.

14. எடுத்தகுழற் கருவியினில் எம்பிரான் எழுத்தஞ்சும்
தொடுத்தமுறை ஏழிசையின் சுருதிபெற வாசித்துத்
தடுத்தசரா சரங்களெலாந் தங்கவருந் தங்கருணை
அடுத்தஇசை அமுதளித்துச் செல்கின்றார் அங்கொருநாள்

**விளக்கம்**

இவ்வாறு அமைக்கப்பட்ட புல்லாங்குழலான துளை இசைக் கருவியில், எம்பெருமானின் திருஐந்தெழுத்தையும் தொகுத்து, முறையில் வரும் ஏழிசை சுருதி பெறுமாறு இசைத்து, அதனால் வேறு வழியில் செல்லாமல் இசையால் தடுக்கப்பட்ட சராசரங்கள் எல்லாம் பொருந்த வரும் தம் கருணையோடு கூடிய இசையமுதத்தை அளிப்பவ நானார் ஆனாய நாயனார். இங்ஙனம் இசையமுதை அளித்துவரும் நாளில்,

15. வாசமலர்ப் பிணைபொங்க மயிர் நுழுதி மருங்குயர்ந்த
தேசுடைய சிகழிகையிற் செறிகண்ணித் தொடை செருகிப்
பாசிலைமென் கொடியின்வடம் பயிலநறு விலிபுனைந்து
காசுடைநாண் அதற்கயலே கருஞ்சுருளின் புறங்கட்டி

**விளக்கம்**

மணம் கமழும் மலர்மாலை விளங்க, மயிரைக் கோதிப் பக்கத்தில் மேல் உயருமாறு எடுத்து முடித்திட்ட அழகுடைய சிகை முடியில், ஒருக்கமாகத் தொடுக்கப்பட்ட மலர் மாலையைச் சூடி, பசுமையான இலையுடைய மென்மையான கொடியாலான மாலையில் நறுமலர்களைப் புனைந்து பொற்காசுகள் கட்டிய கயிற்றாலே கரிய மயிரின் புறத்தைக் கட்டி,

16. வெண்கோடல் இலைச்சுருளிற் பைந்தோட்டு விரைத்தோன்றித்
தண்கோல மலர்புனைந்த வடிகாதின் ஒளி தயங்கத்
திண்கோல நெற்றியின்மேல் திருநீற்றின் ஒளி கண்டோர்
கண்கோடல் நிறைந்தாராக் கவின்விளங்க மிசையணிந்து

**விளக்கம்**

வெண்காந்தள் இலைச் சுருளில் பச்சை இதழும் மணமும் கொண்ட செங்காந்தளின் குளர்ச்சியான அழகிய மலரைச் சூடிய தொங்கிய காதின் ஒளி விளங்கித் திண்மையான அழகான நெற்றியின் மீது பூசிய வெண்ணீற்றின் ஒளியானது பார்ப்பவரின் கண்களைக் கொள்ளை கொள்ளும்படி அழகு விளங்க உடலின் மேலே அணிந்து,

17. நிறைந்தநீ றணிமார்பின் நிரைமுல்லை முகைசுருக்கிச்
செறிந்தபுனை வடந்தாழத் திரள்தோளின் புடை அலங்கல்
அறைந்தசுரும் பிசை அரும்ப அரையுடுத்த மரவுரியின்
புறந்தழையின் மலிதானைப் பூம்பட்டுப் பொலிந்தசைய

**விளக்கம்**

நிறைவாய்த் திருநீற்றினைப் பூசிய மார்பில், வரிசையாய் முல்லை அரும்பைச்சுருக்கி நெருக்கமாகக் கட்டடப்பட்ட மாலையானது, தாழ்ந்து தொங்க, திரண்ட தோள்களின் மீது அணிந்த மாலையின் மல்ர்கள், அவற்றில் மொய்த்த வண்டுகள் பாடிய இசையினால் மலர, அரையில் உடுத்திய மரவுரி ஆடையின் வெளிப்பாகத்தில் தழைகளால் ஆனமென்மையான பட்டுப் போன்று விளங்கும் மேலாடை அழகாக அசைய,

18. சேவடியில் தொடுதோலும் செங்கையினில் வெண்கோலும்
மேவும்இசை வேய்ங்குழலும் மிகவிளங்க வினைசெய்யும்
காவல்புரி வல்லாயர் கன்றுடைஆன் நிரைசூழப்
பூவலர் தார்க் கோவலனார் நிரைகாக்கப் புறம்போந்தார்

**விளக்கம்**

சிவந்த திருவடியில் மிதியடியும், சிவந்த கையிலே வெண்மையான கோலும், பொருந்திய இசையைத் தருகின்ற புல்லாங் குழலும் மிகவும் விளங்க, தம் ஏவலின் படி தொழில் செய்கின்ற காவலை மேற்கொண்ட ஆயர்களும், கன்றுடன் கூடிய பசுக் கூட்டங்களும் தம்மைச் சூழ்ந்து வர, அரும்புகள் மலர்கின்ற மாலையை அணிந்த ஆனாயர் ஆனிரைகளை மேய்ப்பதற்கு வெளியே வந்தார்.

19. நீலமா மஞ்ஞை ஏங்க நிரைக்கொடிப் புறவம் பாடக்
கோலவெண் முகையோ முல்லை கோபம் வாய்முறுவல் காட்ட
ஆலுமின் னிடைசூழ் மாலைப் பயோதரம் அசைய வந்தாள்
ஞாலநீ டரங்கி லாடக் காரெனும் பருவ நல்லாள்

**விளக்கம்**

நீல நிறம் கொண்ட பெரிய மயில்கள் அகவவும், வரிசையான கொடிகளில் உள்ள வண்டுகள் முல்லைப் பண்ணைப் பாடவும், வெண்மையான அழகிய முல்லையரும்புகள் இந்திர கோபமான வாயில் புன்முறுவல் செய்யவும், அசையும் மின்னலான இடையும், சூழ்கின்ற மாலைப் பொழுதான கொங்கை அசையவும், உலகம் என்ற பெரிய அரங்கத்தில் ஆடுவதற்குக் கார்காலம் என்ற பருவமங்கை வந்தாள்.

20. எம்மருங்கு நிரைபரப்ப எடுத்தகோ லுடைப் பொதுவர்
தம்மருங்கு தொழுதணையத் தண்புறவில் வருந்தலைவர்
அம்மருங்கு தாழ்ந்தசினை அலர்மருங்கு மதுவுண்டு
செம்மருந்தண் சுரும்புசுழல் செழுங்கொன்றை மருங்கணைந்தார்

**விளக்கம்**

எல்லாப் பக்கங்களிலும் பசுக்கூட்டங்களைப் பரவியிருக்கச் செய்து, மேய்ப்பதற்காக எடுத்த சோலையுடைய ஆயர்கள் தம் அருகில் தொழுதபடி வர, முல்லைக்காட்டில் வாழும் தலைவரான ஆனாயர், அங்குக் கீழே தாழ்த்த மரக்கிளைகளில் பூத்த பூக்களில் தேனைக் குடித்து மிக்க களிப்பைப் பொருந்தும் வண்டுகள் சுழன்று சுற்றிக் கொள்ளும் செழுமையான கொன்றை மரத்தின் பக்கத்தை அடைந்தார்.

21. சென்றணைந்த ஆனாயர் செய்தவிரைத் தாம மென்
மன்றல்மலர்த் துணர்தூக்கி மருங்குதாழ் சடையார் போல்
நின்றநறுங் கொன்றையினை நேர்நோக்கி நின்றுருகி
ஒன்றியசிந் தையில் அன்பை உடையவர் பால் மடைதிறந்தார்

**விளக்கம்**

அங்ஙனம் அங்குச் சேர்ந்த ஆனாயர், கையால் செய்யப்பட்ட மலர் மாலையைப் போல் மணம் கமழும் மலர்களாகிய கொத்தைத் தொங்க விட்டு, பக்கங்களில் தாழ்ந்து விளங்கும்படி சடையையுடைய சிவபெருமானைப் போன்று நிறை மனம் கொண்ட கொன்றை மரத்தை நேராகப் பார்த்து உள்ளம் உருகித் தம்மவரான சிவபெருமானிடத்தில் ஒன்றுபட்ட உள்ளத்திலிருந்து எழும் அன்பின் மடையைத் திறந்தார்.

22. அன்பூறி மிசைப்பொங்கும் அமுதஇசைக் குழ லொலியால்
வன்பூதப் படையாளி எழுத்தைந்தும் வழுத்தித் தாம்
முன்பூதி வருமளவின் முறைமையே எவ்வுயிரும்
என்பூடு கரைந்துருக்கும் இன்னிசைவேய்ங் கருவிகளில்

**விளக்கம்**

அன்பானது உள்ளத்தில் ஊறி மேலெழுந்து பொங்கும் அமுதமான இசையை அளிக்கின்ற குழலின் ஓசையால், வன்மையான பூதகணப் படைகளை ஆள்கின்ற இறைவனின் திருவைந்தெழுத் தையும் துதித்து, தாம் முன்பு இசைத்து வரும் முறைப்படியே, எவ்வுயிர்களையும் எலும்பையும் உருக்க வல்லதான இனிய ஓசைதரும் புல்லாங்குழற் கருவிகளில்,

23. ஏழுவிரலிடையிட்ட இன்னிசைவங் கியம் எடுத்துத்
தாழுமலர் வரிவண்டு தாதுபிடிப் பன போலச்
குழுமுரன் றெழநின்று தூயபெருந் தனித்துளையில்
வாழியநந் தோன்றலார் மணி அதரம் ஜீவத்தூத

**விளக்கம்**

ஏழு விரல்கள் இடையீடு உண்டாகத் துளை செய்யப்பட்ட இனிய இசைக்கருவியை எடுத்துத் தாழ்கின்ற மலர்களில் வண்டுகள் மகரந்தத்தைப் பிடிப்பதைப் போல், சூழ்ந்திருக்கும் துளைகளில் முரலுதல், எழுதல், நிற்றல் என்பன செய்து, தனித்தனியாக உள்ளதூய பெரிய துளைகளில் நம் நற்தோன்றலாகிய ஆனாயர் தம் அழகிய உதட்டை வைத்து ஊத,

24. முத்திரையே முதலனைத்தும் முறைத்தானஞ் சோதித்து
வைத்ததுளை ஆராய்ச்சி வக்கரனை வழிபோக்கி
ஒத்தநிலை உணர்ந்ததற்பின் ஒன்றுமுதல் படி முறையாம்
அத்தகைமை ஆரோசை அமரோசை களின் அமைத்தார்

**விளக்கம்**

முத்திரைத் துளை முதலாக முறையான தானங்களில் ஆராய்ந்து, இசை நூல்களில் விதித்த அளவிலே அமைந்திட்ட மற்றத் துளைகளை ஆராய்ச்சி செய்வதான வக்கரணையின் வழிப்பட்ட வீரல்களை முறைப்படி செலுத்தி இசை ஒத்திருப்பதைக் கண்ட பின்னர், சட்சம் முதலாக நிடாதம் வரைக்கும் ஏழிசைகளை வரிசையாக, அத் தன்மையால் ஆரோகணம் அவரோகணம் ஆகிய ஓசைகளில் அமைத்து, (எழிசை-சட்சம், ரிடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், நைவதம், நிடாதம்)

25. மாறுமுதற் பண்ணின்பின் வளர்முல்லைப் பண்ணாக்கி
ஏறியதா ரமும்உழையும் கிழமைகொள் இடுந் தானம்
ஆறுலவுஞ் சடைமுடியார் அஞ்செழுத்தின் இசைபெருகக்
கூறியபட் டடைக்குரலாங் கொடிப்பாலையினில் நிறுத்தி

**விளக்கம்**

மாறி வரும் சுரங்களையுடைய குறிஞ்சிப் பண்ணின் பின் முல்லைப் பண்ணை ஆக்கி, பாலை யாழுக்குப் பொருந்திய தாரமும் உழையும் கிழமை கொள்ளும்படி இடும் தானங்களிலே, கங்கையாறு பொருந்துவதற்கு இடமான சடைமுடியையுடைய சிவபெருமானின் திருவைந்தெழுத்தின் இசை பெருகுமாறு கூறப்பட்ட இளியைக் குரலாக உடைய கொடிப் பாலையில் நிறுத்தி,

26. ஆயஇசைப் புகல்நான்கின் அமைந்தபுகல் வகை எடுத்து
மேயதுளை பற்றுவன விடுபனவாம் விரல்நிரையிற்
சேயவொளி யிடையலையத் திருவாளன் எழுத்தஞ்சுந்
தூயஇசைக் கிளைகொள்ளுந் துறையஞ்சின்முறை விளைத்தார்

**விளக்கம்**

இசையில் உள்ள புகல் நான்கிலும் கொடிப் பாலைக்கு அமைந்த நிறத்தை எடுத்துச் சுரம் எழுப்பும் ஏழு துளைகளில் விரல்களை மூடுவதும் எடுப்பதுமாகிய செயல்களால் இசையின் செவ்விய ஒலி இடையிலே சஞ்சரித்து விளங்கச் சிவபெருமானின் திருவைந்தெழுத்தும் தூய இசையின் ஏற்ற பகுப்பைக் கொள்ளும் ஐந்து துறைகளின் ஏற்ற முறையை விளைத்தவராய்,

27.மந்தரத்தும் மத்திமத்தும் தாரத்தும் வரன்முறையால்
தந்திரிகள் மெலிவித்தும் சமங்கொண்டு வலிவித்தும்
அந்தரத்து விரற்தொழில்கள் அளவுபெற அசைத்தியக்கிச்
சுந்தரச்செங் கனிவாயும் துளைவாயும் தொடக்குண்ண

**விளக்கம்**

மந்தரத்தும், மத்திமத்தும், தாரத்தும் சுர தானத்துக்குரிய துளைகளை முறையே மென்மையாகவும், சமமாகவும், வன்மை யாகவும் மூடி இடையிட்ட துளைகளை உரிய

அளவைப் பெறுமாறு அசைத்தும், இயக்கியும் அழகிய சிவந்த கனி போன்ற உதடும், குழலின் துறைவாயும் ஒன்றுபட்டுக் கூடி இயங்க,

28. எண்ணியநூற் பெருவண்ணம் இடைவண்ணம் வனப்பென்னும்
வண்ண இசை வகையெல்லாம் மாதுரிய நாதத்தில்
நண்ணியபா ணியும்இயலும் தூக்குநடை முதற் கதியில்
பண்ணமைய எழும்ஓசை எம்மருங்கும் பரப்பினார்.

**விளக்கம்**

இசை நூல்களில் அளவுபடுத்திய பெருவண்ணம், இடைவண்ணம், வனப்பு வண்ணம் என்ற இசைவகைகள் யாவும் மதுரத்தையுடைய ஒலியில் அமைந்த தாளமும், இசையும் தூக்கும் நடை முதலிய சுதிகளோடு பண் பொருத்தமுற எழும் ஓசையை எல்லாப் புறத்திலும் பரவச் செய்தார்.

29. வள்ளலார் வாசிக்கும் மணித்துளைவாய் வேய்ங் குழலின்
உள்ளுறை அஞ் செழுத்தாக ஒழுகி யெழு மதுர வொலி
வெள்ளநிறைந் தெவ்வுயிர்க்கும் மேலமரர் தரு விளைதேன்
தெள்ளமுதின் உடன்கலந்து செவிவார்ப்ப தெனத்தேக்க

**விளக்கம்**

ஆனாயர் வாசிக்கும் அழகிய துறைகளையுடைய வேய்ங் குழலில் இறைவனின் திருநாமமான திருவைந்தெழுத்தினை உள்ளுறை யாய்க் கொண்டு, எத்திசையும் பெருகி எழும் இனிய இசையின் வெள்ள மானது நிறைந்த எல்லா உயிர்களிடமும் மேன்மை வாய்ந்த தேவர்களின் நாட்டிலுள்ள கற்பக மரத்தில் விளைந்த தேனைத் தெள்ளிய அமுதத்துடன் கலந்து செவிவழியாய் வார்ப்பதைப் போல் அமைந்தது.

30. ஆனிரைகள் அறுகருந்தி அசைவிடா தணைந் தயரப்
பானுரைவாய்த் தாய்முலையில் பற்றும்இளங் கன்றினமும்
தானுணவு மறந்தொழியத் தடமருப்பின் விடைக் குலமும்
மான் முதலாம் கான் விலங்கும் மயிர்முகிழ்த்து வந்தணைய

**விளக்கம்**

முன்பு புல்லை மேய்ந்த பசுக்கூட்டங்கள் பின் அசை போடாமல் இவரது பக்கமாக வந்து சேர்ந்து தம்மை மறந்து நின்றன. தாய்ப் பசுவின் முலையைப் பற்றிப் பால் குடித்துக் கொண்டிருந்ததால் பால் நுரையுடன் கூடிய வாயையுடைய பசுங்கன்றின் கூட்டமும் பால் குடிக்கும் செயலைத் தாம் மறந்தன. கொம்புகளை உடைய எருதுக் கூட்டமும் மான் முதலிய காட்டு விலங்குகளும் மயிர்க் கூச்செறிந்து ஆயனார் பக்கத்தில் வந்து சேர்ந்து நின்றன.

31. ஆடுமயில் இனங்களுமங் கசைவயர்ந்து மருங் கணுக
ஊடுசெவி இசைநிறைந்த உள்ளமொடு புள்ளினமும்

மாடு படிந் துணர்வொழிய மருங்குதொழில் புரிந் தொழுகும்

கூடியவண் கோவலரும் குறைவ னையில் துறை நின்றார்

**விளக்கம்**

ஆடும் இயல்புடைய மயில் கூட்டமும் அசைவில்லாது அங்குப் பக்கத்தில் வந்து கூடின. காதுகளின் வழியே சென்ற இசை நிறைந்த உள்ளத்துடன் பறவைக் கூட்டங்களும் பக்கத்தில் பொருந்தி வந்து தம் உணர்வு நீங்கின. பக்கத்தில் ஏவல் செய்து வரும் கூட்டமான வலிய ஆயர்களும் தாம் செய்து வந்த ஏவல் தொழில்களைச் செய்யாமல் இசை கேட்ட அளவில் தாம் மேற்கொண்டிருந்த செயலைக் குறையாய் விட்டு வந்தனர்.

32. பணிபுவனங் களிலுள்ளார் பயில்பிலங்கள் வழியணைந்தார்

மணிவரை வாழ் அரமகளிர் மருங்கு மயங்கினர் மலிந்தார்

தணிவில்ஒளி விஞ்சையர்கள் சாரணர்கின் னரர் அமரர்

அணிவிசும்பில் அயர்வெய்தி விமானங்கள் மிசை அணைந்தார்

**விளக்கம்**

ஆனாயரின் இசையைக் கேட்டதால் நாகர் உலகத்தில் உள்ளவர்கள் தாம் முன்னம் வந்து பழக்கப்பட்ட பாதாலப் பிலங்களின் வழியாக இங்கு வந்து சேர்ந்தனர். அழகிய மலைகளில் வாழ்கின்ற தெய்வ மகளிர் அந்த இசையால் மயங்கிப் பக்கத்தில் வந்து நெருங்கிக்கூடினர். குறைவற்ற ஒளியையுடைய வித்யாதரர்களும், சாரணர்களும், கின்னரர் களும், தேவர்களும் தாங்கள் வாழும் வான் நிலைகளிலிருந்து இசைக்கு வயப்பட்டவர்களாய்த் தம்மை மறந்து விமானங்களில் வந்து சேர்ந்தனர்.

33. சுரமகளிர் கற்பகப்பூஞ் சோலைகளின் மருங்கிருந்து

கரமலரின் அமுதூட்டுங் கனிவாய்மென் கிள்ளை யுடன்

விரவுநறுங் குழல் அலைய விமானங்கள் விரைந் தேறிப்

பரவியஏ ழிசை அமுதம் செவிமடுத்துப் பருகினார்

**விளக்கம்**

தேவ மங்கையர் கற்பகப் பூஞ்சோலைகளின் பக்கத்தி லிருந்து தாமரைமலர் போன்ற தம் கைகளால் அமுதூட்டும் கனியுடைய வாய் பொருந்திய மென்மையான கிளிகளுடன் தம் கூந்தல் அலையுமாறு தங்கள் தங்கள் விமானங்களில் விரைந்து ஏறி வந்து பரந்துப்பட்டுச் எழுந்த ஏழிசை அமுதத்தை அருந்தினர்.

34. நலிவாரும் மெலிவாரும் உணர்வொன்றாய் நயத்தலினால்

மலிவாய்வெள் ளெயிற்றரவம் மயில்மீது மருண்டு விழும்

சலியாத நிலைஅரியும் தடங்கரியும் உடன்சாரும்

புலிவாயின் மருங்கணையும் புல்வாய புல்வாயும்

**விளக்கம்**

துன்பப் படுபவரும், துன்பத்தால் தளர்ச்சியடைபவரும், உணர்ச்சி ஒன்றான அந்த இசையை விரும்பியதால் வாயில் மிக்க பற்களையுடைய பாம்பு அந்த இசையினால் மயங்கித் தன்பகையான மயிலின் மீது விழும். சலியாத நிலையுடைய சிங்கமும் பெரிய யானையுடன் கூடிவந்தது. புலியினது வாயின் அருகில் புல்லை வாயிற் கொண்ட மானும் சேர்ந்தது.

35. மருவியகால் விசைத்தசையா மரங்கள்மலர்ச் சினைசலியா
கருவரை வீழ் அருவிகளும் கான்யாறும் கலித் தோடா
பெருமுகிலின் குலங்கள்புடை பெயர்வொழியப் புனல்சோரா
இருவிசும்பி னிடைமுழங்கா எழுகடலும் இடைதுளும்பா

**விளக்கம்**

அந்த இசை காரணமாக காற்றானது விசையுடன் இயங்கவில்லை. மரங்களில் உள்ள மலர்களுடன்கூடிய கிளைகளும் அசைவற்று இருந்தன. கரிய மலையிலிருந்து விழும் அருவிகளும் காட்டாறுகளும் ஓசையின்றி ஓடியது. பெரிய முகிற் கூட்டங்களும் இயக்கம் இல்லாது மழை நீரைப் பெய்யவில்லை. அவை வானில் ஒலியை எழுப்ப வில்லை; ஏழு கடல்களும் அசையவில்லை.

36. இவ்வாறு நிற்பனவும் சரிப்பனவும் இசைமயமாய்
மெய்வாழும் புலன்கரண மேவிவொன் றாயினவால்
மொய்வாச நறுங்கொன்றை முடிச்சடையார் அடித் தொண்டர்
செவ்வாயின் மிசைவைத்த திருக்குழல்வா சனையுருக்க

**விளக்கம்**

நறுமணமுடைய கொன்றை மலரைச் சூடிய சடைமுடியைக் கொண்ட சிவபெருமானின் அடித் தொண்டரான ஆனாய நாயனார் சிவந்த வாயில் வைத்து இசைத்த புல்லாங்குழலின் ஒலி உள்ளே புகுந்து உருக்குவதால், இவ்வாறு இயங்காத பொருட்களும் இயங்கும் உயிர்களும் இசை மயமேயாகித் தம் உடலும் அதில் வாழும் புலன்களும் கரணங்களும் இசையான ஒரு தன்மையை அடைந்தன.

37. மெய்யன்பர் மனத்தன்பின் விளைந்த இசைக் குழலோசை
வையந்தன் னையும்நிறைத்து வானம்தன் வயமாக்கிப்
பொய்யன்புக் கெட்டாத பொற்பொதுவில் நடம்புரியும்
ஐயன்றன் திருச்செவியின் அருகணைய பெருகியதால்

**விளக்கம்**

மெய்யன்பரான ஆனாயரின் அன்பால் விளைந்த குழலின் இசை ஒலியானது இந்த உலகத்தில் நிறைத்தது; வானுலகத்தையும் தன்வயமாக்கியது. பொய்யன்பினுக்கு எட்டாதவரும் பொன்னம் பலத்தில் திருக்கூத்து ஆடுபவருமாகிய எம்பெருமானது திருச்செவியின் அருகே சென்று சேருமாறு அந்த இசைப்பெருகியது

38. ஆனாயர் குழலோசை கேட்டருளி அருட்கருணை
தானாய திருவுள்ளம் உடையதவ வல்லியுடன்
கானாதி காரணராம் கண்ணுதலார் விடையுகைத்து
வானாறு வந்தணைந்தார் மதிநாறுஞ் சடைதாழ

**விளக்கம்**

ஆனாய நாயனாரின் குழலோசையைக் கேட்டு, அதற்கு அருள் செய்யும் பொருட்டு, அருளும் கருணையும் பொதிந்த திருவுள்ளத்தினை உடைய தவவல்லியான உமையம்மையாருடன், இசைக்கெல்லாம் முதற்காரணமான சிவபெருமான் காளையூர்தியின் மீதமர்ந்து எழுந்தருளி, பிறைமதியைச் சூடிய நறுமணமிக்க கிடையானது தாழும்படி, வான் வழியே வந்து சேர்ந்தார்.

39. திசைமுழுதுங் கணநாதர் தேவர்கட்கு முன்நெருங்கி
மிசைமிடைந்து வரும்பொழுது வேற்று ஒலிகள் விரவாமே
அசையஎழுங் குழல்நாதத் தஞ்செழுத்தால் தமைப்பரவும்
இசைவிரும்பும் கூத்தனார் எழுந்தருளி எதிர்நின்றார்

**விளக்கம்**

எல்லாத் திசைகளிலிருந்தும் தேவர்களுக்கு முன்னம் மேல் நெருங்கிச் சென்ற சிவகணநாதர்கள் வரும்போது, குழலின் இசைக்கு மாறான பிற ஒலிகள் இடையில் புகுந்து கலவாமல், ஒலியலையாக அசையும்படி எழுகின்ற குழலின் இசையில் அமைந்த திருவைந்தெழுத் தால் தம்மைப் பரவித் துதிக்கின்ற இசையின் மீது விருப்பம் கொண்ட அருட்கூத்தரான சிவபெருமான் முன்கூறிய வண்ணம் எழுந்தருளி அவர் எதிரே எழுந்தருளினார்.

40. முன்னின்ற மழவிடைமேல் முதல்வனார் எப்பொழுதும்
செந்நின்ற மனப்பெரியோர் திருக்குழல்வா சனைகேட்க
இந்நின்ற நிலையநம் பாலணைவாய் என அவரும்
அந்நின்ற நிலைபெயர்ப்பார் ஐயர்திரு மருங்கணைந்தார்

**விளக்கம்**

இவ்வாறு ஆனாயர் முன்பு எழுந்தருளி நின்ற இளமையான காளையின் மீது வந்த முதல்வரான சிவபெருமான், செம்மையுடைய உள்ளத்தையுடைய சான்றோரான ஆனாயரின் திருக்குழல் ஒலியை எப்போதும் தாம் கேட்டுக்கொண்டிருப்பதற்காக, "இங்கு நின்ற நிலைமையிலேயே எம்மிடத்தில் நீ வருவாயாக!" என்றருளிச் செய்தனர். ஆனாயரும் அப்படியே அங்கு நின்ற அந்த நிலையிலிருந்து நீங்கி இறைவனின் திருவிடத்தில் சேர்ந்தார்.

41. விண்ணவர்கள் மலர்மாரி மிடைந்துலக மிசைவிளங்க
எண்ணிலரு முனிவர்குழாம் இருக்குமொழி எடுத்தேத்த
அண்ணலார் குழற்கருவி அருகிசைத்தங் குடன் செல்லப்
புண்ணியனார் எழுந்தருளிப் பொற்பொதுவி னிடைப்புக்கார்

**விளக்கம்**

வானவர்கள் பொழிந்த கற்பக.மலர் மழை நெருங்கி உலகத்தில் விளங்கவும், எண்ணில்லாத அரிய முனிவர்கள் மறை மொழிகளால் துதிக்கவும், பெருமையுடைய ஆனாயர் குழலிசையை இசைத்தபடி பக்கத்திலே செல்லவும், புண்ணியரான சிவபெருமான் அங்கிருந்து எழுந்தருளிப் பொன்னம்பலத்தில் புகுந்தருளினார்.

## அலகு- 4

## திருப்புகழ் – அருணகிரிநாதர்

### விநாயகர் துதி- கைத்தல நிறைகனி

தத்தன தனதன தத்தன தனதன

தத்தன தனதன ........ தனதான

**1.பாடல்**

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி

கப்பிய கரிமுக.... னடி பேணிக்

கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ

கற்பக மென வினை.... கடிதேகும்

மத்தமு மதியமும் வைத்திடு மரண்மகன்

மற்பொரு திரள்புய... மதயானை

மத்தள வயிறனை உத்தமி புதல்வனை

மட்டவிழ் மலர்கொடு ... பணிவேனே

முத்தமிழடை வினை முற்படு கிரிதனில்

முற்பட எழுதிய... முதல்வோனே

முப்புர மெரி செய்த அச்சிவ னுறைரதம்

அச்சது பொடி செய்த... அதிதீரா

அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்

அப்புன மதனிடை ... இடமாகி

அக்குற மகளுட னச்சிறு முருகனை

அக்கண மனமருள்.... பெருமானே.

**விளக்கம்**

கரதலத்தில் நிறைந்துள்ள பழம், அப்பம், அவல், பொரி இவற்றை வாரி உண்ணும் யானை முகனே உன் திருவடிகளை அறிவு நூல்களைக் கற்கும் அடியவனின் மனதில் நீங்காது வாழ்பவனே.

நினைத்ததை அளிக்கும் கற்பக விருட்சமே என்று உன்னை துதி செய்தால் விரைவில் வினைகள் ஓடி விடும்.

ஊமத்த மலரும், பிறை சந்திரனும் அணிந்த சிவபெருமான் மகன்.

மற்போருக்கு திரண்ட தோள்களையுடையவனும் மத யானையை ஒத்தவனும், மத்தளம் போன்ற பெருவயிறு உடையவன்.

பார்வதியின் மகன் கணபதியை தேன் துளிர்க்கும் புது மலர்களை கொண்டு வணங்குவேன்.

இயல், இசை,நாடகம் என்னும் முத்தமிழ் நூல் முறைமையை மேரு மலையில் முதல் முதல் எழுதிய முதன்மையானவனே.

திரிபுரங்களையும் எரித்த சிவபெருமான் இரதத்தின் சக்கர அச்சை ஒடித்து தூளாக்கிய மிகுந்த தீரனே.

குற மகளாகிய வள்ளியுடன் அந்தச் சிறிய முருகவேளை அத்தருணத்தில் மணம் புரியுமாறு திருவருள் பாலித்த பெருமானே.

படையெடுக்கத் தொடங்குகையில் சிவபெருமான் விநாயகரைப் பூஜிக்க மறந்தார். ஆதலால் சிவபெருமான் ஏறி வந்த தேரின் அச்சு முறியும் படி விநாயகர் செய்தார் என்பது சிவபுராணம்.

**திருப்புகழ்-2 பக்கரை விசித்ரமணி விநாயகர் துதி**

தத்ததன தத்ததன தத்ததன தத்ததன

தத்ததன தத்ததன..... தனதான

**பாடல்**

பக்கரைவி சித்ரமணி பொற்கலனை யிட்ட நடை

பட்சியெனு முக்ரதுர ..... கழுநீபப்

பக்குவம லர்த்தொடையும் அக்குவடு பட்டொழிய

பட்டுருவ விட்டருள்கை.... வடிவேலும்

திக்கதும திக்கவரு குக்குடமும் ரட்சைதரு

சிற்றடியு முற்றியப.... னிரு தோளும்

செய்ப்பதியும் வைத்துயர்தி ருப்புகழ்வி ருப்பமொடு

செப்பெனஎ னக்கருள்கை... மறவேனே

இக்கவரை நற்கனிகள் சர்க்கரைப ருப்புடனெய்

எட்பொரிய வற்றுவரை... இளநீர்வண்

டெச்சில் பயறப்ப வகை பச்சரிசி பிட்டுவெள

ரிப்பழமி டிப்பல்வகை.... தனிமூலம்

மிக்கஅடி சிற்கடலை பட்சணமெ னக்கொளாரு

விக்கிநச மர்த்தனெனும் ... அருளாழி

வெற்பகுடி லச்சடில விற்பரம ரப்பரருள்

வித்தகம ருப்புடைய..... பெருமாளே.

**விளக்கம்**

அங்கவடி, பேரழகான மணி, பொன்நிறமான சேணம் இவைகளை அணிந்து கம்பீரமாக நடக்கும்.

பறவையாகிய மிடுக்குள்ள, குதிரையையும் கடம்ப மரத்தின் நன்கு பூத்த மலரால் தொடுக்கப்பட்ட மாலையும் அணிந்தவன்.

கிரௌஞ்ச மலை அழிந்து திருக்கையில் உள்ள கூர்மையான வேலையும், திக்குகள் எட்டும்படி எழுந்துள்ள கொடியிலுள்ள சேவலையும், திரண்ட பன்னிரண்டு தோள்களை வயலூரையும் பாட்டிலே வைத்து உயர்ந்த திருப்புகழை விருப்பமோடு சொல்லுக என்று எனக்கு அருள் செய்ததை மறக்க மாட்டேன்.

கரும்பு, அவரை, பழங்கள், சர்க்கரை, பருப்பு, நெய், எள், பொரி, அவல், பல வகையான மாவு வகைகள், சிறந்த உணவுகள், கடலை, பட்சணமாக கொள்ளும் ஒப்பற்றவினைகளை நீக்க வல்லவர்.

அருட்கடலே கருணை மலையே, வளைந்த சடையையும் பினாகம் என்னும் வில்லையும் கொண்ட மேலான அப்பர் சிவபிரான் பெற்றருளிய திறலோனே ஒற்றைக் கொம்பு உடைய பெருமாளே.

எழுதுகோலாக தனது கொம்புகள் ஒன்றை ஒடித்து விநாயகர் எழுதத் தொடங்கினர். எனவே அவருக்கு ஏகதந்தன் (ஒற்றைக் கொம்பர்) என்று பெயர் வந்தது.

**திருப்புகழ் -3 உம்பர் தரு விநாயகர்**

தந்ததனத் தானதனத்..... தனதான

தந்ததனத் தானதனத்.... தனதான

**பாடல்**

உம்பர்தருத் தேநுமணிக் .... கசிவாகி

ஒண்கடலிற் றேனமுதந்... துணர்வூறி

இன்பரசத் தேபருகிப் .... பலகாலும்

என்றனுயிர்க் காதரவுற்.... றருள்வாயே

தம்பிதனக் கானவனத் ... தணைவோனே

தந்தைவலத் தாலருள்கைக்.... கனியோனே

அன்பர்தமக் கானநிலைப் .... பொருளோனே

ஐந்துகரத் தானைமுகப் .... பெருமாளே

**விளக்கம்**

விண்ணவர் உலகிலுள்ள கற்பக மலர் காமதேனு, சிந்தாமணி இவைகளைப் போல் ஈதற்கு என் உள்ளம் நெகிழ்ந்தது.

ஒளிவீசும் பாற்கடலில் தோன்றிய இனிய அமுதம் போன்ற உணர்ச்சி என் உள்ளத்தில் ஊறி இன்பச் சாற்றினை நான் உண்ணும்படி பலமுறை என்னுயிரின் மீது ஆதரவுற்று அருள்வாயாக.

தந்தை சிவனை வலம் செய்ததால் கையிலே அருளப்பெற்ற பழத்தை உடையவனே.

அன்பர்களுக்குரிய நிலைத்து நிற்கும் பொருளாக விளங்குபவனே. ஐந்து கரங்களையும் யானைமுகத்தையும் உடைய பெருமானே.

**திருப்புகழ்- 4 நினது திருவடி விநாயகர்**

தனதன தனதன தத்தன தத்தன

தனன தனதன தத்தன தத்தன ..... தனதான

**பாடல்**

நினது திருவடி சத்திம யிற்கொடி

நினைவு கருதிடு புத்திகொ டுத்திட

நெடிய வளைமுறி இக்கொடு லட்டுகம்

நிறவில் அரிசிப ருப்பவல் எட்பொரி

நிகரில் இனிகத் லிக்கனி வர்க்கமும் ... இளநீரும்

மனது மகிழ்வொடு தொட்டக ரத்தொரு

மகர சலநிதி வைத்து திக்கர

வளரு கரிமுக ஒற்றைம ருப்பனை.... வலமாக

மருவு மலர்புனை தொத்திர சொற்கொடு

வளர்கை குழைபிடி தொப்பண குட்டொடு

வசை பரிபுர பொற்பத அர்ச்சனை.... மறவேனே

தெனன தெனதென தெத்தென னப்பல

சிறிய அறுபத மொய்த்துதி ரப்புனல்

திரளும் உறுசதை பித்தநி ணக்குடல்... செறிமூளை

செரும உதரநி ரப்பசெ ருக்குடல்

நிரைய அரவநி றைத்தக ளத்திடை

திமித திமிதிமி மத்தளி டக்கைகள் ... செகசேசே

எனவெ துகுதுகு துத்தென ஒத்துகள்

துடிகள் இடிமிக ஒத்துமு ழக்கிட

டிமுட டிமுடி டிட்டிமெ னத்தவில் ... எழுமோசை

இகலி அலகைகள் கைப்பறை கொட்டிட

இரண பயிரவி சுற்றுந டித்திட

எதிரு நசிசர ரைப்பெற யிட்டருள்... பெருமாளே

**விளக்கம்**

உன்னுடைய திருவடி வேல், மயில், சேவல் (இவைகளை) நினைவில் கருதும் அறிவை நான் பெறுவதற்கு நிரம்பச் செய்யப்பட்ட அமுது, மூன்று வகையான பழங்கள், அப்பமும், புதிய பால், தேன்

நீண்டு வளைந்த முறுக்கு, கரும்புடன் லட்டு நிறமும் ஒளியும் உள்ள அரிசி, பருப்பு, எள், பொரி ஒப்பில்லாத பழ வகைகளும், இளநீரும் மனமகிழ்ச்சியுடன் தொடும் கைகளையும்

ஒப்பற்ற மகர மீன்கள் உள்ள கடலில் வைத்த துதிக்கையும் உடைய வளரும் யானை முகத்து ஒற்றைக் கொம்பனாகிய கணபதியை வலம் வந்து, தூக்கிய கைகளால் காதைப் பிடித்தும், தோப்புக்கரணம் போட்டு சிரசில் குட்டியும் போடுவார்கள்.

தாமரை போன்ற சிலம்பு அணிந்த அழகிய பாதங்களில் அர்ச்சனை செல்வதை நான் ஒருபோதும் மறவேன்.

பிளந்த வயிற்றில் நிறைந்துள்ள ஈரல்கள் பெருங்குடல்

டிமுட டிமுட டிமு டிட்டிம் என மேள வகைகள் ஓசைகள் எழுப்ப ஒன்றோடொன்று பகைத்த பேய்கள் கைப்பறைகளை கொட்ட ரண பைரவி என்னும தேவதைகள் சுற்றிக்கூத்தாட எதிர்த்து வந்து அசுரர்களைப் பலி இட்டு அழித்த பெருமாளே.

## திருப்புகழ்- 5

**விடமடைசு வேலை விநாயகர்**

தனதனன தான தனதனன தான

தனதனன தான....... தனதான

**பாடல்**

விடமடைசு வேலை அமரர்படை சூலம்

விசையன் விடு பாண.... மெனவேதான்

விழியுமதி பார விதமுமுடை மாதர்

வினையின் வினை வேதும்... அறியாதே

கடியுலவு பாயல் பகலிரவெ னாது

கலவிதனில் மூழ்கி ... வறிதாய

கயவனறி வீனன் இவனுமுயர் நீடு

கழலிணைகள் சேர.... அருள்வாயே

இடையர்சிறு பாலை திருடிகொடு போக

இறைவன் மகள் வாய்மை ... அறியாதே

இதயமிக வாடி யுடையடிளை நாத

கணபதியெ னாம... முறைகூற

அடையலவர் ஆவி வெருவஅடி கூர

அசலுமறி யாமல்.... அவரோட

அகல்வதென டாசொல் எனவுமுடி சாட

அறிவருளும் ஆனை.... முகவோனே

**விளக்கம்**

நஞ்சு பொருந்திய கடலும், தேவர் படையும், சூலாதியுதமும் கண்களும், அதிபாரமான மார்பகங்களும் கொண்ட விலைமாதர்களின் சாகசத் தொழில்களினால் விளையும் துன்பங்கள் ஒன்றையும் அறிந்து கொள்ளாது.

வாசனை மிக்க படுக்கையில் பகல் இரவு என்ற வேறுபாடு இல்லாமல்

சுகபோகத்தில் மூழ்கி ஏழ்மை அடைந்த கீழ்மகனும் அறிவு குறைந்தவனும் ஆகிய அடியேனும் உனது உயர்ச்சி மிக்க திருவடி இணைகளை சேர அருள்புரிவாயாக.

பகைவர்கள் உயிருக்கு அஞ்சும்படி நீ அடி எடுத்துவர அயலார் அறியாமல் அவர்கள் ஓட, போவது ஏனடா சொல் எனக் கூறி அவர்கள் தம் முடிகளைத் தாக்கும்.

அறிவை கண்ணபிரானுக்கு அருளிய யானை முகத்துக் கணபதியே.

**திருப்புகழ்- 6**

**முத்தைத்தரு திருவருணை**

தத்தத்தன தத்தத் தனதன

தத்தத்தன தத்தத் தனதன

தத்தத்தன தத்தத் தனதன..... தனதான

**பாடல்**

முத்தைத்தரு பத்தித் திருநகை

அத்திக்கிறை சுத்திச் சரவண

முத்திக்கொரு வித்துக் குருபர ... எனவோதும்

முக்கட்பர மற்குச் சுருதியின்

முற்பட்டது கற்பித் திருவரும்

முப்பத்துமு வர்க்கத் தமரரும் ... அடிபேணப்

பத்துத்தலை தத்தக் கணைதொடு

ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு

பட்டப்பகல் வட்டத் திகிரியில்... இரவாகப்

பத்தற்கிர தத்தைக் கடவிய

பச்சைப்புயல் மெச்சத் தருபொருள்

பட்சத்தொடு ரட்சித் தருள்வதும்.... ஒருநாளே

தித்தித்தெய ஒத்தப் பரிபுர

நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி

திக்கொட்கந டிக்கக் கழுகொடு .. .கழுதாடத்

திக்குப்பரி அட்டப் பயிரவர்

தொக்குத்தொரு தொக்குத் தொகுதொகு

சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக.... எனவோதக்

கொத்துப்பறை கொட்டக் களமிசை

குக்குக்குகு குக்குக் குகுகுகு

குத்திப்புதை புக்குப் பிடியென ... முதுகூகை

**விளக்கம்**

வெண்முகத்தை நிகர்த்த, அழகான பல்வரிசையும் இளநகையும் அமைந்த தேவயானை (தேவியின் தலைவனே)

சக்திவேல் ஆயுதத்தை ஏந்தும் சரவணபவக் கடவுளே மோஷ வீட்டுக்கு ஒப்பற்ற ஒரு விதையாக விளங்கும் ஞான குருவே, என்று துதிக்கும் முக்கண்ணர் பரமசிவனார்.

வேதங்களுக்கு முதன்மையான ஓம் என்னும மந்திரத்தை உபதேசித்து பிரம்மா, திருமால் ஆகிய இருவரும் முப்பத்து முக்கோடி தேவர்களும் அடி பணிய நின்றவனே.

ராவணுவடைய பத்துத் தலைகளும் சிதறி விழுமாறு அம்பை விட்டவன்.

நண்பனாகிய அர்ச்சுனனுக்கு தேர்பாகனாக வந்து தேரினைச் செலுத்திய பசுமையான நீலமேக வண்ணன் திருமால் பாராட்டும் பரம்பொருளே.

தித்தித்தெய என்ற தளத்திற்கு சிலம்புகள் அணிந்த நாட்டியப் பாதங்களை வைத்து காளிதேவி திசைகளில் எல்லாம் சுழன்று தாண்டவம் செய்யவும்

எட்டு திக்குகளில் உலகை தாங்கின்ற இந்த அழகிய கூத்துக்கு ஏற்ப "தொக்குத் தொகு" என்ற தாள ஓசை

போர்க்களத்தில் கிழக் கோட்டாண்கள் விரோத மனப்பான்மையை கொண்ட அசுரர்களை கொன்று பலி கொடுத்தனர்.

தர்ம மார்க்கத்துக்குப் பொருந்த , போர் செய்யவல்ல பெருமாளே.

**சிவவாக்கியர்**

**காப்பு**

**1. அரியதோர் நமசிவாயம் ஆதியந்தம் ஆனதும்**
**ஆரிரண்டு நூறுதேவர் அன்றுரைத்த மந்திரம்**
**சுரியதோர் எழுத்தைஉன்னி சொல்லுவேன் சிவவாக்கியம்**
**தோஷதோஷ பாவமாயை தூரதூர ஓடவே**
**கரியதோர் முகத்தையொற்ற கற்பகத்தைக் கைதொடிக்**
**கலைகள்நூல்கள் ஞானமும் கருத்தில் வந்துஉதிக்கவே**
**பெரியபேர்கள் சிறியபேர்கள் கற்றுணர்ந்த பேரெல்லாம்**
**பேயனாகி ஓதிடும் பிழைபொறுக்க வேண்டுமே**

**விளக்கம்**

அரியதான 'நமசிவாய' என்ற திருவைந்தெழுத்தே தொடக்கமும், முடிவுமாக ஆகியுள்ளது. மனிதர்களும் முப்பத்து முக்கோடி தேவர்களும் அன்றும் இன்றும் என்றுமே ஓதி வருவதும் 'ஓம் நமசிவாய' என்பதே.

அதுவே அனைத்தும் அடங்கிய ஓர் எழுத்தானதையும், என் உயிரில் வாலையாக விளங்குவதையும் உணர்ந்து அந்த ஓர் எழுத்தைத் தியானித்து அதன் உள்ளிருக்கும் சிவனை அறிந்து இதனை யாவரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே சிவபெருமானைத் தியானித்து இந்தச் 'சிவவாக்கியம்' என்ற நூலைச் செல்லுகின்றேன்.

இதனைப் படித்து உண்பவர்களுக்கு எல்லா தோஷங்களும் பற்றிய பாவவினைகளும் தொடரும் மாயைகள் யாவும் விலகி தானே வெகுதூரம் ஓடி விடும்.

கரியமுகம் கொண்டவரும் கேட்ட வரங்கள் அனைத்தையும் கற்பகமரம் போல் வழங்கம் கருணையாளரான கணபதியைக் கைகள் தொழுது வேண்டுகிறேன். ஆய கலைகள் அறுபத்து நான்கும் வேத ஆகம புராண காவிய சாஸ்திர நூல்களில் உள்ள உண்மைகளும் என் எண்ணத்தில் வந்து தோன்ற வேண்டும்.

அறிஞர்களும், வயதில் சிறிவராயினும் ஞானம் பெற்றவர்களும் யோகஞானம் அனைத்தையும் கற்று உணர்ந்தவர்களும் மற்றும் யாவரும் சிறியேனாகிய யான் ஓதும் இந்த நூலில் உள்ள பிழைகளைப் பொறுத்து அருள வேண்டும்.

**2. ஆன அஞ்செழுத்துளே அண்டமும் அகண்டமும்**
**ஆன அஞ்செழுத்துளே ஆதியான மூவரும்**
**ஆன அஞ்செழுத்துளே அகாரமும் மகாரமும்**
**ஆன அஞ்செழுத்துளே அடங்கலாவ லுற்றதே**

**விளக்கம்**

திருவைந்தெழுத்தான 'நமசிவாய' என்ற எழுத்துக்களின் அண்டமாகிய இவ்வுலகமும் அகண்டமாகிய ஆகாய வெளியும் அமைந்துள்ளது. அந்த ஐந்தெழுத்தினுள்ளேயே பிரம்மா விஷ்ணு சிவன் என்ற மும்மூர்த்திகளும் உள்ளனர்.

அந்த ஐந்தெழுத்தின் உள்ளேயே அகாரமாகவும் மகாரமாகவும் அமைந்துள்ளது. எனவே இந்த ஐந்தெழுத்தை அறிந்து உணர்ந்து ஓதுங்கள். இதில்தான் அனைத்துத் தத்துவங்களும் அடங்கி அது நமக்குள்ளேயே திருவைந்தெழுத்தாகி உட்கலந்து இருக்கிறது.

**3. ஓடி ஓடி ஓடி ஓடி உட்கலந்து சோதியை**
**நாடி நாடி நாடி நாடி நாட்களும் கழிந்து போய்**
**வாடி வாடி வாடி வாடி மாண்டுபோன மாந்தர்கள்**
**கோடி கோடி கோடி கோடி எண்ணிறந்த கோடியே**

**விளக்கம்**

சோதி வடிவில் நிகழும் இறைவனாகிய சிவபெருமானை அங்கும் இங்கும் ஓடி ஓடி தேடுகின்றார்கள் மனிதர்கள். அவன் அவர்களுடைய உடம்பின் உள்ளேயே கலந்து சோதியாக இருப்பதைக் கண்டு கொள்ளாமல் அவனை நாடி பற்பல இடங்களுக்கும் சென்று தேடியும் அனைத்தும் காண முடியாமல் வாழ்நாள்கள் கழித்து கொண்டிருக்கின்றன. இறுதியில் அவனைக் காணாமலேயே அவர்கள் இறந்து விடுகிறார்கள். இத்தகையோர் எண்ணிக்கை கணக்கில் அடங்காததாகும்.

இறைவனை நம் உடம்பில் காணாமல் அவனை வெளியே தேடி அலைவது வீண் என்பது கருத்தாகும்.

**4. உருத்தரித்த நாடியில் ஒடுங்குகின்ற வாயுவைக்**
**கருத்தினால் இருத்தியே கபாலம் ஏற்ற வல்லிரேல்**
**விருத்தரும் பாலராவர் மேனியும் சிவந்திடும்**
**அருள்தரித்த நாதர்பாதம் அம்மை பாதம் உண்மையே**

**விளக்கம்**

நம் உடம்பில் உள்ள சுழுமுனை நாடியில், குண்டலினி சக்தியை எழுப்பி அதனை முதுகுத்தண்டின் வழியாக மேலே ஏற்றி கபாலம் எனும் தலை உச்சியில் உள்ள சகஸ்ரதளத்தில் கொண்டு சேர்த்து தியானம் செய்தால் அவ்வாறு தியானம் செய்பவர்கள் முதுமையடைந்தவர்களாக இருந்தாலும் இளமையானவர்களாக ஆவர்.

அவர்களுடைய உடல் பொன்னிறமாகச் சிவக்கும், சிவசக்தி பாதம் வணங்கிக் கூறுகின்றேன். நான் சொல்வது உண்மையே.

**5. வடிவுகண்டு கொண்ட பெண்ணை மற்றொருவன் நத்தினால்**
**விடுவனோ அவனை முன்னர் வெட்டவேண்டும் என்பனே**
**நடுவன் வந்து அழைத்தபோது நாறும் இந்த நல்லுடல்**
**சுடலை மட்டும் கொண்டு போய்த் தோட்டி கைக்கொடுப்பரே**

**விளக்கம்**

அழகிய பெண்ணை மணம் முடித்தவன். அப்பெண்ணை வேறொருவன் தொட்டுவிட்டால் முதலில் அவனை வெட்ட வேண்டும் என்று அரிவாளை எடுப்பாள்.

அந்த அழகான பெண்ணின் உயிரை இயமன் பறித்துச் சென்றுவிட்டால் மிகவும் அழகான பெண்ணின் உடல்தானே என்று அந்தச் சடலத்தை அப்படியே வைத்திருக்க முடியுமா?

அவ்வுடலைச் சுடுகாட்டிற்கு எடுத்துச் சென்று தோட்டியின் கையில் கொடுத்து எரிக்கவோ, புதைக்கவோ செய்வார்கள். அப்போது மட்டும் கோபம் வருவதில்லையே! அது ஏன்?

**6. என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்தது இல்லையே**
**என்னிலே இருந்த ஒன்றை யாவர் அறிந்து கொண்டபின்**
**என்னிலே இருந்த ஒன்றை யாவர் காண வல்லரோ**
**என்னிலே இருந்திருந்து யான் உணர்ந்து கொண்டேன்**

**விளக்கம்**

என்னுள் இறைவன் இருக்கின்றான் என்பதை நான் முன்பு அறிந்து கொள்ளவில்லை. என்னிலே இருக்கின்ற அந்த இறைவனை தியானத்தின் மூலம் நான் அறிந்து கொண்டேன். என்னில் இருக்கும் அந்த இறைவனை மற்றவர்கள் காண்பாரோ? எப்பொழுதும் தியானத்திலேயே இருந்து என்னுள் இருக்கும் இறைவனை நான் உணர்ந்து கொண்டேன்.

இறைவன் நமக்குள்ளேயே இருக்கிறான். அவனைத் தியானத்தால் நம்மால் கண்டு கொள்ள முடியும் என்பது கருத்தாகும்.

**7. நினைப்பதொன்று கண்டிலேன் நீயலாது வேறிலை**
**நினைப்புமாய் மறப்புமாய் நின்ற மாயை மாயையே**
**அனைத்துமாய் அகண்டமாய் அனாதிமுன் அனாதியாய்**
**எனக்குள்நீ உனக்குள் நான் நினைக்குமாற தெங்ஙனே,**

**விளக்கம்**

நான் தியானத்திலிருந்து நினைப்பது நீயே அன்றி வேறு இல்லை. நான் நினைப்பதாகவும் மறப்பதாகவும் நின்ற மனம் ஒரு மாலையே.

இவ்வுலகில் உள்ள அனைத்துமாகவும் ஆகாயமாகவும் அனாதி காலங்களுக்கும் முன் உள்ள அனாதியாகவும் உள்ளவன் நீயே (இறைவனே).

எனக்குள் நீயும் உனக்குள் நானும் இருக்கும்போது உன்னை நினைப்பது எவ்விதம் இறைவனே? உன்னை மறந்தால் தானே நினைக்க முடியும்? உன்னை மறவேன்.

**8. மண்ணும் நீ விண்ணும் நீ மறிகடல்கள் ஏழும் நீ**
**எண்ணும் நீ எழுத்தும் நீ இசைந்த பண் எழுத்தும் நீ**
**கண்ணும் நீ மணியும் நீ கண்ணுள் ஆடும் பாவை நீ**
**நண்ணு நீர்மை நின்ற பாதம் நண்ணமாறு அருளிடாய்**

**விளக்கம்**

பூமி, வானம், ஏழு கடல்கள், எண், அகார உகார எழுத்து, இசையுடன் கூடிய தேவாரப் பண், ஏழு ஸ்வர்ங்களான 'சரிகமபதநி' என்ற இராக எழுத்தாகவும் உள்ளவன் நீயே. மேற்காணும் அனைத்துமாகவும் இருப்பவன் நீயே.

கண்ணாகவும், கண்ணின் மணியாகவும் கண்ணுக்குள் இருக்கும் பாவையாகவும் ஆனவன் நீயே. இப்படி அனைத்துமாய் உள்ள உண்மையான பிரம்மஞானத்தை எனக்கு வழங்கி என்னுள் நீராகி நின்ற நினது திருவடிப் பாதத்தை என்றும் என் தியானத்தில் வைக்க அருளுவாய் இறைவா.

**9. அரியும் அல்ல அயனும் அல்ல அப்புறத்தில் அப்புறம்**
**கருமை செம்மை வெண்மையைக் கடந்து நின்ற காரணம்**
**பெரியதல்ல சிறியதல்ல பற்றுன்கள் பற்றுமின்கள்**
**துரியமும் கடந்து நின்ற தூர தூர தூரமே.**

**விளக்கம்**

விஷ்ணுவும் அல்ல, பிரம்மாவும் அல்ல. இவர்கள் இருவராலும் அடிமுடிகாண முடியாமல் அப்பாலுக்கப்பாலராய் நின்றவன் சிவபெருமான். அவன் கருமை, செம்மை, வெண்மை நிறங்களைக் கடந்து நின்று சோதியாகி காரணப் பொருளாய் நமக்குள்ளே இருக்கிறான்.

அவனுடைய திருவடி நமக்குள் இருக்கிறது. அதைத் தியானத்தின் மூலம் உணருங்கள். அது பெரியதும் அல்ல. சிறியதும் அல்ல. நடுவாய் இருப்பது. அப்பாதத்தைப் பற்றி நின்று வணங்குங்கள். அது துரியமாகிய ஆக்ஞா கமலத்தில் ஆகாயத் தத்துவத்தையும் கடந்து நிற்பதால் வெகுதூரமாய் தோன்றுகின்றது.

**10. அந்திமாலை உச்சி மூன்றும் ஆடுகின்ற தீர்த்தமும்**
**சந்தி தர்ப்பனங்களும் தபங்களும் செபங்களும்**
**சிந்தைமேவு ஞானமும் தினம் செபிக்கு மந்திரம்**
**எந்தை ராம ராம ராம ராம என்னும் நாமமே.**

**விளக்கம்**

அதிகாலை, மதியம், மாலை – இம்மூன்று நேரங்களிலும் நீராடி குளித்துவிட்டு இயமம், நியமங்களுடன் இருந்து சந்தியா வந்தனம் தர்ப்பணங்கள் போன்றவைகளைச் செய்வதும், அரிய தவம் புரிந்து செபம் செய்வதும் இதனால் வரும் பலன்களால்

சிந்தையில் எப்போதும் ஞானம் ஒன்றை மட்டுமே வைத்து தியானிப்பதனால் வரும் பலன்களும்.

என் தந்தையாகிய ஶ்ரீ இராமபிரானின் ராம மந்திர செபம் செய்வதினாலேயே கிடைக்கும். எனவே, நாள்தோறும் இராமநாமத்தைத் தியானியுங்கள்.

**11. கதாவு பஞ்ச பாதகங்களைத் துரந்த மந்திரம்**

**இதாம் இதாம் இதல்ல என்று வைத்துழலும் ஏழைகள்**

**சதா விடாமல் ஓதுவார் தமக்கு நல்ல மந்திரம்**

**இதாம் இதாம் இராம ராம ராம என்னும் நாம்மே**

**விளக்கம்**

செய்த பாவங்கள் அனைத்தும் அகலவும் பஞசமா பாதகங்களைச் செய்யாதபடி காப்பதற்கும் ஓதுவதற்குரிய மந்திரம் ஏதேனும் இருக்குமோ என்று பற்பல மந்திரங்களை ஓதி உச்சரித்து உலகில் துன்பத்துடன் வாழும் ஏழை பக்தர்களே.

இதோ! சர்வ காலங்களிலும் எந்த நேரத்திலும் ஓதுவதற்குரிய நல்ல மந்திரம் இதுதான் என்பதை உணர்ந்து எப்போதும் 'இராம ராம ராம' என்னும் நாமத்தை என்றும் மறக்காமல் ஓதி உயர்வடைவீராக,

**12. நானதேது? நீயதேது? நடுவில் நின்றது ஏதடா?**

**கோனதேது? குருவதேது? கூறிடுங் குலாமரே**

**ஆனதேது? அழிவதேது? அப்புறத்தில் அப்புறம்**

**ஈனதேது? ராம ராம ராம என்ற நாம்மே.**

**விளக்கம்**

நான் என்று ஆனது எது? நீ என்பது எது? நமக்குள் நடுவாக நின்றது எது? அரசனாகி இவ்வுடலை ஆட்சி செய்வது எது? குருவாக அமைந்திருப்பது எது? இதற்கு பதில் கூறுங்கள் அறிவிலிகளே!

ஆதியாக ஆனது எது? அழியும் உடலில் அழியாத பொருளாய் நின்றது எது? நம் உடம்பிலேயே அப்புறத்திற்கு அப்புறமாய் வெளியாக நின்று உடல் அழிந்த பிறகும் கூட வருவது எது என்பதை சிந்தித்து அறிந்து கூறுங்கள். இவை யாவுமாகத் திகழ்வது ஒன்றுதான். அது இராமநாமமே என்பதை உணர்ந்து அந்த மந்திரத்தை ஓதுங்கள்.

**13. சாத்திரங்கள் ஓதுகின்ற சட்டநாதப் பட்டரே**

**வேர்த்து இரைப்பு வந்தபோது வேதம் வந்து உதவுமோ?**

**மாத்திரைப் போதும்முளே யறிந்து தொக்க வல்லிரேல்**

**சாத்திரப்பை நோய்கள்ஏது சத்தி முத்தி சித்தியே.**

**விளக்கம்**

சாத்திரங்கள் ஓதுகின்ற சட்டநாதப் பட்டரே! உங்களுக்கு நோய் வந்து, வேர்த்து இரைத்து உயிர் ஊசலாடும் போது நீங்கள் நாள்தோறும் ஓதி வந்த வேதம் அந்த நேரத்தில் வந்து உங்களுக்கு உதவுமோ? உதவாது.

ஒரு நொடிப் பொழுதாவது உங்களுக்குள்ளே உள்ள. இறைவனை அறிந்து வாசியோகம் (பிராணயாமம்) செய்து அவனையே தியானம் செய்து வந்தீர்களானால் சோற்றுப்பையான இவ்வுடலிற்கு நோய் என்பது வராது. இதனால் வீடுபேறு வாய்க்கப் பெறுவீர்கள்.

**14. நாலுவேதம் ஓதுவீர் ஞானபாதம் அறிகிவீர்**

**பாலுள் நெய் கலந்தவாறு பாவிகாள் அறிகவீர்**

**ஆலம் உண்ட கண்டனார் அகத்துளே இருக்கவே**

**காலன் என்று சொல்லுவீர் கனவிலும் அஃது இல்லையே.**

**விளக்கம்**

ரிக், யசூர், சாமம், அதர்வனம் என்ற நான்கு வேதங்களையும் ஓதுவீர்கள். ஆனால் அந்த நான்கு வேதங்களும் சொல்லும் ஞானபாதம் எது என்பதை அறிவீரா?

ஆலகால விஷம் உண்ட சிவபெருமான் பாலில் கலந்திருக்கும் நெய்போல உங்களுடைய உள்ளத்தில் கலந்திருப்பதை உணராமல் இயமன் என்று ஒருவன் இருக்கிறான். அவன் உயிரைப் பறிப்பவன் என்றும் நீங்கள் கூறுகிறீர்களல்லவா? எங்களைப் போன்ற சித்தர்களுக்கு அந்த இயமனுடைய பயம் கனவில் கூட இல்லை. காரணம் சிவன் எங்கள் உள்ளத்தில் இருக்கிறார்.

**15. வித்தில்லாத சம்பிரதாயம் மேலும் இல்லை கீழும் இல்லை**

**தச்சிலாது மாளிகை சமைந்தவாற தெங்ஙனே?**

**பெற்றதாயை விற்றடிமை கொள்ளுகின்ற பேனதணர்**

**சித்தில்லாதபோது சீவன் இல்லை இல்லை இல்லையே**

**விளக்கம்**

பரம்பொருளே அனைத்திற்கும் மூலகாரணமாக உள்ளது. அதனால்தான் எல்லா சம்பிரதாயங்களும் மேலும் கீழும் புலோகத்திலும் உள்ளன. தச்சன் இல்லாமல்

மாளிகை அமையுமா தம் உடம்பில் உயிர் என்னும் விதையாக இருப்பவன் சிவபெருமான்.

பெற்ற தாயை மறந்து விட்டு பெண்களிடம் அடிமை கொள்ளும் அறிவற்ற மக்களே! சிவன் இல்லாது போனால் இந்த சீவனும் இல்லை. இந்த உடம்பும் இல்லையென்பதை உணர்ந்து சிவபெருமானையே தியானித்திருங்கள்.

**16. அஞ்சும் மூன்றும் எட்டதாம் அநாதியான மந்திரம்**
**நெஞ்சிலே நினைத்து கொண்டு நீருருச் செபிப்பிரேல்**
**பஞ்சமான பாதகங்கள் நூறு கோடி செய்யினும்**
**பஞ்சுபோல் பறக்கும் என்று நான்மறைகள் பன்னுமே.**

**விளக்கம்**

'நமசிவாய' என்ற திருவைத்தெழுத்தும் அ, உ, ம் என்ற மூன்றெழுத்தும் இணைந்து உருவாகும். 'ஓம் நமசிவாய' என்ற எட்டெழுத்து மந்திரமே அனாதியாக விளங்கும் சிவபெருமானின் மந்திரம். இந்த மந்திரத்தை உள்ளத்திலே இருத்தி கண்ணில் நீர் பெருகும்படி உருக்கொடுத்து செபித்து தியானியுங்கள்.

அவ்வாறு நீங்கள் செபிப்பீரானால் நீங்கள் முன் பிறவியில் செய்த கணக்கற்ற பஞ்சமா பாதகங்கள், பாவங்கள் யாவும் காற்றில் பஞ்சு பறப்பதுபோல நம்மை விட்டுப் பறந்து விடும். இதனை நான்கு மறைகள் கூறுகின்றன.

**17. அண்டவாசல் ஆயிரம் பிரசண்ட வாசல் ஆயிரம்**
**ஆறிரண்டு நூறு கோடியான வாசல் ஆயிரம்**
**இந்த வாசல் ஏழைவாசல் ஏக போகமான வாசல்**
**எம்பிரான் இருக்கும் வாசல் யாவர் காண வல்லரோ?**

**விளக்கம்**

இவ்வுலகத்திற்கும், மற்ற உலகங்களுக்கும் ஆயிரமாயிரம் வழிகள் வாசல்களாக அமைந்துள்ளன. மனித உடலில் ஒன்பது வாசல்கள் அமைந்துள்ளன. எண்ணாயிரம் கோடி உயிர்களிலும், கோடிக்கணக்கான வாசல்கள் உள்ளன.

இறைவன் நம் உடம்பில்பத்தாவது வாசலில் இருந்து உலவகின்றான் அதுதான் பிராணவாயு (மூச்சுக்காற்று). இந்த வாசல் ஏழை வாசலாகவும், ஓகமாகி நின்று இறைவன் இன்பம் கிட்டும் வாசலாகவும், எளிமையாக எல்லோரிடமும் மறைவாக இருக்கின்றது.

இந்தப் பத்தாவது வாசலை அறிந்து யோகத்தால் அந்த வாசலின் புட்டைத் திறந்து எம்பிராணாகிய சிவன் இருக்கும் வாசலைக் காண வல்லவர்கள் யாவர்?

மூண்டெழும் கனலை மேலேற்றி சோதியில் சேர்க்க வல்லவர்களானால் உமதேவியாரைத் தன் இடப்பாகத்தில் கொண்ட சிவபெருமானோடு கூடி வாழலாம்.

**18. அஞ்செழுத்திலே பிறந்து அஞ்செழுத்திலே வளர்ந்து**

**அஞ்செழுத்தை ஓதுகின் பஞ்சபுத பாவிகாள்**

**அஞ்செழுத்தில் ஓரெழுத்து அறிந்து கூற வல்லிரேல்**

**அஞ்சல் அஞ்சல் என்று நாதன் அம்பலத்தில் ஆடுமே.**

**விளக்கம்**

ஐந்து பூதங்களால் பிறந்து, அந்த ஐந்து பூதங்களின் தன்மைகளால் வளர்ந்து, திருவைத்தெழுத்தின் உண்மையை உணராமல் அதனை வெறும் வாயால் மட்டுமே உச்சரித்து வரும் பஞ்சபூதங்களானது ஆன பாவிகளே!

'நமசிவய' என்ற அஞ்செழுத்தில் ஓரெழுத்து என்ன என்பதை அரிந்து அதிலேயே நினைவை நிறுத்தி செபித்து தியாளிக்க வல்லவர்களாணன அந்த ஐந்தெழுத்தும் ஓரெழுத்தாகி நிற்கும் அம்பலமான கோயிலில் சிவபெருமான் 'அஞ்சாதே' என்று நடராசப் பெருமானாக ஆடி நிற்பான்.

**19. அஞ்சும் அஞ்சும் அஞ்சுமே அனாதியான தஞ்சுமே**

**பிஞ்சு பிஞ்சதல்லவோ பித்தர்காள் பிதற்றுவீர்**

**நெஞ்சிலஞ்ஞ கொண்டுநீர் நின்று தொக்க வல்லிரேல்**

**அஞ்சுவில்லை யனுமில்லை அனாதியாகத் தோன்றுமே.**

**விளக்கம்**

திருவைத்தெழுத்தே ஐந்து புதங்களாகவும் ஐந்து புலன்களாகவும் நமது உடம்பால் இருந்து இயங்கி அவாதியான பஞ்சாட்சரமாகி இருக்கின்றது. அதுவே பிஞ்செழுத்தான வாவையாக ஓர் எழுத்தாகி உள்ளது. இதனை அறியாது பைத்தியம்போல் வெறும் வாயால் மட்டுமே கூறுவதால் பயன் என்ன?

அந்த ஐத்தெழுத்தாக ஆகியிருப்பது இன்னது என்பதை அறிந்து கொண்டு உள்ளக் கோயிலியே அஞ்செழுத்து ஓதி உள்ளம் உருகி கண்ணீர் சிந்தி அங்கேயே நினவை நிறுத்தி அதிலேயே நின்று தியானிக்க வல்லவர்க்கு அஞ்செழுத்தும் இல்லை.

அது ஆதாரங்களும் இல்லை. அஞ்செழுத்தும் ஆறு ஆதாரங்களில் குடியிருக்கும் தெய்வங்களும் ஒன்றான சிவமாகி அனாதியாகத் தோன்றும்.

**20. நீளவீடு கட்டுறீர் நெடுங்கதவு சாத்துறீர்**

**வாழவேணு மென்றல்லோ சாத்துறீர்**

**காலன் ஓலை வந்தபோது கையகன்று நிற்பிரே**

**ஆலம் உண்ட கண்டர்பாதம் அம்மைபாதம் உண்மையே.**

**விளக்கம்**

நீங்கள் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்பதற்காக பெரிய வீட்டைக் கட்டி, பெரிய நிலையுடன் கூடிய கதவுகளை அமைத்து, அதில் வாழ்ந்திருக்கும் மனிதர்களே.

உங்கள் வீட்டிற்கு எத்தனைக் கதவுகள் அமைத்து சாத்தி வைத்தாலும் இயமனின் ஓலையில் எழுதியபடி ஊர்போகும் நேரத்தில் எதைக் கொண்டும் தடுக்க இயலாமல் கைவிரித்து நிறிபீர்கள்.

ஆலகாலம் என்னும் கொடிய நஞ்சை உண்டு உலக உயிர்களைக் காத்த நீலகண்டராகிய சிவபெருமானின் திருவடியும் சத்தியின் திருவடியும் நம்மிடம் உள்ளதை உணர்ந்து அத்திருவடிகளைப் பற்றித் தியானியுங்கள் அத்திருவடி தம்மைக் கரை சேர்க்கும். இது உண்மையே.

**21. ஓடம் உள்ள போதெல்லாம் ஓடியே உலாவலாம்**

**ஓடம் உள்ள போதெலாம் உறுதிபண்ணிக் கொள்ளலாம்**

**ஓடமும் உடைந்தபோது ஒப்பிலாத வெளியிலே**

**ஆடுமில்லை கோலுமில்லை யாருமில்லை ஆனதே**

**விளக்கம்**

ஓடமாகிய இவ்வுடம்பில் உயிர் இருந்தால்தான் ஓடி உலாவ முடியும். இந்த உடலை உறுதியாக்கிக் கொள்ளலாம்.

இதை உணராமல் இவ்வுடலைவிட்டு உயிர் போய்விட்டால் எதுவும் இல்லாமல் போய்விடும். எனவே இவ்வுடலில் உயிர் இருக்கும்போதே இறைவனை அறிந்து தியானம் செய்வீராக பிறவிக் கடலைக் கடந்து கரை சேர்வீர்களாக.

வாயால் மட்டுமே உச்சரித்து வரும் பஞ்சபுதங்களால் ஆன பாவிகளே!

'நமசிவய' என்ற அஞ்செழுத்தில் ஓரெழுத்து என்ன என்பதை அரிந்து அதிலேயே நினைவை நிறுத்தி செபித்து தியாளிக்க வல்லவர்களாணன் அந்த ஐந்தெழுத்தும்

ஓரெழுத்தாகி நிற்கும் அம்பலமான கோயிலில் சிவபெருமான் 'அஞ்சாதே' என்று நடராசப் பெருமானாக ஆடி நிற்பான்.

**22. வீடெடுத்து வேள்வி செய்து மெய்யினோடு பொய்யுமாய்**
**மாடுமக்கள் பெண்டிர் சுற்றம் என்றிருக்கும் மாந்தர்காள்**
**நாடு பெற்ற நடுவர் கையில் ஒலை வந்து அழைத்திடில்**
**ஓடுபெற்ற அவ்விலை பெறாது காண் இவ்வுடலமே!**

**விளக்கம்**

மெய்யாகிய வீட்டை அறியாமல், பொய்யான வாழ்வை நம்பி, புதுவீட்டைக் காட்டி வேள்வி செய்து புதுமனைப் புகுவிழா நடத்தி, செல்வத்துடன் மக்கள், வாழ்ந்திருக்கும் மனிதர்களே!

நடுவராகிய இமயன் கையில் ஓலை கிடைத்து இவ்வுயிரைக் கொண்டு போனால் மண்ணால் செய்த ஓடு பெறும் விலை கூட இந்த உடல் பெறாது என்பதைக் கண்டு உணர்ந்து கொள்வீராக.

உடல் நலமாக இருக்கும்போதே, இவ்வுடலில் இருக்கும் இறைவனைத் தியானத்தால் உணர்ந்து கொள்ளுங்கள் என்பது கருத்தாகும்.

**23. அண்ணாலே அனாதியே அனாதிமுன் அனாதியே**
**பெண்ணும் ஆணும் ஒன்றலோ பிறப்பதற்கு முன்னெலாம்**
**கண்ணில் ஆணின் சுக்கிலம் கருவில் ஓங்கும் நாளிலே**
**மண்ணுனோரும் விண்ணுனோரும் வந்தவாறு எங்ஙனே?**

**விளக்கம்**

நம் உயிரில் ஆதி, அனாதி, அந்தமாக இருப்பவன் சிவபெருமானே, பிறப்பதற்கு முன்பெல்லாம் ஆணும் பெண்ணும் ஒன்றுதான் ஆணின் கண்ணில் நினைவாகத் தோன்றி அவனிடம் கக்கிலமாக உற்பத்தியாகி உருவாகின்றது. அப்போதே ஆன்மாவில் இறைவன் நுழைத்து விடுகிறான். பின்னரே உருவாகி ஆன்மா வளர்கின்றது.

இப்படித்தான் மண்ணுலகில் வாழும் மனிதர்களும் விண்ணுலகில் வாழும் தேவர்களும் தோன்றினர்.

**24. பண்டுநான் பறித்து எறிந்த பண்மலர்கள் எத்தனை?**
**பாழிலே செபித்துவிட்ட மந்திரங்கள் எத்தனை?**

**மிண்டனாயத் திரிந்தபோது இறைத்த நீர்கள் எத்தனை?**

**மீளவும் சிவாலயங்கள் சூழ வந்தது எத்தனை?**

**விளக்கம்**

முன்பு நான் வீணாய்ப் பறித்து எறிந்த பல்வகையான மலர்கள் எத்தனையோ? வீணாக செபித்துவிட்ட மந்திரங்கள் எத்தனையோ? இளைஞனாக இருந்தபோது, மூர்க்கத்தனம் கொண்டு திரிந்தபோது சிற்றின்பத்தில் இறைத்த நீர் எத்தனையோ? இம்மாதிரியான பாவங்களைச் செய்து அவை அகல வேண்டி சுற்றி வந்த சிவாலயலங்கள் எத்தனையோ?

## தாயுமானவர் வாழ்வும் வாக்கும்

## *(1705-1743)*

உலகம் யாவும் போற்றும் ஒருமுதல்வனின் பொதுத்தன்மை களை இன்சுவை ததும்பும் பாடல்கள் வாயிலாகத் தெளிவுறுத்திய பாவலர் தாயுமானவர். உயர்ந்த பேரின்பநிலை ஒன்றினையே விழைந்து செல்லும் உயிரின் தன்மையைத் தன்னிலை கூறுமுகத்தான் விளக்கிக் கூறியவர் தாயுமானவர்.

மனமாயையின் நுட்பம் உரைத்த மூதறிவாளர் அவரே! சிவானுபூதிப் பெருஞ்செல்வராகிய தாயுமானவர், எவ்வுயிரையும் தம்முயிர்போல் எண்ணி இரங்கும் அருளொழுக்கம் உடைய செம்மனச் செல்வர். வடநூற் கடலையும் தமிழ்நூற் கடலையும் நிலைகண்டுணர்ந்த பேரறிவாளர். மூவர் பாடலின் இணையற்ற தீஞ்சுவையையும், மணிவாசகரின் திருவாசகக் கனியும் நுகர்ந்த தகைமையாளர். அற ஒழுக்கத்திலும் அருளொழுக் கத்திலும் தலைநின்று அருள் ஆசான் வரவையே குறிக்கொண்டு எதிர்நோக்கும் திருவருட் பதிவுநிலை எய்தியவர்.

தாயுமானவர் கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டைச் சார்ந்தவர். அவர்தம் தந்தையார் கேடிலியப்பப் பிள்ளை, தாயார் கெஜவல்லி அம்மையார்; வேதாரண்யம் என்று வழங்கப்படும் திருமறைக் காட்டில் கி.பி. 1705-ல் தோன்றியவர். இளம் பருவத்தில் கருணை உள்ளங்கொண்டு சன்மார்க்கநெறியில் ஈடுபட்டார். இவர் பாடல் களில் சமரசத்தைக் காணலாம். கடவுள் என்பது அன்பு, ஆனந்தம், இன்பம், கருணை, வெட்டவெளி, அறிவு, சோதி என்பதே இவர் கொள்கை. மனிதர்க்கு மனிதர் வேற்றுமை பாராட்டுவதையும் என் தெய்வம் பெரியது, உன் தெய்வம் சிறியது, என்று பேசிச் சமயச் சண்டையிடுவதையும் தாயுமானவர் அறவே வெறுத்தார். கடவுளை வேறிடங்களில் தேடி அலைய வேண்டாம். ஒவ்வொருவரும் தம் உள்ளத்திலேயே கடவுளைக் காணமுடியும் என்பதே அவர் நம்பிக்கை.

தாயுமானவர் காலத்தில் தமிழகத்தில் சாதிச் சண்டைகள் இருந்தன. சமயப் பூசல்கள் நிலவின. மக்கள் பற்பல தெய்வங்களை வணங்கி வந்தனர். மத வெறுப்பும்

மதவெறியும் தாண்டவமாடின. மக்கள் ஒற்றுமையின்றி வாழ்வதைக் கண்டு, தாயுமானவர் நெஞ்சு உருகினார். கடவுள் ஒன்று, மதங்கள், மதத் தத்துவங்கள், எல்லாம் ஒன்று. வீண் சண்டைகள் வேண்டாம். எல்லோரும் நன்னெறியில் வாழவேண்டும் என்பதை வலியுறுத்த எளிய தமிழில் பல இனிய பாடல்களை இயற்றினார். இவர் பாடல்களை ஆழ்ந்து படிப்போர் அவற்றின் இனிமையில் ஈடுபடுவர் என்பதில் ஐயமில்லை.

அடிகள் திருப்பாடல்களில் வடமொழிச் சொற்கள் பயின்று வரினும் செந்தமிழ்ச் சுவை குன்றாமல் நிறைவு பெற்றுள்ளது. திருக்குறள், திருமந்திரம், தேவாரம் முதலிய நூல்களின் கருத்துகளும் சொற்களும் செவ்விதின் இடம் பெற்றுள்ளன. தங்கு தடையின்றிச் செல்லும் ஆற்றொழுக்குப் போன்று, நடை நயம்பட அமைந்துள்ளது. அடிகளின் தெளிபளிங்கன்ன தூய உள்ளமும், வீடுபேற்றின்கண் உள்ள பேரவாப் பெருக்கும், பதார்த்தங்கள் பாராது பரமே பார்க்கும் பெருநோக்கும், வெள்ளம் போன்ற சொற்பெருக்கும் அவர் திருப்பாடல்களில் மிளிர்கின்றன. அடிகளாரின் பாடற்பகுதிகள் முடிவினை வைத்தும், தொடக்கத்தைக் கொண்டும், பெயர் பெற்றுள்ளன.

தாயுமானவர் 56 தலைப்புகளில் 1452 பாடல்களைப் பாடியுள்ளார். இவர் தம் பாடல்களும் தலைப்புகளும் மணிவாசகரின் திருவாசகத்தைத் தழுவியே அமைந்துள்ளனவாகக் கருதப்படுகின்றது. தாயுமானவரின் பாடல்கள், வெண்பா, கொச்சகக் கலிப்பா, நிலை மண்டில ஆசிரியப்பா என்னும் பா வகைகளில் அமைந்துள்ளன.

பாவினங்களாகிய ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், கலித்துறை வடிவங்களிலும் இவர் பாடல்கள் உள்ளன. சிந்து, வண்ணம்,கண்ணி ஆகிய வடிவங்களிலும் அவை அமைந்துள்ளன. இந் நூலில் 508 பாடல்களே தொகுக்கப்பட்டுள்ளன.

பரிபூரணப் பொருளைத் தாயுமானவர் தேடிச்செல்லுங்கால் இறைவன், அவருக்கு மவுன குருவின் சந்திப்பை ஏற்படுத்தினார். அவரை வணங்கித் தாயுமானவர் தம். குறையைப் போக்குமாறு வேண்டுகின்றார்.

‘தாயினும் இனிய நின்னைச் சரணென அடைந்தநாயேன் பேயினுங் கடைய னாகிப் பிதற்றுதல் செய்தல் நன்றோ? தீயிடை மெழுகாய் நொந்தேன்; தெளிவிலேன்; வீணே காலம் போயினது; ஆற்ற கில்லேன் பூரணா னந்த வாழ்வே! - (ஆக்குவை : 290)

மவுனகுரு ‘சிந்தையறச் சும்மா இரு' என்று உபதேசித்தார். மனப் நிலைகொள்ளாமல் இருப்பதை,பற்றியுமல்

## பரிபூரணானந்தம்

1. ஆராயும் வேளையில் பிரமாதி ஆனாலும்
ஐய! ஒரு செயலும் இல்லை
அமைதியொடு பேசாத பெருமைபெறு குணசந்த்ரர்
ஆம் என இருந்தபேரும்;
நேராக ஒரு கோபம் ஒருவேளைவர அந்த
நிறைவு ஒன்றும் இல்லாமலே
நெட்டுயிர்த் துத்தட்டு அழிந்து உளறுவார்; வசன
நிர்வாகர் என்ற பேரும்
பூராயமாய் ஒன்று பேசும்இடம் ஒன்றைப்
புலம்புவார்; சிவராத்திரிப்
போதுதுயி லோம்என்ற விரதியரும் அறிதுயில்
போலே இருந்து துயில்வார்;
பாராதிதனில் உள்ள செயல் எலாம் முடிவிலே
பார்க்கில்நின் செயல்அல்லவோ?
பார்க்கும்இடம் எங்கும்ஒரு நீக்கம்அற நிறைகின்ற
பரிபூர ணானந் தமே!

**விளக்கம்**

ஆராயும் வேளையில்-விசாரிக்கும் காலத்தில்; பிரமாதி ஆனாலும்- பிரமன் முதலானவர்களுக்காயினும்; ஐய!-ஐயனே!: ஒரு செயலும் இல்லை-ஒரு தொழிலும் இல்லை;

அமைதியொடு. மனநிறைவோடு; பேசாத - பேசாமையாகிய; பெருமைபெறு. பெருமையடைந்த; குணசந்த்ரர் ஆம் என-குணத்தில் சந்திரனை ஒத்தவர் இவர் என்று; இருந்தபேரும்- யாவரும் சொல்லும்படியாய் இருந்தவர்களும்;

நேராக-செவ்வையாக; ஒருவேளை ஒரு காலத்தில்; ஒரு கோபம் வர- கோபம் ஒன்று வந்தால்; அந்த நிறைவு ஒன்றும் இல்லாமலே- அந்த அமைதி சிறிதும் இல்லாது;

நெட்டுயிர்த்து-பெருமூச்செறிந்து; தட்டு அழிந்து உளறுவார்-நிலை தவறிக் குளறுவார்கள்; வசன நிர்வாகர் என்ற பேரும்- வார்த்தை சொல் வதில் நிபுணர் என்று சொல்லப்பட்டவர்களும்;

பூராயமாய்-ஆராய்ச்சியாய்; ஒன்று பேசும் இடம்- ஒரு விடயத்தைப் பேசுங் காலத்தில்; ஒன்றைப் புலம்புவார்-வேறு ஒரு விடயத்தினைப் பற்றிப் பிதற்றுவார்;

சிவராத்திரிப்போது- சிவராத்திரிக் காலத்தில்; துயிலோம் என்ற விரதியரும்- உறங்கோம் என்று விரதம் பூண்டவரும்;

அறிதுயில் போல இருந்து-அறிவோடு கூடிய நித்திரைபோல இருந்து; துயில்வார்- உறங்குவார்கள்; (ஆதலால்) பாராதிதனில் உள்ள செயல் எல்லாம்- பூமி முதலான இடங்களிலே நடக்கும் செயல்கள் யாவும்;

முடிவிலே பார்க்கில்- முடிவிலே ஆலோசித்துப் பார்த்தால்;

நின் செயல் அல்லவோ?- தேவரீர் செய்கையாக இருக்கின்றதல்லவா?;

பார்க்கும் இடம் எங்கும்-நோக்கும் இடம் எல்லாம்;

ஒரு நீக்கம் அற நிறைகின்ற- சிறிதும் இடைவெளி இல்லாமல் நிறைந்து நிற்கின்ற;

பரிபூரண ஆனந்தமே. முழுமையான இன்பமே!

4. சந்ததமும் எனதுசெயல் நினதுசெயல், யான்எனும்
தன்மை நினை அன்றி இல்லாத்
தன்மையால் வேறு அலேன்; வேதாந்த சித்தாந்த
சமரச சுபாவம் இதுவே;
இந்தநிலை தெளியநான் நெக்குஉருகி வாடிய
இயற்கைதிரு உளம் அறியுமே;
இந்நிலையிலே சற்று இருக்களன் றால்மடமை
இதசத்ரு ஆகவந்து
சிந்தைகுடி கொள்ளுதே; மலமாயை கன்மம்
திரும்புமோ? தொடுவழக்காய்
ஜென்மம் வருமோ? எனவும் யோசிக்குதே மனது;
சிரத்தை எனும் வாளும் உதவிப்
பந்தம் அற மெய்ஞ்ஞான தீரமும் தந்து, எனைப்
பாதுகாத்து அருள் செய்குவாய்;
பார்க்கும்இடம் எங்கும் ஒரு நீக்கம் அற நிறைகின்ற
பரிபூரணானந் தமே!

**விளக்கம்**

சந்ததமும்-எக்காலமும்; எனதுசெயல்-என்னுடைய செய்கை; நினது செயல்- உன்னுடைய செய்கையே;

யான் எனும் தன்மை-நான் என்கின்ற தன்மை;

நின்னை அன்றி-உன்னை அன்றி; இல்லாத் தன்மையால்-இல்லாத தன்மையினால்;

வேறு அலேன் நான் உனக்கு வேறும் அல்லேன்; இதுவே-இந்த நிலையே; வேதாந்த சித்தாந்த சமரச சுபாவம்-வேதாந்தமும் சித்தாந்த முடிவும் ஒன்றுபடும் நிலையாகும்;

இந்த நிலை-இந்த அரிய நிலைமையை; தெளிய-அறிய; நான்-இந்த அடியவன்;

நெக்கு உருகி-மனமுடைந்து; வாடிய-உருகிவாடிய; இயற்கை -தன்மையை; திருவுளம்- நினது திருவுள்ளம்; அறியுமே- அறிந்திருக்குமே;

இந்நிலையில்-இத்தகைய அரிய நிலையிலே; சற்று இருக்க என்றால்-மனத்தை ஒடுக்கிச் சிறிது இருக்கலாம் எனின்;

மடமை-அறியாமையானது; இத சத்துருவாக வந்து-இச்சகம் பேசும் பகைவனைப் போல வந்து; சிந்தை குடிகொள்ளுதே- என் மனத்தில் குடிகெண்டு நிற்கிறதே;

மலமாயை கன்மம்-மலம், மாயை, கன்மம் ஆகிய இம்மூன்றும்; திரும்புமோ? - மீண்டும் என்னை வந்து பற்றிவிடுமோ என்றும்;

தொடுவழக்காய்-தொடர் வழக்காகி; ஜென்மம் வருமோ எனவும்-பிறவி உண்டாகுமோ என்றும்; மனது யோசிக்குதே- என் மனமானது ஆலோசிக்கின்றது; (ஆதலால்) சிரத்தை எனும் சிரத்தை என்று சொல்லப்பட்ட; வாளும் உதவி- வாளையும் தந்து;

பந்தம் அற-பிறவிவேர் அறும்படியாக; மெய்ஞ்ஞான தீரமும் தந்து-மெய்ஞ்ஞான சக்தியையும் கொடுத்து; எனைப் பாதுகாத்து அருள் செய்வாய்- அடியேனைக் காப்பாற்றி அருள்புரிவாயாக!;

பார்க்கும் இடம் எங்கும்-நோக்கும் இடம் எல்லாம்; ஒரு நீக்கம் அற நிறைகின்ற-சிறிதும் இடைவெளி இல்லாமல் நிறைந்து நிற்கின்ற; பரிபூரண ஆனந்தமே-முழுமையான இன்பமே!

5. பூதலயம் ஆகின்ற மாயைமுதல் என்பர்சிலர்;
பொறிபுலன் அடங்கும் இடமே
பொருள் என்பர் சிலர்; கரணமுடிவுஎன்பர் சிலர்; குணம்
போனஇடம் என்பர் சிலபேர்;

நாதவடிவு என்பர்சிலர்; விந்துமயம் என்பர் சிலர்;
நட்ட நடுவே இருந்த
நாம் என்பர் சிலர்; உருவம் ஆம்என்பர் சிலர்; கருதி
நாடில் அரு என்பர் சில பேர்;
பேதம் அற உயிர்கெட்ட நிலையம்என் றிடுவர்சிலர்;
பேசில் அருள் என்பர் சிலபேர்;
பின்னும் முன் னும்கெட்ட சூனியமது என்பர் சிலர்;
பிறவுமே மொழிவர்; இவையால்
பாதரச மாய்மனது சஞ்சலப் படும் அலால்
பரமசுக நிட்டை பெறுமோ?
பார்க்கும்இடம் எங்கும்ஒரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந் தமே!

**விளக்கம்**

பூதம்-ஐந்து பூதங்களும்; லயம் ஆகின்ற-ஒடுங்குதற்குமுதற் காரணமாக விளங்கும்;மாயை-மாயையே; முதல் என்பர்- முதற் பொருள் என்பர்;

சிலர்-சிலபேர்கள்; பொறிபுலன்- ஐம்பொறி தாயுமானவர் பாடல் தொகுப்புகளாலும் சுவரப்படும் விடயாதிகள் அனைத்தும் அந்த ஐந்தின் அடங்கும் இடமே. ஒடுங்கும் இடமே; பொருள் என்பர்-முதற்பொருள் என்பர் சிலர் சிலபேர்கள் கரண முடிவு என்பர் அந்தக் கரணம் ஒடுங்கும் இடம் என்பர் சிலர் சில பேர்கள்:

குணம் போன இடம். முக்குணங்களும் ஒடுங்கின இடமே; (பொருள்) என்பர் என்று கூறுவர். சில பேர் சில பேர்கள்: நாத வடிவு என்பர்-நாதரூபமே பொருள் என்பர்; சிலர் சிலபேர்கள்; விந்துமயம் என்பர்-விந்து ரூபமே பொருள் என்பர் சிலர் சிலபேர்கள்:

நட்ட நடுவிலே இருந்த நடுவாக இருந்த, நாம் என்பர் ஆன்மாவாகிய நாமே முதற்பொருள் என்பர்; சிலர் சிலபேர்கள்; உருவம் ஆம்என்பர் உருவப் பொருனே என்பர்; சிலர் சிலபேர்கள்; கருதி நாடில்- தீர ஆலோசிக்கும் இடத்தில்; அரு என்பர்-அருவப்பொருளே என்பர்; சிலபேர்-சில பேர்கள்;

பேதம் அற- வேற்றுமைகெட; உயிர்கெட்ட- சீவபோதம் ஒழிந்த; நிலையம் என்றிடுவர்-இடமே பொருள் என்பர்; சிலர்-சிலபேர்கள்;

பேரில்- சொல்லுமிடத்து; அருள் என்பர்-திருவருளே பொருள் என்பர்; சிலபேர்-சில பேர்கள்; பின்னும் முன்னும்கெட்ட அந்தமும் ஆதியும் இல்லாத; சூனியமது என்பர்-அது சூனியம் என்பர்; சிலர்-சில பேர்கள்;

பிறவுமே மொழிவர் (சிலர்) - சில பேர்கள் வேறு நிலைகளையும் பொருள் என்பர்; இவையால்-இவற்றால்; பாதரசமாய்- பாதரசம் போல; மனது- மனமானது; சஞ்சலப்படும் அலால்- சலித்தலையடையுமேயன்றி; பரமசுக நிட்டை - மேலான இன்பத்தைப் பயக்கும் நிட்டையினை; பெறுமோ?-அடையுமோ? பார்க்கும் இடம் எங்கும்- நோக்கும் இடம் எல்லாம்;

ஒரு நீக்கமற நிறைகின்ற- சிறிதும் இடைவெளி யில்லாமல் நிறைந்து நிற்கின்ற; பரிபூரண ஆனந்தமே- முழுமையான இன்பமே!

6. அந்தகாரத்தைஓர் அகம் ஆக்கி, மின் போல்என்
அறிவைச் சுருக்கினவர் ஆர்?
அவ்வறிவு தானுமே பற்றினது பற்றாய்
அழுந்தவும் தலைமீதிலே
சொந்தமாய் எழுதப்படித்தது ஆர்? மெய்ஞ்ஞான
சுகநிட்டை சேராமலே,
சோற்றுத் துருத்தியைச் சதமெனவும் உண்டு உண்டு
தூங்கவைத் தவர்ஆர் கொலோ?
தந்தை தாய் முதலான அகிலப்ர பஞ்சம்
தனைத் தந்தது எனது ஆசையோ?
தன்னையே நோவனோ? பிறரையே நோவனோ?
தற்காலம் அதை நோவனோ?
பந்தம்ஆ, னதுதந்த வினையையே நோவனோ?
பரமார்த்தம் ஏதும் அறியேன்;
பார்க்கும் இடம் எங்கும் ஒரு நீக்கம் அற நிறைகின்ற
பரிபூர ணானந் தமே!

**விளக்கம்**

அந்தகாரத்தை - அஞ்ஞானமாகிய இருளை; ஓர் அகம் ஆக்கி ஒரு வீடாக்கி; மின்போல-மின்னலைப் போல; என் அறிவை-என்னுடைய அறிவினை; சுருக்கினவர் யார்? - சுருங்கச்செய்து அவ்விடத்து வைத்தவர் யார்?;

அவ்வறிவு தானுமே-அந்த அறிவும்; பற்றினது பற்றாய்-தான் பிடித்ததையே ஆதாரமாகக் கொண்டு; அழுந்தவும்-அதில் மூழ்கவும்; தலைமீதிலே-என் தலையின்மீது; சொந்தமாய் எழுத-சுதந்தரமாய் எழுதிவைப்பதற்கு; படித்தது யார்?-கற்றது யார்?- மெய்ஞ்ஞான சுகநிட்டை சேராமலே - உண்மையாகிய ஞானானந்தங்களுக்கு ஏதுவான நிட்டையினைப் பொருந்தாமலே;

சோற்றுத்துருத்தியை - சோற்றினை அடைத்து வைத்த துருத்தி போலும் இந்த உடம்பினை; சதம் எனவும்- நிலையானது என்று நினைத்தும்; உண்டு உண்டு- பலதரம் உண்டு; தூங்க வைத்தவர் ஆர்கொலோ?-உறங்குவித்தவர் யார்?; தந்தை தாய் முதலான- தகப்பன் தாய் முதலாகிய; அகிலப்ரபஞ்சந்தனை - பிரபஞ்சம் முழுவதையும்; தந்தது-உண்டாக்கியதற்குக் காரணம்; எனது ஆசையோ?-என்னுடைய விருப்பமோ?;

தன்னையே நோவனோ?-என்னை நானே நொந்துகொள்வேனோ?; பந்தமானது தந்த வினையை நோவனோ?-பிறவித்தளையை உண்டாக்கிய பூர்வ கன்மங்களைத்தான் நொந்து கொள்வேனோ?; பரமார்த்தம் ஏதும் அறியேன்-மேலான அர்த்தம் சிறிதும் உணர்ந்திலேன்; பார்க்குமிடம் எங்கும்-நோக்கிய இடங்கள் எல்லாம்; ஒரு நீக்கமற நிறைகின்ற-சிறிதும் இடைவெளி இல்லாமல் நிறைந்து நிற்கின்ற; பரிபூரண ஆனந்தமே- முழுமையான இன்பமே!

7. ஆழ் ஆழி கரையின்றி நிற்கஇலை யோ?
கொடிய ஆலம் அமுது ஆக இலையோ
அக்கடலின் மீதுவட அனல்நிற்க இல்லையோ?
அந்தரத்து அகிலகோடி
தாழாமல் நிலைநிற்க இல்லையோ? மேருவும்
தனுவாக வளைய இலையோ?
சப்தமே கங்களும் வஜ்ரதரன் ஆணையில்
சஞ்சரித்திட இல்லையோ?
வாழாது வாழவே இராமன்அடி யால் சிலையும்
மடமங்கை ஆக இலையோ?
மணிமந்த்ரம் ஆதியால் வேண்டுசித் திகள்உலக
மார்க்கத்தில் வைக்கவிலையோ?
பாழான என்மனம் குவியஒரு தந்திரம்
பண்ணுவது உனக்கு அருமையோ?
பார்க்கும் இடம் எங்கும்ஒரு நீக்கமற நிறைகின்ற

பரிபூர ணானந் தமே!

**விளக்கம்**

ஆழ் ஆழி-ஆழிய கடலானது; கரையின்றி-கரையில்லாமல்; நிற்க இலையோ தன்னெல்லை கடவாது நிற்கவில்லையோ?; கொடிய ஆலம் கொடிய நஞ்சானது;

அமுது ஆக இலையோ-உணவாய் அமையவில்லையோ?; அக்கடலின்மீது அந்தக் கடலின் நடுவில்; வடவனல்- வடவைத் தீயானது; நிற்க இல்லையோ?- அவியாமல் நிலைபெற்று நிற்கவில்லையோ?; அந்தரத்து-ஆகாயத்தின்;

அகில கோடி - கோடிக்கணக்கான அண்டங்கள்; தாழாமல் -சுவிழாமல்; நிலைநிற்க இல்லையோ-நிலைபெற்று இருக்கவில்லையோ?; மேருவும்-மேரு மலையும்; தனுஆக-வில்லாக; வளைய இலையோ?-வளைக்கப்படவில்லையோ? சப்தமேகங்களும்- மேகங்கள் ஏழும்; வஜ்ரதரன்-வச்சிராயுதத்தை அணிந்த இந்திரனது;

ஆணையில் கட்டளையில்; சஞ்சரித்திட இல்லையோ?- வசிக்கவில்லையோ?; வாழாது வாழவே-வாழாமல் வாழும்படி;இராமன் அடியால்- இராமனுடைய திருப்பாதங்களால்; சிலையும் கல்லும்; மடமங்கை ஆக இலையோ?- இளம் பெண்ணாகிய அகலிகை ஆகவில்லையோ?; மணிமந்திரம் ஆதியால்-மணி, மந்திரம் முதலானவற்றினால்;

வேண்டு சித்திகள்-அவர் அவர் வேண்டிய, விரும்பிய சித்திகள்; உலக மார்க்கத்தில்-இவ்வுலகநெறியில்; வைக்க இலையோ?- தாபிக்கப்பட்டிருக்க வில்லையோ?; பாழான என் மனம் குவிய- பாழாகிய என் மனது உள்முகமாய்க் குவியும்படி;

ஒரு தந்திரம்-ஓர் உபாயம்; பண்ணுவது-செய்வது; உனக்கு அருமையோ?- (எல்லாவற்றிற்கும் தலைவனாகிய) தேவரீருக்கு அருமையாகுமோ? பார்க்குமிடம் எங்கும்-நோக்கும் இடம் எல்லாம்; ஒரு நீக்கமற நிறைகின்ற- சிறிதும் இடைவெளி இல்லாமல் நிறைந்து நிற்கின்ற;பரிபூரண ஆனந்தமே - முழுமையான இன்பமே!

8. ஆசைக்கு ஓர்அளவு இல்லை அகிலம் எல் லாம்கட்டி
ஆளினும் கடல்மீதிலே
ஆணைசெல வேநினைவா; அளகேசன் நிகராக
அம்பொன் மிக வைத்த பேரும்.
நேசித்துரசவாத வித்தைக்கு அலைந்திடுவர்;
நெடுநாள் இருந்தபேரும்

நிலையாகவே இன்னும் காயகற்பம் தேடி
நெஞ்சு புண்ணாவர்; எல்லாம்
யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும்
உறங்குவதும் ஆக முடியும்;
உள்ளதே போதும் நான் நான் எனக் குளறியே
ஒன்றைவிட்டு ஒன்று பற்றிப்
பாசக் கடற்குளே வீழாமல் மனது அற்ற
பரிசுத்த நிலையை அருள்வாய்!
பார்க்கும் இடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந் தமே!

**விளக்கம்**

ஆசைக்கு-அவாவினுக்கு; ஓர் அளவு இல்லை -ஒரு வரம்பு கிடையாது; (ஏனெனில்) அகிலம்- உலகங்கள்; எல்லாம்- எல்லா வற்றையும்; கட்டி ஆளினும் கட்டி அரசு செலுத்தினாலும்;

கடல் மீதிலே கடலின்மீதும்; ஆணைசெலவே-தமது கட்டளை செல்லும் படியாகவே; நினைவர்-விரும்புவார்கள்; அளகேசன்-குபேரனுக்கு; நிகர் ஆக-சமமாக; மிக-மிகுதியாக;

அம்- அழகிய; பொன்-பொன்னினை; வைத்தபேரும் - தம்மிடத்தில் வைத்திருக்கின்றவர்களும்; ரசவாத வித்தைக்கு- இரும்பைப் பொன்னாக்கும் இரசவாத வித்தை யினுக்கு; நேசித்து - விரும்பி; அலைந்திடுவர்-திரிவார்கள்;

நெடுநாள் - நீண்ட நாள்கள்; இருந்தபேரும்- இவ்வுலக இன்பங்கள் அடைந்த பேரும்; இன்னும்- மேலும்; நிலையாகவே-பலகாலம் நிலைத்திருக்கும்படியாக; காயகற்பம்- காயசித்திக்குரிய கற்பமுறை களை;

தேடி-நாடி; (அவை கிடைக்கப் பெறாமையால்) நெஞ்சுபுண் ஆவர்-மனம் புண்படுவார்கள்; எல்லாம்- இவையாவும்; யோசிக்கும் வளையில்- ஆலோசிக்குங்காலத்தில்; பசிதீர - பசி அடங்க; உண்பதும்-புசிப்பதும்; உறங்குவதும்- தூங்குவதும்; ஆக-ஆகவே;

முடியும்-முடிவு பெறும்; (ஆதலால்) உள்ளதே போதும்-உள்ளதே அமையும்; நான் நான் எனக் குளறியே-நான் நான் என்று அகங்கரித்துப் புலம்பும்; ஒன்றை விட்டு ஒன்று பற்றி-ஒன்றை விட்டு ஒன்றைத் தொட்டு;

பாசக்கடற்குளே- ஆசையாகிற கடலில்; வீழாமல் -விழுந்து அழுந்தாமல்; மனது அற்ற-மனம் இறந்த; பரிசுத்த நிலையை- பரிசுத்தமாகிய மௌனநிலையை (ஆகிய மரக் கலத்தை); அருள் வாய் - கருணை உள்ளங்கொண்டு தந்து அருள்வாய்!; பார்க்கும் இடம் எங்கும்-நோக்கும் இடம் எல்லாம்;ஒரு நீக்கமற நிறைகின்ற-சிறிதும் இடைவெளி இல்லாமல் நிறைந்து நிற்கின்ற; பரிபூரணானந்தமே முழுமையான இன்பமே!

**இராமலிங்க அடிகளார் – திருவருட்பா**

**ஆளுடைய அடிகள் அருண்மாலை**

1. தேசகத்தில் இனிக்கின்ற தெள்ளமுதே மாணிக்க
வாசகன்ற ஆனந்த வடிவான மாதவனே
மாசகன்ற நீதிருவாய் மலர்ந்தமிழ் மாமறையின்
ஆசகன்ற அனுபவம்நான் அனுபவிக்க அருளுதியே

**விளக்கம்**

அருளொளி பரந்த மனத்தில் இனிக்கின்ற தொள்ளமுதமான மாணிக்கவாசகப் பெருமானே, ஆனந்தவுருவுடைய பெரிய தவச்செல்வனே. குற்றமில்லாத நீ உரைத்தருளிய தமிழ் மறையாகிய திருவாசகத்தின் மறுவற்ற சிவானுபவத்தை எளியவனாகிய நான் அனுபவிக்க அருள்வீராக.

2. கருவெளிக்குட் புறனாகிக் கரண்மெலாங் கடந்துநின்ற
பெருவெளிக்கு கெகுங்காலம் பித்தாகித் திரிகின்றோர்
குருவெளிக்கே நின்றுழலக் கோதறநீ கலந்ததனி
உருவெளிக்கே மறைபுகழுக்கெ மறைபுகழும் உயர்வாத வூர்மணியே.

**விளக்கம்**

வளத்தாற் உயர்ந்த திருவாதவூர் மணியே, பிண்ட வானத்தின் அகமாகியும் புறமாகியும் கருவி கரணங்களைக் கலந்து அப்பால் நின்ற பெருவெளியாகிய மேலுலகின்கண் வாழ்தற்கு ஆசை மிகுந்து நெடிது காலம் வீணில் அலைகின்றார்கள்; நிறமுடைய வானம் சூழ்ந்த உலகின்கண் அவர்கள் இருந்து வருந்தக் குற்றமின்றாக, நீ கலந்தருளிய ஒப்பற்ற ஞானாகாயத்தை வேதங்கள் புகழ்கின்றன.

3. மன்புருவ ஈடுமுதலா மனம்புதைத்து நெடுங்காலம்
என்புருவாய்த் தவஞ்செய்வார் எல்லாரும் ஏமாக்க
அன்புருவம் பெற்றதன்பின் அருளுருவம் அடைந்துபின்னர்
இன்புருவம் ஆயினைநீ எழில்வாத வூர்இறையே

**விளக்கம்**

அழகியவாதவூர்த் தலைவராகிய மணிவாசகப் பெருமானே, பெரிய புருவ நடுவிடமான இலாபத்தானத்தை முதலாகக் கொண்ட, யோகாவதத்தைக்கண் மனதை நிறுத்தி நெடுநாள் இருந்து, எலும்பு உருவாகித் தவம் புரிபவர் அனைவரும் ஏமாந்தொழிய நீ அன்புருவம் பெற்று, பின்பு அருளுருவம் பெற்று, பின்னர் இன்புருவமாகிய சிவமாகிறேன்.

4. உருஅண்டப் பெருமறைஎன் அலகமெலாம் புகழ்கின்ற
திருஅண்டப் பகுதிஎனும் திருஅகவல் வாய்மலர்ந்த
குருஎன்றெப் பெருந்தவரும் கூறுகின்ற கோவேநீ
இருஎன்ற தனிஅகவல் எண்ணம்எனக் கியம்புதியே.

**விளக்கம்**

உருக்கொண்டு விளங்குகின்ற உலகப்பெருமறை என்று கற்றவர் திரள் எல்லாம் புகழ்ந்து பேகம், திருவண்டப் பகுதி என்று சொல்வி அருளியுள்ள ஞானாசிரியர் என்று, எத்தகைய தவப்பெருமக்களும் உரைத்துப் போற்றுகின்ற தலைவனே, "என்னையும் இருப்பதாக்கினன்" என்ற ஒப்பற்ற அகவல் அறிவுக்கும் கருத்து இது என்று தெரிவித்து அருள்க.

5. தேடுகின்ற ஆனந்தச் சிற்சபையில் சின்மயமாய்
ஆடுகின்ற சேவடிக்கீழ் ஆடுகின்ற ஆரமுதே
நாடுகின்ற வாதவூர் நாயகனே நாயடியேன்
வாடுகின்ற வாட்டமெலாம் வந்தொருக்கால் மாற்றுதியே.

**விளக்கம்**

விரும்புகின்ற இன்பத்துக் சிறிய பொருள் தான் ஞான சபையில், ஞான மயமாய் ஆடல் புரிகின்ற திருவடிக் கீழ் மகிழ்கின்ற அரிய அமுதம் போன்றவரே, யாவரும் மயங்குகின்ற திருவாதவூர்த் தலைவரே, நாயனைய அடியவனாகிய யான் விளைத்த வருத்தங்களைப் போக்கி அருள்வீராக இறைவனே.

6. சேமமிகும் திருவாத வூர்த்தேவென் றுலகுபுகழ்
மாமணியே நீஉரைத்த வாசகத்தை எண்ணுதொறும்
காமமிகு காதலன்றன் கலவிதனைக் கருதுகின்ற
ஏமமுறு கற்புடையாள் இன்பினும்இன் பெய்துவதே

**விளக்கம்**

நலமிக்க திருவாதவூர்த்தேவரே என்று அறிஞர் கூட்டம் புகழ்கின்ற அழகிய மணி போல்கின்ற பெருமானே,

நீபாடி அருளிய திருவாசகத்தை நான் நினைவிற் கொண்டு சிந்திக்கும் போதெல்லாம் காம வேட்கை மிக்க காதலானாகிய கணவனது காமக்கூட்டத்தை விழைகின்ற தற்காப்பாகிய கற்புடைய நங்கையின் இன்பத்தினும் மிக்க இன்பமுண்டாகிறது.

7. வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே

**விளக்கம்**

பெருமை பெற்ற மாணிக்கவாசகப் பெருமானே, நின்னுடைய திருவாசகத்தை உணர்வு ஒன்றிப் பாடும்போது நல்ல கருப்பஞ் சாற்றினில் தேனும் பாலும் நன்கு பகுத்த தூய கனியின் சாறும் கலந்தது போல என் உடலிலும் உயிரிலும் கலந்து உமட்டி உமிழாதவாறு இனிப்பு மிகுகிறது.

8. வருமொழிசெய் மாணிக்க வாசகநின் வாசகத்தில்
ஒருமொழியே என்னையும்என் உடையனையும் ஒன்றுவித்துத்
தருமொழியாம் என்னில் இனிச் சாதகமேன் சஞ்சலமேன்
குருமொழியை விரும்பிஅயல் கூடுவதேன் கூறுதியே

**விளக்கம்**

மெய்ம்மையே விளைகின்ற சொற்களைப் பேசும் மாணிக்கவாசகப்பெருமானே, உன்னுடைய திருவாசகத்தில் ஒருவாசகமே என்னையும் என்னை ஆளாக வுடைய சிவனையும் ஒன்றுவித்தருளும் உபதேச மொழியாகுமென்றால்,

சிவப்பேறு குறித்து வேறே சாதனங்களை நாட வேண்டா, அவை குறித்து வருந்த வேண்டா, ஞானாசிரியர் ஒருவரின் அருள் மொழியை விரும்பி வேறிடம் மக்கள் செல்வது ஏனோ? சொல்லுக.

9. பெண்சுமந்த பாகப் பெருமான் ஒருமாமேல்
எண்சுமந்த சேவகன்போல் எய்தியதும் வைகைநதி
மண்சுமந்து நின்றதும்ஓர் மாறன் பிரம்படியால்

புண்சுமந்து கொண்டதும்நின் பொருட்டன்றோ புண்ணியனே

**விளக்கம்**

உமாதேவியாகிய பெண்ணை ஒருபாகத்தே கொண்ட பெருமானாகிய சிவபிரான் ஒரு குதிரை மேல் கண்டார் கருதத்தக்க சேவகன்போல் உருக்கொண்டு எழுந்தருளியதும்,

வையை ஆற்றுக்கரை உடைப்பிற்காகத் தலையில் மண் சுமந்ததும், பாண்டி வேந்தன் ஒருவனால் மேனியடிபட்டுப் புண்ணானதும், சிவபுண்ணியச் செல்வராகிய நின் பொருட்டாம் அன்றோ.

10 . வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்

கேட்டபொழு தங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்

வேட்டமும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான

நாட்டமுறு மென்னிலங்கு நான்அடதல் வியப்பன்றோ

**விளக்கம்**

திருவருள் நலம் குறையாத மாணிக்கவாசகப் பெருமானே, நின்னுடைய திருவாசகத்தை ஓதக்கேட்ட பொழுது அவ்விடத்திருந்த கீழான பறவையினங்களும்,

வேட்டையாடிக் கொல்லத்தக்க பொல்லாத மிருகங்களும் மெய்மைச் சிவஞான நாட்டம் கொள்ளும் என்றால், அவற்றின் வேறாகிய யான் அந்த நாட்டமுடையனாவது வியப்புத் தருவதாகாது. காண்.

## நெஞ்சுவிடு தூது

### உமாபதிசிவாச்சாரியார்

உமாபதிசிவம் அவர்கள் தன் ஞான ஆசிரியராம் மறைஞான சம்பந்தரிடம் தமது நெஞ்சைத் தூது விடுத்து, அவரிடத்திலிருந்து கொன்றை மாலையை வாங்கி வருமாறு கூறுவதாக அமைந்த நூல் நெஞ்சுவிடு தூது ஆகும்.

பதினான்கு சாத்திரங்களில் இலக்கிய அமைப்பில் அமைந்தது இந்நூல். தூது இலக்கியம் என்பது சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறில் ஒன்றாகும்.

காதல் வயப்பட்ட பெண் ஒருத்தி தன் காதலனிடம் தோழி, கிளி, மயில், குயில், நெஞ்சு இவற்றில் ஒன்றைத் தூதாக அனுப்பித் தன் காதலை வெளிப்படுத்தி காதலனின் ஒப்புதலைப் பெற்றுவருமாறும், அதற்கு அடையாளமாக அவன் அணிந்திருக்கும் மாலையை வாங்கி வருமாறும் கூறும் அமைப்பில் பாடப் பெறுவது தூது இலக்கிய மரபாகும்.

இந்த அடிப்படையில் உமாபதிசிவம் அவர்கள் சிவபெருமானாகவே ஆசிரியரை நினைத்துத் தன் நெஞ்சைத் தூது அனுப்பி அவருடைய அருளைப் பெற்றுவரச் செய்வதாக இந்நூல் அமைந்துள்ளது.

கலிவெண்பா யாப்பில் 129 கண்ணிகள் கொண்டது இந்நூலாகும்.

**1. இறைவனின் இலக்கணம்**

**பூமேவும் உந்திப் புயல்வண்ணன் பொற்பதுமத்**
**தார்மேவும் மார்பன் சதுமுகத்தோன் - தாம்மேவிப்**
**பன்றியும் அன்னமுமாய்ப் பாரிடந்தும் வான்பறந்தும்**
**என்றும் அறியா இயல்பினான் - அன்றியும்**
**இந்திரனும் வானோரும் ஏனோரும் எப்புவியும்**
**மந்தர வெற்பும் மறிகடலும் – மந்திரமும்**
**வேதமும் வேத முடிவின்விளை விந்துவுடன்**
**நாதமும் காணா நலத்திளான் ஓத**
5 **அரியான் எளியான் அளவிறந்து நின்ற**
**பெரியான் சிறியான் பெண்பாகன் தெரியா**
**அருவான் உருவாள் அருவுருவ மல்லான்**
**மரியான் மரிப்பார் மனத்தான் - பரிவான**
**மெய்யற்கு மெய்யன் வினைக்குவினை யாயினான்**
**பொய்யற்கு பொய்யாய பொய்யினான் - ஐயன்**
**படநாகம் பூண்ட பரமன் பசுவின்**
**இடமாய் நிறைந்த இறைவன் – சுடரொளியான்**
**என்றுமுளன் அன்றளவும் யானும் உளனாகி**

**விளக்கம்**

கருமேகம் போன்ற நிறத்தினையும், உந்தியிலிருந்து தோன்றுகின்ற தாமரை மலரையும் உடைய திருமாலும், பொன்நிறத்தை உடைய மலர்மாலையை உடைய மார்பினையும், நான்கு முகங்களையும் உடைய பிரமனும் சிவபெருமானின் அடிமுடியைக் காண்பதற்காகப் பன்றி வடிவில் பூமியை அகழ்ந்தும், அன்ன வடிவில் வானத்தில் பறந்தும் முயற்சித்தார்கள். ஆனால், அவர்கள் இருவராலும் ஒருகாலத்திலும் காணமுடியாத இயல்பை உடையவன்.

மேலும் இந்திரனும் வானவரும் பிறரும் பிற உலகங்களில் வாழ்வோரும், மந்திரமலையில் வாழ்பவரும், ஆழ்கடலில் வாழ்பவரும், உணர்வதற்கு அரியவன். மந்திரங்கள் நான்மறைகள் உபநிடதங்கள் உயிருக்கு அறிவைத் தரும் விந்துநாதமாகிய தத்துவங்களுக்கு ஆட்பட்டவர்களும் காணமுடியாத நலத்தை உடையவன். ஓதுகின்ற வேதங்களின் ஓசைக்கு அப்பாற்பட்டவன்.

அடியவர்களுக்கு எளியவன், விவாதங்களால் வாதிட்டு அறிய முடியாதவன், அணுவிற்கு அணுவாய் மிகச் சிறிதாய் விளங்குபவன். பெண்ணைப் பாகத்தில் உடையவன். கண்ணுக்குப் புலனாகாத அருவத்தை உடையவன், உருவத்தையும் உடையவன்,

அருவுருவத்தை உடையவன், இம்மூன்றும் இல்லாதவனாகவும் விளங்குபவன். என்றும் இறவாதவன், தோன்றி மறைகின்ற உயிர்களிடத்தில் உள்ளவன், அன்பு செலுத்துகின்ற அடியவருக்கு அருள் வழங்குபவன், வினைக்கு வினையானவன், பொய்ம்மை உடையார்களால் காணமுடியாத பொய்யானவள் அனைவருக்கும் தலைவன், படமெடுத்து ஆடும் பாம்பினை உடையவன், பசுவாகிய உயிர் கொண்ட இறைவன் பேரொளிப் பிழம்பாகிய வடிவத்தைக் கொண்டு விளங்குகின்றவன். அவன் இருக்கும் வரை உயிராகிய நானும் இருப்பேன்.

**2. உயிரின் துன்பங்கள்**

**நின்றநிலை யில்தரித்து நில்லாமல் - சென்றுசென்று**
**தோற்றியிடும் அண்டம் சுவேதசங்கள் பாரின்மேல்**
**சாற்றும்உற் பீசம் சராயுசங்கட் - கேற்ற பிறப்பு,**
**எல்லாம் பிறந்தும் இறந்தும் இருவினையின்**
**பொல்லாங்கு துய்க்கும் பொறியிலியேன் - கல்லா**
**உணர்வின் மிசையோடு உலகா யதனைப்**
**புணவர்வதொரு புல்லறிவு பூண்டு – கணையிற்**
**கொடிதெனவே சென்று குடிப்பழியே செய்து**
**கடிய கொலைகளவு காமம் படியின்மிசை**
**தேடி உழன்று தெரிவைத் தெரியாமல்**
**வாடி இடையும் மனந்தனக்கு நாடிஅது**
**போன வழிபோகும் புந்திக்கும் புந்தியுடன்**
**ஆன திறலார் அகந்தைக்கும் - மேனி**
**அயர் அயர் அழிய அழியும்**
**உயிரின் துயரம் உரையேன்.**

**விளக்கம்**

(உயிர் இறைவனைப் போல் என்றும் உள்ளது என்றாலும்) இறைவனைப்போல் ஒரே நிலையில் நில்லாது உயிரானது மாறி மாறிப் பிறக்கும். முட்டையில் பிறக்கும், வியர்வையில் பிறக்கும், வித்தில் பிறக்கும், கருப்பையில் பிறக்கும், வினைக்கு ஏற்பப் பிறந்து இறந்து இருவினைகளை அநுபவிக்கின்ற

குணத்தை உடையதாகும். நூலறிவு இல்லாத உலகாயதனோடு (கடவுள் மறுப்புக் கொள்கையினர்) சேர்ந்து சிற்றறிவு கொண்டதாகும்.

வில்லிலிருந்து புறப்படுகின்ற அம்பைவிட விரைவாகச் சென்று கொடிய வினைகள் செய்து குடிக்குப் பழியைத் தேடும் கொடுமை யான கொலை, களவு, காமம் இவற்றில் ஈடுபட்டு வருந்தும். அறிய வேண்டியவற்றை அறியாது உலகப் பொருள்களில் மயங்கி வாழும். சோர்ந்திடும் மனத்திற்கும், அதன்வழி செல்லும் புத்திக்கும், புத்தியில் தோன்றுகின்ற அகந்தைக்கும் ஆட்பட்டு, முயற்சி மேற்கொள்ள மேற்கொள்ள மேனியில் அயற்சி ஏற்பட ஏற்பட வருந்துகின்ற உயிரின் துயரத்தைக் கூறுவதற்கு இயலாது.

**3. பாசக் கட்டாம் துன்பங்கள்**

**- வயிரமே**

**கொண்டதொரு காமனுக்கும் கோடனுக்கும் மோகனுக்கும்**
**மண்டு மதமாச் சரியனுக்கும் – திண்திறல்சேர்**
**இந்திரியம் பத்துக்கும் ஈரைந்து மாத்திரைக்கும்**
**அந்தமிலாப் பூதங்கள் ஐந்திற்கும் -சிந்தைகவர்**
**மூன்றுகுற்றம் மூன்றுகுணம் மூன்றுமலம் மூன்றவத்தை**
**என்றுநின்று செய்யும் இருவினைக்கும் தோன்றாத**
**வாயு ஒரு பத்துக்கும் மாறாத வல்வினையே**
**யாய கிளைக்கும் அருநிதிக்கும் – நேயமாம்**
**இச்சை கிரியை இவைதரித்தங்கு எண்ணிலா**
**அச்சம் கொடுமை அவைபூண்டு – கச்சரவன்**
**சீரில்நிலை நில்லாது திண்டாடும் பல்கருவி**
**வாரில்அகப் பட்டு மயங்கினேன்.**

**விளக்கம்**

வயிரம்போல் முதிர்ந்திருக்கின்ற காமத்திற்கும், கோபத்திற்கும் நிறைந்து கிடக்கின்ற மதத்திற்கும், பொறாமைக்கும் ஆட்பட்டேன். ஞானேந்திரியங்கள் ஐந்து, கன்மேந்திரியங்கள் ஐந்து, பூதங்கள் ஐந்து, தன்மாத்திரை ஐந்து ஆகிய இவற்றுக்கு ஆட்பட்டேன். காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்று குற்றங்கள், சாத்துவிதம், ராசதம், தாமதம் ஆகிய மூன்று குணங்கள், ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்கள், கேவலம், சகலம், சுத்தம் ஆகிய மூன்று நிலைகள், இருவினைகள், பிராணன் முதலாகச் சொல்லப்படுகின்ற காற்றுக்கள் பத்து ஆகியவற்றுக்கு ஆட்பட்டேன்.

என்னுடைய வினைகளுக்குக் காரணமாக விளங்குகின்ற உறவுகளுக்கும், பொருளாசைக்கும் ஆட்பட்டேன். இத்தகைய ஆட்பட்டவைகளால் ஆசைக்கும்

செயல்களுக்கும் உரியவனாகி, அச்சத்திற்கும், கொடுமைக்கும் இடங்கொடுத்து, பாம்பினைக் கச்சாக அணிந்த இறைவளின் பெருமையை எண்ணாது கடல்போன்ற துன்பத்திற்கு ஆட்பட்டு மயங்கினேன்.

**4. நெஞ்சோடு உரையாடல்**

**-தேருங்கால்**

**உன்னை ஒழிய உறவில்லை என்னுமது**
**தன்னை அறிவைத் தனியறிவை - முன்னந்**
**தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி**
**மலைபட்டார் மற்றையவர் என்று - நிலைத்தமிழின்**
**தெய்வப் புலமைத் திருவள் ளுவர்உரைத்த**
**மெய்வைத்த சொல்லை விரும்பாமல் - ஐவருக்கும்**
**ஆவதுவே செய்தங்கு அவர்வழியைத் தப்பாமல்**
**பாவமெனும் பௌவப் பரப்பழுந்தி – பூவையர்தம்**
**கண்வலையில் பட்டு கலவிக் கலைபயின்றங்கு**
**உண்மை நிலையுணர்ச்சி ஓராமல் - திண்மையினால்**
**நாவில் கொடுமை பலபிதற்றி நாடோறும்**
**சாவில் பிறப்பில் தலைப்பட்டிங் - காவிநிலை**
**நிற்கும்வகை பாராய் நிலையான நெஞ்சமே**
**பொற்பினுடன் யானே புகலக்கேள்.**

**விளக்கம்**

(நெஞ்சமே) ஆராய்ந்து பார்த்தால் என்னுடைய துன்பத்தை நீக்குவதற்கு உன்னைத் தவிர வேறு உறவில்லை என்பதை நீ நன்கு அறிவாய். ஏனென்றால் என்னுடன் பிரியாது இருப்பதால் நீ அறிவாய். தலைப்பட்டார், தீரத்துறந்தார் மயங்கி வலைப்பட்டார் மற்றையவர் என்று கூறுகின்ற நிலைத்த தமிழ்நூலாம் திருக்குறளைத் தந்த திருவள்ளுவர் உரைத்த உண்மைச் சொல்லைக் கைக்கொள்ளாமல் ஐம்பொறிகளின் வழியே சென்று, அவைதரும் இன்பத்தில் மயங்கி, அதனால் பாவமாகிய கடலில் உயிர் (நான்) மூழ்குகிறது.

மேலும் பெண்களின் கண்வலையில் பட்டு அவரோடு புணர்ந்தது. அதனால் மெய்யுணர்தலைச் செய்யாது, நாவினால் கொடுமை பல பேசி, ஒவ்வொரு நாளும் செய்கின்ற வினைகளால் இறப்பு, பிறப்புக்களை ஏற்று உயிர் அல்லற்படுகிறது.

இதனை நெஞ்சமே நீ அறிவாயாக. துன்பக் கடலிலிருந்து மீண்டு உய்வினை அடைவதற்குரிய வழியைக் கூறுவேன், கேட்பாயாக.

**5. இறைவனின் மேலோங்கியநிலை**

- வெற்பின்மிசை

**30. வந்திருக்க வல்லான் மதியாதார் வல்லரணம்**
**செந்தழலில் மூழ்கச் சிரித்தபிரான் - அந்தமிலா**
**வேத முடிவில் விளைவில் விளைவிலொழி**
**ஆதி அமலன் நிமலனருள் - போத**
**அறிவில் அறிவை அறியும் அவர்கள்**
**குறியுள் புகுதுங் குணவன் - நெறிகொள்**
**வெளியில் வெளியில் வெளியன் வெளியில்**
**ஒளியில் ஒளியில் ஒளியன் - ஒளியில்**
**அளியில் அளியில் அளியன் அளியில்**
**அளவில் அளவில் அளவன் - அளவிறந்து**
**35 .நின்றான் அனைத்தும் நிறைந்தான் நினைப்பவர்பால்**
**சென்றான் தெரியத் தெரியாதான் - குன்றா**
**விளக்காய் நிறைந்த விரிசுடரான் விண்மேல்**
**துளக்காமல் நின்பெருஞ் சோதி - உளக்கண்ணுக்**
**கல்லாது தோன்றா அமலன் அகிலமெலாம்**
**நில்லாமல் நின்ற நிலையினான் - சொல்லாரும்**
**ஈசன் பெருமை இருவினையேன் இன்றுனக்குப்**
**பேசும் தகைமையெலாம் பேணிக்கேள்.**

**விளக்கம்**

கயிலை மலையில் எழுந்தருளியுள்ளான், தம்மை மதிக்காத முப்புரத்து அரக்கர்களையும் அவர்தம் கோட்டைகளையும் நெருப்பிலே மூழ்குமாறு சிரித்தவன். முடிவில்லாத வேதங்களுக்கு முடிவாக உள்ளவன். அதில் விளைகின்ற பொருளாக உள்ளவன். பொருள் தருகின்ற பயனாய் உள்ளவன். முன்னைப் பழம் பொருளாய் உள்ளவன், குற்றமற்றவன், வினையிலிருந்து நீங்கியவன், அறிவுக்கு அறிவாய் விளங்குபவன், மெய்யறிவு உடைய அடியார்களின் மனத்தைக் கோயிலாகக் கொண்டவன்,

ஐம்பூதங்களில் ஒன்றாகிய ஆகாய வெளிக்கும் அதன் வெளியாகிய உலக வெளிக்கும் அதற்குக் காரணமாகிய கலை என்ற வெளியில் நிலைத்து நிற்பவன், என்றாலும் அக்கலை தத்துவத்தில் தோயாதவன். இக்கலைத் தத்துவத்திற்கும் மேலாகிய ஒளியாம் அசுத்த மாயை ஒளி, அதற்கு மேலாகிய சுத்தவித்தை ஒளி, அதற்கு மேலாகிய விந்துவாயு ஒளி இவற்றிலிருந்து சகலத்தை உண்டாக் குபவன். அருள் வழங்குகின்ற சதாசிவனுக்குமேலாய் அந்த அருளுக்கு மேலாகிய பராசக்தி அருளாய், அந்த பராசக்திக்குக் காரணமாய், பரமசிவனாய் விளங்குபவன். காண்டல், கருதல்,

உரை என்னும் அளவிற்கு அளவானவன். அறிஞர்கள் அந்த அளவை கொண்டு அறிகின்ற போது அதில் அமிழ்ந்துவிடாது விலகி நிற்கும் பேரறிவாளன்.

அனைத்துப் பொருள்களிலும் நிறைந்தவன். அவனை நினைக்கின்றவர் பால் நிற்கின்றவன், நினையாதார்பால் நில்லாதவன், குன்றிலிருக்கும் விளக்குப்போல நிறைந்த சுடரை உடையவன், விண்மேல் நிற்கின்ற ஞாயிறு, திங்கள்போல் ஒளி நிறைந்தும் ஒரு நேரத்தில் ஒளி குறைந்தும் அல்லாமல் நிற்கின்ற பெருஞ்சோதியானவன், அகக்கண்ணால் காண்பவருக்கு அல்லது தோன்றாதவன், அமலன். உலகம் எல்லாம் நிறைந்திருந்தாலும் அவற்றில் தோயாதவன். இத்தகைய ஈசனின் பெருமையை இருவினையில் துன்பப்படும் நான் கூறுவேன், கேட்பாயாக.

**6. தசாங்கம் - மலை (1)**

- பாசம்

**பலவும் கடந்து பரிந்தருள்சேர் பண்பால்**
**குலவி விளங்குகுணக் குன்றோன்.**

**விளக்கம்**

பாசங்கள் அனைத்தையும் கடந்த உயிர்களிடத்தில் கொண்ட பரிவினால் அருள்மிக்கு அதனால் உயர்ந்த பண்பு...

**7. நதி (2)**

**- இலகவே**

**செய்ய தருமச் செழுங்கிரியின் மீதிழிந்து**
**வையம் பரவ மகிழ்ந்தெழுந்தங் - கையங்**
**களவுபயங் காமங் கொலைகோபங் காதி**
**அளவில்வினை எல்லாம் அழித்திங் – குளமகிழத்**
**தொம்மெனவே எங்கும் முழங்கிச் சுருதிபயில்**
**செம்மைதரும் ஆகமங்கள் சேர்ந்தோடி – மும்மலத்தின்**
**காடடங்க வேர்பறித்துக் கல்விக் கரைகடந்தங்கு**
**ஓடுபல் பூதத் துணர்வழித்து - நீடுபுகழ்**
**மெய்வாய்கண் மூக்குச் செவியென்னப் பேர்பெற்ற**
**ஐவாய வேட்கை அவாஅகற்றி - நையும்இயல்**
**வாக்கு பாதம்பாணி பாயுருபத் தம்பலவும்**
**நீக்கிச் செறிந்து நிறைந்தோடிப் - போக்கரிய**
**பந்தமெனும் சோலை பறித்துப் பரந்தலைக்கும்**
**அந்தமனம் புத்தியுடன் ஆங்காரம் - சிந்திவிழ**
**மோதி அருணீர்மை ஓங்குவிறல் முக்குணமும்**
**காதி உரோமமெலாம் கைகலந்து - சீதப்**

**புளகம் அரும்பப் புலன்மயக்கம் போக்கி**
**விளைவில் புலன்முட்ட மேவிக் - களபதன**
**மாதர் மயக்கம் அறுத்துவளர் மண்டலத்துச்**
**சோதிஒரு மூன்றினையும் சோதித்து - நீதியினால்**
**50. ஆதாரம் ஆறினும்சென்று ஆறிஅடல் வாயுக்கள்**
**மீதான பத்தும் மிகப்பரந்து - காதிப்**
**பிருதுவியப் புத்தேயு வாயு ஆகாய**
**உறுதி நிலமைந்தும் ஓடி மறுவிலா**
**நான்முகன்மால் ஈசன் மகேசன் நலஞ்சிறந்த**
**தான்முகம் ஐந்தாம் சதாசிவமும் - ஆனதொரு**
**விந்துநா தங்கடந்து சுத்த வெறுவெளியில்**
**அந்தமிலாப் பாழடங்கத் தேக்கியபின் – முந்திவரும்**
**அவ்வறிவுக் கப்பாலும் சென்றகண்டம் உள்ளடக்கிச்**
**செவ்வறிவே ஆகித் திகைப்பொலிந்திட்டு -எவ்வறிவும்**
**55 . தானாய வீடளித்துத் தன்னில் பிறிவிலா**
**ஊனாகி எவ்வுயிர்க்கும் உள்புகுந்து - மேனியிலா**
**அஞ்சவத்தை யும்கடந்து ஆயபெரும் பேரொளிக்கே**
**தஞ்சமெனச் சென்று தலைப்பட்டு வஞ்சமறத்**
**தானந்தம் இல்லாத தண்ணளியால் ஓங்கிவரும்**
**ஆனந்தம் என்பதோர் ஆறுடையான்.**

**விளக்கம்**

அறம் என்ற மலையிலிருந்து தோன்றி சமவெளியில் இறங்கி உலகோர் மகிழப் பொங்கிப் பரந்து, தன் வெள்ளப் பெருக்கால் ஐயம், களவு, அச்சம், காமம், கொலை, சினம் ஆகிய எல்லா வற்றையும் அழித்து, வினையாகிய காட்டை வேரறுத்து தொம் என்று முழங்கிச் சுருதியாம் வேதங்களும், செம்மையான ஆகமங்களும் தன்னோடு ஓடிவர, மும்மலமாகிய காட்டை வேரறுக்கும். கல்வியாகிய கரையைக் கடக்கும். மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற பொறிகளின் வழியே செல்லுகின்ற ஆசையை அழிக்கும்.

ஐம்பூதங்களால் வருகின்ற உணர்வினை அழிக்கும். வாக்கு, பாதம், கை, எருவாய், கருவாய் என்ற கன்மேந்திரி யங்களை நீக்கி ஓடி, கட்டுக்கள் என்ற சோலைகளைப் பறித்து, எங்கும் பரந்தோடி மனம், புத்தி, சித்து, அகங்காரம் என்னும் அந்தக்கரணங்கள் நான்கையும் சிந்திடும்படி மோதி, அருள் என்னும் தன்மை நிறைந்து இருக்கும்.

முக்குணங்களின் வயப்படாமல் மயிர்க் கூச்செறிந்து புளகம் அரும்ப ஐம்புலன்களால் ஏற்படும் மயக்கத்தைப் போக்கும். அறிவு நிறைந்திடும்படி ஓடும். மகளிர்மீது உண்டாகும் மயக்கத்தை ஒழிக்கும்.

சந்திரன் சூரியன் நெருப்பு என்னும் மூன்று மண்டலங் களையும் நெறிப்படுத்தும், மூலாதாரம் முதலிய ஆறு ஆதாரங்களிலும்முறையே செல்லும். பத்துவகைக் காற்றுகளுக்கும் மேற்பட்டு ஐம்பூதங்களையும் செம்மை நெறியில் நிறுத்தும்.

நான்முகன் திருமால் ஈசன் மகேசன் சதாசிவன் ஆகியவர்களுக்கு உட்பட்ட பெருவெளியிலே சென்று அதனையும் தன்னுடைய மயமாக்கும். உயிர்களை அறிவோடு கூட்டி அவற்றின் திகைப்பினை ஒழிக்கும் எல்லா அறிவினையும் தனது பேரறிவாய் நிற்குமாறு வீடுபேற்றினை அளிக்கும். உடலோடு இணைந்திருக்கும் உயிரில் தானும் கலந்து அவற்றின் ஐந்தவத்தையும் கடந்து பேரொளிப் பிழம்பில் தலைப்பட்டு வஞ்சமற முடிவில்லாத பேரருளாய்ப் பரவி வருகின்ற மகிழ்ச்சி என்னும் நதியினை

**8. நாடு (3)**

**- ஆனந்தம்**

**பண்ணும் பயன்சுருதி ஆகமங்கள் பார்த்துணர்ந்து**
**நண்ண அரியதொரு நாடுடையான்.**

**விளக்கம்**

அருளாகிய ஆனந்தமடைந்த ஆன்மாக்களுக்கு அந்த அருள் நிலையை அறிவதற்குக் கருவிகளாக விளங்குவன நான்கு வேதங் களும் இருபத்தெட்டு ஆகமங்களும் ஆகும். இவற்றை முழுக்கக் கற்றாலும் அடையமுடியாதது வீடுபேறாகிய பேரின்பம் ஆகும்.

(கற்றவற்றை உணர்ந்து அதன்வழி நடந்தாலே இறைவனுடைய பேரின்பத்தை அடைய முடியும்). எனவே வேதங்களாலும் ஆகமங்களாலும் படித்தால் மட்டும் அறிய முடியாத பேரின்பமாகிய வீடு என்ற நாட்டை உடையவன்.

.

**9. ஊர் (4)**

**- எண்ணெண்**

**கலையால் உணர்ந்து கருத்தழிந்து காம**
**நிலையானது எல்லாமும் நீத்தங் - கலைவறவே**
**தேட்டற்ற சிந்தை சிவஞான மோனத்தால்**
**ஓட்டற்று வீற்றிருக்கும் ஊருடையான்.**

**விளக்கம்**

அறுபத்து நான்கு கலைகளையும் கற்று உணருகின்ற பொழுது அவை ஒன்றுக்கொன்று வேறுபட்டுச் செல்வதால் அவற்றில் மனம் செலுத்தாது நீக்கி, காம வேட்கை போன்ற கலைகளையும் நீக்கி அவற்றால் அலைபாய்கின்ற சிந்தையை அடச்சி, அதனால் ஏற்படுகின்ற சிவஞானத்தில் தோய்ந்து அதிலேயே ஒடுங்கி ஆன்மா நிற்கின்ற நிலையாகிய ஊர் அவனுடைய ஊராகும்.

## 10. மாலை (5)

**-நாட்டத்தால்**

**தெண்ணீர் அருவிவிழ சிந்தைமயக் கம்தெளிந்து**
**உண்ணீர்மை எய்த உரோமலொம் - நண்ணும்**
**புளகம் புனைமெய் யர்பொய் யில்கூடாமல்**
**உளகம்பங் கொண்டுள் உருகி - அளவிலா**
**மாலா யிருக்கு மவர்மனத்தை வாங்கஅருள்**
**மேலாய் விளங்குஅலங்கல் மெய்யினான்.**

**விளக்கம்**

கண்களில் இருந்து கண்ணீரானது அருவிபோல் கொட்டத் திருவருள் இன்பத்தில் திளைத்தால் - உள்ளத்துள்ளே இன்பம் எய்தி மயிர்க்கால்கள் எல்லாம் சிலிர்த்திட புளகம் எய்திடும். இத்தகைய நிலை பெற்ற மெய்யடியார்கள் பொய்யினைத் தவிர்த்து மெய்ப் பொருளையே பற்றுவர். அத்தகையோர் விதிர்விதிர்த்து உள்உருகி இறைவனிடத்தில் அளவற்ற அன்பினை உடையவர்கள் ஆவர். அத்தகைய அடியார்களின் மனத்தைத் தன்னிடத்தில் ஈர்க்கின்ற பேரருளாகிய மாலையை உடையவன் இறைவன்.

## 11. குதிரை (5)

- தோலாத

**வானம் புவனம் மலைகடல்ஏழ் பாதாளம்**
**ஊன்ஐந்து பூதத் துயிருணர்ச்சி - ஞானமாய்**
**எல்லாமாய் அல்லவாய் எண்ணுவார் எண்ணத்து**
**நில்லாமல் நிற்கும்நீள் வாசியான்.**

**விளக்கம்**

இருளால் தோற்கப்படாத ஒளி நிறைந்த வானம், புவனங்கள், மலைகள், ஏழ்கடல்கள், பாதாள உலகங்கள், உடல்கள், ஐம்பூதங்கள், உயிர்களின் உணர்ச்சி ஆகிய இவை எல்லாவற்றிலும் நிறைந்து நிற்கின்றவனாயும், அவற்றின்

வேறானவனாயும் விளங்கி, தன்முனைப்பாகிய எண்ணத்தை உடையவர்களின் எண்ணத்தில் அகப்படாதவனாயும் நிற்கின்ற நிலையினையே தன்னுடைய குதிரையாகக் கொண்டவன் இறைவன்.

**12. யானை (7)**

**- சொல்ஆறும்**

**பாதாளம் ஊடுருவிப் பாரேழும் விண்ணேழும்**
**ஆதார மாகி அகண்டம்நிறைந்து - ஓத**
**அரிதாய் எளிதாய் அருமறையா றங்கத்**
**துருவாய் உயிராய் உணர்வாய் பெரிதாய**
**வெய்யதுயர்ப் பாசமற வீசியே வெம்பிறவித்**
**துய்ய கடலைத் துகளெழுப்பி - ஐயமுறும்**
**காமக் குரோதலோப மோகமதங் காய்ந்தடர்த்துச்**
**சாமத் தொழிலின் தலைமிதித்து - நாமத்தால்**
**கத்தும் சமயக் கணக்கின்விறல் கட்டறுத்துத்**
**தத்தம் பயம்கொலைகள் ஆங்கழித்தே - தத்திவரும்**
**பாசக் குழாத்தைப் படஅடித்துப் பாவையர்தம்**
**ஆசைக் கருத்தை அறவீசி நேசத்தால்**
**ஆனவே கங்கொண் டருள்மும் மதத்தினால்**
**ஊனையார் தத்தவங்கள் உள்புகுந்து - தேனைப்**
**பருகிக் களித்துயர்ந்து பன்மறைநாற் கோட்டால்**
**மருவித் திகழ்ஞான ஆளையான்.**

**விளக்கம்**

சொல்லப்படுகின்ற பாதாளம், ஏழுலகம். ஏழு விண்ணுலகம் அனைத்திற்கும் ஆதாரமாகி எல்லாவற்றிலும் நிறைந்தும், ஓதுவதற்கு அரிதாகவும் அன்புடையவர்க்கு எளிதாகவும், வேதங்கள் அவற்றின் ஆறு அங்கங்கள் ஆகியவற்றைத் தனக்கு வடிவாகவும், உயிர்களாகவும் அவற்றின் உணர்வுகளாகவும், வெம்மையான துயரைத் தருகின்ற பெரிதாகிய பாசங்களை வேரோடு அறுத்தும், கொடிய பிறவியாம் துன்பக்கடலைப் புழுதி கிளம்புமாறு செய்தும், காமம், வெறுப்பு, பொருள்ஆசை, செருக்கு ஆகியவற்றை அழித்தும், இறப்பு என்ற தொழிலின் தலையை மிதித்தும் பல பெயர்களால் தோன்றியுள்ள பிற சமயங்களின் கொள்கைகளை கட்டறுத்து, உடன்வரும் பாசக்கூட்டமாகிய உறவுகளை அடியோடு அழித்தும், பெண்களின் மீதுள்ள காம ஆசையை முழுமையாக வீசி எறிந்தும், அன்பினால் விரைந்து வந்து

அருள் தருகின்ற முத்தேவியரின் கருணையறி உயிர்களின் தத்துவங்களில் புகுந்து, அதில் தெளிவாகிய தேவைப் பருகி மகிழ்ந்து, நான்மறைகளைக் கொம்புகளாகக் கொண்டு மேற்குறித்த செயல்களை எல்லாம் செய்கின்ற ஞானத்தைய யானையாகக் கொண்டவன் இறைவன்.

**13. கொடி (8)**

**- இருமுச்**

**சமையம் கடந்து தனக்கொப் பிலாது**
**சுமைதுன்ப நீக்கும் துவசம்.**

**விளக்கம்**

அகச்சமயங்களாகிய ஆறினையும் கடந்து, தனக்க ஒப்பில்லாத தன்மை கொண்டு, உயிர்களுக்கு ஏற்படுகின்ற துன்ப சுமைகளை நீக்குவதான, விடைக் கொடியை உடையவன் இறைவன்.

**14.முரசு (9)**

**- கமைஒன்றித்**

**75. தம்மை மறந்து தழலொளியுள் ளேயிருத்தி**
**இம்மை மறுமை இரண்டகற்றிச் - செம்மையே**
**வாயுவை ஓடா வகைநிறுத்தி வானத்து**
**வாயுவையும் அங்கே யுறஅமைத்துத் - தேயுவால்**
**என்றும் ஒருதகைமை யாயிருக்கும்**
**இன்பருளே நின்று முழங்கும் நெடுமுரசோன்.**

**விளக்கம்**

ஐம்புலன்களை அடக்கி அதன்வழிச் செல்லுகின்ற உணர்வு களையும் அடக்கித் தம்மையே மறந்து மூலாதாரத்து மூண்டெழும் சுனலைத் தம்முள் இருத்தி, அதன் பயனாக இம்மை, மறுமைத் துன்பங்கள் இரண்டையும் அகற்றி, வாயுக்களை அதன்வழியே ஓடாவண்ணம் நிறுத்தி, சந்திர மண்டலத்து வாயுவாகிய அமிர்தத்தை உள்ளே அமைத்து, அந்த யோக நிலையால் ஒன்றித்த ஒரு தன்மையராய் இருக்கும் அடியார்களின் உள்ளத்தில் முழங்குகின்ற பேரொலியைக் கொண்ட முரசை உடையவன் இறைவன்.

**15. ஆணை (10)**

- அன்றியும்

**மாலும் அயனும் வகுத்தளித்த வையமெலாம்**
**சாலுமதற் கப்பாலும் எப்பாலும் - மேலை**

**உலகும் உலகால் உணரஒண்ணா ஊரும்**
**இலகி நடக்கும்எழில் ஆணையான்.**

**விளக்கம்**

மேலும் திருமாலும் நான்முகனும் வகுத்தளித்த உலகங்கள் எல்லாவற்றிலும் அதற்கு அப்பாலும், எல்லாவிடத்தும், மேலை உலகத்திலும், உலகத்தாரால் உணரமுடியாத அருள்வெளியாகிய ஊரிலும், தடையின்றிச் செயல்படும் ஆணையை உடையவன் இறைவன்.

## 16. முதல்வனின் பெருமை

**- அளவிறந்த**

**80.** **காட்சியான காட்சிக்கும் காணான் கலைஞான**
**ஆட்சியான் ஆட்சிக்கும் ஆயினான் - சூட்சியான்**
**பாரும் திசையும் படரொளியால் நிறைந்தான்**
**தூரும் தலையுமிலாத் தோன்றலான் - வேறாகி**
**வித்தாகி வித்தின் விளைவாகி மேவுதனுச்**
**சத்தாதி பூதங்கள் தானாகி - சுத்த**
**வெறுவெளியாய்ப் பாழாய் வெறும்பாழுக் கப்பால்**
**உறுபொருளாய் நின்ற ஒருவன்.**

**விளக்கம்**

அளவில்லாத உயிர்களுக்கு அவற்றின் விருப்பத்திற்கு ஏற்பக் காட்சி தருபவன், அதே நேரத்தில் தன் முனைப்புடையோருக்குக் காண்பதற்கு அரியவன். கலைஞானங்களை ஆட்சிக்கு உட்படுத்து கின்றவன். கலைஞானங்களைப் பெறுகின்ற உயிர்களை ஆளுகின் றவன். ஆனால், அதில் தோயாதவன், உலகமும் திசைகளும் தன்னுடைய பேரொளியாலே நிறையும்படி செய்பவன், அடியும் முடியும் இல்லாதவன், அனைத்திற்கும் வேராக உள்ளவன். வித்தாக உள்ளவன், வித்தின் பயனாகவும் உள்ளவன், ஓசை முதலிய வற்றையும், ஐம்பூதங்களையும் தானாகிக் காட்டுபவன், சுத்தம் என்ற அபர விந்துவையும், வெறு வெளியாகிய அபர நாதத்தையும், பாழாகி பரவிந்துவையும், வெறும் பாழாகிய பரநாதத்தையும் சுடந் தவன், ஆன்மாக்கள் பெறுகின்ற உண்மைப் பொருளாய் உள்ளவன். இத்தகைய பெருமைகளை உடையவன்தான் மூலமுதல்வன்.

முனைவர் பழ. முத்தப்பன்.

### 17. ஞானாசிரியர்

**- பொறியிலியேன்**

**வெம்பும் பிறவியலை வீழாமல் வீடளித்த**
**சம்பந்த மாமுனியென் தம்பிரான் - அம்புவியோர்**
**85. போற்றும் திருவடியென் புன்தலைமேல் பொறித்தோன்**
**ஏற்றின் புறத்தமைந்த எங்கோமான் - சாற்றுவார்**
**சாற்றும் பொருளான் தனிமுதல்வன் தானல்லான்**
**வேற்றின்பம் இல்லா விளங்கொளியான் - போற்றும்**
**குருவேட மாகிக் குணங்குறிஒன்று இல்லாப்**
**பெருவேட மாய்நிறைந்த பெம்மான் - கருவேடங்**
**கட்டும்உருக் கட்டறுத்தான் கற்றவர்வாழ் தில்லையான்**
**எட்டுமவர்க் கெட்டா இயல்பினான் - மட்டவிழ்தார்**
**வானோன் பவனி வரக்கண்டு வல்வினையேன்**
**ஏனோரும் ஏத்துதல்கண்டு ஏத்தினேன்.**

**விளக்கம்**

ஐம்புலன்களுக்கு உரிய நல்லூழ் இல்லாத நான் கொடிய பிறவிக்கடலில் வீழாமல் எனக்கு வீடு பேறு அளித்தவர் சம்பந்த மாமுனிவராகிய தலைவர் ஆவார். உலகோர் போற்றுகின்ற திருவடியை என்னுடைய தலைமேல் வைத்து அருளியவர்.

அறவடிவத்தை உடைய விடையாகிய ஏற்றில் வீற்றிருக்கும் எம் தலைவர். போற்றுகின்ற புகழ்மொழிக்குப் பொருளாய் நிற்பவர். அனைத்திற்கும் முதல்வராய் உள்ளவர். தானாகிய இன்பமல்லாது உயிர்களுக்கு வேற்றின்பத்தைத் தாராதவர். போற்றுகின்ற குருவாகி மனித வேடங் கொண்டவர். ஆனால், வேடம் கொண்ட மானிடவடிவத்திற்குரிய குணம், குறி ஒன்றும் இல்லாதவர்.

பேரருள் வடிவமாக நின்றவர். கருவறையில் உருப்பெற்று உயிர்கள் பெறும் பிறவிக்கட்டினை அறுத்தவர். உண்மை நூல்களைக் கற்றவர் வாழும் தில்லைப் பதியை உடையவர். தன்முனைப்புடன் அவரை எட்டிப் பிடிப்போம் என்பவருக்கு எட்டாதவர். கொன்றைமாலை அணிந்த அப்பேரருளாளர் உலா வருதல் கண்டு பிறரும் வழிபட நானும் வழிபட்டு ஏத்தினேன்.

### 18. உபதேசத் திருவருள்

**- தான்என்னை**

**90. பார்த்தான் பழையவினைப் பஞ்சமலக் கொத்தையெல்லாம்**
**நீத்தான் நினைவுவே றாக்கினான் - ஏத்தரிய**
**தொண்ணூற்று அறுவர்பயில் தொக்கிற் றுவக்கறுத்தான்**
**கண்ணூறு தேனமுதம் காட்டினாள் - வெண்ணீறும்**
**வேடமும் பூசையுமே மெய்யென்றான் பொய்யென்றான்**

**மாடையும் வாழ்க்கை மனையுமே - நாடறிய**
**அஞ்செழுத்தின் உள்ளீடு அறிவித்தான் அஞ்செழுத்தை**
**நெஞ்சழுத்தி நேய மயலாக்கி - அஞ்செழுத்தை**
**உச்சரிக்கும் கேண்மை உணர்த்திஅதன் உச்சரிப்பு**
**வைச்சிருக்கும் அந்த வழியாக்கி - அச்சமறச்**
**95. சென்று விளக்கை எழத்தூண்டிச் செஞ்சுடரின்**
**ஒன்றி ஒருவிளக்கின் உள்ளொளியாய் - நின்ற**
**பெருவிளக்கின் பேரொளியாய் உள்ளே பிரசம்**
**மருவும் மலர்போல் மதித்த - கருவில்உருக்**
**கொள்ளா அருளைக் கொழுத்தி குணங்குறிஒன்று**
**இல்லா இடத்தே இளைப்பாற்றி விள்ளாத**
**உள்ளம் முதலாக உள்ளதெலாம் வாங்கஅருள்**
**வெள்ள மயலழித்து மேவினான் - கள்ளம்**
**மறப்பித்தான் மெய்ஞ்ஞானம் ஆக்கிமனம் எல்லாம்**
**இறப்பித்தான் என்பிறவி ஈர்த்தான்.**

**விளக்கம்**

(பவனி வந்தவன்) என்னைத் திருஞானப் பார்வையால் பார்த்தான். என் பழவினைகளாகிய ஆணவம், திரோதம், மாயை, கன்மம், மகாமாயை என்னும் ஐந்து மலக்கூட்டங்கள் ஞானத்தீயினால் எரித்துப் பாழ்படுத்தினான். என்னுடைய பழைய நினைவுகளை எல்லாம் வேறாக்கினான்.

தத்துவக் குப்பைகளாகிய தொண்ணூற்றாறுக்கும் இடமாகிய உடலின் மீது உள்ள தொடர்பினை அறுத்தான். திருக்கண் நோக்கிலே ஓடுகின்ற தேனமுதமாம் பேரின்ப வெள்ளத்தை என்னுள் ஒழுகுமாறு காட்டினான். (அதாவது அவனுடைய திருவடியைக் காட்டினாள்) திருவெண்ணீறும் அடியார்களின் திருவேடமும் சிவபூசையுமே மெய் என்று உணர்த்தினான்.

செல்வங்களும் உலசு வாழ்க்கையும் பொய் என்று உணர்த்தினான். நாடுதற்கு அரிய திருவைந் தெழுத்தின் உட்பொருளை எனக்கு அறிவித்தான். ஐந்தெழுத்தை நெஞ்சத்தில் அழுத்தி அன்பால் அதனை உச்சரிக்கும் முறை களையும் உணர்த்தினான். அதன் விளைவுகளையும் அதனால் அச்சத்தை நீக்குகின்ற உள்ளொளியைப் பெருக்கி, அதில் ஒன்றியிருக்கும் வகைமையையும் அருள் செய்தான்.

பெரு விளக்கின் பேரொளியாய் என்னுள்ளே நின்று தேன் பொருந்திய மலர்போல் என்னை ஆச்சி நான் மீண்டும் பிறவியாகிய உருவினைக் கொள்ளாத வண்ணம் திருவருளை எனக்கு வழங்கினான். குணமும் குறியும் அற்ற இடத்திலே இளைப்பாறச்செய்தான். சொல்லால் கூற முடியாதபடி அருளைத் தந்து உயிர் உடல் அனைத்தையும் அவ்வருள் வெள்ளத்தில் அழுந்தும்படி செய்தான். உள்ளத்தில் உள்ள

கள்ளத்தை எல்லாம் மறப்பித்து மெய்ஞ்ஞானத்தில் அழுந்தச் செய்தான். மனம் முதலிய அந்தக் கரணங்களை எல்லாம் அழித்தான். என் பிறவியை அறுத்தான்.

### 19. இறைவனின் அருட்செயல்

**- விறற்சொல்லுக்கு**

**100. எட்டானை யார்க்கும் எழுதா இயற்குணங்கள்**
**எட்டானை ஆற்றா எழுத்தினான் - மட்டாரும்**
**பாடலார் ஆடலார் பண்பலார் நண்பலார்**
**ஆடலார் ஆடல அகன்பதியாம் கூடலார்**
**காணக் கிடையாதான் காண்பார்க்குக் காட்சியான்**
**பாணார்க்கு இலகு பலகையிட்டான் - சேணில்**
**சிறந்த உருவான் திருமாலுக்கு எட்டான்**
**நிறைந்த திருவுருவில் நிற்போன் - கறங்குடனே**
**சூறைசுழல் வண்டு சுழல்கொள்ளி வட்டமெனு**
**மாறு கருணையினால் மாற்றினான் - நீறணிந்த**
**105. மெய்யன் நிமலன் அமலன்அருள் வீடளிக்கும்**
**ஐயன் அறிவுக்குஅறி வாயினான் – பொய்யர்பால்**
**பொய்ம்மையாய் நின்றான் புரிந்தவர்தம் நெஞ்சத்து**
**மெய்ம்மையாய் நின்று விளங்கினான்.**

**விளக்கம்**

வேதச் சொல்லுக்கும் எட்டாதவன். இந்நிறத்தவன் இவ்வுருவத்தவன் என்று எழுதுவதற்கு அரியவன், எண் குணங்களை உடையவன், உணர்தற்கு அரிய பிரணவ எழுத்தாக ஓங்காரமாய் நிற்பவன். பாடும் இசைவாணர், ஆடும் கலைவாணர், பண்பற்றவரிடம் நட்புக் கொள்ளாத அறிஞர்கள் வாழுகின்ற மதுரையம்பதியில் ஆடுகின்றான்.

ஊனக்கண்ணால் காண முடியாதவன், ஞானக் கண்ணினால் கான்பவர்க்குக் காட்சி கொடுப்பவன், பாணபத்திரருக்கு பொற்பலகை கொடுத்து அவரின் இசையைச் செவிமடுத்தவன், சேய்மையில் தோன்றும் அந்தி நிறச் சிவந்த மேனி உடையவன். திருமாலுக்கும் உயர்ந்தவன். என்றாலும் எல்லாப் பொருளிலும் நிறைந்தவன். சூரைக்காற்று, மலரைச் சுற்றும் வண்டு, சுழலுகின்ற கொள்ளி ஆகியவை போன்று சுழன்று சுழன்று அதாவது மாறி மாறிப் பிறக்கின்ற என் பிறவித் துன்பத்தைத் தன்னுடைய பேரருளால் மாற்றியவன்.

திருநீறு அணிந்த திரு மேனியை உடையவன், இயல்பாகவே மலமற்றவன். தூய வடிவினன், வீட்டுப்பேறு அளிக்கும் தலைவன், அறிவுக்கு அறிவாய்

விளங்குபவன், பொய்யர்க்குப் பொய்மையாய் நிற்பவன், அன்பு அடியார்களின் நெஞ்சத்தில் உண்மைப் பொருளாய் விளங்குபவன் இறைவன்.

**20. இறைவனைக் காணுவதற்குரிய இடங்கள்**

**- கைமழுவன்**

**அத்தன்பால் நீசென்று அடையும் இடத்தையெலாம்**
**சித்தஞ்சேர் நெஞ்சமே செப்பக்கேள் - நித்தலுமே**
**பூசிமுடித்து உண்டுடுத்துப் பூங்குழலார் தங்கலவி**
ஆசைதனில் பட்டின்ப ஆர்கலிக்குள் - நேசமுற
நின்று திளைக்கும் இதுமுத்தி அல்லதுவேறு
ஒன்று திளைக்கும் அதுமுத்தி - அன்றென்று
**இலகா இருளலகை போல்இகலே பேசும்**
**உலகா யதன்பால் உறாதே - பலகாலும்**
**தாம்பிரமன் கண்டவர்போல் தம்மைக்கண்டு ஆங்கதுவே**
**நான்பிரமம் என்பவர்பால் நண்ணாதே – ஊன்தனக்குக்**
**கொன்றிடுவது எல்லாம் கொலையல்ல என்றுகுறித்து**
**என்றும்அற மேதெய்வம் என்றென்று – வென்றிப்**
**பொறையே எனும்புத்தன் பொல்லாத புன்சொல்**
**மிறையே விரும்பி விழாதே – நிறைமேவி**
**வாழ்பவர்போல் மன்னுடம்பில் மன்னும் உரோமம்பறித்துத்**
**தாழ்வுநினை யாதுதுகில் தானகற்றி – ஆழ்விக்கும்**

**அஞ்சும் அகற்றும் அதுமுத்தி என்றுரைக்கும்**
**வஞ்சமணன் பாழி மருவாதே - செஞ்சொல்புனை**
**ஆதிமறை ஓதி அதன்பயன்ஒன் றும் அறியா**
**வேதியர்சொல் மெய்யென்று மேவாதே – ஆதியின்மேல்**
**உற்றதிரு நீறும் சிவாலயமும் உள்ளத்துச்**
**செற்ற புலையர்பால் செல்லாதே - நற்றவஞ்சேர்**
**வேடமுடன் பூசையருள் மெய்ஞ்ஞானம் இல்லாத**
**மூடருடன் கூடி முயங்காதே -நீட**
**அழித்துப் பிறப்பது அறியாது அரனைப்**
**பழித்துத் திரிபவரைப் பாராதே.**

**விளக்கம்**

நாள்தோறும் பூமுடித்து அலங்காரம் செய்து கொண்டு உணவினை உண்டு, பட்டாடை உடுத்தி அழகுற விளங்குகின்ற கூந்தலை உடைய மகளிரிடம் பெறுகின்ற இன்பத்தையே ஆசைப்பட்டு, அவரிடம் பெறுகின்ற சிற்றின்பத்தையே முத்தி என்றும்,

அது அல்லாது இறைவனின் அருள்பெற்று அவருடைய பேரருள் வெள்ளத்தில் திளைப்பதுதான் முத்தி என்பது இல்லை என்றும் பிதற்றிக் கொண்டு திரிகின்ற ஆணவமாகிய இருளிலே திரிகின்ற பேயைப் போல அலைகின்ற உலகாயதர் என்னும் மதத்தார் பால் சென்று விடாதே.

பிரமப் பொருளைக் கண்டவர் போல் பேசிக்கொண்டும், தாங்களே பிரமம் என்று பேசிக் கொண்டும் திரிகின்ற அகப்பிரமவாதிகளிடம் சேராதே.உயிர்களைக் கொன்றால் பாவம், தின்றால்பாவமில்லை என்று விவாதம் செய்து அறந்தான் தெய்வமாகும் என்று வாதிக்கும், பொறுமையே வெல்லும் என்று பேசியும். நெறியில்லாது நெறி பேசுகின்ற பௌத்தர்கள் கூறுகின்ற கொள்கையிற் சேர்ந்து அலையாதே.

உயர்ந்த வாழ்க்கையைப் பெற்றிருக்கிறோம் என்று கருதி, மனித வாழ்க்கையில் உடம்பிலுள்ள உரோமங்களைப் பறித்தும், தாழ்வாகும் என்று நினையாது ஆடையின்றியும், துன்பத்தைத் தருகின்ற ஐந்து கந்தங்களை அகற்றி வாழ்வதே முத்தி என்று கூறுகின்ற சமணர்களின் இருப்பிடங்களில் சேராதே. வேதங்களை நாள்தோறும் ஓதினாலும் அவ்வேதங்களின் பயன் சிவபரம் பொருளே என்பதை அறியாத சை.சி.சா – 68 வேதியர்கள் கூறுகின்ற சொல்லை உண்மை என்று நம்பி ஏமாறாதே.

சிவபெருமானின் திருமேனியில் உள்ள திருநீறும், அவன் எழுந்தருளியுள்ள சிவாலயமும் நெஞ்சாற நினைந்து வழிபடாத இழிந்தவரிடம் சேராதே.

தவமுடைய சிவனடியார் திருவேடமும் சிவபூசையும் அருளுடைமையும், மெய்ஞ்ஞானமும் உணராத அறிவற்றவர்பால் கூடிடாதே. இறந்து பிறப்பது அறியாது பிற சிறு தெய்வங்களை வணங்கிச் சிவபெருமானைப் பழித்துத் திரிகின்றவர்களைக் கண்ணெடுத்தும் பாராதே நெஞ்சே.

**21. தூதுரை**

**- விழித்தருளை**

**120. தந்தெம்மை ஆண்டருளும் சம்பந்த மாமுனிவன்**
**அந்தங் கடந்தப்பா லாய்நின்றான் - எந்தைபிரான்**
**வீற்றிருக்கும் ஓலக்கம் எய்திஅடி வீழ்ந்திறைஞ்சிப்**
**போற்றி சயசய போற்றியென ஆர்த்தகரி**
**அன்றுரித்தாய் நின்பவனி ஆதரித்தார் எல்லாரும்**
**வென்றிமதன் அம்புபட வீழ்வரோ - நின்றிடத்து**
**நில்லாத செல்வம் நிலையென்று உனைநீங்கிப்**
**பொல்லா நரகில் புகுவரோ - பல்லோரும்**
**கத்தும் சமயக் கணக்கில் படுவரோ**

**சித்தம் பலகால் திகைப்பரோ – முத்தம்**

**125. பொருத நகைமடவார் புன்கலவி இன்பம்**

**விளக்கம்**

நயன தீட்சை தந்து எமை ஆண்டருளிய சம்பந்த மாமுனிவள் அந்தங்கடந்து, எல்லாவற்றிற்கும் அப்பாலாய் நிற்பவர் ஆவார். அவர் வீற்றிருக்கும் கொலு மண்டபத்தைச் சென்றடைந்து அவரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி சயசய போற்றி எனக் கூறுவாயாக. மேலும் முழங்குகின்ற யானையின் தோலை உரித்துப் போர்த் தியவரே. உன்னுடைய திருவுலாவைக் கண்டவர்கள்...

மன்மதனின் அம்புபட்டு வீழ்வார்களோ, நிலையற்ற பொருளைச் செல்வம் என்று கருதி உன்னைவிட்டு நீங்கிக் கொடு நரகத்திற்குச் செல்வார்களோ, பல்வகையாக வாதிக்கின்ற புறச்சமயக் கணக்கரின் கூட்டத்தில் சேர்வரோ, சித்தம் கலங்கித் திகைப்பரோ, அழகிய பற்களை உடைய பெண்களின் இன்பத்தில் ஆசைப்பட்டு மயங்குவரோ, பகல் இரவாம் இருபொழுதும் இருபத்தேழு நட்சத் திரங்களும், ஒன்பது கோள்களும் தம்மை வருத்துமோ என்று அஞ்சுவரோ (மாட்டார்கள்). என்று கூறுவாய்.

மேலும் மன்மதனை எரித்த கண்களை உடையவனே. உன்னைக் கண்டது முதல் உன்னுடைய பேரின்பமே வாழ்க்கை யாகும் என்று தன்னை மறந்த எம்முடைய தலைவியின் வருத்த மெல்லாம் தீர்ப்பாயாக என்று அவனுடைய செந்தாமரைத் தாள்களைப் பலகாலும் வணங்கிக் கூறுவாயாக. மேலும், அவனுடைய அழகிய கொன்றைமாலையை வாங்கி நெஞ்சமே மீண்டும் என்னிடத்தில் வருவாயாக.

## அலகு- 5

## நாலாயிர திவ்யப் பிரபந்தம்

## ஆண்டாள் அருளிச்செய்த திருப்பாவை

1. மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்;
நீராடப் போதுவீர் போதுமினோ, நேரிழையீர்!
சீர் மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
கூர் வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏர் ஆர்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார் மேனிச் செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான்
நாராயணனே நமக்கே பறை தருவான்;
பாரோர் புகழப் படிந்து - ஏலோர் எம்பாவாய்.

**விளக்கம்**

செல்வம் நிறைந்த ஆய்ப்பாடியில் கைங்கர்யத்திரு உடைய சிறுமிகளே! அழகிய அணிகலன்கள் அணிந்தவர்களே! மார்கழி மாத முழு நிலாநாளில் கண்ணன் குணத்தில் நீராட வாருங்கள். கூர்மையான வேல் தாங்கிக் காவலாகிய கொடுந்தொழில் புரியும் நந்தகோபனுக்கு அடங்கிய குமரனான கண்ணன், கண்ணழகுடைய யசோதைக்குச் சிங்கக்குட்டி ஆவான். மேக நிற உடலும் சூரிய சந்திரர் போன்ற கண்களும் உடைய ஸ்ரீமந் நாராயணனான இவனே, நமக்குப் பறை தருவான். உலகோர்கள் கொண்டாட நோன்பு நோற்க வாருங்கள்.

2. வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ: பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடி பாடி,
நெய் உண்ணோம், பால் உண்ணோம், நாட்காலே நீராடி
மையிட்டு எழுதோம், மலர் இட்டு நாம் முடியோம்,
செய்யாதன செய்யோம், தீக்குறளை சென்று ஓதோம்,
ஐயமும் பிச்சையும் ஆம்தனையும் கைகாட்டி
உய்யுமாறு எண்ணி உகந்து - ஏலோர் எம்பாவாய்.

**விளக்கம்**

பூமியில் வாழப்பிறந்தவர்களே! உய்வடையும் வழியை உணர்ந்து நாம், நம் நோன்புக்குச் செய்ய வேண்டியவற்றைக் கேளுங்கள். பாற் கடலில் மெதுவாக யோக நித்திரை செய்யும் பரமனின் திருவடிகளைப் பாடித் தானத்தையும் பிச்சையையும் முடிந்த வரை கொடுத்து மகிழ்வோம். விடியற்காலையில் நீராடுவோம்.

நோன்பாகையால் நெய் உண்ணோம்; பால் குடியோம்; கண்ணில் மை இடோம்; பூ வைத்துக் கொள்ளோம். மேலைப் பெரியோர்கள் செய்யாதவற்றைச் செய்யோம். கொடிய கோள் சொல்லை எம் பெருமானிடம் கூறோம்.

3. ஓங்கி உலகு அளந்த உத்தமன் பேர் பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீர் ஆடினால்,
தீங்கு இன்றி நாடு எல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெருஞ் செந்நெலூடு கயல் உகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கு இருந்து சீர்த்த முலை பற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்;
நீங்காத செல்வம் நிறைந்து - ஏலோர் எம்பாவாய்.

**விளக்கம்**

ஓங்கி வளர்ந்து மூவுலகுகளை அளந்த உத்தமனான திரிவிக்கிரமனின் நாமங்களைப்பாடி நாம், நோன்பிற்கு நீராடினால், நாடெங்கும் தீமை இல்லாமல் மாதம் மூன்று மழை பெய்யும். அதனால் செந்நெல் வளர, நடுவே கயல் மீன்கள் துள்ள, வண்டுகள் நெய்தல் பூவிலே உறங்கும். பருத்தமடுக்களைச் சலியாமல் பிடித்துக்கறக்க, வள்ளல்களான பெரிய பசுக்கள் ஏங்காமல் நின்று பால் சொரிந்து குடங்களை நிரப்பும். இவ்வாறு செல்வம் நீங்காமல் நிலைக்கும்

4. ஆழி மழைக்கண்ணா! ஒன்று நீ கை கரவேல்;
ஆழியுள் புக்கு, முகந்துகொடு, ஆர்த்து ஏறி,
ஊழி முதல்வன் உருவம்போல் மெய் கறுத்து,
பாழியந் தோள் உடைப் பற்பநாபன் கையில்
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய்; நாங்களும்
மார்கழி நீர் ஆட மகிழ்ந்து - ஏலோர் எம்பாவாய்.

**விளக்கம்**

கடல் போன்று கம்பீரமான வருண தேவனே! நீ சிறிதும் ஒளிக்காமல் கடலில் புகுந்து நீரைமொண்டு, இடித்தவாறே வானில் ஏற வேண்டும். கால புருஷனான பகவானின் மேனி போலக் கறுத்து, அழகான தோள்பெற்ற பத்ம நாபன் கைச் சக்கரம் போல் மின்னி, வலம்புரிச் சங்கே போல் முழங்கி, சார்ங்களில் பொழிந்த அம்பு மழை போல்; கால தாமதம் செய்யாமல் உலகோர்கள் வாழப் பெய்ய வேண்டும். நாங்களும் மகிழ்ந்து, மார்கழி நோன்புக்கு நீராடுவோம்.

5. மாயனை மன்னு வடமதுரை மைந்தனைத்
தூய பெருநீர் யமுனைத் துறைவனை,
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கைத்
தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதானைத்
தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது,
வாயினால் பாடி, மனத்தினால் சிந்திக்க,
போய பிழையும் பகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசு ஆகும்; செப்பு - ஏலோர் எம்பாவாய்

**விளக்கம்**

மாயச்செயலுடைய கண்ணன் வடமதுரைத்தலைவன்; தூய யமுனைக்கரையில் ஆயர் குலத்தின் விளக்காகத் தோன்றி யசோதைத் தாயின் வயிறு விளங்கச் செய்தான். இத்தாமோதரனை நாங்கள் பரிசுத்தமுடன் வந்து தூய மலர்களைத் தூவி வணங்கி, வாயாரப் பாடி, மனம் ஆரத் தியானம் செய்வோம். முன் செய்த பாவங்களும் பின் வரும் பாவங்களும் அவன் அருளால் நெருப்பி லிட்ட பஞ்சாகப் பொசுங்கும். ஆகவே அவன் நாமங்களைச் சொல்.

6. புள்ளும் சிலம்பின காண், புள்அரையன் கோயிலில்
வெள்ளை விளி சங்கின் பேர்அரவம் கேட்டிலையோ?
பிள்ளாய்! எழுந்திராய், பேய்முலை நஞ்சு உண்டு
கள்ளச் சகடம் கலக்கு அழியக் கால் ஓச்சி
வெள்ளத்து அரவில் துயில் அமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரி என்ற பேர்அரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்து - ஏலோர் எம்பாவாய்.

**விளக்கம்**

பறவைகள் கூவுகின்றன; பறவை அரசன் கருடனுக்குச் சுவாமி ஆன திருமால் கோவிலில் வெண்சங்கொலி அழைப்பதைக் கேட்க வில்லையா? ஏ! பெண் பிள்ளையே! எழுந்திரு பேய் முலை நஞ்சு உண்ட கண்ணன் வஞ்சகச் சகடத்தின் கட்டுக் குலையும் படி காலால் உதைத்தான். பாற்கடலில் ஆதிசேடன் மீது கண்வளர்ந்த உலக காரணனை முனிவர்களும் யோகிகளும் தியானம் செய்தபடி, மெது வாக 'ஹரி! ஹரி! என்று கூறும் ஒலி நெஞ்சில் புகுந்து குளிர்ந்தது.

7. கீசு கீசு என்று எங்கும் ஆனைச்சாத்தன் கலந்து
பேசின பேச்சு அரவம் கேட்டிலையோ? பேய்ப் பெண்ணே!

காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங் குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசை படுத்த தயிர் அரவம் கேட்டிலையோ?
நாயகப் பெண்பிள்ளாய்! நாராயணன் மூர்த்தி
கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ?
தேசம் உடையாய்! திற - ஏலோர் எம்பாவாய்.

**விளக்கம்**

மதிகெட்ட பெண்ணே! ஆணும் பெண்ணுமான வலியன் பறவைகள் கலந்து பேசும் 'கீசுகீசு' என்னும் ஒலியை எங்கும் நீ கேட்க வில்லையா? மணம் வீசும் கூந்தலுடைய இடைச்சிகள் கழுத்தில் அச்சுத்தாலியும் ஆமைத்தாலியும் கலகல என ஒலிக்கக் கைகளை வீசி மத்தாலே ஓசைப் படுத்திய தயிரோசையைக் கேட்கவில்லையா? பெண்கள் தலைவியே! நாங்கள் கேசவனான நாராயணனைப் பாடவும் கேட்டவாறு படுத்திருக்கலாமா? ஒளியுடையவளே! கதவைத்திற.

8. கீழ்வானம் வெள்ளேன்று, எருமை சிறு வீடு
மேய்வான் பரந்தன காண்; மிக்கு உள்ள பிள்ளைகளும்
போவான் போகின்றாரைப் போகாமல் காத்து உன்னைக்
கூவுவான் வந்து நின்றோம்; கோதுகலம் உடைய
பாவாய்! எழுந்திராய், பாடிப் பறை கொண்டு
மா வாய் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்று நாம் சேவித்தால்,
ஆவா என்று ஆராய்ந்து அருள் - ஏலோர் எம்பாவாய்.

**விளக்கம்**

கண்ணனின் ஆசைப்பெண்ணே! கீழ்வானம் வெளுத்தது; எருமைகள் பனிப்புல் மேய, சிறு வீடு சென்றன. யாத்திரையே நோக்காகப் போகும் பிள்ளைகளைப் போகாமல் தடுத்து உன்னை. அழைக்க வந்து நின்றோம். எழுந்திரு. கண்ணன் குணங்களைப்பாடிப் பறை பெறுவோம். குதிரையாக வந்த கேசியின் வாயைப் பிளந்த தேவாதி தேவன் மல்லர்களை வதைத்தான். அவனடி பணிந்தால், நம் குறைகளை ஆராய்ந்து ஐயோ என்று இரங்கி அருள்வான்.

9. தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கு எரியத்
தூபம் கமழத் துயில் அணைமேல் கண்வளரும்
மாமான் மகளே! மணிக் கதவம் தாள் திறவாய்,
மாமீர்! அவளை எழுப்பீரோ? உன் மகள் தான்

ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ?

ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?

மா மாயன் மாதவன் வைகுந்தன்,என்று என்று

நாமம் பலவும் நவின்று - ஏலோர் எம்பாவாய்.

**விளக்கம்**

தூய்மையான மணிகள் பதிக்கப்பெற்ற மாளிகையில் விளக்கு எரிய, வாசனைப் புகை வீசப் படுக்கையில் தூங்கும் மாமன் மகளே! மணிக்கதவின் தாழ்ப்பாளைத் திற. மாமீ! உம் மகளை எழுப்புங்கள். அவள் ஊமையோ? அல்லது செவிடோ? அன்றி, மயங்கித் தூங்கு கிறாளோ? படுக்கையில் காவலிடப்பட்டாளா? அல்லது மந்திரத்தால் கட்டுப்பட்டாளோ? மாயன், மாதவன், வைகுந்தன் என்று பகவானின் நாமங்களை வாயாரக் கூறுகிறோம். உம்மகள் இதை உணராளா?

10. நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்

மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்?

நாற்றத் துழாய் முடி நாராயணன்/ நம்மால்

போற்றப் பறை தரும் புண்ணியனால்; பண்டு ஒருநாள்

கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்பகர்ணனும்

தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?

ஆற்ற அனந்தல் உடையாய்! அருங்கலமே!

தேற்றமாய் வந்து திற - ஏலோர் எம்பாவாய்.

**விளக்கம்**

நோன்பு நோற்றுச் சுகம் அனுபவிப்பவளே! வாசற் கதவைத் திறக்காவிடிலும் பதில் பேசக்கூடாதா அம்மா! மணம் வீசும் துழாய் மாலை சூடிய நாராயணன், நாம் பல்லாண்டு பாடினால், உறுதிப் பொருளை அருள்வான். புண்ணிய வடிவெடுத்த இராமனால் யமன்வாய் விழுந்த கும்பகர்ணன், உனக்குத் தோற்றுத் தூக்கத்தைத் தந்தானோ? அதிகத் தூக்கம் உடையவளே! அணிகலன் போன்றவளே! தெளிவுடன் வந்து கதவைத்திற.

11. கற்றுக் கறவைக் கணங்கள் பல கறந்து

செற்றார் திறல் அழியச் சென்று செருச் செய்யும்

குற்றம் ஒன்று இல்லாத கோவலர்தம் பொற்கொடியே!

புற்றரவு அல்குல் புனமயிலே! போதராய்,

சுற்றத்துத் தோழிமார் எல்லாரும் வந்து நின்

முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர் பாடச்
சிற்றாதே பேசாதே, செல்வப் பெண்டாட்டி! நீ
எற்றுக்கு உறங்கும் பொருள்? -ஏலோர் எம்பாவாய்.

**விளக்கம்**

கன்றுகள் போல் காணப்படும் பசுக்கூட்டத்தைக் கறக்கும் இடையர்கள் பகைவர் அழியும்படி போர் செய்வார்; குற்றமில்லாத இந்த ஆயர்கள் குடியில் பிறந்த பெண்கொடியே! பாம்புப் படம் போன்ற இடைபெற்ற, மயில் போன்ற பெண்ணே! கண்ணனின் ஆசைப் பெண்ணே! எழுந்துவா சுற்றத்தாரான தோழிகள் உன் வீட்டு வாசலில் நின்று மேக நிறக்கண்ணனின் நாமங்களைப் பாடுகிறார்கள். சலியாமல், பேச்சின்றி உறங்குகிறாயே! இதனால் பயன் என்ன? அறியோம்.

12. கனைத்து இளங் சுற்றுஎருமை கன்றுக்கு இரங்கி
நினைத்து முலை வழியே நின்று பால் சோர
நனைத்து இல்லம் சேறு ஆக்கும் நற் செல்வன் தங்காய்!
பனித் தலை வீழ நின் வாசற் கடை பற்றி,
சினத்தினால் தென் இலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக்கு இனியானைப் பாடவும் நீ வாய் திறவாய்;
இனித் தான் எழுந்திராய், ஈது என்ன பேர் உறக்கம்!
அனைத்து இல்லத்தாரும் அறிந்து ஏலோர் எம்பாவாய்.

**விளக்கம்**

இளங்கன்றுகளைப் பெற்ற எருமைகள், பாலூட்ட எண்ணி, இரக்கத்துடன் காம்புகள் வழியே பாலைப் பெருக்கும். இதனால் சேறாகும் வீட்டு இடையன் தங்கையே! பனித்துளிகள், தலைகள் மீது விழ, நாங்கள் உன் வீட்டு வாசலில் நிற்கிறோம். தென் இலங்கை இராவணனைச் சினந்து, கொன்ற, மனத்துக்கினிய, இராமன் புகழைப் பாடுகிறோம். நீ, வாய்திறவாமல், தூங்குவதை எல்லா வீட்டினரும் அறிந்து விட்டார்கள்.

13. புள்ளின் வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப் போய்
பிள்ளைகள் எல்லாரும் பாவைக்களம் புக்கார்;
வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று;
புள்ளும் சிலம்பின காண்; போதுஅரிக் கண்ணினாய்!
குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே

பள்ளிக் கிடத்தியோ? பாவாய்! நீ நன்னாளால்

கள்ளம் தவிர்ந்து கலந்து - ஏலோர் எம்பாவாய்.

**விளக்கம்**

பறவையாய் வந்த பகாசுரன் வாயைப் பிளந்தவனும் கொடிய இராவணன் தலையை அழித்தவனும் ஆகிய திருமாலின் வீரத்தைப் பாடியவாறு, பெண்கள் நோன்பு நோற்கும் இடம் சென்று விட்டனர். சுக்கிரன் எழுந்து வியாழன் மறையும் காலைப்பொழுதில், பறவைகள் கூவுகின்றன. பூப்போன்ற மான்கண் உடையவளே! நீ, உன்னுடைய கபடத்தை விட்டுவிட்டு, எங்களுடன் கூடிக் குளிர்ந்து நீராட வா. படுக்கையில் கிடக்கலாமோ?

14. உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்

செங்கழுநீர் வாய் நெகிழ்ந்து, ஆம்பல் வாய் கூம்பின காண்.

செங்கல்பொடிக் கூறை வெண்பல் தவத்தவர்

தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்;

எங்களை முன்னம் எழுப்புவான் வாய் பேசும்

நங்காய்! எழுந்திராய், நாணாதாய்! நாவுடையாய்!

சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்

பங்கயக் கண்ணானைப் பாடு ஏலோர் எம்பாவாய்.

**விளக்கம்**

பெண்ணே! உங்கள் வீட்டுப் பின்புறக்குளத்தில், செங்கழுநீர்ப் பூக்கள் மலர்ந்து ஆம்பல் மலர்கள் குவிந்து விட்டன. செங்கற்பொடிக் காவி ஆடை அணிந்த வெண்பற்கள் உடைய முனிவர்கள், தங்கள் கோவில்களில் சங்கூதப்போகின்றார்கள். முன்பே வந்து எங்களை எழுப்புவதாக வாய் பேசிய நங்கையே! உனக்கு வெட்கமில்லையா? சங்கு சக்கரக்கையனான தாமரைக் கண்ணனைப்பாட நீ எழுந்திரு.

15. எல்லே! இளங்கிளியே! இன்னம் உறங்குதியோ!

சில் என்று அழையேன்மின், நங்கைமீர்! போதர்கின்றேன்;

வல்லை உன் கட்டுரைகள், பண்டே உன் வாய் அறிதும்;

வல்லீர்கள் நீங்களே நானே தான் ஆயிடுக!

ஒல்லை நீ போதாய். உனக்கு என்ன வேறு உடையை?

எல்லாரும் போந்தாரோ? போந்தார், போந்து எண்ணிக்கொள்

வல் ஆனை கொன்றானை,மாற்றாரை மாற்று அழிக்க

வல்லானை மாயனைப் பாடு ஏலோர் எம்பாவாய்.

**விளக்கம்**

"இளங்கிளி போன்றவளே! என்னே! இன்னமும் நீ உறங்கு கிறாயே!" " பெண்களே! இதோவருகிறேன்; சிலுகு சிலுகு என்று பேசாதீர்" "வாய்ப்பேச்சில் வல்ல உன்கடுஞ்சொற்களை முன்னே அறிவோம்". "நீங்கள்தான் வாயாடிகள்; இல்லையில்லை; நானே தான் வாயாடி." " நீ சீக்கிரம் வா. உனக்கு என்று தனி உடைமை உண்டா?" "எல்லோரும் வந்தார்களா?" "வந்தார்கள்; நீயே வந்து எண்ணிப்பார். குவலயாபீட யானையையும் கம்சன் முதலிய பகைவர் களையும் அழித்த மாயனைப் பாட நீ விரைவாக வா".

16. நாயகனாய் நின்ற நந்தகோபனுடைய
கோயில் காப்பானே! கொடித் தோன்றும் தோரண
வாயில் காப்பானே! மணிக்கதவம் தாள் திறவாய்,
ஆயர் சிறுமியரோமுக்கு அறை பறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்
தூயோமாய் வந்தோம், துயிலெழப் பாடுவான்;
வாயால் முன்னமுன்னம் மாற்றாதே, அம்மா! நீ
நேய நிலைக் கதவம் நீக்கு ஏலோர் எம்பாவாய்.

**விளக்கம்**

தலைவரான நந்த கோபருடைய மாளிகையைக் காப்பவனே! கொடி உயர்த்திய தோரண வாசலைக் காப்பவனே! மணிபதித்த கதவைத்திற. மாயனான மணிவண்ணன் நேற்றே, இடைச் சிறுமிகளான எங்களிடம் ஒலி எழுப்பும் பறையைத் தருவதாக வாக்களித்துள்ளான். அவனை உறக்கத்திலிருந்து எழுப்ப, நாங்கள் தூயவர்களாய் வந்தோம். ஐயனே! வாயால் மறுக்காமல், நிலையான கதவை நீயே திறக்க வேண்டும்.

17. அம்பரமே, தண்ணீரே சோறே அறஞ் செய்யும்
எம்பெருமான் நந்தகோபாலா எழுந்திராய்;
கொம்பனார்க்கு எல்லாம் கொழுந்தே! குல விளக்கே!
எம்பெருமாட்டி யசோதாய் அறிவுறாய்
அம்பரம் ஊடு அறுத்து ஓங்கி உலகு அளந்த
உம்பர் கோமானே! உறங்காது எழுந்திராய்;
செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா!
உம்பியும் நீயும் உறங்கு - ஏலோர் எம்பாவாய்.

**விளக்கம்**

ஆடைகளையும் பானங்களையும் சோற்றையும் தருமம் செய்யும் எம்பெருமான் நந்த கோபாலரே! எழுந்திருக்க வேண்டும். வஞ்சிக் கொடி போன்ற பெண்களின் தலைவியாய்க் கொழுந்து போன்ற குல விளக்கான எம் பெருமாட்டி யசோதைத்தாயே! உணர்ந்து எழுக. ஆகாயத்தூடே வளர்ந்து உலகளந்த தேவாதி தேவனே உறங்காமல் எழுந்திரு. தங்கக்கழல் அணிந்த திருவடி உடைய பல தேவனான செல்வனே! நீயும் உன்தம்பியும் உறங்கலாகாது.

18. உந்து மத களிற்றன் ஓடாத தோள்வலியன்
நந்த கோபாலன் மருமகளே! நப்பின்னாய்!
கந்தம் கமழும் குழலீ! கடை திறவாய்;
வந்து எங்கும் கோழி அழைத்தன காண், மாதவிப்
பந்தல்மேல் பல்கால். குயில் இனங்கள் கூவின காண்,
பந்தார் விரலி! உன் மைத்துனன் பேர் பாடச்
செந்தாமரைக் கையால் சீர் ஆர் வளை ஒலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்து - ஏலோர் எம்பாவாய்.

**விளக்கம்**

மதநீர்பெருக விடும் யானை போன்ற பலத்தையும் முதுகு காட்டி ஓடாத தோள் வலிமையும் உடைய நந்த கோபனின் மருமகளே! நப்பின்னையே! மணம் வீசும் கூந்தல் உடையவளே! நீ வந்து கதவைத் திறப்பாய். கோழிகள் எங்கும் கூவுகின்றன; குருக்கத்திப் பந்தலில் குயில்கள் கூவுகின்றன. பந்தைத் தாங்கிய விரல்களை உடை யவளே! உன் மைத்துனன் கண்ணன் பேரைப்பாடவா. வளையல்கள் ஒலிக்க உன் தாமரைக் கையால் தாழ்ப் பாளைத் திற.

19. குத்து விளக்கு எரியக் கோட்டுக்கல் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்சசயனத்தின் மேல் ஏறிக்
கொத்து அலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர் மார்பா! வாய்திறவாய்;
மைத் தடங்கண்ணினாய்! நீ உன் மணாளனை
எத்தனை போதும் துயில் எழ ஒட்டாய் காண்,
எத்தனை யேலும் பிரிவு ஆற்றகில்லாயால்;
தத்துவம், அன்று தகவு ஏலோர் எம்பாவாய்,

**விளக்கம்**

அகன்ற மார்புடைய பெருமானே! நிலை விளக்கு எரிய, யானைத் தந்தக் கால்களை உடைய கட்டிலில் மெத்தென்ற படுக்கை மீது, நப்பின்னையுடன் மார்பு

பொருந்தப்பள்ளி கொள்பவனே! வாய்திறந்து பேசு. மைக்கண்ணுடைய நப்பின்னையே! நீ உன் கணவனை நொடிப் பொழுதும், படுக்கையை விட்டு எழுந்திருக்க விடவில்லை; நீயும் அவனைப் பிரிந்து தரிக்கமாட்டாய். ஆ! ஆ! நீ இப்படி எங்களுக்கு எதிராக இருப்பது தகுதியன்று; உன் தத்துவமும் அன்று.

20. முப்பத்து மூவர் அமரர்க்கு முன் சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே! துயில் எழாய்;
செப்பம் உடையாய்! திறல் உடையாய்! செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா! துயில் எழாய்;
செப்பு அன்ன மென் முலைச் செவ்வாய், சிறு மருங்குல்
நப்பின்னை நங்காய்! திருவே! துயில் எழாய்;
உக்கமும் தட்டொளியும் தந்து உன் மணாளனை
இப்போதே எம்மை நீர் ஆட்டு ஏலோர் எம்பாவாய்.

**விளக்கம்**

முப்பத்து முக்கோடி தேவர்களுக்குத் துன்பம் வருமுன்பே சென்று அவர்களின் நடுக்கத்தைப் போக்கும் வன்மை உடைய கண்ணனே! தூக்கத்திலிருந்து எழுந்திரு நேர்மையும் பலமும் உள்ளவனே! பகை வர்க்குப் பயத்தைக் கொடுக்கும் தூயவனே எழுந்திரு. பொன் கலசம் போன்ற முலையையும் சிவந்த வாயையும் சிறிய இடையையும் உடைய நப்பின்னை நங்கையே! திருமகளே! எழுந்திராய் விசிறியையும் கண்ணாடி யையும் தந்து, உன் நாயகனையும், எங்களையும் நீராட்டு.

21. ஏற்ற கலங்கள், எதிர் பொங்கி மீது அளிப்ப
மாற்றாதே பால் சொரியும் வள்ளல் பெரும் பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே! அறிவுறாய்;
ஊற்றம் உடையாய்! பெரியாய்! உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே! துயில் எழாய்;
மாற்றார் உனக்கு வலி தொலைந்து உன் வாசற்கண்
ஆற்றாது வந்து உன் அடிபணியுமா போலே
போற்றி யாம் வந்தோம் புகழ்ந்து ஏலோர் எம்பாவாய்.

**விளக்கம்**

வைத்த பாத்திரங்கள் பாலை ஏற்றுப் பொங்கி வழியவும், இடைவிடாமல் பாலைச் சொரியும் வள்ளல் போன்ற பசுக்களை அதிகம் பெற்ற நந்தகோபன் மகனே!

தூக்கத்தினின்று உணர்ந்து எழு நிலையான திண்மை உடையவனே! பெருமையாளனே! இவ்வுலகில் ஒளியுடன் தோன்றி நிற்பவனே! எழுந்திரு. பகைவர்கள் உன் வலிமைக்குத் தோற்று, வாசலிலே கதியற்று வந்து திருவடி பணிவது போல, நாங்கள் உன்னைத் துதித்து வாழ்த்துப் பாட வந்தோம்.

22. அங்கண் மா ஞாலத்து அரசர் அபிமான
பங்கமாய் வந்து நின் பள்ளிக்கட்டிற் கீழே
சங்கம் இருப்பார் போல் வந்து தலைப்பெய்தோம்;
கிங்கிணிவாய்ச் செய்த தாமரைப் பூப் போலே
செங்கண் சிறுச் சிறிதே எம்மேல் விழியாவோ?
திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற்போல்
அங்கண் இரண்டும் மொண்டு எங்கள் மேல் நோக்குதியேல்,
எங்கள்மேல் சாபம் இழிந்து – ஏலோர் எம்பாவாய்

**விளக்கம்**

அழகிய அகன்ற உலகத்து அரசர்கள் அகங்காரம் குலைந்து வந்து உன் சிம்மாசனத்தின் அடியில் கூடி, இருப்பதைப் போல நாங்களும் நெருங்கி வந்துள்ளோம். கிங்கிணி போலப் பாதி திறந்த தாமரைப் பூவோ என்னும்படி, உன் திருக்கண்கள் சிறிது சிறிதாக எங்கள் மேல் பார்க்கமாட்டாவோ? சந்திரனும் சூரியனும் உதித்தாற் போல அழகிய இருகண்களாலும் எங்களைப் பார்த்தால், எங்கள் பாவங்கள் தொலைந்து விடும்.

23. மாரி மலை முழைஞ்முழைஞ்சில் மன்னிக் கிடந்து உறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீ விழித்து
வேரி மயிர் பொங்க மூரி எப்பாடும் பேந்து உதறி
முரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமா போலே நீ பூவைப்பூ வண்ணா! உன்
கோயில் நின்று இங்ஙனே போந்தருளி, கோப்பு உடைய
சீரிய சிங்காசனத்து இருந்து, யாம் வந்த.
காரியம் ஆராய்ந்து அருள் - ஏலோர் எம்பாவாய்.

**விளக்கம்**

மழைக் காலத்தில் மலைக்குகையில் படுத்துத் தூங்கும் சீரிய சிங்கம், உணர்ந்து எழும்பொழுது, கண்களில் தீப்பொறி பறக்கும். பிடரி மயிர் பொங்க, நாற்புறமும் தன்

உடலை அசைத்துச் சோம்பல் முறித்துக் கர்ஜனை செய்யும். இவ்வாறு சிங்கம் வெளி வருதல் போல, காயாம் பூ நிறக்கண்ணனே! நீ உன் கோயிலினின்று அவைக்கு வந்து, அழகிய அமைப்புடைய சிங்காசனத்தில் எழுந்தருளி, நாங்கள் வந்த காரியத்தை விசாரித்து அருள வேண்டும்.

24. அன்று இவ் உலகம் அளந்தாய்! அடி போற்றி!
சென்று அங்குத் தென்னிலங்கை செற்றாய்! திறல் போற்றி!
பொன்றச் சகடம் உதைத்தாய்! புகழ் போற்றி,
கன்று குணிலா எறிந்தாய்! கழல் போற்றி,
குன்று குடையா எடுத்தாய்! குணம் போற்றி!
வென்று பகை கெடுக்கும் நின்கையில் வேல் போற்றி!
என்று என்று உன் சேவகமே ஏத்திப் பறை கொள்வான்
இன்று யாம் வந்தோம் இரங்கு ஏலோர் எம்பாவாய்.

**விளக்கம்**

'அக்காலத்தில் இவ்வுலகங்களை அளந்த உன் இணை அடிகள் பல்லாண்டு வாழ்க! தென் இலங்கை சென்று இராவணனை அழித்த உன் வலிமைக்கு வாழ்த்துகள்! சகடத்தை உதைத்த உன் புகழுக்குப் போற்றி! கன்றாய் நின்ற அசுரனை எறிதடியாய்க் கொண்டு எறிந்த உன் கழல் அடிகளுக்குப் போற்றி! கோவர்த்தன மலையைக் குடையாய்த் தூக்கிய உன் திருக் குணங்களுக்குப் போற்றி! பகைவரை வென்று அவர் வெறுப்பை அழிக்கும் உன் கையிலுள்ள வேலுக்குப்போற்றி!' - இவ்வாறு என்றும் உன் வீரத்தைப் பாடி, நாம், இப்போது பறை பெற வந்தோம். நீ அருள் செய்ய வேண்டும்.

25. ஒருத்தி மகனாய்ப் பிறந்து, ஓர் இரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளரத்
தரிக்கிலான் ஆகித் தான் தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பு என்ன நின்ற நெடுமாலே! உன்னை
அருத்தித்து வந்தோம்; பறை தருதி யாகில்,
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம் பாடி
வருத்தமுந் தீர்ந்து மகிழ்ந்து - ஏலோர் எம்பாவாய்.

**விளக்கம்**

திருமாலே! நீ, தேவகி என்னும் ஒருத்திக்கு மகனாகத் தோன்றி ஒரே இரவிலே யசோதையான மற்றொருத்திக்கு மகனாக ஆனாய். இவ்வாறு ஒளித்து வளரும்

காலத்தில், பொறுக்க இயலாத கம்சன் உன்னைக் கொல்லத் தீமையை எண்ணவும், அதை வீணாக்கி, அவன் வயிற்றில், நெருப்பாக நின்றாய், நாங்கள் வேண்டும் பறை தருவாயாகில், திருவும் ஆசைப்படும் அடிமைச்செல்வத்தையும் வீரத்தையும் பாடி, பிரிவுத் துன்பம் நீங்கி மகிழ்வோம்.

26. மாலே! மணிவண்ணா! மார்கழி நீர் ஆடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன, கேட்டியேல்;
ஞாலத்தை எல்லாம் நடுங்க முரல்வன
பால் அன்ன வண்ணத்து உன் பாஞ்சசன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பாடு உடையனவே;
சாலப் பெரும் பறையே, பல்லாண்டு இசைப்பாரே,
கோல விளக்கே, கொடியே, விதானமே;
ஆலின் இலையாய்! அருள் - ஏலோர் எம்பாவாய்.

**விளக்கம்**

அடியாரிடத்தே மோகமுடைய மணி வண்ணா! ஆலந்தளிரில் பள்ளி கொண்டவா! மார்கழி நீராட்டத்துக்குச் சான்றோர் வேண்டு வனவற்றைக் கூறுகிறோம். உலகம் நடுங்க ஒலிக்கும் பால் நிறப் பாஞ்ச சன்னியம் போன்ற சங்குகளையும், அகன்ற பெரிய பறைகளையும், பல்லாண்டு பாடுபவர்களையும் அழகிய விளக்குகளையும், கொடி களையும், மேற்கட்டிகளையும் தந்தருளவேண்டும்.

27. கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா! உன்தன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம் பெறு சம்மானம்;
நாடு புகழும் பரிசினால் நன்றாகச்
சூடகமே, தோள்வளையே, தோடே, செவிப் பூவே,
பாடகமே, என்று அனைய பல் கலனும் யாம் அணிவோம்;
ஆடை உடுப்போம், அதன் பின்னே பாற் சோறு
மூட நெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடியிருந்து குளிர்ந்து - ஏலோர் எம்பவாய்.

**விளக்கம்**

உன்னடி பணியாதாரை வெல்லும் குணங்களை உடைய கோவிந்தா! உன்னைப் பாடிப் பறையைப் பெற்றபின் நாங்கள் விரும்பும் பரிசுகள் உண்டு. நாட்டார் புகழும் காப்புகளும், தோள்வளைகளும் தோடும் செவிப் பூவும் பாதசரமும் என்று பலவகைப் பட்ட ஆபரணங்களை அணிவோம். நீ உடுத்த ஆடைகளை

உடுப்போம். பின்பு பாற்சோறு மூடும்படி, நெய்யைப் பெய்த அடிசில், முழங்கை வழியும் படி, உன்னுடன் கூடி, இருந்து, குளிர்ந்து உண்போம்.

28. கறவைகள் பின் சென்று கானம் சேர்ந்து உண்போம்.
அறிவு ஒன்றும் இல்லாத ஆய்க் குலத்து உன்தன்னைப்
பிறவி பெறுந்தனைப் புண்ணியம் யாம் உடையோம்;
குறைவு ஒன்றும் இல்லாத கோவிந்தா! உன்தன்னோடு
உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது;
அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன்தன்னைச்
சிறுபேர் அழைத்தனவும் சீறியருளாதே இறைவா!
நீ தாராய் பறை - ஏலோர் எம்பாவாய்.

**விளக்கம்**

குறை ஒன்று கூட இல்லாத கோவிந்தனே! உடல் வளர்க்கும் நோக்க முடன் நாங்கள் பசுக்கள் பின் சென்று காட்டில் திரிவோம். ஆனாலும் அறிவு சிறிது கூட இல்லாத எங்கள் இடைக்குலத்தில் நீ பிறந்து வாழும் புண்ணியம் பெற்று விட்டோம். இறைவா! நமக்குள் உண்டான உறவு, உன்னாலோ, எங்களாலோ ஒழிக்க முடியாதது. அறிவில்லாத சிறுமிக ளான நாங்கள் அன்பால் அழைத்ததைப் பொறுத்துக் கோபம் கொள்ளாமல், அடிமைத் தன த்தை அருள வேண்டும்.

29. சிற்றஞ் சிறுகாலே வந்து உன்னைச் சேவித்து, உன்
பொற்றாமரை அடியே போற்றும் பொருள் கேளாய்;
பெற்றம் மேய்த்து உண்ணும் குலத்திற் பிறந்து நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது;
இற்றைப் பறைகொள்வான் அன்று காண் கோவிந்தா!
எற்றைக்கும் ஏழ் ஏழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே ஆவோம்; உனக்கே நாம் ஆட்செய்வோம்;
மற்றை நம் காமங்கள் மாற்று - ஏலோர் எம்பாவாய்.

**விளக்கம்**

கண்ணா! சிறுவிடியல் நேரத்தே வந்து உன்னைப் பணிந்து, தாமரைத் திருவடிகளைப் போற்றும் பொருளைக் கேட்டருள வேண்டும். பசு மேய்க்கும் குலத்தில் பிறந்த நீ, அந்தரங்கத் தொண்டுகளை உனக்கு நாங்கள் செய்யத் திருவுள்ளம் பற்ற வேண்டும். இன்று நாங்கள் வந்தது கொட்டும் பறை கொள்ள அல்ல. காலமுள்ள அளவும், ஏழு ஏழு பிறவிகளிலும் உன்னோடு உறவு கொண்டு, உன் மகிழ்ச்சிக்காகவே, நாங்கள் அடிமை செய்யக் கடவோம். எங்களுடைய மற்றைய ஆசைகளை நீயே தவிர்த்து அருள வேண்டும்.

30. வங்கக் கடல் கடைந்த மாதவனைக் கேசவனைத்
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்று இறைஞ்சி
அங்கப் பறைகொண்டஆற்றை அணிபுதுவைப்
பைங்கமலத் தண் தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்கு இப் பரிசு உரைப்பார் ஈரிரண்டு மால் வரைத் தோள்
செங்கண்திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர் எம்பாவாய்.

**விளக்கம்**

கப்பல்கள் ஓடும் கடலைக் கடைந்த திருமகள் கேள்வனான கண்ணனை, சந்திரனை ஒத்த முகமுடைய ஆய்ச்சிகள் வணங்கிப் பறையாகிய உறுதிப் பொருளை அடைந்தார்கள். புதுவை நகரில் தோன்றிய தாமரை மாலை அணிந்த பெரியாழ்வாரின் மகள் ஆண்டாள், இதனை முப்பது பாசுரங்களாக அருளினாள். இவற்றைத் தவறாமல் ஓதுபவர்கள், நான்கு தோள்களைப் பெற்ற செங்கண் திருமால் அருளால், எங்கும் இன்பம் அடைவர்.

## குலசேகர ஆழ்வார்

## பெருமாள் திருமொழி

### தசரதன் புலம்பல்

1. வன்தாளின் இணை வணங்கி வளநகரம் தொழுது ஏத்த மன்னன் ஆவான்
நின்றாயை, அரியணை மேல் இருந்தாயை, நெடுங் கானம் படரப் போகு
என்றாள்: எம் இராமாவோ! உனைப் பயந்த கைகேசி தன் சொற் கேட்டு
நன்றாக நானிலத்தை ஆள்வித்தேன். நன்மகனே! உன்னை நானே.

**விளக்கம்**

எம்முடைய இராமனே! வளமுடைய அயோத்தி நகர மக்கள் உன்னைத் தொழுது அரசனாகத் திருமுடிசூட வேண்டியதும், ஸ்ரீமந் நாராயணனின் இருதிருவடிகளைத் தொழுது, சிம்மாசனம் ஏறத்தயாராய் இருந்த உன்னிடம், 'நெடிய காடு போ' என்று கைகேயி கூறினாள். நல்ல மகனே! உன்னைப் பெற்ற கைகேயி சொற்கேட்டு, நான் உன்னை உலகாளச் செய்தது எப்படி உள்ளது? மிக நல்லது!! (அதாவது வெட்கக் கேடு)

2. வெவ்வாயேன் வெவ்வுரை கேட்டு இருநிலத்தை வேண்டாதே. விரைந்து வென்றி

மைவாய களிறொழிந்து தேரொழிந்து மாவொழிந்து வனமே மேவி,

நெய்வாய வேல் நெடுங்கண் நேரிழையும் இளங்கோவும் பின்பு போக,

எவ்வாறு நடந்தனை? எம் இராமாவோ! எம்பெருமான்! என் செய்கேனே!

**விளக்கம்**

எம் இராமனே! கொடிய வாயுடைய என் சொற்கேட்டு, பூமியை வேண்டாம் என்று சீக்கிரமாகவே, வெற்றியுடைய மை நிறயானையும் தேரையும், குதிரையையும் விட்டுவிட்டுக் காடு அடைந்தாயே! நெய் பூசப்பட்ட வேல் போன்ற கண்ணுடைய சீதையும் இலக்குவனும் பின்வர, கால்நடையாகக் காட்டில் சென்றாயே! எம்பெருமானே! நான் என் செய்கேன்?

3. கொல் அணை வேல் வரி நெடுங் கண் கௌசலைதன் குலமதலாய் குனி வில் ஏந்தும்

மல் அணைந்த வரைத் தோளா! வல் வினையேன் மனம் உருக்கும் வகையே கற்றாய்!

மெல் அணைமேல் முன் துயின்றாய், இன்னு இனிப்போய் வியன்கான மாத்தின் நீழல்

கல் அணைமேல் கண் துயிலக் கற்றனையோ? காகுத்தா? கரிய கோவே!

**விளக்கம்**

கொல்லும் வேலாயுதம் போன்ற செவ்வரிபடர்ந்த கண்களை உடைய கோசலாதேவியின் குலம் விளங்க வந்தவனே! வளைந்தவில் ஏந்திய பலமுடைய மலை போன்ற தோள் உடையவனே! பெரும் பாவியான என் மனத்தை அழகால் உருகச் செய்தோனே! காகுத்தனே! கரிய நிறத்தவனே! முன் பெல்லாம் மென்மையான மெத்தையில் படுத்துப் பழக்கமான நீ, இன்று அகன்ற காட்டில் இலையில்லாத மரத்தின் நிழலில் கற்களையே படுக்கையாகக் கொண்டு தூங்கக் கற்றாயா?

4. வா, போகு,வா, இன்னம் வந்து ஒருகால் கண்டுபோ, மலராள் கூந்தல்

வேய்போலும் எழில்தோளி தன்பொருட்டா விடையோன்தன் வில்லைச் செற்றாய்!

மா போகு நெடுங் கானம் வல்வினையேன் மனம் உருக்கும் மகனே! இன்று

நீ போக, என் நெஞ்சம் இரு பிளவாய்ப் போகாதே நிற்குமாறே!

**விளக்கம்**

இங்கே வா; இனி நீ போகலாம்; மறுபடியும் இங்கே வா. இராமா! 'மறுபடியும் ஒருமுறை என்னைப் பார்த்து விட்டுப்போ. பூச்சூடிய மூங்கிலை ஒத்த தோளுடைய சீதையைப் பெற, சிவன் வில்லை ஒடித்தாய், பெரும் பாவியான என் மனத்தை உருகச் செய்த மகனே! இன்று நீ யானைகள் திரியும் காட்டிற்குப் போகவும் என் மனம் இரு பிளவாகாமல் இன்னமும் அப்படியே உள்ளதே!

5. பொருந்தார் கை வேல்நுதிபோல் பரல் பாய, மெல்லடிகள் குருதி சோர.
விரும்பாத கான் விரும்பி, வெயில் உறைப்ப, வெம் பசிநோய் கூர, இன்று
பெரும்பாவியேன் மகனே! போகின்றாய், கேகயர்கோன் மகளாய்ப் பெற்ற
அரும்பாவி சொற் கேட்ட அருவினையேன் என் செய்கேன்! அந்தோ! யானே.

**விளக்கம்**

பகைவர் கையில் பாயும் வேலாயுத நுனி போலப் பரற்கற்கள் காலில் பாயுமே! மெல்லிய பாதங்களிலிருந்து இரத்தம் பெருகக் கொடிய, வெய்யிலில், மிகுந்த பசிநோய் துன்புறுத்தவும், செல்கிறாயே! மகாபாவியான என் மகனே! இன்று நீ விரும்பத்தகாத காட்டிற்கு விருப்பமுடன் போகிறாய். கேகய அரசன் பெற்ற மகளான கைகேயி சொற்கேட்ட அரும்பாவியான, என் வார்த்தையை நீ கேட்டு நடந்தாய்! ஐயோ! நான் என் செய்வேன்!

6. அம்மா! என்று உகந்து அழைக்கும் ஆர்வச்சொல் கேளாதே, அணி சேர் மார்வம்
என் மார்வத்திடை அழுந்தத் தழுவாதே, முழுசாதே, மோவாது உச்சி,
கைம்மாவின் நடை அன்ன மென்னடையும் கமலம் போல் முகமும் காணாது,
எம்மானை என் மகனை இழந்திட்ட இழிதகையேன் இருக்கின்றேனே!

**விளக்கம்**

'ஐயா!' என்று அழைக்கும் உன் அன்புச் சொல்லைக் கேளாமல் ஆபரணம் அணிந்த உன் மார்பை என் மார்புடன் தழுவாமல், உச்சி முகந்து மகிழாமல், துன்பத்தில் ஆழ்ந்தேனே! யானை போன்ற உன் நடையழகையும் தாமரை போன்ற முகத்தையும் காணாமல் என் மகனை இழந்து விட்டேனே! கீழ்த்தனமான செயல் செய்தும் உயிர் வாழ்கிறேனே!

<u>7.</u> பூ மருவு நறுங்குஞ்சி புன்சடையாப் புனைந்து, பூந் துகில் சேர் அல்குல்
காமர் எழில் விழல் உடுத்து, கலன் அணியாது, அங்கங்கள் அழகு மாறி,
ஏ மரு தோள் என் புதல்வன் யான் இன்று செலத்தக்க வனம் தான் சேர்தல்
தூ மறையீர்! இது தகவோ? சுமந்திரனே! வசிட்டனே! சொல்லீர் நீரே.

**விளக்கம்**

தூய்மையான வேதியர்களே! சுமந்திரனே! குரு. வசிஷ்டரே! பூமாறாத திருக்குழலைச் சடையாக்கி, அழகிய பட்டாடை அணியும் அரையில், அதற்குப் பதிலாக, ஆசைப்படத்தகும் தருப்பைக் கயிற்றைக் கட்டி, ஆபரணங்கள் அணியாமல், அங்கங்கள் அழகு, குலைந்து பகைவர் அஞ்சும் தோளுடைய என் மகன், நான் போக வேண்டிய காடு செல்தல் தர்மமோ? தகுமோ? நீங்களே கூறுங்கள்.

8. பொன் பெற்றார் எழில் வேதப் புதல்வனையும் தம்பியையும் பூவை போலும்
மின் பற்றா நுண்மருங்குல் மெல்லியல் என் மருகியையும் வனத்திற் போக்கி,
நின் பற்றா நின் மகன் மேல்பழி விளைத்திட்டு, என்னையும் நீள் வானில்
போக்க,
என் பெற்றாய்? கைகேசி! இரு நிலத்தில் இனிதாக இருக்கின்றாயே!

**விளக்கம்**

கைகேயீ! கல்விச் செல்வமுடைய வேத விற்பன்னர்களிடம் கற்ற இராமனையும், தம்பி இலக்குவனையும் பூவை போன்ற, மின்னல் இடை உடைய, மென்மையான என் மருமகள் சீதையையும் காடேறவிட்டு, உன் அன்பு மகன் பரதனுக்கு பழி உண்டாக்கிவிட்டு, என்னையும் மேல் உலகம் போகும்படி செய்ததனால், நீ என் பயன் அடைந்தாய்? இவ்வுலகில், இனிதாக, உயிருடன் இருக்கிறாயே!

9. முன்ஒருநாள் மழுவாளி சிலைவாங்கி அவள்தவத்தை முற்றும் செற்றாய்;
உன்னையும் உன் அருமையையும் உன்மோயின் வருத்தமும் ஒன்றாகக்
கொள்ளாது
என்னையும் என்மெய்யுரையும் மெய்யாகக் கொண்டுவனம் புக்களந்தாய்!
நின்னையே மகனாகப் பெறப்பெறுவேன் ஏழ்பிறப்பும் நெடுந்தோள் வேந்தே

**விளக்கம்**

முன் ஒரு நாளில் மழு ஏந்திய பரசுராமனின் வில்லை வாங்கி அவன் தவ வலிமையை அழித்தவனே! உன் பெருமை யையும் உன்னை மகனாக அடைந்த என் அருமையையும் உன் தாய் கோசலையின் வருத்தத்தையும் பொருட்டாக எண்ணாமல், என் சொல் சத்தியமாக வேண்டும் என்று எண்ணிக் காடு சென்றாயே! என்னப்பா! நீண்ட தோளனே! இனி நான் எடுக்கும் பிறவிகள் தோறும் உன்னையே மகனாய்ப் பெறுவேன்

10. தேன்நகு மாமலர்க் கூந்தற் கௌசலையும் சுமித்திரையும் சிந்தை நோவ
கூள் உருவின் கொடுந்தொழுத்தை சொற்கேட்ட கொடியவள்தன்
சொற்கொண்டு, இன்று

கானகமே மிகுவிரும்பி நீதுறந்த வளநகரைத் துறந்து, நானும்

வானகமே மிகவிரும்பிப் போகின்றேன்; மனுகுலத்தார் தங்கள் கோவே!

**விளக்கம்**

மனுகுலத்து அரசனே! தேன் சொட்டும் மலர் குடிய கோசலையும் சுமித்திரையும் சித்தையில் வருத்தம் அடைய, கூனியான வேலைக் காரி சொல் கேட்டு நடந்த கொடியவளான கைகேயி ஆணையைக் கொண்டு, நீ காடு சென்றாய் நீ விட்டுச் சென்ற அயோத்தி நகரை நானும் விட்டு, மேல் உலகத்தையே விரும்பிப் போகின்றேன்.

11. ஏர்ஆர்ந்த கரு நெடுமால் இராமனாய் வனம் புக்க அதனுக்கு ஆற்றாத்
தார் ஆர்ந்த தடவரைத் தோள் தயரதன் தான் புலம்பிய அப் புலம்பல்தன்னை
கூர் ஆர்ந்த வேல் வலவன் கோழியர்கோன் குடைக் குல சேகரன் சொற் செய்த
சீர் ஆர்ந்த தமிழ்மாலை இவை வல்லார் தீ நெறிக்கண் செல்லார் தாமே

**விளக்கம்**

குணங்கள் நிறைந்த நீல நிறத்திருமால் இராமனாய் அவதரித்துக் காடு சென்ற செயலைத் தாங்காத வெற்றி மாலை குடிய தோளுடைய தசரதன் புலம்பிய புலம்பலைக் குலசேகரர் அருளிச் செய்தார் கூர்வேல் தாங்கிய வல்லவரான உறையூர் அரசர் கொற்றக்குடை உடைய, குலசேகரர் அருளிய இத்தமிழ் மாலையைப் பயில்பவர் கெட்ட வழியில் செல்ல மாட்டார்கள்.

## திருமங்கை ஆழ்வார்

## பெரிய திருமொழி

## பெரிய திருமந்திரத்தின் மகிமை

1. வாடினேன்; வாடி வருந்தினேன் மனத்தால்;
பெருந் துயர் இடும்பையில் பிறந்து
கூடினேன்; கூடி இளையவர் தம்மோடு
அவர் தரும் கலவியே கருதி
ஓடினேன்; ஓடி உய்வது ஓர் பொருளால்
உணர்வு எனும் பெரும் பதம் தெரிந்து
நாடினேன்; நாடி நான் கண்டுகொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.

**விளக்கம்**

பெரும்துன்பத்துக்கு இடமாயும் காரணமாயும் உள்ள உடம்பில் நான் பிறந்து, ஆத்மா அதிற் பொருந்தும்படி கூடினேன். பிறகு இளமையான பெண்கள் தரும் இன்பத்தை எண்ணி அவர்கள் போனபடி தொடர்ந்து ஓடினேன். இவ்வாறு

சிற்றின்பங்களில் மனத்தைச் செலுத்தி வருத்தமுற்று வாடினேன். முடிவில் உய்வதற்குரிய செம் பொருளான ஞானத்தை இறைவன் திருவருளால் அறிந்து, நன்று, தீது உணர்ந்தேன். 'நாராயணா' என்னும் திருமந்திரச் சீர்மையைக் கண்டு கொண்டேன்.

2. ஆவியே! அமுதே! என நினைந்து உருகி,
அவர் அவர் பணை முலை துணையாப்
பாவியேன் உணராது எத்தனை பகலும்
பழுதுபோய் ஒழிந்தன நாள்கள்;
தூவி சேர் அன்னம் துணையொடும் புணரும்
சூழ் புனல் குடந்தையே தொழுது என்
நாமம் நான் உய்ய நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.

**விளக்கம்**

பாவியேன் ஆன நான், பெண்களின் பருத்த முலைகளையே துணையாகக் கொண்டு, இறைவனை மறந்து எத்தனையோ பகல்களையும் நாள்களையும் வீணாகக் கழித்தேன். 'என் உயிரே; அமுதே' என்று பெண்களிடம் பொய்யுரை பேசி, சிற்றின்பத்தை எண்ணி உருகி வீண் ஆனேன். ஆயினும், இப்பொழுதோ 'நாராயணா' என்னும் திருநாமத்தை நாவால் கூறும் பேறுபேற்றேன். சிறகுடைய அன்னம் தன் பெடையுடன் கலந்து வாழும் நீர்வளம் உடைய திருக்குடந்தை ஆராவமுதனைத் தொழுது உய்வுபெற எட்டெழுத்து மந்திரத்தைப் பெற்றேன்.

3. சேமமே வேண்டித் தீவினை பெருக்கித்
தெரிவைமார் உருவமே மருவி,
ஊமனார் கண்ட கனவிலும் பழுது ஆய்
ஒழிந்தன கழிந்த அந் நாள்கள்;
காமனார் தாதை நம்முடை அடிகள்
தம் அடைந்தார் மனத்து இருப்பார்
நாமம் நான் உய்ய நான் கண்டுகொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.

**விளக்கம்**

நலத்தையே விரும்பிய நான், நன்மைகளைச் செய்யாமல் பாவங்களைப் பெருக்கிப் பெண்கள் வடிவழகில் பொருந்திக் கழித்த காலமெல்லாம், ஊமைகள் கண்ட கனவு போல வீணாகிப் போயின. மன்மதன் தந்தையான திருமால், நம்

போன்றவர்களுக்குச் சுவாமி ஆவார்; அடைக்கலம் அடைந்தவர் நெஞ்சில் நீங்கா திருப்பவர். இப்பெருமானின் திருநாமமான 'நாராயணா' என்னும் திருமந்திரத்தை, நான் இன்று உய்வடையக் கண்டு கொண்டேன்.

4. வென்றியே வேண்டி வீழ் பொருட்கு இரங்கி
வேல்கணார் கலவியே கருதி
நின்றவா நில்லா நெஞ்சினை உடையேன்
என் செய்கேன்? நெடு விசும்பு அணவும்
பன்றி ஆய் அன்று பாரகம் கீண்ட
பாழியான், ஆழியான் அருளே
நன்று நான் உய்ய, நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.

**விளக்கம்**

வெற்றியே வேண்டிய நான் அழியும் தன்மையான செல்வத்தைப் பெற வருந்தினேன்; வேல் போன்ற கண்களை உடைய பெண்களுடன் கலப்பதையே எண்ணிய என் நெஞ்சம் ஒன்றிலும் நில்லாத நிலை பெற்றேன். ஐயோ! என் செய்வேன்! ஆயினும் சிற்றின்பத்தில் சென்ற நான் உய்வடையும் படி, 'நாராயணா' என்னும் திருநாமத்தை இன்று கண்டு கொண்டேன். பிரளய காலத்தில் நீண்ட ஆகாயத்தைத் தழுவும்படி வளர்ந்து பூமியைத் தூக்கிக் காத்த வராகப் பெருமான் அருளாலேயே இன்று நான் திருமந்திரம் பெற்றேன்.

5. கள்வனேன் ஆனேன்;படிறு செய்து இருப்பேன்;
கண்டவா திரிதந்தேனேலும்.
தெள்ளியேன் ஆனேன்; செல் கதிக்கு அமைந்தேன்;
சிக்கெனத் திருவருள் பெற்றேன்;
உள்ளலாம் உருகிக் குரல் தழுத்து ஒழிந்தேன்;
உடம்பு எலாம் கண்ண நீர் சோர.
நள்இருள் அளவும் பகலும் நான் அழைப்பன்
நாராயணா என்னும் நாமம்.

**விளக்கம்**

கடவுளுக்குச் சொத்தான ஆத்மாவை என்னதாகத் திருடினேன்; தீமையைச் செய்தேன்; கண்டபடி யெல்லாம் திரிந்தேன்; என்றாலும் பசுவான் அருளைத் திடமாகப் பெற்றதால் நான், ஆத்மாவைப் பற்றிய தெளிவு பெற்றேன். அதனால் பரமபதம் செல்ல ஆளாகிவிட்டேன். உள்ளம் நீர்ப்பண்டமாய்க் கரைய, உடம்பெங்கும் கண்ணீர் பெருகி

விழ, தழுதழுத்த குரலுடன் இரவும் பகலும் 'நாராயணா' என்னும் நாமத்தை அடியேன் அழைக்கும்படி ஆனேன்.

6. எம்பிரான், எந்தை என்னுடைச் சுற்றம்,
எனக்கு அரசு, என்னுடை வாழ்நாள்,
அம்பினால் அரக்கர் வெருக்கொள நெருக்கி
அவர் உயிர் செகுத்த எம் அண்ணல்;
வம்புஉலாம் சோலை மா மதிள் தஞ்சை
மாமணிக் கோயிலே வணங்கி,
நம்பிகாள்! உய்ய நான் கண்டுகொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.

**விளக்கம்**

பக்தியில் முதிர்ந்தவர்களே! எனக்கு உதவிய தந்தையான பகவான் உற்றவனாய் என்னை ஆண்டான்; என் வாழ்நாளே அவன்தான். அரக்கர் அஞ்ச, அம்புகளால் நெருக்கி அழித்த என் தலைவன் தஞ்சைமாமணிக் கோயிலில் எழுந்தருளி உள்ளான். மணம் வீசும் சோலைகளும் மதிளும் உள்ள அத்திருத்தலத்தில் உள்ள பகவானை வணங்கி, அடியேன், உய்வடைய நாராயண நாமத்தை அறிந்தேன்.

7. இல் பிறப்பு அறியீர், இவர் அவர் என்னீர்,
இன்னது ஓர் தன்மை என்று உணரீர்.
கற்பகம் புலபவர் களைகண்; என்று உலகில்
கண்டவா தொண்டரைப் பாடும்
சொல்பொருள் ஆளீர்! சொல்லுகேன், வம்மின்;
சூழ் புனல் குடந்தையே தொழுமின்;
நல்பொருள் காண்மின்; பாடி நீர் உய்ம்மின்
நாராயணா என்னும் நாமம்.

**விளக்கம்**

பொருள் பொதிந்த சொல் ஆளும் கவிஞர்களே! நீங்கள் இழிதொழில் செய்பவரின் இல்லம், குடிப்பிறப்புகளை அறியாமல், 'கற்பகமே! கற்றோரைக் காப்பவரே!' என்று கண்டபடி புகழாதீர்! இன்றைய இச்செல்வர் முன்பு ஏழைகளே என்பதை நீங்கள் அறிவீர்களா? தீர்ந்த உறுதிப்பொருளைக் கூறுகிறேன்; வந்து கேளுங்கள். ஆராவமுதப்பெருமானை வணங்குவீர்களாக. நீர்வளம் மிகுந்த திருக்குடந்தையில் உள்ள அப்பகவானின் 'நாராயண' நாமத்தைப்பாடி உய்வு பெறுங்கள், இதுவே நற்பொருள்.

8. கற்றிலேன் கலைகள்; ஐம்புலன் கருதும்

கருத்துளே திருத்தினேன் மனத்தை;

பெற்றிலேன் அதனால் பேதையேன் நன்மை;

பெரு நிலத்து ஆர் உயிர்க்கு எல்லாம்

செற்றமே வேண்டித் திரிதருவேன்; தவிர்ந்தேன்;

செல் கதிக்கு உய்யும் ஆறு எண்ணி,

நல்துணை ஆகப் பற்றினேன், அடியேன்

நாராயணா என்னும் நாமம்.

**விளக்கம்**

நான் சாத்திரங்களைக் கற்கவில்லை; ஐம்புலன்களின் கருத்துக் கிசைய மனத்தை வலிய மூட்டிப் போந்தேன். அறிவற்ற நான் எந்த நன்மையும் பெறவில்லை. உலகத்துப் பிராணிகளுக்குத் துன்பம் செய்து திரிந்தேன். இவ்வாறு இருந்தும் பகவான் அருளால் * இவைகள் தவிர்ந்தன. நல் வீடுபெறும் வழியை நினைத்து அடியேன் 'நாராயண' மந்திரத்தைத் துணையாகப் பற்றினேன்.

9. குலம் தரும்; செல்வம் தந்திடும்; அடியார்

படுதுயர் ஆயின எல்லாம்

நிலம் தரும் செய்யும்; நீள்விசும்பு அருளும்;

அருளொடு பெருநிலம் அளிக்கும்;

வலம்தரும்; மற்றும் தந்திடும்; பெற்ற

தாயினும் ஆயின செய்யும்;

நலம் தரும் சொல்லை நான் கண்டுகொண்டேன்

நாராயணா என்னும் நாமம்.

**விளக்கம்**

'நாராயணா' என்னும் திருநாமம் அதைப் பயின்றவர்களுக்குத் தொண்டு புரியும் நற்குலத்தைத் தரும்; செல்வம் தரும்; அடியார் படும் துயரங்களைத் தரைமட்டம் ஆக்கும். பரமபதத்தைக் கொடுக்கும். இறைவன் அருளையும் கைங்கர்யம் செய்யும் இடத்தையும் தரும்; பகவானை அனுபவிக்கும் சக்தியையும் தரும். இன்னும் பல நன்மைகளைச் செய்யும். பெற்றதாயை விடவும் நன்மை செய்து ஆத்ம ஞானத்தைத் தரும். கைங்கர்யமாகிய செல்வத்தைத் தரும் இத் திருநாமத்தை நான் கண்டு கொண்டேன்.

10. மஞ்சு உலாம் சோலை வண்டு அறை மாநீர்

மங்கையார் வாள் கலிகன்றி

செஞ்சொலால் எடுத்த தெய்வ நல் மாலை
இவை கொண்டு சிக்கெள, தொண்டீர்!
துஞ்சும்போது அழைமின்; துயர் வரில், நினைமின்;
துயர் இலீர் சொல்லிலும் நன்று ஆம்;
நஞ்சு தான் கண்டீர் நம்முடைய வினைக்கு
நாராயணா என்னும் நாமம்.

**விளக்கம்**

மேகங்கள் உலாவும் சோலையும் வண்டுகள் ஒலிக்கும் நீர் நிலைகளும் உள்ள திருமங்கை நாட்டின் தலைவரான ஆழ்வார் வாள் ஏந்தியவர்; கலியின் தீமையைப் போக்கியவர்; இத்திருமங்கை ஆழ்வார் தம் செஞ்சொற்களால் அருளிய தெய்வ மாலையான இப்பாசுரங்களால் பகவான் திருநாமத்தைக் கூறுங்கள்; இறக்கும் காலத்தும், துயரம் ஏற்படும் பொழுதும் கூறுங்கள். துயரம் இல்லாதவர் கூறினாலும் நன்மையே தரும் நாராயண நாமம் நம் பாவங்களுக்கு நஞ்சாகும்.

## குணங்குடி மஸ்தான் சாகிபு

### தியானநிலை

குணங்குடி மஸ்தான் சாகிபு அவர்கள் கிபி.1792 ஆம் ஆண்டில் (ஹிஜ்ரி 1207) இவ்வுலகில் பிறந்தார். முகவை மாவட்டத்தில் உள்ள குணங்குடி என்னும் ஊரினில் நயினார் முகம்மது என்பவருக்கும் பாத்திமா என்பவருக்கும் மகனாகத் தோன்றினார். இவருக்கு இளமையில் சுல்தான் அப்துல் காதிர் என்று பெயர் சூட்டி மகிழ்ந்தனர் பெற்றோர். இவர் இளமையிலேயே புனிதநூலான 'குர்ஆனை' முழுமையாகக் கற்றுணர்ந்ததன் காரணமாக 'ஆலிம்' என்றபட்டத்தினையும் பெற்றார்.

மேலும் கீழக்கரையினைச் சேர்ந்த தைக்கா சாஹிபு அவர்களின் மாணாக்கராய் நின்று கற்பன வற்றைக் கசடறக் கற்றுத் தெளிந்தார். இளமையிலேயே துறவில் நாட்டம் கொண்டு உலக இன்பங்களை வெறுத்தொதுக்கிய இவர் கி.பி.1813இல் முறையான துறவு நெறியில் தம்மை இணைத்துக் கொண்டார். இதற்காக குணங்குடியார் மௌல்விஷாம் சாகிபு அவர்களிடம் தீட்சை பெற்றுக் கொண்டு மரபுக்குட்பட்டதான துறவு நெறியில் தம்மை இணைத்துக் கொண்டார். பகலில் நோன்பு, இரவில் தொழுகை, பின்னர் யோக நிட்டையில் ஆழ்தல் என்று தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். சிறு வயதினிலேயே ஞானச் சுடராகத் திகழ்ந்து பின் சூபி ஞானியாக மிளிர்ந்தவர். சி;ககந்தர் மலையில் பல ஆண்டுகள் நிட்டையில் இருந்தார்.

அவ்வாறே தமக்குரிய இத்துறவுக் காலத்தில் தமக்கான உணவாக கிழங்கு, காய், கனி, சருகு முதலானவைகளையே உண்டு வாழ்ந்தார்.

பலருக்கும் ஞான உபதேசம் செய்த இவர், மற்றவர்களுக்குக் கூறக்கருதிய செய்திகளை, குறிப்பாகவும் எழுதியும் மட்டும் காட்டியுள்ளார். இவரது சித்துக்களையும் அற்புதங்களையும் கண்டவர்கள், இவரை அற்புதச் சித்தர், பித்தநடையர், போதை வெறி உடையவர் என்று பலவாறாகக் கூறுகின்றனர்.

ஒரே இடத்தினில் தங்கியிருப்பதனை விரும்பாத இவர், பல வட பகுதிகளுக்கும் சென்று பின்னர் திருப்பரங்குன்றம், சதுரகிரி, காடு, குப்பைமேடு ஆனைமலை புறாமலை, நாகமலை, சில நகரங்களின் புறப்பகுதிகள் என்ப் பல இடங்களில் அலைந்து இறுதியாக சென்னையில் உள்ள இராயபுரம் பகுதியில் தங்கியுள்ளார்.

இராயபுரத்தினில் இவர் தங்கியிருந்ததான பாலாலெப்பை சாகிப் அவர்களின் தோட்டமானது அப்போது முட்புதர், மூங்கில் காடு, சப்பாத்திக் கள்ளி இவைகள் மண்டிக் கிடந்த ஓர் இடம் என்று கூறுகின்றனர்.

ஆனால் குணங்குடியார் தம்முடைய இறுதிநாட்களை இங்குதான் சுழித்துள்ளார். பின் கி.பி. 1838 ஆம் ஆண்டில் பரிபூரண நிலையனை அடைந்துள்ளார். இவர் மட்டுமின்றி இவரது குடும்பமும் பாரம்பரியமான புகழினை உடைய தாகவேத் திகழ்கின்றது.

இவரது தந்தையார் நயினார் முகம்மது ஒரு சிறந்த தமிழ்ப் புலமைச் சான்றோராகத் திகழ்ந்தவர். இவரது தாயார் குரிசில் நபி (சல்) அவர்களில் குடி வடிழத் தோன்றியவர். இவரது தாய்வழிப் பாட்டனார் முல்லா ஹுசைன் ஆவார்.

தம்மிடம் திருத்தொண்டு செய்து வந்த சீயமங்கலத்து அருணாச்சல முதலியாரிடம் தம்முடைய கவிதைகளைக் கொடுத்து திருத்தி வெளியிடும்படி கூறி, அவர் செயல்படுத்திய தன் விளைவாகவே இன்று நம் கைகளில் குணங்குடியாரின் பாடல்களாக 1079 பாடல்கள் பல்வகை இலக்கியங்களாகக் கிடைத்தள்ளன. முறையே அவை,

| **நூல்கள்** | **பாடல்கள்** |
|---|---|
| ஆநந்தப்பத்து | 11 |
| முகியத்தீன் சதகம் | 103 |
| முகியத்தீன் ஆண்டவர் கொச்சகம் | 4 |
| அகத்தீசன் சதகம் | 101 |
| மகுமூது நபியாண்டவர்துதி | 1 |

| | |
|---|---|
| தவமே பெற வேண்டும் எனல் | 14 |
| குறையிறங்கி உரைத்தல் | 7 |
| தவரா ஜமகிமை சாற்றல் | 1 |
| வானருள் பெற்றோர் | 1 |
| ஆனந்தக்களிப்பு(1) | 38 |
| நிராமயக் கண்ணி | 280 |
| பராபரக் கண்ணி | 100 |
| குமான் கண்ணி | 17 |
| எக்காலக் கண்ணி | 100 |
| கண்மணிமாலைக் கண்ணி | 100 |
| மனோன்மணிக் கண்ணி | 51 |
| நந்தீஸ்வரக் கண்ணி கீர்த்தனைகள் | 22 |
| ஆனந்தக்களிப்பு(2) | 28 |
| மொத்தம் | 1079 |

என்பனவாகும்.

**மனமோகமதை நாளும் நாட்டிவைத்து விழாமல் அவிழ்ந்தும் தேனொழுகச் சிறப்பிட வரவேண்டும்**

**1.** நவகண்ட யோகமே நான்கொண்ட மோகமதை
நாளும்எற் கருள்பு ரியவும்
நாவதனை ஒட்டிவிட்டு அந்நாளம் மாட்டிநிலை
நாட்டிவைத்து அருள்பு ரியவும்
அவிழுமொன் பதுவாயி லும்கட்ட வுங்கட்டும்
அவிழாம லருள்பு ரியவும்
அவயவா திகளும்நவ கண்டமாய் அவிடத்து
அவிழ்ந்திடற்கு அருள் புரியவும்
திவலைஒன் றாயினும் புல்நுனியின் மணியெனத்
தேனொழுக அருள்பு ரியவும்
சிற்றூற லூட்டவுஞ் சித்தாந்த முத்திச்
சிறப்பிட்டுன் அருள்பு ரியவும்
மவுனமணி யானமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்அகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

**விளக்கம்**

தவராஜ சிங்கமாகத் திகழ்பவனே! பெருமைபெற்ற குணங்குடி என்னும் புண்ணியத்தலத்தினில் எழுந்தருளி யுள்ளவனும், என் மனதின் உள்ளேயும் வாழும் அகத்தீஸ்வரனே! மௌனகுருவே!நான் விரும்பக்கூடியநவகண்ட யோகநிலையினை எனக்கு அருள் புரிந்திடவும், நாவின் சுவைநிலைகளை மாற்றி, அதனை அதனுடைய துளையில் பொருந்தும்படியான நிலையினைச்செய்திடும் உண்மைநிலையினை அருள்புரிந்திடவும். திறந்துள்ள ஒன்பது துளைகளையும் கட்டிவைத்திடவும், கட்டிய பின்னர் அது மீண்டும் அவிழ்ந்துவிடாமல்இருந்திடும்படியாகவும் அருள்புரிந்திடவும் உடல் உறுப்புகள் நவகண்டமாய் அவிழ்ந்து விடும்படியாக அருள்புரிந்திடவும். புல் நுனியின் மீதான மணியினைப்போன்ற தேன் ஒழுகும்படியாக அருள்புரிந்திடவும். சிற்றூறலை ஊட்டிடவும் சித்தாந்த முத்தியினைச் சிறப்பாக நான் அடைந்திட உன்னுடைய திருவருளினைப் புரிந்திடவும், மௌன மாணிக்கமான உண்மைத் தன்மையுடைய நீர் என்னருகினில் எழுந்தருளி வரவேண்டும்.

**மனம்பெரும்பாதை ஒன்றில் நீர்த்தூளி பண்ணிக்கடந்து கையூன்றி ஒன்றுக்குள் ஒன்றாக வரவேண்டும்**

2. பாலமுந் தாண்டியப் பால்நடக் கப்பெரும்
பாதையொன்று அருள்பு ரியவும்
பாறாக்க ளோஅனந் தங்களவை நிர்த்தூளி
பண்ணிவிட் டருள்புரியவும்
காலா லடர்ந்துசமர் செய்துதலம் ஆறும்
கடந்திடற்கு அருள்புரியவும்
கண்டத்தை வென்றுகா யாபுரிக் கோட்டைஎன்
கைப்படற்கு அருள்பு ரியவும்
ஓலமிட் டோங்கார உன்னதக் கம்பமங்கு
ஊன்றிடற்கு அருள்புரியவும்
ஓசைமணி மண்டபஞ் சென்றுநின்று ஒன்றுக்குள்
ஒன்றாக அருள்புரியவும்
வாலிபம் முதிருமுன் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்அகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

**விளக்கம்**

தவராஜ சிங்கமாகத் திகழ்பவனே! பெருமை பெற்ற குணங்குடி என்னும் புண்ணியத்தலத்தினில் எழுந்தருளி யுள்ளவனும், என் மனதின் உள்ளேயும் வாழும்

அகத்தீஸ்வரனே! மௌனகுருவே! பாவங்களைக் கடந்த ஒரு பெரிய வழியில் நடந்திடும்படியான நிலையினை எனக்கு அருள்புரிந்திடவும், பல்வேறு விதமான பாறைகளை நிலையற்றவைகளாகக் கடந்து அவை நிர்த்தூளி ஆகிடும்படியாக அருள்புரிந்திடவும், வாயுவினால் ஆறு ஆதாரங்களையும் சண்டை செய்து அதனைக் கடந்திடும்படியாக அருள்புரிந்திடவும், கண்டஸ்தானத்தை வென்று காயாபுரிக்கோட்டையானது என்னுடையகைவசப்படும் வகையில் அருள்புரிந்திடவும், சத்தநாத, செய்து ஓங்காரக் கம்பத்தினில் ஊன்றுவதற்கு அருள்புரிந்திடவும், சத்தமுடைய அழகான மண்டபத்தினுள்ளே சென்றிருந்து ஒன்றினுள் ஒன்றாகக் கலந்திடும்படியாக அருள்புரிந்திடவும், வாலிபம் முதிர்ந்த தன்மையுடைய நீர் என்னருகினில் எழுந்தருளி வரவேண்டும்

**மனமுட்புக ஒடுங்கிடத் தூங்கிடச் சோபிக்கத்**
**தகைதீர்ந்திடத் தேற்றிட வரவேண்டும்**

3. ஓங்கார மதுகொண்டு எழும்பிரண வப்பதியின்
உட்புகற் கருள்பு ரியவும்
உள்ளறையி னுள்ளவொரு மூலையில் சென்றங்கு
ஒடுங்கிடற்கு அருள்புரியவும்
தூங்காது தூங்கு சிவ யோகநித் திரைவந்து
தூங்கிடற் கருள்புரியவுஞ்
சுடருண்ட கர்ப்பூர உண்டைபோல் நின்றுடல்
சோபிக்க அருள்பு ரியவும்
தேங்காத் திருக்கருணை வெள்ளம் படிந்துதகை
தீர்ந்திடற்கு அருள்புரியவும்
தேறாத சிந்தையும் தேறவும் எனைக்கடைத்
தேற்றிவிட் டருள்புரியவும்
வாங்காஇன் ஓசையொடு தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்அகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

**விளக்கம்**

தவராஜ சிங்கமாகத் திகழ்பவனே! பெருமை பெற்ற குணங்குடி என்னும் புண்ணியத்தலத்தினில் எழுந்தருளி யுள்ளவனும், என் மனதின் உள்ளேயும் வாழும் அகத்தீஸ்வரனே! மௌனகுருவே! ஓங்கார மந்திரத்தினை எழுப்பக் கூடிய பிரணவத்திற்குரியபகுதியினில்நான் உள்ளே நுழைந்திடும்படியாக எனக்கு அருள்புரிந்திடவும், உள்ளறையின் உள்ளே உள்ள ஒரு மூலையில் சென்று தங்கி

ஒடுங்கிடும்படியான நிலையினை அருள்புரிந்திடவும், ஒளியினை உடைய சுடர்விடும் நெருப்பில் சேர்க்கப்பட்ட கர்ப்பூர உருண்டையினுடைய உடலானது ஒளிவீசிக்கரைந்துபோவதைப்போன்று என்னுடைய உடலானது மாறும்படியாக எனக்கு அருள்புரிந்திடவும், தெவிட்டிடாத இன்பம் போன்றதிருவருள் நிலையினுள் மூழ்கி நான் என்னுடைய சோகங்கள் முழுவதனையும் நீங்கி விடும்படியாக எனக்கு அருள்புரிந்திடவும், தெளிவற்ற நிலையில் உள்ள என்னுடைய மனமானது தெளிவடைந்து தேர்ந்திடும் படியாக என்னைக் கடைத்தேற்ற அருள்புரிந்திடவும், நீங்கிடாத இனிய ஓசையினை உடையவரான நீர் என்னருகினில் எழுந்தருளி வரவேண்டும்.

**மனமங்கங்கென்றுள்ளடங்கிப் பக்குவம்பண்ணி அமிர்த பானம் திருத்தி தீரமருள வரவேண்டும்**

4. ஆயபன் னிருகலையும் மாயாது தங்கவும்
அங்கங்கென் றருள்புரியவும்
அங்குசிங் கென்றும்ஐம் பத்தோ ரெழுத்துள்
அடங்கென்றுன் அருள்பு ரியவும்
பாயவும் வாசிகலை தேயவும் பக்குவம்
பண்ணிவிட் டருள்புரியவும்
பாலூற வும்சுழுனை மேலேற வும் அமிர்த
பானமெற்கு அருள்புரியவும்
தீயைப் பொருத்திஎன் நேயத் திருத்தித்
திருத்திவைத் தருள்பு ரியவுந்
தேரத் தெளிக்கவும் சேரப் பழிக்கவும்
தீரமொன் றருள்பு ரியவும்
மாயையைக் காயவும் தவராஜ சிங்கமே
வரவேண்டும் என்றன் அருகே
மாகுணங் குடிவாழு மென்அகத் தீசனே
மவுனதே சிகநாதனே.

**விளக்கம்**

தவராஜ சிங்கமாகத் திகழ்பவனே! பெருமை பெற்றகுணங்குடி என்னும் புண்ணியத்தலத்தினில் எழுந்தருளி யுள்ளவனும், என் மனதின் உள்ளேயும் வாழும் அகத்தீஸ்வரனே! மௌனகுருவே! பன்னிரெண்டு கலைகளும் அழிந்திடாமல் என்னுள் தங்கிடவும், அங்கங்கு என்று அருள் புரிந்திடவும், அங்கு, சிங்கு என்ற ஐம்பத்தோரெழுத்தும் உள்ளடங்கிடும் படியாக அருள்புரிந்திடவும், வாசியானது பாய்ந்திடவும், கலையானது தேய்ந்திடவும், பக்குவம் பெறும்படியாக எனக்கு

அருள்புரிந்திடவும்,அமிர்தமான துஊறிடவும்சுழிமுனையின்மேல் ஏறி அமிர்தபானத்தினைநான் அருந்திடும்படியாக எனக்கு அருள் புரிந்திடவும், நெருப்பினைக் கூட்டி, என்னுடைய குணத்தினுள் நிறுத்தி வைத்திடும்படியாக எனக்கு அருள்புரிந்திடவும், அறிவு தெளிவடைந்திடும் படியாகவும், தீமைகளைப் பழித்திடும் படியாகவும், ஒரு உயர்ந்த ஆற்றலினை உடையதைரியநிலையினை எனக்கு அருள் புரிந்திடவும், மாயைகளை ஒழித்திடக்கூடியவரான நீர் என்னருகினில் எழுந்தருளி வரவேண்டும்.

**மனம் வழிமருவச் சமர்செய்யத் தம்பனம்**
**அடைத்துச் சரணடைய வரவேண்டும்**

5. வங்குவங் கென்றுரீங் காரமுட னேகமேல்
வழிவிட்டுன் அருள்புரியவும்
வாசிதனி லேற்றியெனை மாசற்ற பரவெளியின்
மருவவைத் தருள்புரியவுஞ்
சங்குசிங் கென்றங்கு சண்டமா குதமெனச்
சமர்செய்ய அருள்புரியவும்
தம்பளங் கும்பித்தி ரேசிக்க வாயுவுள்
தம்பனம் அருள்பு ரியவும்
அங்குஅடங் குண்டஅமிர் தங்கடைந் தென்கடம்
அடைத்துவைத் தருள்புரியவும்
அம்மைகுண் டலிபாதம் ஆசரித் துச்சரண்
அடைந்திடற் கருள்புரியவும்
மங்காத தங்கமே தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்அகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

**விளக்கம்**

தவராஜ சிங்கமாகத் திகழ்பவனே! பெருமை பெற்ற குணங்குடி என்னும் புண்ணியத்தலத்தினில் எழுந்தருளி யுள்ளவனும், என் மனதின் உள்ளேயும் வாழும் அகத்தீஸ்வரனே! மௌனகுருவே! வங்! வங் என்றும் ரீங்ரீங் என்றும் சொல்லியபடி மேலே செல்ல மேலான வழியினை விட்டு எனக்கு அருள்புரிந்திடவும், என்னை வாசிக்குதிரையின் மீதினில் ஏற்றி, என்னை எந்தவிதமான குற்றங்களும் இல்லாத உயர்ந்த வெளியினில் சேர்ந்திடும்படியாக அருள் செய்தும், சங், சிங் என்று சண்டமாருதத்தினைப் போன்று சண்டை செய்திடும் படியாக அருள்புரிந்திடவும்,

ஸ்தம்பித்துங்கும்பித்தும், ரேசித்தும் காற்றினை சுவாசித்திடும் படியான நிலையினை அருள் புரிந்திடவும், அந்த இடத்தினில் அடங்கியுள்ள அமிர்தத்தினைக் கடைந்து என்னுடைய உடலில் அடைத்து வைத்திடும் படியான நிலையினை அருள்புரிந்திடவும். அம்மையான குண்டலி சக்தியின் பாதத்தினை வணங்கி, அவளுடையதிருவடிகளை அடைந்திடும் படியான நிலையினை அருள்புரிந்திடவும், ஒளிகுறையாத தவராஜ சிங்கமான நீர் என்னருகினில் எழுந்தருளி வரவேண்டும்.

**மனத்தீரஞ் சின்மம் எய்தாமல் என்னுள்**
**சுடர்சோந் தத்தொடரருள் வரவேண்டும்**

6. செத்தாலும் வைத்தடிபின் வாங்காது முன்னேறு
தீரமொன் றருள்புரியவும்
சிற்பர வெளிக்கூடு செல்லவும் சொல்லரிய
சின்மயம் அருள் புரியவும்
எத்தாத முத்திநெறி ஏற்றவு மறறெவையும்
எய்தாம லருள் புரியவும்
ஏகஉரு வாகிநின் றெங்குநிறை கின்றபொருள்
என்னுளுற அருள் புரியவும்
சுத்தமய படிகச் சுயஞ்சோதி பரவிமுச்
சுடர்கொழித் தருள்பு ரியவும்
சொக்குமதி மோகசுக வாரியமுது ஊட்டவும்
சொந்தத்தொ டருள்பு ரியவும்
வற்றாத செல்வமே தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்அகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

**விளக்கம்**

தவராஜ சிங்கமாகத் திகழ்பவனே! பெருமை பெற்ற குணங்குடி என்னும் புண்ணியத்தலத்தினில் எழுந்தருளி யுள்ளவனும், என் மனதின் உள்ளேயும் வாழும் அகத்தீஸ்வரனே! மௌனகுருவே! உயிர் போகும் நிலையே ஏற்பட்டாலும் நான் முன்வைத்த காலைப் பின்னே வைத்திடாமல் அஞ்சிடாமல் முன்னேறிச்சென்றிடக்கூடியநிலைஒன்றினை அருள்புரிந்திடவும், ஆகாய வெளியினில் சென்றிடக் கூடிய ஞானமயநிலை ஒன்றினை அருள்புரிந்திடவும், மோட்சவழியினை ஏற்றிடவும், மற்றவை என்னுள் பொருந்தி விடாத தன்மை ஒன்றினை அருள்புரிந்திடவும், ஒரே வடிவமாய் எங்கும் நிறைந்துள்ள பொருளானது என்னுள்ளும்

நிறைந்திடும்படியாக எனக்கு அருள் புரிந்திடவும், சுத்தமான சுயஞ்சோதிமயமானது என்னுள் பரவி மூன்று சுடர்களையும் ஏற்றி ஒளி வீசிடும்படியான நிலையினை அருள்புரிந்திடவும், சந்திரமண்டலத்தில் உள்ள அமிர்தத்தினை எனக்கு ஊட்டிவிடும்படியாக அருள்புரிந்திடவும், எப்போதும் வற்றிடாத செல்வமாகத் திகழ்பவரான நீர் என்னருகினில் எழுந்தருளி வரவேண்டும்.

**மனத்திட்டம் வைத்தென்னை எற்காராய்ந்து**
**அறிவதற்குச் சித்தம்வைத்து செய்யுநல்லருள்**
**புரியவர வேண்டும்**

7.இதமாகவே அடிமை பதமாம் பொருட்டாக
இட்டம்வைத் தருள்புரியவும்
எல்லாம் தாயேது மில்லாது மாய்நின்ற
என்னைஎற் கருள்பு ரியவும்
அதுவேய தானவோர் அருமறைப் பொருளைஆ
ராய்ந்திடற் கருள்பு ரியவும்
அறிவதற்கு அரிய அறி வாகார மானஉனை
அறிவதற்கு அருள்பு ரியவும்
சிதையுமித யத்தையுஞ் சிதையாது இருத்தவும்
சித்தம்வைத் தருள்பு ரியவும்
சேவடி கொடுத்திந்த நாயடிய னுக்குதவி
செய்யுநல் லருள்புரியவும்
மதமற்ற மதமுற்ற தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்அகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

**விளக்கம்**

தவராஜ சிங்கமாகத் திகழ்பவனே! பெருமை பெற்ற குணங்குடி என்னும் புண்ணியத்தலத்தினில் எழுந்தருளி யுள்ளவனும், என் மனதின் உள்ளேயும் வாழும் அகத்தீஸ்வரனே! மௌனகுருவே! நன்மையினைத் தரக்கூடிய உன்னுடைய அடிமையான நிலையினை அடைந்திடும்படியான நிலையினை அருள்புரிந்திடவும், எல்லாமாகவும், இல்லாததாகவும் இருக்கக்கூடிய எனக்கு என் னைப்புரிந்திடும்படியான நிலையினை அருள்புரிந்திடவும், எல்லோரும் புரிந்து தெரிந்து கொள்வதற்கு அறிய தன்மை உடையவரான உன்னை எளிமையாய் நான் புரிந்திடும் வகையினை அருள்புரிந்திடவும்,எளிதில் கெட்டுவிடும் தன்மை உடைய இந்த இதயத்தினை அப்படி ஆகிவிடாமல் காத்திடும்படிய நிலை ஒன்றினை எனக்கு

அருள்புரிந்திடவும், உன்னுடைய அடிமையான இந்த நாயினைப் போன்றவனுக்கு உன்னுடைய திருவடிகளைக் கொடுத்து அருள்புரிந்திடவும், மதங்களை ஒழிந்த மதத்தினை உடையவரான நீர் என்னருகினில் எழுந்தருளி வரவேண்டும்.

**மனத்தைத்தூக்கித் துணிந்திருந்திருக்கும்**
**நிலையம்நெக்குருக வரவேண்டும்**

8. தொலையாப் பவக்கடல் தொலைத்தும்அக் கரையிலே
தூக்கிவிட் டருள்புரியவும்
தொல்லைதரு தொல்லுலகை வெல்லவும் துறவில்
துணிந்திடற்கு அருள்புரியவும்
இலையும் புலர்ந்தசரு இங்கும்பு எரியற்று
இருந்திடற் கருள்புரியவும்
இருகலையி னூடுருவி முக்கலைக் கப்பால்
இருக்குமுன் னருள்புரியவும்
நிலையற்ற இதயத்தை நிலையத்து இருத்துதன்
நிலயமொன் றருள்புரியவும்
நிற்குநிலை சொக்கியா விற்வது நிற்கவும்
நெக்குருக அருள்புரியவும்
மலைவெலாந் தீர்க்கவும் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்அகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

**விளக்கம்**

தவராஜ சிங்கமாகத் திகழ்பவனே! பெருமை பெற்ற குணங்குடி என்னும் புண்ணியத்தலத்தினில் எழுந்தருளி யுள்ளவனும், என் மனதின் உள்ளேயும் வாழும் அகத்தீஸ்வரனே! மௌனகுருவே! நீக்கிடமுடியாத பிறவி என்னும் கடலினைக் கடந்து நான் அந்தக் கரையினை அடைந்திடும்படியான நிலையினை நீங்கள் எனக்கு அருள்புரிந்திடவும், உலகத்தின் மீதான ஆசைகளை வென்று துறவற நிலையில் துணிவுடன் ஈடுபாடு கொள்ளக் கூடிய நிலையினை எனக்கு அருள்புரிந்திடவும், இலையினையும், சருகினையும் தின்று என் பசியினை அடக்கிடும்படியான நிலையினை எனக்கு அருள்புரிந்திடவும், இடைகலை, பிங்கலை இவைகளைக் கடந்து மூன்று கலைகளுக்கும் அப்பால் இருந்திடக்கூடிய உன்னுடைய அருளினைப் புரிந்திடவும், நிலையற்ற இதயத்தில் உண்மையினை நிலையாக இருந்திடும்படியாகச் செய்து நல்ல நிலையினை அடைந்திடும்படியாக அருள்புரிந்திடவும். நின்ற நிலையிலேயே மயங்கி நின்றிடாமல் நான் இருந்திடும் படியாக எனக்கு

அருள்புரிந்திடவும், என்னுடைய பிரமைகளை எல்லாம் தீர்த்திடவும், நீர் என்னருகினில் எழுந்தருளி வரவேண்டும்.

**மனக்கருத்துக் கற்பித்தொழிந்து ஒதுங்கி நடந்து நானென வரவேண்டும்**

9. கானக விலங்கின்இன மாகும் வைராக்கியக்
கருத்தொன்றுன் அருள்புரியவும்
காடுவீ டாகவும் வீடுகா டாகவும்
கற்பித்தல் அருள்புரியவும்
ஊனிறைந் தோருரு வெடுத்துஆக யத்துறவு
ஒழிந்திடவுன் அருள்புரியவும்
உண்டுடுத் துப்பூணும் உலகநடை எனைவிட்டு
ஒதுங்கிடற் கருள்பு ரியவும்
ஞானோதயங்கண்டு மானாபி மானம்
நடந்திடவுன் அருள்புரியவும்
நானென்றது அற்றுநான் நாளாகும் வண்ணநீ
நானென்ற தருள்பு ரியவும்
வானுச்சி உலவுமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்அகத் தீசனே
மவுனதே சிகநா தனே.

**விளக்கம்**

தவராஜ சிங்கமாகத் திகழ்பவனே! பெருமை பெற்ற குணங்குடி என்னும் புண்ணியத்தலத்தினில் எழுந்தருளி யுள்ளவனும், என் மனதின் உள்ளேயும் வாழும் அகத்தீஸ்வரனே! மௌனகுருவே!

காட்டுவிலங்கினைப் போல மாறுகின்ற உறுதியினை எனக்கு அருள்புரிந்திடவும், காட்டினையே வீடாகவும், வீட்டினையே காடாகவும் எண்ணிக் கற்பனை செய்து வாழ்ந்திடும் தன்மையினை எனக்கு அருள்புரிந்திடவும், உடலினில் நிறைந்து ஒரே வடிவம் என்னும் நிலையினை எடுத்து, அதனால் என்னுடைய உறவுகளை விட்டு நீங்கி வாழ்ந்திடும்படியான நிலையினை எனக்கு அருள்புரிந்திடவும், உண்ணுதல், உடுத்துதல் போன்ற உலகத்தினுடைய செயல் பாடுகள் என்னை விட்டு விலகிடும்படியான நிலையினை எனக்கு அருள்புரிந்திடவும், நான் அடைந்த ஞானத்தின் மூலமாக, மானம் மற்றும் விருப்பங்கள் கடந்திடும்படியான நிலையினைஎனக்குஅருள் புரிந்திடவும்,நான் என்கிறநிலையினை விட்டு, நான் நானாகவே இருந்திடும்படியான நிலையினை நீ எனக்கு நல்லவிதமாக

அருள்புரிந்திடவும், ஆகாயத்தின் உச்சியில் வசித்திடக் கூடியவரான நீர் என்னருகினில் எழுந்தருளி வரவேண்டும்.

**மனத்தில் நடனஞ் சந்நிதியிற் சென்று திறந்து**
**வசம் வளர்ந்தேற வரவேண்டும்**

10. நாசிநடு வணைநட்ட நடுவில்நின்று உல்லாச
நடனமிட அருள்பு ரியவும்
நாதநா தாந்தம் முழங்குமோர் தெய்வசந்
நிதியில்விட் டருள்புரியவும்
தேகதரும் ஓசைமணி மாமண்ட பத்தினுள்
சென்றிடற் கருள்புரியவும்
திரையைக் கடந்தங்கு அடங்கஉள் அறையைத்
திறந்துதந் தருள்பு ரியவும்
வாசங் கொழுத்தகம லாசனத் தையும்என்
வசங்கொடுத் தருள்புரியவும்
வற்றாத செல்வங்கள் எத்தேச காலமும்
வளர்ந்தேற அருள்புரியவும்
மாசேதும் அற்றமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்அகத் தீசனே
மவுளதே சிகநா தனே.

**விளக்கம்**

தவராஜ சிங்கமாகத் திகழ்பவனே! பெருமை பெற்ற குணங்குடி என்னும் புண்ணியத்தலத்தினில் எழுந்தருளி யுள்ளவனும், என் மனதின் உள்ளேயும் வாழும் அகத்தீஸ்வரனே! மௌனகுருவே!

மூக்கின் நடுவில் உல்லாசமாக நடனம் செய்திடும்படியான ஞான நிலையினை எனக்கு அருள்புரிந்திடவும் தொனிகள் உண்டாகக்கூடிய தெய்வ சந்தியின் உள்ளே இருந்திடும் படியான நிலையினை அருள் புரிந்திடவும், நாததத்துவத்துள் செல்லும் நிலையினை அருள் புரிந்திடவும், திரைகளைக் கடந்து அந்த இடத்தினில் உள்ள உள்ளறையினைத் திறந்திடும் படியான நிலையினை (மாயைகளைக் கடந்து ஞான அறையை அடைந்திடும்படியான நிலையினை) அருள்புரிந்திடவும், வாசம் வீசக்கூடிய தாமரை ஆசனத்தினையும் நான் அடைந்திடும் படியாக எனக்கு அருள்புரிந்திடவும், அழிந்திடாத செல்வங்கள் எப்போதும் ஓங்கி நிறைந்திடும்படியான நிலையினை எனக்கு அருள்புரிந்திடவும், குற்றங்கள் நீங்கியவரான உண்மைத் தன்மையுடைய நீர் என்னருகினில் எழுந்தருளி வரவேண்டும்.

**இயேசு காவியம்**

**கண்ணதாசன்**

131. இயேசுவா, பாபாசா?

நல்ல மனத்துப்பி லாத்திடம் –மீண்டும்
நாயக னைக்கொண்டு வைத்தனர்- “இனி
இல்லை ஒருகுற்றம் இயேசுமேல்- தானும்
ஏதோது வும்எண்ணு கின்றனம் – இன்று
சொல்லும்உம் சொல்லைம திப்பதால்- ஒரு
சொற்பப் பரிசுகொ டுக்கிறேன் – பொருள்
வல்வதம் பண்டிகை நானியே – மன
மாரவி டுதலை செய்கிறேன்!”

இந்த மொழிகளைக் கூறினால் – மக்கள்
“இல்லை இல்லை” எனக் கத்தினார் – “சரி
சந்தததம் பாஸ்காவி ழாவிலே- ஒரு
சாகசக் கைதிவி டுதலை- அதில்
முந்தி நடக்கும் வழக்கமாம்” – மன்னன்
முன்பொரு கள்வனும் நின்றனன்- “இனி
அந்தத் திருடனைத் தள்ளுங்கள் – இந்த
ஆணவக் காரனைக் கொல்லுங்கள்”

கூக்குரல் இட்டனர் மக்களே- அந்தக்
கோலத்தில் ஆளுநன் பைங்கிளி- நல்
வாக்கொன்று சொல்லி அனுப்பினன் – “இயேசு
வல்லவர் எச்சரிக் கை”என – கொடுத்
தீக்குள்ளே சிக்கிய கன்றுபோல்- பிலாத்து
செய்தி அறிந்து துடித்தனன்- அங்குத்
தாக்கிடும் மக்களுக் காறுதல்- தர

தண்டனை போலொன்று தந்தனன்!

குற்றம் இல்லாதவர் இயேசுவே – எனும்
கொள்கை அவனிடம் உண்டுகாண்- நன்கு
கற்றவன் ஆதலின் நெஞ்சிலே- ஈரம்
கடுகள வாவது நின்றதாம்- பெரும்
பற்றி லவரையும் பார்த்தனன்- மக்கள்
பக்கமும் பார்த்து வியந்தனன்- தனைச்
சற்று நினைத்தபின் மக்களைப் – பார்த்துத்
“தண்டனை நீர்கொடு மெ”ன்றனர்!

கோவில் குருக்களும் வேதரும் – மன்னன்
கூறிய வாக்கினை ஏற்றிவர்- “உயர்
தூயஎம் பூத விதிப்படி – இன்று
தூக்கிவைத் தேகொலை செய்குவீர்- இவன்
மாய்வது தான்விதி” என்றனர்- நின்ற
மந்தைக ளுமஇதை ஏற்றனர்- சொல்ல
வாயற்ற மன்னவன் இயேசுவின் – பக்கம்
வந்தழைத் தேஉன்னில் சென்றனன்!

“உன்னை விடுதலை செய்யவும்- இல்லை
ஊனுட லைஇன்று கொல்லவும்- இந்த
மன்னனெ னக்கதி காரமே – உண்டு
மற்றென்ன வேண்டும்உ ரைக்கநீ- சொல்க”
என்றவன் இயேசுவைக் கேட்டனன்- அவர்
இன்முகத் தோடொன்று சொல்லுவார்- “அந்தத்
தந்தை உமைப்பணிக் காவிடில்- எந்தன்
தாழ்வுக்கும் வாழ்வுக்கும் நீவிர்யார்?”

132. சாட்டையடி

ஆனாம்பி லாத்தும யங்கினன்- அவன்
அன்புடன் அண்ணலை நோக்கினன்- ஒரு
கேள்வியில் லாதவி டுதலை –தரக்
கேடற்ற நெஞ்சினில் எண்ணினன்- அவன்
தானாம்த லையும்ந டுங்கினன்- அவர்
'சத்தியம்' என்றேஉ ணர்ந்தனர்- அங்குக்
குழும்ம தப்பரி சேயரோ- அவன்
சொக்கிவி ழுவதைப் பார்த்தனர்!

"தீயன்இ வனைவி டுவித்தால்- மன்னர்
சேசாருக் கேபகை யாகின்றீர்- அந்தி
சாயும்பொ ழுதிலெ லாமிவன்- யூதர்
தங்களின் மன்னவன் என்றனன்- உயர்
மேயநம் சேசாரை அன்றிஓர்- மன்னர்
மேதினி யில்இருப் பார்களோ?" –தினம்
பாயும்பு லிகளின் வார்த்தையில்- பிலாத்து
பட்டுத் திகைத்தனன் அங்ஙனே!

காட்டும னிதரின் சொல்லிலே- சிக்கிக்
கட்டளை இட்டனன் ஆளுநன் – கொடும்
சாட்டைஅ டிதரக் கூறினன்- அவர்
சால்வையை வீரர்கள் நீக்கினர்- மக்கள்
காட்டிய தூணொன்றில் சாய்ந்தனர்- அவர்
காலைத்த லையைப்பி ணைந்தனர்- வன
வேட்டையில் நாயெனச் சூழ்ந்தனர்- அங்கு
வெள்ளெமெல் றோடிஅ டித்தனர்!

நாற்பதில் ஒன்றுகு றைத்துத்தான் –அடி

சல்குவ ராம்அந்த நாளிலே- வெற்று
ஆர்ப்பரிக் கும்அந்தக் கூட்டமோ- எண்ணி
ஆயிரம் நூறென ஆடிற்றாம்- முற்றும்
தோற்பவர் இப்படி ஆடுதல்- இந்தத்
தொல்புவி யில்உள்ள வேதமே- அதை
ஏற்றது நாயகன் மேனியே- இரத்தம்
இன்னொரு யூதர்கள் கேணியே!

133. இதோ மனிதன்

முள்ளில்ம குடத்தைச் சூட்டினர்- ஒரு
மூங்கில்த டியையும் நாட்டினர்- அவர்
எள்ளிந கைத்தனர் சூழ்ந்தனர்- காறி
எச்சிலைத் துப்பினர் பாய்ந்தனர்- தம(து)
உள்ளங்க டுத்தவர் மண்டியில் – நின்று
“யூதரின் ராஜனே!” என்றனர்- இயேசு
பிள்ளைமு கத்தினில் குத்தினர்- கொச்சைப்
பேச்சுக்க ளாயிரம் பேசினர்!

தோலைப்ப றித்தஉ டம்பினை- இரத்தம்
சொட்டுச்சொட் டாய்விழும் மேனியை – தெய்வக்
காலைத்த லையைக்க ரத்தினை- இரத்தம்
கட்டிஇ ருக்கின்ற ஞானியை- நற்
கோலம்இ ழந்தஇம் மூர்த்தியை – வெறும்
குற்றுயி ராய்நின்ற கீர்த்தியை- உயர்
சீலம்பி குந்தபி லாத்தவன்- கொண்டு
தீயவர் முன்பு நிறுத்தினன்!

“பாவம்ம னிதன்”என் றானவன்- “இவர்
பாவம்எ தையும்அ றிந்திலேன்- நான்

ஏவிய தண்டனை போதுமே” – என
ஏக்கத்தி லேஅவன் கேட்டனன் – பெருங்
கோவில்தி ருடர்கள் கத்தினர்- “இல்லை
கொல்லுசி லுவையில்” என்றனர்- ஓங்கிக்
கூவுகி றார்அவர் தீர்ப்பையே- அவன்
கோபமுற் றான்அதைக் கேட்கவே!

ஆத்திரம் தன்னை அடக்கியே- தன்
அந்தரங் கம்தனை நோக்கியே – ஒரு
பாத்திரத் தில்தண்ணீர் கேட்டனன்- உயர்
பண்புள்ள ஆசனம் சேர்ந்தனன்- “செய்த
சாத்திரம் கெட்டது கெட்டதே – இனி
தண்டனை நீங்கள்கொ டுக்கலாம்- நான்
மாத்திரம் இன்றதை ஒப்பிலேன்” – என்று
மாற்றித்தன் கைகள்க ழுவினான்!

“ஆனது ஆகட்டும் எங்களை- இனி
ஆயிரம் குழட்டும் பாவமே – இந்த
ஈனஉ டலைச்சி லுவையில்- அறைத்
திட்டெடுப் போமெ”னக் கூவினர்- நிலம்
வானமும் அஞ்சும்தி ருடனை- அவன்
“வாழ்க”வென் றேஅவிழ்த் தோட்டினர்- தவ
ஞானமு னிவனின் கைகளில்- அங்கு
நான்குவி லங்கினைப் பூட்டினர்!

ஆடுதி கர்த்தவர் மக்களே – இலை
ஆடிய பக்கத்தில் ஓடுவார்- அவர்
நாடிய மன்னனைப் போற்றிய – வாயில்
நாலுமொ ழிகளும பேசுவார்- உடல்

கூடுவி ழுத்தபின் யானையைக்- கொசு
கொத்திக்க டிப்பது போலவே- துன்பக்
கொடுவி ழுந்தவர் மேனியில் – புதுக்
கொள்கையை யும்மக்கள் தீட்டுவார்!

134. யூதாசின் முடிவு

கன்னமிலாத் திருக்குமரன் கடும்பரிசு பெற்றதனைக்
காதிற்கேட்டு
வெள்ளமெனும் கண்ணீரில் விழுந்துவிழுந் தேபுரண்டு
வேர்வை விட்டு
உள்ளமெலாம் தீயாக உடல்முழுதும் நோயாக
உணர்ந்த யூதாஸ்
கொள்ளையெனப் பெற்றபணம் முழுவதையும் கரத்தெடுத்துக்
கொண்டு போனான்!

வஞ்சகத்தின் முழுவடிவம் வருடங்கள் வெற்றிபெறும்
வாழ்நா ளெல்லாம்
நெஞ்சகத்தில் புண்விழுந்து நினைவெல்லாம் சீழ்வடியும்
நேரக் கண்டோம்!
மஞ்சளையே வெளுப்பென்றான் மழைநீரை நெருப்பென்றான்
மனது வெம்பி
நஞ்சுடைய குருக்களெலாம் வாழ்கின்ற சபைநோக்கி
நடந்து சென்றான்!

கைக்கூலி பெற்றபணம் முப்பதையும் காலடியில்
கரந்து போட்டு,
“பொய்க்காகப் பணம்தந்தீர் புனிதமிகு பெரியோன்மேல்
பொய்சொன் னேன்யான்!
வைக்காத கொள்ளியெலாம் வைத்துவிட்டேன் மாபாவம்

வளர்த்துக் கொண்டேன்

இக்காசு எனக்கெதற்கு?" எனக்கூறி அவர்முன்னே

ஏங்கி நின்றான்!

"உன்பாடு அவர்பாடு ஓடிப்போ!" எனஉரைத்தார்

உள்ளங் கெட்டோர்!

"பண்பாடு கெட்டவர்கள் பலபாடு படுவார்கள்"

எனப்ப கன்று

தன்பாடு கண்டஅவன் ஓரிடத்துச் சென்றாங்கே

தனிமை கண்டு

அன்போடும் "குருதேவா நான்பாவி" என்றபடி

அழுது நின்றான்!

"தாய்வயிற்றில் பிறந்தஉடல் முழக்கயிற்றில் போகட்டும்

சாவே வாராய்!

நாய்வயிற்றை வளர்ப்பதுபோல் நான்வளர்க்க நினைப்பதனால்

நான்று கொள்வேன்!

பேய்களென வாழ்வோர்க்குப் பாடமென ஆனேன்நான்

பின்னால் என்னை

ஓய்வுடைய நேரமெல்லாம் வசைபாடி மகிழட்டும்

உலகத் தானே!"

என்றபடி தனைத்தானே கொன்றுகொண்டு யூதாசும்

இறந்து போனான்!

கொன்றஅவன் விட்டெறிந்த பணத்தையெல்லாம் தாமெடுத்த

குருக்கள் மார்கள்

நன்றறியா அப்பணத்தில் கோவிலுக்கு ஏலாத

ரத்தம் கண்டார்!

நின்றவர்கள் யோசித்து அந்நியர்கள் பிணம்புதைக்கும்

நிலம்பெற் றாரே!

135. பாரச் சிலுவை

தொட்டதெல்லாம் பொன்னாகும் வள்ளலிடம் சென்றுஒரு
தொழுநோய்க் காரன்
விட்டெறிந்த பணம்போல இயேசுபிரான் கைகளிலே
வீர ரெல்லாம்
எட்டுப்பேர் சுமக்கின்ற பெருஞ்சிலுவை தனையாங்கே
எடுத்து வைத்தார்!
கட்டளைபோல் பெருவானம் கலக்கமுற ஓர்மின்னல்
கண்ட தம்மா!
நல்லவர்க்கு மழைபொழியும் நாய்களெனில் நிலங்காயும்
நன்மை இல்லாக்
கல்மனத்தர் நடந்துசென்றால் முள்ளாக மாறிவிடும்
கடலின் பஞ்சும்!
சொல்லறியா இயேசுபிரான் தோள்களியே சிலுவையினைச்
சுமந்த போது
கொல்லவரும் பாம்புகளும் புலிகளுமே பெருங்கண்ணீர்
கொட்டிற் றம்மா!
வானகமும் வையகமும் கூடுவதைக் குறிப்பதுபோல்
சிலுவை வைத்து
மானமெனும் ஓர்பண்பை மனிதகுலம் காண்பதற்கு
மனது வைத்துத்
தானமொடும் தவம்பெருக முன்னாலே மகுடமதைத்
தலையில் வைத்து
ஞானமகன் நின்றவுடன் ஞாலமெலாம் ஓர்பொழுது
நடுங்கிற் றம்மா!

அவமானம் மிக்கவர்கள் அவர்மானம் தனைப்பறிக்க
அவரின் தோளில்
அவமானச் சின்னமதை அணைத்தேற்றி வைத்தார்கள்
ஆன போதும்

புவிமானம் காப்பதற்குச் சிலுவைதனை முத்தமிட்டுப்
புனித அண்ணல்
உவமான மாசுவரும் எதிர்காலத் தனைஎண்ணி
உடன்சு மந்தார்!

எத்தனையோ பாவிகளின் பாவத்தைத் தன்தோளில்
ஏற்றுக் கொள்ள

உத்தமனார் சிலுவையினை உடல்வைத்து அதன்மீது
உள்ளம் வைத்தார்!
கத்திமுனை பின்தொடரப் புத்தியுள்ளோர் கண்கலங்கக்
கால்ந டந்து
சத்தியத்தின் திருக்குமரன் தள்ளாடும் உடலோடும்
தவழ்ந்து சென்றார்!

ஊனுடல் தள்ளாட உதிரமெலாம் ஆறாக
உலக நாதன்
வானுமிழும் மழைபோலத் தேகமெலாம் வியர்வைவர
மண்ணில் வீழ்வார்!
ஆனவரை சாட்டையடி கொடுப்பார்கள் மறுபடியும்
ஐயன் நிற்பார்!
வானவரின் திருக்குமரன் முகங்காண மாந்தரெல்லாம்
வந்தார் ஆங்கே!

தலையினிலே முள்வலியும் தாளாத உள்வலியும்
தாக்கி னாலும்
நிலையினிலே குன்றாமல் நெடுஞ்சிலுவை சுமந்தபடி
தேவ நேயன்
அலைஅலையாய் வருவோர்முன் அசைந்தாடி நடக்கின்றார்

அதனைப் பார்த்து
நிலைகுலையா வஞ்சுகரும் உதிரத்தால் அழுதனரே
நெஞ்சம் வேர்த்து!

வேதமகன் தாளாமல் பூமியிலே மூன்றுமுறை
வீழ்ந்து வீழ்ந்து
சோதனையைப் பொறுத்தாலும் சுமக்கும்உடல் பொறுக்கவில்லை
சோர்ந்து சோர்ந்து
நாதனையே மனத்தெண்ணி நாட்டாரைக் காப்பாற்ற
நடந்து சென்றார்
போதனையைச் சொன்னவர்க்குச் வேதனையும் சோதனையும்
பொறுமை தானே!

136. தாயும் சேயும்

திருக்குமரன் நிலைபற்றி ஊரார்கள் பேசுகிற
செய்தி கேட்டு
உருக்கமுறத் திருமாதா எருசலேம் தனைநோக்கி
ஊடி வந்தாள்!
சுருக்கமுற ஒருத்திஅவர் அடைந்ததொரு தண்டனையைச்
சுவையாய்ச் சொன்னாள்
நெருக்கமுறும் மக்களையே தள்ளிஅவள் மைந்தனையே
நெருங்கி வந்தாள்!

பதினாலாம் நாள்நிலவைப் பால்நிலவைத் தன்வயிற்றுப்
பணியைத் தேனைப்
புதனோடும் வியாழனொடும் பொருந்துகின்ற மதியழகைப்
பூப்போற் கண்ணை
மதலையிலே பார்த்திருந்த மரியாளாம் மாதாஇவ்
வடிவம் பார்த்தாள்
முதலைகளின் வாய்பட்டுச் சிதைவுற்ற தன்மகனின்

முகத்தைக் கண்டாள்!

தொட்டிலிலும் கட்டிலிலும தோளிலிலும் மார்மேலும்
சுமந்து நின்று
பட்டயமும் பரிசுகளும் பலர்பாடும் பாடல்களும்
பரிவும் கேட்டுச்
சட்டமெலாம் காலடியில் தர்மமெலாம் கையணையில்
தாங்கி நின்ற
வட்டநிலா போய்மகனைச் சுட்டெரித்த பாவிகளின்
வரிசை கண்டான்!

தாய்மொழியும் பேசவிலை அவர்மொழியும் பேசவிலை
சாலை ஓரம்
பேய்விழிகள் பார்த்திருக்கப் பெண்விழிகள் நீர்கலங்கப்
பேச்சிம் வாது
வாயடைத்து மனம்வெடித்து மவுனத்தின் பரிபாஷை
மயக்கம் கொண்டார்!
போயுரைக்க ஒருவரிலை பொய்யுரைக்கும் மானிடர்க்கா
புத்தி யுண்டு!

ஈன்றெடுத்த போதினிலே பெரிதுவக்கும் திருமகனை
இந்த நேரம்
ஊன்றிவைக்கும் சிலுவையுடன் பார்ப்பதற்கோ திருமாதா
உயிர்ப படைத்தாள்?
ஆன்றவிந்த ஞானியரும் இக்காட்சி கண்டவுடன்
அழுவார் என்றால்
தோன்றியதே ஒருமகன்தான் என்றிருந்த திருமாதா
சோர்வு றாளோ?

நின்றார்கள் பார்த்தார்கள் சென்றார்கள் என்பதலால்

நிறைந்த வார்த்தை

ஒன்றேனும் பேசவில்லை ஆனாலும் இருவரது

உள்ளத் துள்ளே

'இன்றேனும் பார்த்தோமே' என்றதொரு நிம்மதிதான்

இருந்த தம்மா!

சென்றாரைப் பின்தொடர்ந்து செல்பவரும் தினந்தோறும்

தேம்பு வாரோ?

137. கசிந்த நெஞ்சங்கள்

தேவமகன் போதரனையில் தனைக்கொடுத்த வெரோனிக்கா

சிறிய நங்கை

காவலரை நீக்கிஒரு கைத்துண்டைக் கரத்தேந்திக்

கடந்து வந்தாள்

ஆவலுடன் துடைத்திட்டாள் திருமுகத்தை அழகுமகன்

அந்தத் துண்டால்!

பாவிகளின் நடுவிலுமோர் புண்ணியத்தை இறைவனவன்

படைத்திட் டானே!

வீரரெலாம் சூழ்ந்தவளைப் பிடித்தார்கள் கூட்டத்தின்

வெளியே தள்ளி

ஓரமுற விட்டார்கள்; இயேசுவிடம் உயிர்வைத்த

உத்தமப் பெண்

நீர்வடியும் கண்களுடன் அத்துண்டை இல்லத்தே

நிமிர்ந்து பார்த்தாள்

கார்முகிலின் திருமுகத்தை முழுவடிவில் அதிலேயே

கண்டு கொண்டாள்!

சிலுவையினைத் தூக்குகிற சக்தியிலா நிலைமையிலே

ஜீவன் போகும்

வலுவிழந்த இயேசுவினைப் படைவீரர் பார்த்தார்கள்

மரணம் வந்தால்

சிலுவைஎனும் தண்டனைக்கு மதிப்பிலையே என்பதனால்

சீமோன் என்று

தொலைவில்நின்ற கிராமத்தான் முதுகினிலே சிலுவையினைச்

சுமக்க வைத்தார்!

கொடுஞ்செயலில் தண்டனையை அடைந்தஇரு திருடர்களும்

கூட வந்தார்

தொடர்ந்தவர்கள் தம்சிலுவை தமைத்தாமே தோளினிலே

சுமந்து வந்தார்!

படம்பிடித்த இசையாக வார்த்தையிலே ஒன்றாங்கே

பலித்த தன்றே

திடமறியாக் குழுவினரால் இயேசுபிரான் திருடருடன்

சேர்க்கப் பட்டார்!

நங்கையர்கள் தாய்மார்கள் நற்கருணை கண்டவர்கள்

நாடி வந்து

தங்கண்கள் மழைபொழிய தாளாமல் விம்மியவர்

தானைத் தொட்டார்!

பொங்கிவரும் கருணையினால் “என்தாயே!” என்றவர்க்குப

புத்தி சொல்வார்;

“எங்கடனுக் கழுவதிலே லாபமில்லை ஒன்றைநீர்

ஏற்றுக் கொள்வீர்!

“எருசலேம் மங்கையரே! எனக்காக அழவேண்டாம்;

எதிர்கா லத்தில்

வருகின்ற மக்களுக்காய் மழலைக்காய் அழுதிடுங்கள்!

‘மகவில் லாத

அருள்நிறைந்த பெண்களெலாம் பேறுபெற்றார்' எனச்சொல்வார்

அந்த நாளில்

கருவிருந்தால் பெருந்துன்பம் இல்லையெனில் கடவுள்துணை

காணு வீரே!

"என்போலும் பச்சைமரம் இப்பாடு பட்டதெனில்

எதிர்கா லத்தில்

தன்பால் வளர்ந்துவரும் பட்டமரம் பெரும்பாடு

தான்ப டாதோ?

பொன்போலும் தாய்மாரே புகழுடைய பெரியோரே!

போகின் றேன்யான்

மன்பதையில் ஊமைபோலும் நல்லவர்கள் உள்ளதையும்

மறக்கி லேனே!"

138. மேனியைத் துளைத்த கூரிய ஆணிகள்

தொங்கிவிட்ட சதைகளிலே மேலாடை போர்த்திஅதில்

சிலுவை தூக்கிப்

பங்கமுறச் சவுக்கடியும் பலவாங்கி நெடுந்தூரம்

பயணம் செய்த

தங்கமகன் கல்வாரி மலைமீது கொண்டுவந்து

தள்ளப் பட்டார்

அங்கியினை உரிக்கையிலே உறைரத்தம் மறுபடியும்

அழுத தம்மா!

வஞ்சகர்கள் சிரிப்பதுவும் மதுக்குளத்தில் நீந்துவதும்

வாழ்க்கை எல்லாம்

பஞ்சனையில் தூங்குவதும் பால்பழங்கள் அருந்துவதும்

பண்பு மிக்கோர்

வெஞ்சிலுவை ஏறுவதும் வெங்கொடுமை தாங்குவதும்

வேதம் என்றால்

நஞ்சிருக்கும் பாத்திரமே நல்லவரின் பாத்திரமோ

அறியோம் நாமே!

நாயகனைச் சிலுவையிலே சாய்த்தார்கள் ஆணிகளை

நன்றாய்த் தட்டிக்

காயங்கள் யாவினுக்கும் குழந்தைகளைக் கொடுத்தார்கள்

கடைசி யாக

வாய்த்திருந்த சிலுவையினைத் தொப்பென்று பெரும்பள்ளம்

தவில்வைத் தார்கள்

பாய்ந்திருக்கும் ஆணியுடன் பொன்மேனி துடிதுடித்துப்

பதைத்த தம்மா!

அக்கிரமம் வென்றதென ஓராணி கைகளிலே

அறைந்தி ருந்தார்

மக்களினம் தோற்றதென மறுஆணி கால்களிலே

அடித்து வைத்தார்!

கொக்கரித்தார் மண்டியிட்டார் குறும்பான வார்த்தைதான்

கூறி நின்றார்

எக்களிப்பும் மகிழ்ச்சிகளும் இன்னொருநாள் வரும்வரைக்கும்

இருப்ப தன்றோ!

மண்ணுலகில் இருந்தபடி விண்ணுலகை எதிர்பார்த்த

மகாத்து மாவை

வின்னரக மண்ணரக இரண்டுக்கும் நடுவினிலே

வீங்க வைத்தார்!

கண்ணரக செய்கின்ற கருணைமகள் தனைப்பார்த்துக்

கடவுள் கூட

என்னரிய இடிகளினால் வானத்தைப் பூமிதன்

இடித்தார் அம்மா!

அவர்பக்கம் இருக்காவர் அவர்போலே சிலுவையிலே
அறையப் பெற்றார்!
தகவறான பேர்களுடன் தத்துவத்தின் ஞானிகளைத்
தளைக்கும் போக்கில்
தமர்வைத்து நாடாளன் வெருநாளைத் திருடர்க்குச்
சொந்த யன்றோ!
அவமானம் செய்வதுதான் அவர்நோக்கம் வெற்றிஎன்ன
அவர்க்குத் தானோ?

சிலுவையிலே யூதர்களோர் சின்னத்தை அவர்தலைமேல்
செதுக்கி வைத்தார்!
அலகையவர் எழுதியது குற்றச்சாட் டானாலும்
அகில உண்மை!
நலமுடைய "இல்ரேலின் நசரேனும் இயேசுஇவர்
யூத மன்னர்
கலகலெனச் சிரித்தார்கள்; எழுதியது வரலாறு
கதையே அல்ல!

படைவீரர் இயேசுபிரான் ஆடைகளை எடுத்தார்கள்
பங்கு போட,
கொடிபோன்ற அங்கிதனைத் கையினிலே எடுத்தார்கள்
கூறு போட!
முடிபோட்டுத் தைக்காமல் அத்துணியோ தாய்நெசவில்
முகிழ்த்த தாலே
வடிவத்தைக் கெடுக்காமல் சீட்டொன்று போட்டெடுக்க
மனது வைத்தார்!
மறைநூலார் வாக்கினிலே இதுபோல தேருமெனும்

வார்த்தை ஒன்று

இறைவாக்குப் பலித்ததுபோல் இவரந்த மீட்பரெனப்

பலித்த தின்று!

அருள்வாக்கில் ஓர்வாக்கும் பொய்யாகா தப்படியே

ஆன வாறு

பொருளாகி இறைமைத்தன் இவரென்றே வரலாற்றில்

பொலிந்த தன்றே!

139. எல்லாம் நிறைவேறிற்று

வழிவழி சென்ற மந்தைகள் எல்லாம்,

“இயேசுவே நீதான் இறைவன் மகனா?

இறைவன் மகனே என்பா யாயின்

இறங்கிவா பார்ப்போம்” என்று சிரித்தார்!

பரிசே யர்கள் பக்கம் நின்று,

“கடவுள் என்றே கதறிக் கிடந்தான்

கடவுள் இன்று காக்க வரட்டும்!

தேவன் பெற்ற திருமகன் என்றான்

தேவன் இவனைச் சேர்த்தனைச் சுட்டும்!

தன்னைத் தானே காவா தவனை

மக்கள் எப்படி மதிப்பார்?” என்றார்!

வந்தோர் போனோர் மக்கள் குருக்கள்

எல்லோ ரும்இவ் வேளனம் செய்தார்!

துன்பச் சிலுவையில் தொங்கிய இயேசு

அன்புட னேஉரு அருள்மொழி சொன்னார்;

“தந்தாய் இவரைத் தாம்மன் ளிப்பீர்;

செய்வ தறியாது செய்கின் றார்கள்!”

பக்கத் திருந்த பண்பிலாத் திருடன்,

“மீட்பர் நீரோ மீட்பர் எமையோ!”

என்றான் உடனே இன்னொரு திருடன்

அவனது வாயை அடங்கிய பின்பு

இயேசுவைப் பார்த்து இன்முகத் தோடு,
“தேவரு மாரா! திருஅவ தாரா!
வரும் இடத்தில் இறைவனின் அரசில்
எனையும் அழைத்து என்னை மீட்டு
பாவம் தீர்த்துப் பக்கம் வைப்பீர்!”
என்றான உடனே இயேசுவும் நோக்கி,
“இன்றே நீயும் என்னுடன் அந்தப்
பரலோ கத்தில் பக்கத்தில் இருப்பாய்
உள்ளம் இதுவே உரைத்தோம்” என்றார்!
பிற்பகல் நேரம் பெருகிய வானம்
இருநா ழிகைகள் இருளில் ஆழ்ந்தது!
கண்ணீர் சிந்திக் கலங்கிய வாறு
சிலுவையின் அருகே தேவ அன்னை
மரியா ளோடும் மற்றொரு பெண்ணும்
அருளப் பர்எனும் அன்புச் சீடரும்
நின்றார் அவரை நேரில் நோக்கி,
இயேசு பெருமான் இருவரை விளித்து
“அம்மா அவருன் அன்பின் மைந்தன்
அருளப் பாஅவர் அன்னை உனக்கு”
என்றே அவரை அன்பில் இணைத்தார்!
மூன்று மணிக்கு மோகன மன்னன்
தோன்றிய தேதோ சொல்லை உயர்த்திச்
சத்தம் இட்டார் தாரணி ஒடுங்க!
“இறைவா! இறைவா! என்னை ஏனோ
கைவிட் டாயே! கைவிட் டாயே!”
என்றார் உடனே இருந்த சிலபேர்
“எலியாஸ் தன்னை இவன்அழைக் கின்றான்’
என்றே அவரை ஏளனம் செய்தார்!
மரண நேரம் வந்ததென் றெண்ணி

வேதன் கூற்றை விளக்கிடு மாறு,
“தாகம் எனக்கெ”னச் சாற்றினார் இயேசு!
ஆத்மதா கத்தை அவர்சொன் னாரென
அறியா திருந்த ஐந்தறி மாக்கள்
கடலில் எடுத்த காளான் தன்னைக்
காடியில் தோய்த்துக் கட்டையில் நீட்டினர்!
அதையும் பெற்ற அன்பின் மைந்தன்;
“எல்லாம் முடிந்தது!” என்று நவின்றார்!
எல்லாம் என்ற சொல்லின் பொருளை
நல்லோர் யாவரும் நன்றே அறிவார்!
‘தந்தை எனக்குத தந்ததோர் கடமை
இந்த உலகில்நான் ஏற்றதோர் கடமை
எல்லாம் முடிந்தது” எனமனம் நிறைந்தார்!
“அன்புத் தந்தையே! அன்புத் தந்தையே!
ஆத்மா வைஉன் அன்புக் கரங்களில்
இப்பொழு தேநான் ஒப்படைக் கின்றேன்!”
என்றார் இயேசு; சென்றது உயிரே!

140. இயேசுவின் குமுறல்

நீலவானில் இடியெழுந்து சூரியன்ம றைந்தது
நேரில்நின்ற பாறையோடு பூமியும்வெ டித்து
கோலமிக்க கல்லறைகள் கூவியேபி ளந்தன
கோவில்இ ருத்தசிலை பாதியாய்க்கி ழிந்தது!

பூவிருந்த பொன்மரங்கள் போய்விழுந்து பட்டன
பூமிதன்னை வானகத்து மீளிவங்கள் தொட்டன
காவலர்கள் மெய்சிலிர்த்துக் கைநடுங்கி நின்றவர்
தேவமைந்தன் என்றசேதி உண்மையென்று கண்டனர்

வந்திருந்த மக்கள்கூட்டம் மாரடித்துச் சென்றது
வாய்திறந்து பேரிரைச்ச லோடுஉள்ளம் வெந்தது!
சிந்தையோடு சேர்ந்திருந்த சீடரோடு தாயினம்
தேம்பிநின்ற தேவஅன்னை தன்னைத்தேற்றி நின்றது!

தாயிருக்கப் பிள்ளைசாகும் சங்கடங்கள் கொஞ்சமோ,
சாட்டையாலே வேட்டையாடி சாவதென்றால் தாங்குமோ?
வாயிருந்தும் தேவஅன்னை மௌனமாக நின்றவன்
வாழ்வுதாழ்வை தெய்வம்பார்க்கும் என்பதைஅ றிந்தனள்!

தேவமைந்தன் மாண்டுவிட்ட செய்தியைஉ ணர்ந்தவே
சேர்ந்திருந்த கால்களைமு றிப்பதற்கி லாதவர்
காவலர்கள் ஈட்டியால்வி லாப்புறம்து ளைத்தனர்
கைநிறைந்த இரத்தமும்தண் ணீருமேல டிந்தன!

ஓதுகின்ற வேதநூலில் உள்ளவாறு மீட்பரின்
பாதமும்எ லும்புமங்குப் பங்கமாக வில்லைகாண்
ஆதவன்வி லாப்புறத்தில் குத்திநோக்கு வாரென
ஆதிநூல்உ ரைத்தவாறு யாவுமாகி விட்டதே!

141. அன்னையின் மடியில்

தேவன் மைந்தன் ரிடலிலே
தெரியா திருந்த ஒருசீடர்
ஆவல் கொண்ட ஞானமகன்
அரிமத் தீயாவூர் சூசையென
பாவம் உணர்ந்த பிலாத்திடமே
பணிவாய்ச் சென்று “ஆளுநரே!
ஆவி பிரிந்த மேனியினை
அடக்கம் செய்வேன் நானெ”ன்றார்!

“மரித்தார் இயேசு என்பதனை
	மன்னன் நன்றாய்க் கேட்டறிந்து
அரிமத்தி யாசூசை கேட்டபடி
	அடக்கம் செய்யப் பணித்திட்டான்!
அருளும் அன்பும் உருவான
	ஐயன் உடலை மெதுவாக
இரண்டு வீரர் துணையோடு
	இறக்கி வைத்தார் சூசையரே!

அன்னை மரியாள் மடியினிலே
	அன்பின் வடிவம் தேவமகன்
பொன்னை மணியைப் புதுநதியைப்
	பொய்யாய்ப் போன உடல்தன்னைத்
தன்னந் தனியே வைத்தார்கள்
	தாயும் மகனைப் பார்த்தபடி
கன்னங் கரைய நீர்பெருகிக்
	கடவுள் பெயரைச் சொன்னாளே!

கதறி அழுவோர் கிடையாது
	சொந்தம் என்போர் அங்கேது?
பற்றும் பாசமும் அலைமோத
	பசுவும் கன்றும் ஒன்றாக
உற்றுப் பார்க்கக் கல்வாரி
	ஒன்றே சாட்சி ஆனதுகாண்!
சற்றே அங்கே நின்றபடி
	தாமும் அழுதார் சூசையரே!

தக்கோர் யூதர் முறைப்படியே

சடலம் தன்னை அடக்குதற்கு
நிக்கோ தேமு சிலபொருள்கள்
நேரில் அங்கே கொண்டுவர
மக்கள் தம்முள் தலைவனையே
வாசப் பொருள்கள் பலவைத்துத்
துக்கம் காட்டும் துணிகொண்டு
சுற்றிக் கட்டி வைத்தார்கள்!

நேரே இருந்த தோட்டத்தில்
நிலையாய் இருந்த கல்லறையில்
யாரும் புதையாப் புதுஇடத்தில்
ஐயன் உடலை வைத்தார்கள்!
ஆறும் வரையில் பார்த்துவிட்டு
அன்னை மரியாள் சென்றுவிட
தேறா மனத்து சூசையரும்
சென்றே விட்டார் நண்பருடன்!

(வேறு)

மறைநூல் வல்லார் பரிசே யர்கள்
மன்னன் பிலாத்தின் முன்னே நின்று
“அரசே ஒன்று! அன்னான் அன்று
கூட்டங் களிலும் கோவில் களிலும்
‘மரிப்போன் ஆனான் மறுநாள் மூன்றில்
உயிர்ப்பேன்’ என்றே உரைத்தான் அறிவீர்!
மந்திரக் காரன்! மாயக் காரன்!
சொல்ல சொன்னார் சூனியக் காரன்!
அவனுடை சீடர் அவனது பிணத்தை
எடுத்துச் சென்று மறைத்துக் கொண்டு
‘உயிர்த்தான்’ என்றே உரைக்கக் கூடும்!
ஆகையி னாலே அரசே அந்தக்

கல்லறை தன்னைக் காவல் காக்க
மூன்றே நாட்கள் முன்னால் நிற்க
வீரர் தம்மை விரைவில் அனுப்புக”
என்றே உரைத்தார் ஏற்க மறுத்து,
“உம்மிடம் கூடச் சேவகர் உண்டே!
கண்டிப் பாகக் காவல் வேண்டுமேல்
அவரைக் கொண்டுபோய் அங்கே நிறுத்துக!”
என்றான்; அவர்கள் ஏற்றுக் கொண்டு
மூடிய கல்லில் முத்திரை யிட்டுக்
காவலர் தமக்குக் கட்டளை விட்டுத்
தாங்களும் மூன்றநாள் தூங்க வில்லையே!